உ

நம்பர் 718 சிவமயம்.

தன வைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்,

திருவள்ளுவர் நூல் நிலையம்,

பாகனேரி.

இஃது

ஸ்ரீமான் வெ. பெரி. பழ. பழனியப்ப செட்டியார் அவர்களால் இனமளிக்கப்பெற்றது.

........ ஆண்டு ........ திங்கள் ........ நாள்

தயவு செய்து பேணிப் படியுங்கள்.

81

3458

என். ராமசாமிக்கோன்,
அக்கவுண்டு புக்பைண்டர்,
கீழாவணிமூலவீதி,
மதுரை.

PRESENTED BY:
V. ... M. ... CHETTIAR

# தமிழ் வியாசங்கள்.

3458.

# A COLLECTION OF ESSAYS IN TAMIL.

For the use of Students

OF

SECONDARY SCHOOLS & COLLEGES.

PUBLISHED BY

**M. V. Rengaswamy Iyer,**

HEAD MASTER, MUNICIPAL YADHAVA SCHOOL,

MADURA.

PRINTED BY K. R. RUNGANATHUM & BROS.,

GOVERNMENT AND GOLD MEDALISTS,

NEW ST., MADURA.

1911.

*All rights reserved*] [*Price Annas 12.*

3458

# உரிமையுரை.

தந்தையார் மகற்காற்று முதவிகளிற்
கல்வியே சிறந்ததெனச் சாற்றுகின்ற
முந்தையுள மறைமொழியை யினிதுணர்ந்தே
யெனதுதந்தை முறையால் வித்தை
சிந்தைதெளி வுறப்புரிந்த வுதவிமறவாச்
செயலைத் தெரிப்பான் யெண்ணி
இந்தநிலை வுலகதனில் தமிழ்வியா
சந்தனையான் இயற்றி னேனே.

# PREFACE.

One of the drawbacks of the education imparted in our Schools and Colleges at the present day is, as has been repeatedly brought home to our minds by many a well wisher of the land, a more or less total disregard for our Vernacular languages. The recent changes in the curricula of studies wich are, no doubt, calculated to create a livelier interest in the various branches of study, contain the welcome reform of making Tamil composition a compulsory subject of study with a separate minimun of its own. Much has been said on this question and it not for us to go into its merits here. It only behoves every true lover of Tamil Literature, to make its study a pleasurable one and this book is an unostentatious attempt towards that end.

In English and Tamil composition, the manner and the form are admittedly even more important than the matter; the analyses of the essays have been prefixed to the book to enble the students to view the subjects in a logical and methodical manner. To add to the usefulness of the work the skeleton of several essays have been appended to, which the students will do well to develop. Though the style is sufficiently simple to suit the capacity of students preparing even for the School final examination yet it retains grit and strength enough to appeal to students even of the more advanced classes. The quotations from the various Tamil classics will, we trust create in the student a love for the study of these originals and thus in a humble way serve to make them ardent scholars of Tamil Literature who can take up the place of the present Tamil Pandits whose race, it is

melancholy to note, is threatened with extinction for want of sufficient encouragement. We should consider ourselves sufficiently recompensed if this little work has succeeded in that object.

We owe an apology to the reading public for the errors that may be found in the book. These will be carefully attended to in the next edition.

Madura
9—2—1911 } **The author.**

# பொருளடக்கம்.

---


| விஷயம். | பக்கம். |
|---|---|
| வியாசமெழுது முறை. | 1—VI |
| வியாசங்களினுருபகக் குறிப்புகள். | VII—XX |
| 1. கடவுளைநம்பினோர் கைவிடப்படமாட்டார் | 1—5 |
| 2. வாய்மை அல்லது பொய்யாமை | 15—12 |
| 3. சோம்பித்திரியேல் | 12—16 |
| 4. கடன்கொண்டுவாழாமை காண்டலினிதே | 16—22 |
| 5. அறிவே வலிமையுடைத்தாம் | 22—26 |
| 6. நோய்க்கிடங்கொடேல் | 26—33 |
| 7. குடியின்கேடு | 33—38 |
| 8. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் | 38—43 |
| 9. வியாபாரமும் கைத்தொழிலும் | 43—47 |
| 10. வியவசாயமும் ஐக்கிய நாணயச்சங்கமும் | 47—54 |
| 11. போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து | 54—60 |
| 12. வேண்டுமென்றால் வேரிலேயுங்காய்க்கும்வேண்டாமென்றால் கொப்பிலுங்காய்க்காது. | 60—63 |
| 13. பொருடனைப் போற்றிவாழ் | 63—68 |
| 14. ஏகாந்தத்தின் அருமைபெருமை | 68—72 |
| 15. நப்போல்வளை | 72—75 |
| 16. ஸ்தல சுயஆட்சி | 75—79 |
| 17. கல்வி | 79—88 |
| 18. தந்தை தாய்ப்பேண் | 88—93 |
| 19. இராவ்பஹதூர் கனம் கோபால்ராவ் அவர்கள் | 93—97 |
| 20. அமராவதி சேஷய்யசாஸ்திரிள். கே. ஸி. எஸ் ஐ | 97–110 |
| அனுபந்தம் | 111—142 |

1. செய்ந்நன்றி மறவாமை
2. ஆறுவது சினம்
3. சுதேசாபிமானம்
4. இளமைப்பருவமும் முதுமைப்பருவமும்
5. பரோபகாரம்
6. செட்டு
7. வைகறைத்துயிலெழு
8. பழகப்பழக பாலும்புளிக்கும்
9. குறித்த காலந்தவறாமை
10. சக்கர நெறிநில்
11. தைரியம்
12. மழை அதின் பிரயோஜனம்
13. நதி உபயோகங்கள்
14. வைசூரி
15. நல்லொழுக்கம்
16. காலத்தின் அருமை
17. நகரவாசமும் நாட்டுவாசமும்
18. நாடகம் அவற்றின் நன்மை தீமைகள்
19. உயுத்தமும் சமாதானமும்
20. தேகப்பயிற்சி
21. நித்திரை.
22. காக்
23. புஸ்தகசாலை
24. நட்பு
25. அற்பவிஷயங்களும் அதிகப்பிரயோஜனத்தைத்தரும்
26. சமாசாரப் பத்திரிகைகள்
27. கைத்தொழிற் பொருட்காட்சிசாலை
28. பெண்கல்வி
29. இந்தியாவின் முற்கால தற்கால நிலைமை
30. காப்பது விரதம்

# I

## வியாசமெழுதுமுறை.

---

நமது எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் வெளியிட்டு ரைப்பதற்கேற்ற சாதனமாயுள்ளது சொற்களே. இவ்விதச் சொற்களைக்கொண்டு, பேசுவதால் நம் எதிர் நிற்போருக்கும், வரைவதால் நம் எதிர் நில்லாதோருக்கும் நமது எண்ணங்களை நாம் தெரிவிக்கலாகும். ஒரு விஷயத்தைப்பற்றி எழுதுவதினும் சொல்வது இலகுவென்றெண்ணுகிறோம். என்? இருவித விஷயங்களினும் முடிவு ஒன்றாகவிருந்தபோதிலும், எழுதுவதில் சில விதிகளை நாம் அநுசரிக்கவேண்டுவது ஆவசிகமாகிறது. அவ்விதம் அநுசரித்து, பலபேர் நன்கறியவும், அவர்கள் ஞாபகத்து எப்போழ்தும் இருக்கவும், ஒரு விஷயத்தைப்பற்றி வரைந்து தொகுப்பதே வியாசமெனப்படும். அப்படி எழுதும் விஷயத்தை, முதலில், பல்வேறு பிரிவுகளாகப் பிரித்தல்வேண்டும். இவ்விதப்பிரிவுகளே வியாச உருவகக்குறிப்புகளெனப்படும் இவ்விதப் பிரிவுகளையெல்லாம் பின்னர், முறைப்பட அமைத்தல்வேண்டும். அதின்பின், ஒவ்வொரு பிரிவுகளைப்பற்றி வரையவேண்டிய விஷயங்களனைத்தையும், ஒழுங்காயும், ஆழ்ந்த கருத்துடனுங்கூடி, ஓசை நிரம்பியும், படிப்போர் மனத்துள் இலகுவாய்த் தைக்கும்படியும் வரைந்து தொகுப்பதே நற்வியாசமெனப்படும்.

இவ்விதம் வியாசம்வரைவதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டுள (1) எழுதும் வியாசத்தைப்பற்றின சங்கதிகள் (2) அவைகளை அமைக்கும் முறை; அதாவது வியாசத்தைப்பற்றி வரைவதற்கு, முதலில் ஏதேனும் விஷயங்கள் இருத்தல் வேண்டும். அவ்விஷயங்களை முறைப்பட அமைத்தல்வேண்டும்.

வியாசமெழுதப்புகுகிறவன், வியாசத்தைப்பற்றின விஷயங்களையெல்லாம் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். இதுவே முக்கியமானதாகும். வியாசத்தைப்பற்றிய கருத்துகளை நாம்

அறியாவிடின், என்னதான் வியாசமெழுதுமுறை தெரிந்திருந்த போதிலும், பயனில்லை. கருத்துக்களைத் தெரிந்தபின்னர், தேர்ந் தெடுத்தல், முறைப்பட அமைத்தல் என்ற விஷயங்களை நாம் கவ னிக்கவேண்டும். விஷயத்தைப்பற்றி என்னசொல்ல வேண்டு மென்பதும், விஷயத்தைப்பற்றி என்ன சொல்லக்கூடாதென்ப தும் அறிவதே, தேர்ந்தெடுத்தலாகும். அப்படி அறிந்த பின்னர், கூறவேண்டிய விஷயங்களை வரிசைக்கிரமமாக வமை த்தலே முறைபட அமைத்தலாகும். மேற்கூறிய இவ்விரண்டு விஷயங்களை கவனித்து, வியாசத்தின் கருத்துக்களை அமைப்ப தே அவைகளை அமைக்கும் முறையாகும். இவ்வித முறைப் படக்கருத்துக்களை அமைப்பது, வியாசத்துக்கு மேன்மை, அல ங்காரம், சப்தசாரம் (Force) முதலியவைகளைத் தருகிறது.

சொற்கள், சொற்றொடர், வாக்கியம் இவைகளாலேயே வியாசமுண்டாக்கப் பெறுகிறது. ஆகையால் இவைகளைச் சரி வரக்கையாட நாம் பழகல்வேண்டும். முதலில், இவைகள் என்ன வென்று நாம் கவனிக்கலாம்.

பொருள்களின் பெயரே வார்த்தைகளாகும். இவ்வார்த் தைகள் இரண்டல்லது மேற்பட்டவைகள் சேர்ந்தாவதே சொற றொடர்களாம். இவைகளுக்கும், சொற்கள்போலவே பொருளு ண்டு. ஆனால் சொற்றொடர்களுக்கு, வாக்கியங்களிலிருப்பது போல், எழுவாய், பயநிலை இவைகள்கிடையா. பல வார்த்தை கள் சேர்ந்தே ஒரு வாக்கியமாகிறது. வாக்கியம் சிலசமயத்து எழுவாய், பயநிலை, செயப்படுபொருள் இவைகளையும்பெற்று கருத்துமுடிவு பொருந்தியிருப்பதேயாகும். சொற்றொடருக்கு, கருத்து, முடிவுபொருந்தாது. பல வாக்கியங்கள்சேர்ந்து, ஒரு அதிகார உட்பிரிவு (Paragraph) க்குள்ளடங்கும்.

இவ்வாக்கியங்களை இலக்கணக்காரர்கள், மூவேறு வகுப் பாகப் பிரித்திருக்கின்றனர். அவைகளாவன :—தனிவாக்கியம், கலப்புவாக்கியம், தொடர்வாக்கியம்.

ஒரு எழுவாய், பயநிலையுடனிருப்பதே தனிவாக்கியமாகும் ஒரு தனிவாக்கியம் பொருள், தன்னுள் முடிவுபெறுத மற்றொரு வாக்கியத்துடன் (Subordinate clause) கூடிக்கலந்து நிற்பதே கலப்பு வாக்கியமாகும். சில தனிவாக்கியங்களேனும், அல்லது சில கலப்புவாக்கியங்களேனும், சேர்ந்துவரின் தொடர்வாக்கிய மாகும்.

அலங்கார நூற்காரர்கள், குட்டைவாக்கியம், நீண்டவாக் வாக்கியம், கடைசியாக பொருள்முடியும் வாக்கியம், பொருள் முடிவுக்குக் கடைசிவரை போகவேண்டாத வாக்கியம், ஆகிய பலவிதங்களாக வாக்கியங்களைப் பிரித்திருக்கின்றனர்.

குட்டை வாக்கியங்களின், கருத்துமனத்திற் சீக்கிரம்தைக் கும். ஆனாலும் குட்டை வாக்கியங்களையே உபயோகித்துவரு வதால் வியாசம் அழகுபெறுது. வாக்சாதுரியங்கெட்டு லயப் பிரமாணமுமில்லாதுபோகிறது. அநேகம் நெடுவாக்கியங்களை உபயோகத்ததின் பின்னர் ஒருகுட்டை வாக்கியத்தை உபயோகி ப்பது வியாசத்துக்கோர் திடனைக்கொடுக்கிறது. பொருள்முடி வுக்கு வாக்கியத்தின் கடைசிவரை போகவேண்டாத வாக்கியங்க ளும் வியாசத்துக்கு அழகைத்தராது. ஆகையால் இம்மாதிரி யான வாக்கியங்களை அடிக்கடி எழுதுவதினின்றும் நாம் தவிர் க்கப்படவேண்டும். ஒரு விஷயத்தைப்பற்றித் தொடர்ந்தே சொல்லிக்கொண்டு போகும்பொழுது, இவ்வகைத்தான வாக்கி யங்களை உபயோகிக்கலாகும்.

இனி, இவைகளைக் கையாடும் விதத்தைப்பற்றி நாம் கவனி க்கவேண்டும். அதற்கு வசன சம்பிரதாயத்தைப்பற்றி நாம் அறி ந்துகொள்வது அவசியமாகும். இது மனிதனுடைய மனோ பாவனைகளுக்குத் தக்கவாறு இருக்கிறது. நமது மனோ எண் ணங்களே வார்த்தைகளில் சம்மந்தப்பட்டிருக்கின்றதெனச் சொ ல்லாகும். சில வாக்கியங்கள், ஊக்கத்துடன்கூடியும், சில வா க்கியங்கள் பல க்ஷயத்துடன் கூடியுமிருப்பதை நாம் பார்க்கலா கும். இதுசொல்லும் வகையைப்பற்றினதேயன்றி, சொல்லும்

விஷயத்தைப் பற்றினதேயல்ல. சொல்லியுள்ள விஷயம், மெய்யா, பொய்யா என்பதைப்பற்றி கவனிக்கவேண்டுவதில்லையாகும். சொல்வது அழகாயும், தெளிவாயும், முறைப்படியும் சொல்லியுளதா யென்ற விஷயத்தைப் பற்றினதேயாகும்.

வசன சம்பிரதாயம் (Style) சமயோஜித வார்த்தைகளை உபயோகிப்பதாலும் வாக்கியங்களைசரிவரச்சேர்த்து அதிகாரவுட் பிரிவுக்குள் அமைப்பதாலு முண்டாகலாம்.

நல்ல உபந்யாசங்களை அடிக்கடி கேட்பதாலும், கற்றுத் தேர்ந்த நிபுணர்களுடன் அடிக்கடி பற்பல விஷயங்களைப்பற்றி உரையாடுவதாலும் சமயோஜித வார்த்தைகளை உபயோகிக்க கற்கலாகும். மேலும் நல்ல கிரந்தகர்த்தாக்கள் செய்திருக்கும் நூலை அடிக்கடி படித்தல்வேண்டும்; ஒருபொருள் பலவார்த்தைகள், பலபொருள் ஒரு வார்த்தை இவைகளை அப்பொழுதைக்கப்போது கவனித்து மனதில் பதித்துக்கொள்ளல்வேண்டும்; அடிக்கடி அகராதியைப்பார்த்து சந்தேகமுள்ளவைகளைத் தெளிவித்துக்கொள்ளல்வேண்டும். இவ்விதம் தேர்ந்தெடுக்கும் வார்த்தைகள் அதிககக்கஷ்டமில்லாததாயும், யாவருமறியக்கூடியதாயும், இருத்தல்வேண்டும். உபயோகத்தில் இல்லாத வார்த்தைகளை பிரயோகிக்காதிருத்தல்வேண்டும். வேறுபாஷையினர் கருத்துக்கேற்ற சொற்கள், தமிழ்மொழியில் காண்டலரிதாயின், வேறுபாஷைச்சொற்களையும், திசைச் சொற்களாகவேனும், மற்றெவ்வகைச்சொற்களாகவேனும் தமிழில் வெளியிட்டுக்கொள்ளலாகும்.

வாக்கியங்களைப்பற்றி விசாரிக்கப்புகுவோம். வார்த்தைகளை ஒழுங்குபடுத்திச்சேர்ப்பதே வாக்கியமாகுமென்று முன்னரே கூறப்பெற்றுள்ளது. காதுக்கினிமையான சப்தத்தைத் தருகிறதாவெனப் பார்த்தல்வேண்டும். வார்த்தைகளைச் சரியாய் உபயோகப்பதினின்றும் நாம் நினைக்கும் விஷயமத்தனையும் படிப்போர் மனத்துப்பதிவாதல்வேண்டும்; இதுவே வார்த்தைகளின் ஆற்றலெனப்படும். இவ்வித ஆற்றல், குறித்த பொருளைக் காட்டற்குறிய சொற்களிற்குறைவு படச்சொல்லுதலாலும்,

ஐயப்பொருளையுடைய வார்த்தைக்களைக் கூட்டுதலாலும் எய்தா தாகும். வாக்கியங்களைச் சுருங்கசொல்லி விளங்கவைத்தலானும், நல்லசொற்களை வாக்கியங்களில் சேர்த்தலானும், ஆழ்ந்த கருத்துடன்கூடி சந்த இன்பத்தைபுடைய சொற்களை சேர்த்தலாத லானும், எதிர்மறை. வினு இவைகளை உபயோகிப்பதினுலும், அவ்வித ஆற்றல் எய்தலாகும்.

கருத்து நன்குவிளங்காத வாக்கியங்கள் வியாசத்தின்கண் இருத்தல்கூடாது. ஈரர்த்தம் தரும்படியான வாக்கியங்களை வியாசத்தில் 'நாம் உபயோகித்தல்கூடாது. பல விஷயங்கள் கலந்துள்ள ஒரே வாக்கியத்தை நாம் உபயோகித்தல்கூடாது. பல இடத்து எழுவாய்களை ஒரேவாக்கியத்திலேயே நாம் உப யோகித்தல்கூடாது.

ஆற்றுப் பெருக்கோடுவது போலிருப்பதும், செவிக்கினி மையான சப்தத்தையுடையதுமான வாக்கியங்களே அழகான வாக்கியங்களாகும்.

இவ்வித வாக்கியங்கள் பலசேர்ந்து ஒரு அதிகாரவுட் பிரிவுக்குள்ளடங்கும். ஒரு அதிகாரவுட் பிரிவினுக்குட்பட்ட வாக்கியங்களின் கருத்துமுழுதும் ஒரே விஷயத்தைப் பற்றின தாயிருத்தல்வேண்டும். அப்பல வாக்கியங்களும் தொடர்ந்தே யிருத்தல்வேண்டும். முதல் வாக்கியம்விட்ட கருத்தையே மறு வாக்கியம் தொடர்ந்து கொள்ளல்வேண்டும். பல வாக்கியங்க ளும், பல்வேறு பட்டிருத்தல் அழகைத்தருதலாகும். இம்மா திரி பல அதிகாரவுட் பிரிவினைகளும் தொடர்ந்தேவரல்வேண்டும்.

இனி வியாசங்களைப்பற்றி கவனிப்போம். வியாசமும் பல் வேறு வகைப்படும். அவையாவன :—சரித்திர விஷயங்களைப் பற்றின வியாசங்கள், இயற்கைப் பொருள்களைப்பற்றின வியாச ங்கள், தேசத்தைப்பற்றின வியாசங்கள், சாஸ்திர ஆராய்ச்சியை ப்பற்றின வியாசங்கள், குணசம்பந்தமான வியாசங்கள் (Abstract subjects)

வியாசத்தைப்பற்றின விஷயமனைத்தையு மறிந்துகொள்ள பல புஸ்தகங்களையும் படித்தல்வேண்டும்; அடிக்கடி சிந்திக்க வேண்டும். ஊன்றிப்பார்க்கும் சக்தியை அபிவிருத்திசெய்து கொள்ளல்வேண்டும்; இன்ன விஷயத்தைப்பற்றி இன்னதான் எழுதுவதென்று வரையறுத்துக் கொள்ளல்வேண்டும்.

முதலில் வியாச உருவகக்குறிப்புகளை வரிசைக்கிரமமாக ஒருதுண்டு கடிதத்தில் எழுதிக் கொள்ளல்வேண்டும். பின்பு ஒவ்வொரு குறிப்புகளைப்பற்றிய விஷயங்களை எழுதல்வேண்டும். அப்படி விஸ்தரித்து எழுதுங்கால், கருத்துக்கள் அக்குறிப்பை ஒட்டினதாகவேயிருத்தல்வேண்டும்; ஒரு பொருளை விட்டு மற்றொரு பொருளில் தவ்வக்கூடாது; விஷயங்களைப் பற்றிச் சொல்வதெல்லாம் மூன்றும் மனுஷன் சொல்வதாக விருத்தல்கூடாது. கொடுக்கும் உதாரணங்கள் சரித்திரங்களினின், றும், பெரியோர்கள் எடுத்தாளப்பட்டது மாயிருத்தல்வேண்டும். கட்டுக்கதைகள்கூடாது. ஒரு விஷயத்தின் ஒரு பாகத்தைப்பற்றிப் பேசி மற்றொரு பாகத்தை விடுத்தல்கூடாது. பெரும்பதங்களை உபயோகித்து பிறருக்கு எளிதில் பொருள் விளங்காத வாக்கியங்களை உபயோகித்தல்கூடாது. சொற்சுவை பொருட்சுவை இவைகள் நிரம்பியிருத்தல்வேண்டும். எழுத்துப் பிழை இலக்கணப்பிழை இவைகள்கூடா? காலவளவிற் கேற்ப சுருக்கியும் விரித்தும் எழுதவேண்டும்.

இவ்வித விதிகளை அநுசரித்து எழுதிமுடிக்கும் வியாசம் செவ்விதாய் முடியுமென்பதற்கு ஐயப்பாடேயில்லை.

## VII

### வியாசங்களினுரூபகக் குறிப்புகள்.

---

## 1. கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்.

---

1. மனிதர்களது நிலைமை.

2. துயரையும், மனக்கவலையும் நீக்கவல்லவர் கடவுளே.

3. அவரை நம்புதல் பயனையேதரும். மார்க்கண்டேயன் சரித்திரம்,

4. நமது முன்னோர்களாகிய இருடிகளின் கருத்தும், அவர்கள் செய்திருக்கு மேற்பாடுகளும்,

5. எல்லாவற்றிற்கும் "தெய்வபலம்" வேண்டும்.

6. ஜீவன் நம்மை விட்டகன்று புதுவுலகு செல்லுங்காலத்து உதவிசெய்யக்கூடுபவர் கடவுளே.

---

## 2. வாய்மை அல்லது பொய்யாமை.

---

1. வாய்மையாவது என்ன ?

2. 'பொய்' ஐம்பெரும் பாவங்களுளொன்றும். இப்பொய்யே எவ்விதப் பாவங்களுக்கும் காரணமாம். பொய்யாமை எவ்வித அறங்களுக்கும் காரணமாம்.

3. 'பொய்' மூவகைத்தாம் :—

a. பொய்யுணர்வு.

b. பொய்யுரை.

c. பொய்யொழுக்கம்.

(இவைகளைப்பற்றிய விபரங்கள்).

4. பொய்யால் வருங்கேடுகள் :—

a. உலகத்தில் பொய்யே, உலவுவதாயிருந்தால் ஒரு காரியமும் செய்தலியலாது.

5 வியாபாரி பொய் சொல்லுவதால், எக்காலத்தும் நஷ்டமடைகிறான்.

c. பொய்புரைப்பவன், இகழ்ச்சிக்காரணனாகி, வேலையே யகப்படாது, வருந்துவான்.

d. "பொய்யாமையே பேறறமாம்" என்பதைக் கடைப்பிடித்ததை விளக்கலான கதைகள்.

a. அரிச்சந்திரன் சரிதை. (b) தசரதன் உயிர்நீத்தது.

c. நக்கீரனார் பொய்கூறு நிருந்தது.

d. பிரான்சுதேசத்து "லாம்பேல்" சீமாட்டி சரித்திரம்.

6. பொய்யை, மெய்போலாக்கிச்சொல்வதும் பொய்யே

---

## 3. "சோம்பித்திரியேல்"

---

1. இவ்வாக்கியத்தின் பொருள்.

2. ஓய்வு எடுத்துக்கொள்வது, சோம்பலுடனிருந்ததாகாது.

3. சோம்பலுக் கிடங்கொடுக்கிறவன் பின்னர் சிரமப்படவேண்டியவனாகிறான்; அன்று செய்யவேண்டிய வேலைகளை அன்றேசெய்து முடிக்காவிடின், வேலை அதிகமாவதன்றியும் சீர்பெறவும் நடவாது,

4. சோம்பலாயிராமல் உழைப்பது, வியாதி யணுகாவண்ணம் காக்கும்.

5. சோம்பலையுடையவர்கள்.

a. உலகத்தாரால் அவமதிக்கப்படுகிறுன்.

(b) துர்வியாபாரங்களில் பிரவேசிக்க மனம் தூண்டப் படுகிறது.

---

## 4. "கடன்கொண்டு வாழாமை காண்டலினிதே"

---

1. 'டாக்டர் ஜான்ஸன்' கடன் கொள்ளலைப்பற்றி யெழுதிய நிரூபம்.

அவர்பால்ய காலட்சேபம்.

2. கடன்கொள்ளல் :—

(a) வருவாய்க்கு மேற்பட்டு செலவு செய்யச்செய்கிறது.

(b) சிநேகத்தன்மையை அழிக்கிறது.

(c) மரியாதையையும், அந்தஸ்தையும் நாசஞ்செய்கிறது.

(d) பொய்யையே பேசச்செய்கிறது.

(e) கடன் கொடுப்பவருக்கு அடிமையாக்குகிறது.

(f) மனச்சமாதானத்தை யொழிக்கிறது.

(g) குடும்பத்தவர்களுக்கும் கவலையை உண்டாக்குகிறது.

3. கடன்கொள்ளாதிருக்க, கவனிக்கவேண்டியவைகள்:—

(a) செலவுசெய்தலின் முறை.

(b) இரொக்க விலைக்கே பொருள்களைக் கொள்ளவேண்டும்.

(c) மலிவாய்க் கிடைக்கிறதெனவெண்ணி, நமக்குபயோகமில்லாத பொருளைக் கொள்ளல்கூடாது.

(d) குடி முதலிய விஷயங்களில் பிரவேசியாது ஜாக்கிரதை யுடனிருத்தல்.

(e) கடன்வாங்கல் வருவாயைப் பொருத்ததல்ல.

(f). கல்யாண முதலிய விசேஷங்களில் அதிகம் செலவு செய் யாதிருத்தல்.

(g). பிறருக்கு 'ஜாமீனாக' கட்டுப்படாதிருத்தல்.

---

## 5. அறிவேவலிமை யுடைத்தாம்.

---

1. இவ்வாக்கியத்தை விளக்கும், கதையும், வாக்கியத்தின் பொருளும்.

2 பண்டை "இந்தியா" முற்காலத்திருந்த "இலண்டன்" மாநகர் இவைகளுடன இப்பொழுதிருக்கும் "இந்தியா "தற்கால த்து "இலண்டன்" மாநகர் இவைகளை ஒப்பிட்டுப்பார்த்து அறி வின் வலியால் செய்திருக்கும் வேலைகளை ஆராய்தல்.

3. இக்காலத்து நாமடைந்திருக்கும் நன்மைகளெல்லாம் அறிவின் வலியாலேயே உண்டாயிருக்கின்றன.

4. அறிவின் சூட்சித்திறனென்று மதியாவண்ணம் காக்க வல்ல, அறிவினாலேயே கண்டு பிடிக்கப்பட்ட அச்சுயந்திரம்.

5. சிரமமதிகமில்லாது இலாபம் அதிகம் வரக்கூடிய வித மான வேலை அறிவாலேயே நடத்தப்படவேண்டும்.

6. அறிவுடையோர் எல்லா முடையோர்

---

## 6, "நோய்க்கிடங்கொடேல்"

---

1. இவ்வாக்கியத்தின் பொருள்.

2. தேகசௌக்கியத்தைப்பற்றிய ஆன்றோர் மொழிகள்.

3. மானிடஜென்மத்துக்குரிய, கடமைகளைச்செய்தற்கும், சுகாநுபவத்துக்கும் பிறருக்குச்சுமையாக விராதற்கும், சிலருக்கு ஜீவனோபாயத்துக்கும் தேகசௌக்கியம் இன்றியமையாததே.

4. சுகம்பாது காக்குமுறை

(a) தேகக்கூறுபாடு அறிந்துகொள்ளல்

(b) சுத்தமான காற்றையே உட்கொள்ளவழி தேடிக்கொள்ளல்.

(c) சரீரசுத்தம், வஸ்திரசுத்தம்.

(d) ஆகாரத்தைப் பற்றிய கவனிப்பு.

(e) தேகபயற்சியின் ஆவசிகம்.

(f) இராக்காலங்களில் அதிகநேரம் விழித்திருத்தல்.

(g) வியாதிபரவியிருக்குங் காலங்களில் செய்யவேண்டிய ஏற்பாடுகள்.

5. முடிவுரை.

---

## 7. குடியின்கேடு.

---

1 "கிளாட்ஸ்டன்" பிரவும், "லார்ட்கர்ஸான்" பிரபுவும் குடியைப்பற்றிச் சொல்லியவைகள்.

2. ஆதிகாலத்தில் நமது நாட்டில் குடியிருந்ததாவென்பதும், குடியைப்பற்றி நமதுமுன்னோர்கள் கொண்டிருந்த அபிப்பிராயமும்.

3. குடியால் வருந்தீமைகள்.

4. குடி, மருந்து சாதனம், பூஜாத்திரவியங்களாகுமா? "டாக்டர் டாட்டா" குடியைப்பற்றி என்ன சொல்லியுளாரென்பது?

## 8. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

1. முயற்சியென்றால் என்ன? எவ்வகை வேறுபாடுடைத்தாகும்.

2. முயற்சியின் சிறப்பு.

3. இடையறாது முயல்வதே காரியசித்திக்குக் காரணமாம்.

a. பகவத் சிருஷ்டியினின்றும் மேற்கோள்கள்.

b. பகிரதன் கங்கை கொண்டுவந்தது.

c. "ஸ்காந்திலாந்து" அரசன் வெற்றிகொண்டது.

4. எத்தொழிலும் முயற்சிக்கிடனிருக்கிறது,

5. அறிவின் வலியாலாகுமேயன்றி முயற்சியாலாகாதென்றெண்ணி ஒரு காரியத்தையும் செய்யாதிருத்தலாகாது.

6. "எல்லாம் ஈசன்செய" லென்றெண்ணி முயற்சியே செய்யாது வாளாவிருத்தல்கூடாது. "முயற்சி மெய்வருந்தக்கூலி தரும்."

7. முடிவுரை,

## 9. வியாபாரமும் கைத்தொழிலும்.

1. மனிதனுடைய சுகாதி சௌகரியங்களுக்குத் தக்கதான அதிகப்பொருள் வியாபாரம் கைத்தொழில்மூலமாகவே கிடைக்கிறது.

2. வியாபாரம், கைத்தொழில் இவைகளில் கிடைக்குமான பணம் அளவிடக்கூடாதது. வியவசாயத்துடன் ஒப்பிட்டு நோக்கல்.

3. தொழிலாளிகள் விருத்தியடைய 'ஐக்கிய நாணயசங்கங்கள், ஏற்பட்டிருப்பதும், இச்சங்கங்களின் நோக்கமும்.

4. சங்கங்கள் நன்கு நடந்தேரவேண்டிய முக்கியமான இரண்டு குணங்கள்.

5. நாடு விருத்தியடைய வியாபாரம், கைத்தொழில் இவைகள் மிக்க ஆவசிகமாகும்.

---

## 10 வியவசாயமும் ஐக்கிய நாணயச்சங்கமும்.

---

1. கிருஷித்தொழிலின் அருமை பெருமைகள்.

2. நவீன ஆராய்ச்சிகளில் கண்ட முறைகளை அநுசரித்தல், விவசாய விஷயததில் மேன்மையையுண்டாக்கும்.

3. கிருஷித்தொழிலில் முன்னோர்கள் அடைந்திருந்த தேர்ச்சி.

4. நவீன ஆராய்ச்சி முறைகளைக்குடிகளுள் பரவசெய்வதற்கு துரைத்தனத்தார் எடுத்துக்கொள்ளும் பிரயாசை :—

(a) சங்கங்கள் கூட்டுவித்தல் அவைகள் மூலமாய் பொருட் காட்சிசாலை ஏற்படுத்துவது.

(b) ஜனங்களுக்குச் சொற்பவட்டிக்குப் பொருள் சகாயஞ் செய்வது.

(c) ஜில்லா கெஜட்டில் வியவசாசமும் பந்த விஷயங்களைப் பிரசுரித்து குடிகள் படித்தறிடச்செய்தல்.

(d) ஜனங்களுன் நாணயசாலைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென உதவிபுரிதல்.

5. வேற்று நாடுகள், வியவசாயங்களினால் விருத்திய டைந்திருப்பது.

---

## 11. போதுமென்றமனமே பொன்செய்யு மருந்து.

---

1. போதுமென்றெண்ணம் நமது மனநிலைமையைச் சார்ந்ததேயல்லாது, நம்மிடத்துள்ள பொருள்களைச் சார்ந்ததில்லை.

2. மனஞ்சலிக்கும் தன்மையுடைத்தாம். திருப்திகொள்ளாமனம் மென்மேலும் ஆசையையே நாடும்.

3. நம்மினும் தாழ்ந்தவருடன் நம்மை ஒப்பிட்டுநோக்கி, இவ்வாசையாலுண்டாகும் மனக்கிலேசத்தை ஒழிக்கலாகும்.

4 நல்லபொருள்களொன்றேனும் தம்மிடத்தில்லா மானிடர்கள் இவ்வுலகின் கண்ணேயில்லையாகும்

5. இன்பமும், பொருளும் ஒருவனுக்கு உளவாதல், விதியின் வலிமையின்றி, ஆசை காரணமல்ல.

6. ஆசை பலவித பாவங்களுக்குக்காரணமாம். ஆசையில்லாதவனுக்குத் துன்பமில்லை. ஆசை பந்தத்துக்குட்படுத்தும்.

7. சில விஷயங்களில் திருப்திகூடாது ஆனால் பொறுமை இருத்தல்கூடாது.

---

## 12. வேண்டுமென்றால் வேரிலும் காய்க்கும். வேண்டாமென்றால் கொப்பிலும் காய்க்காது.

1. எவ்விதக் காரியங்களுக்கும் இப்பழமொழியை உபயோகித்தல் தகாது.

2. செய்யமுடியாதெனத் தோற்றும் சில காரியங்களை சோம்பலைவிட்டு மனோதிடத்துடன் செய்துமுடிக்க வேண்டுமென்ற அவாக்கொண்டால் செய்து முடிக்கலாகும்.

(a) ஏகலவன்

(b) டிமாஸ்தனீஸ்

3. சிற்சில சமயங்களில் மட்டுமே இவ்வசனம் உண்மையாகுமேயன்றி எச்சமயத்தும் மெய்யாகாது.

## 13 "பொருடனைப்போற்றிவாழ்"

1. இவ்வாக்கியத்தின் பொருள்.

2. அறம், இன்பம் முதலியவைகளனுபவித்தற்கு பொருள் இன்றியமையாதது.

3. பொருளில்லாதவன் கற்றோனாயினும் பயனற்றவனே.

4. பொருளீட்டல் முதலியவைகளில் துன்பம் இருப்பினும், பொருள் எல்லாவிதப் பொலிவையுமுண்டாக்குகிறது.

5. "பணம் பந்தியிலே குலங்குப்பையிலே" என்றவண்ணம் குலத்திலும் பணமே பெரியது.

6. பொருளின் மூவகை நிலைகள்.

7. தருமநெறியில் செலவழித்தபொருள் காப்பாற்றப்பட்ட பொருளேயாகும்.

8. பொருளைக்காப்பாற்றல் கேட்டை விளைவிக்குமா ?

9. தீயவழியில் பொருள் சம்பாதித்தல்கூடாது கடும் வட்டி வாங்கக்கூடாது.

10. வருவாயத்தனையுஞ் செலவழியாது, மிகுத்து பிற்கா லத்துபயோகமாகும் வண்ணம் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

---

## 14. ஏகாந்தத்தின் அருமைபெருமை.

---

1. ஏகாந்தத்தைப்பற்றிப் பெரியோர் சொல்லியிருப்பது.

2. பெரியவர்கள் ஏகாந்தத்தை விரும்புவதேன் ?

3. ஏகாந்தம் ஏகாக்கிரஹசித்த மாயிருக்கச் செய்கிறது, கவலையொன்றும் மனதைப் பிடிப்பதில்லை.

4. எப்பொழுதும் ஏகாந்தத்திலேயே வாசஞ்செய்வது, மனிதனுக்கு இன்பத்தைப் பயவாததுடன் அறிவு அபிவிருத்தியையு முண்டாக்காது. பிறருக்குபகாரம் செய்தலு மியலாது.

5. ஆகையால் சிற்சில சமயங்களில் மட்டுமே ஏகாந்தம் இன்பத்தைத்தரத்தக்கது.

---

## 15. "நட்போல்வளை"

---

1. இவ்வசனத்தின் பொருள்.

2. ஜீவராசிகளுள் பலகூட்டத்துடன் வாழ்பவைகளே.

(a) எரும்புகள்.

(b) தேனீக்கள்.

(c) யானைக்கூட்டம்.

(d) ஜலராசிகளுள் பலவகைத்தான பிராணிகள்.

3. மனிதன் பிறருக்குபகாரஞ்செய்யக் கடமைப்பட்டவனே.

4 சுற்றத்தார்களைக் காப்பதே மனிதர்களுக்கு தாமடைந்திருக்கும் செல்வத்துக்கழகாம்.

---

## 16. ஸ்தலசுய ஆட்சி.

1. 'ஸ்தலசுய ஆட்சி' இதின் பொருளும், பிரிவினைகளும்.

2. 'யூனியன்'

இப்பெயரின்பொருள், இதைப்பற்றிய மற்றுமான விவரங்கள், வரவு சிலவுகள்.

3. 'லோக்கல் போர்டுகள்' இதைப்பற்றி விபரமான விஷயங்கள்.

இவைகளின் வருமானம் எப்படி கிடைக்கிறதென்பதும், இவைகள் எவ்விதச்சிலவு செய்கிறதென்பதும்,

4. 'முனிசிபாலிடி' இதைப்பற்றிய விவரச்செய்திகள்.

5. 'ஸ்தல சுயஆட்சி' முற்காலத்திருந்துவந்ததாவென்பதும், யாரால் இவ்வாட்சி ஏற்படுத்தப்பட்டதென்பதும்.

---

## 17. கல்வி.

---

# XVIII

1. செல்வப்பொருளினினும் கல்விப்பொருளே சிலாக்கியம்.

2. கற்றற்குரிய சாதனங்கள் :—

(a) சத்குருமூலமாய் (b) பெரியோர் சேர்க்கையால் (c) கிரந்த ஆராய்ச்சிமூலமாய் (d) அற்ப விஷயங்களையும் கவனித்துப்பார்ப்பதால்.

3. கற்றற்குரிய முறை :—

(a) ஐயம், திரிபுஅற, கற்றல்வேண்டும் (b மென்மேலும் கற்றல்வேண்டும் (c) படித்தவைகளைப் போற்றல்வேண்டும் (d மனவமைதியுடனிருந்து கற்றல்வேண்டும். (e) இளம்பிராயமே கற்றற்குறிய காலம். (f) முக்கியமானவைகளையே கற்றல்வேண்டும்.

(4) கல்வியாலாகிய பயன்.

விலங்கினங்களினின்றும் மனிதனையுயர்த்திக்காண்பிக்கிறது; அகக்கண்கொடுக்கிறது; மனப்பயிற்சி யேற்படுகிறது; துன்பமுற்றுழி உதவுகிறது, குலத்தை உயர்த்துகிறது; சபையில் சிறப்படைவிக்கிறது. வித்தியாதானமே சிறந்ததானமாகிறது. முக்திக்குவித்தாகிறது.

(5) கற்றவர்களும் நற்வழியிற் நடந்தால் மட்டிலேயே பயனையடைவார்கள்; எல்லோராலும் நன்குமதிக்கப்படுவார்கள்.

---

## 18. தந்தைதாயப்பேண்.

---

1. இவ்வாக்கியத்தின் பொருள்.

2. தாய் தந்தையர்கள் குழந்தைகளுக்குச் செய்திருக்குமுபகாரம் நாம் அவர்களுக்குச் செய்யவேண்டிய உபகாரம்.

3. தந்தைசொன் மிக்க மந்திரமில்லை.

4. தந்தையினிற்சிறந்த குருவில்லை

5. தாயினிற்சிறந்த தெய்வமில்லை.

6. பெற்றோர்களைக் காப்பாற்றவேண்டுதலின் ஆவசிகம்

## 19. இராவ்பஹதூர் கனம் கோபால்ராவ் அவர்கள்

1. பிறந்த இடம், ஊரின் பெயர், முன்னோர்களினது நிலைமை.

2. பால்ய குணாதிசயங்கள், தானேவருந்தி யுழைத்துக் கற்றது.

3. கலெக்டர் கச்சேரியில் வேலைக்கமர்ந்தது,

4. விவாகம்.

5. வித்தியாவிலாகவில் வேலைக்குச்சென்றது, "சர்வகலா சபை யாரால் ஏற்படுத்தப்பெற்ற பரீட்சைகள் தேறியது.

6. சர்வகலாசபையில் அங்கத்தினராதால், இராவ்பஹதூர் பட்டம்பெற்றது.

7. இவர் சடுதிமரணம், இவர் இறந்த செய்தியைப்பற்றிய கடிதங்கள்.

8. இவரது குணாதிசயங்கள்.

## 20. அமராவதி சேஷய்யசாஸ்திரிகள் கே ஸி எஸ்.ஐ.

1. பிறந்தஊர் இடம் முதலியவைகள்.

2. இவர்படிப்பு, படிக்குங்காலத்திலேயே உபந்யாசத்தில் தேர்ச்சிபெற்று விளங்கியது,

3. அவர்பார்த்த வேலைகள்.

(a) இரெவினியூ போர்டாபீஸில் வேலைக்கமர்ந்தது.

(b) மசூலிப்பட்டணம் தாசீல்தாராக நியமனம்பெற்றது.

(c) டிப்டி கலெக்டராக வேலைபார்க்க உத்திரவுபெற்றது.

(d) திருவாங்கூர் திவாணுகச்சென்றதும் அங்கு இவரியற்றிய சீர்திருத்தங்களும், பின்னர் உபகாரச் சம்பளம்பெற்று. இளைப்பாறுமாறு விடப்பட்டார். அப்பொழுது ஸி. எஸ். ஐ, பட்டம்பெற்றார். பஞ்சகாலத்தில், இங்கிலாந்து அரண்மனையாரால் அனுப்பப்பெற்ற பொருளை 'வெப்ஸ்டர்' துரையவர்களுடன் கூடயிருந்து விநியோகம் செய்தார்.

(e) மறுபடி புதுக்கோட்டை இராஜ்யத்துக்கு திவாணுகச் சென்றதும், அங்கு இவர்செய்த சீர்திருத்தங்களும்.

4. புதுக்கோட்டையினின்று திரும்பியகாலத்து, சென்னை கவர்னராயிருந்த "வென்லாக்கு" பெருமான் நமது சாஸ்திரியாரைப்பற்றிச் சொல்லியது,

5. கே. ஸி. எஸ். ஐ பட்டம்பெற்றது.

6. சாஸ்திரியார் மரணம்.

7. இவர் மரணச் செய்தியைக்குறித்த கடிதங்கள்.

# 1. கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்.

இவ்வுலகின்கண், ஜீவப்பிராணிகளின் நிலைமைகளெவற்றுள்ளும், மிக்கப் பரிதபிக்கத்தக்கதும், உதவியற்றதுமானது மானிடர்களது நிலையே. பெருந்துயருக்கும், பெருங்குறைகளுக்கும் எப்போழ்தும் இம்மானிட ஜென்மம் உடன்படவேண்டியிருக்கிறது. எதிர்பாராக் கஷ்டங்களாலும், எதிர்பார்க்கினும் நீக்கவொண்ணாத்துன்பங்களாலும், அது சூழப்பட்டுளதென்பது நாமறியாததுமல்ல.

இவ்விதச் சங்கடங்களின்று நம் மானிடர்களை விடுவிக்கத் தகுந்தோர்கள், யாவரேனும், இவ்வுலகின்கண்வுளரோவென, உற்றுநோக்கின், உளரென்றே நாம் தீர்மானிக்கலாகும். அவ்வண்ணமொருவரிருந்தும், என் நாம் துயரடையவேண்டும்? நமது மனக்கவலையை என்மாற்றிக்கொள்ளல் கூடாது? என் வீணில் நாம் வருந்தவேண்டும்? அவ்வாறு ஒருவர் இருத்தலையறியாமலோ, அறிந்துமவரையலட்சியஞ்செய்தோ அல்லது அவரை நம்புவதில் யாதொரு பயனுமில்லை யென்ற விபரீத வெண்ணங்கொண்டோ, அநேகர் வருந்துகிறார்கள்.

> "தனக்குவமையில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
> மனக்கவலை மாற்றலரிது."

என்பது பொய்யா மொழியன்றோ?

அவரே, நமது துன்பங்களைத்தொலைக்கவல்லவர்; எவ்வித உதவியை நாடுகிறோமோ அவ்வித வுதவியை யறிந்தளிக்கத் தக்கவர்; அசாத்தியமெனத்தோன்றும் விஷயங்களைச் சாத்தியமென நடத்திக்காட்டவல்லவர்; நாம் இவ்வுலகின்கண் ஜீவித்திருப்பதுமவரருளாலே; நாம் நன்குவாழ்வதுமவர் கருணையினாலே; இறப்பதும் அவரது கிருபையாலே. இத்துணை மேம்பாடுடையவரையாரென வறியாதார், அநேகருளரோ? அவர்தான் கடவுள்.

அவரது பாதாரவிந்தமே துணையெனத் திடமாயெண்ணி யோர்க்குக் கவலையென்பதேகிடையாது. எக்காலத்தும், எவ்விடத்தும், எச்சமயத்தும், எவ்விதத்துன்பமும் அநுபவிக்கவேண்டுவதில்லை. அவரை நம்பினாலல்லாது சுகமுமில்லை.

"வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பையில."

நாம்செய்ய வேண்டுவதெல்லாமொன்றே. அதுமிக்க சிரமத்தையுண்டுபண்ணக்கூடியதுமல்ல; செய்யமுடியாததுமல்ல; எல்லோராலும் செய்யக்கூடியதே; கஷ்டமில்லாது சுலபத்துடன் முடியக்கூடியதே; அதுதான் நாம் அவரை நம்புவதாகும். நமது முழுமனத்துடன் அவரை நம்புவோமேயாகில் கைவிடப்படமாட்டோமென்பது திண்ணம். எவ்வித அபாயத்துக்கும் பயப்படவேண்டுவதில்லை. அவரது அபயமே துணையாகும்.

மார்க்கண்டேயரது சரித்திரத்தையுற்றுநோக்குவோம். "கடவுளே தனது குறையை நீக்கவல்லவர்" என்ற திடநம்பிக்கைகொண்டு, கடவுளையே தியானித்தவராய், கோயிலில், அவரருகேயே அவர் உட்கார்ந்தார்; என்றும் பதினாறு வயதுடனிருக்க பாக்கியம்பெற்றார்; எல்லாரையுமழிக்க வல்லயமனுமொரு நொடியிலழிந்துபோகவும், மாதாப்பிதாக்கள் சந்தோஷமடையவுங் காரணமானார். மேன்மையான சிவபதம் கிடைக்கவும் வழிதேடிக்கொண்டார். ஆகையால் கடவுளை நம்புவதில் பிரயோஜனமில்லாமலிருக்கவில்லையென்று இவ்விஷயமொன்றே நமக்கு நன்கு வற்புறுத்தவில்லையா?

எவ்விஷயமெண்ணினும், எக்காரியந்தொடங்கினும் அவரை மனத்துள்எண்ணியே நாம்செய்யப்புகல் உத்தமமாகும்; நாம்செய்யும் தொழில்களையெல்லாம் அவருக்கு அர்ப்பிதஞ்செய்துவிடல் மிக்க சிலாக்கியமாகும்; நன்மையோ, தீமையோ, அவரது செயலே என்று எண்ணல்வேண்டும்; அவ்வண்ணம் நினைத்து நாம் ஒழுகுவோமேயாகில், இவ்வுலகின்கண் நமது வாணாட்களைச் சுகமாய்க் கழிக்கலாகுமென்பதில் சற்றேனுமையமில்லை. நமது முன்னோர்

களாகிய மகரிஷிகள், தங்கள் சந்ததியார்கள் நன்மையடையவேண்டுமென்ற நற்கருத்துக்கொண்டவர்களாய், ஈஸ்வரத்தியானமும், ஈஸ்வர நம்பிக்கையும் அவர்களுக்கு வரும்பொருட்டும், எங்கு சுற்றிநோக்கினும் அவரது ஞாபகமே இவர்களுக்கிருக்கும்பொருட்டும் எத்தனையோ வேற்பாடுகள் செய்துவைத்திருக்கிறார்கள்.

ஈஸ்வரநாமத்தையே பிள்ளைகளுக்கு வைத்தழைக்கச்செய்திருக்கிறார்கள். மேலும் காவேரியைக்காணில் பரதேவதையென்று எண்ணி பக்திசெய்யச்செல்லுகிறோம். அதின் கரையிலுள்ள அரசமரத்தைப்பார்க்கினோ, மூலத்தின் பிரமாவின் ரூபமும், மத்தியில் விஷ்ணுவின் ரூபமும், உச்சியில் சிவரூபமும், இருக்கிறதெனவெண்ணி அம்மரத்தை நமஸ்காரியாதப்புறஞ்செல்ல நாம் துணிவடைகிறதில்லை. இவைகளெல்லாம் நமது முன்னோர்களிடமிருந்து அறிந்துகொண்ட விஷயங்களே. இவ்விதத் திருஷ்டாந்தங்கள் அநேகமுண்டு. நமக்கு ஈஸ்வரத்தியானமும், நம்பிக்கையுமுண்டாகி, நாமுய்யும்பொருட்டு, நமது பெரியோர்கள் செய்திருப்பதையுங்கவனியாது, ஈஸ்வரன்மீது நம்பிக்கையுமில்லாது இருப்பவர்களின் நிலைமையை நாம் நோக்குங்கால், இரக்கங்கொள்ள வேண்டியிருக்கிறதேயல்லாது வேறொன்றும் பேசுதற்கிடனில்லை.

சிற்சிலர் ஏதேனும் செய்யத்தகாதவற்றைத் தாங்கள் செய்யுங்கால் “எல்லாம் அவரது செயலே, நம்மால்என்ன ஆகும்? நம்மிடத்து என்ன சக்தியிருக்கிறது?” என்று சொல்லுகிறார்கள். அவர்களே நற்செய்கைகளைப் புரியுங்கால், “நான் தான் செய்தேன்” என்று சொல்லித்தங்களை மேன்மைப்படுத்தி பேசிக்கொள்கிறார்கள். பழிக்குப் பாத்தியப்படவேண்டிய கடவுள் மேன்மைக்குப் பாத்திரமாகாரோ?

ஓரகத்துவாசலின் கண் நெல் உணர்த்தியிருக்க, அந்நெல்லைக்கண்டு, பசுவொன்று உண்ணப்புகுங்கால், அதைக் கண்ட அவ்வீட்டு சொந்தக்காரன் தடிகொண்டு அப்பசுவை நொய்யப்புடைக்க, அப்பசு இறந்துபோகவும், “பாவமில்லையா? இவ்வண்ணம்

செய்யலாமா ?" என்று அவனை வேறொருவன் வினவ, "ஈதெல்லாம் நமதுசெயலா? எனையாளுமீசன்செயல்." என்று விடைப் பகர்ந்தனனும். சொற்ப தினங்களுக்குப் பிறகு அவனே அநேக மனிதர்களுக்கு அன்னமளித்தனனும். அதை மற்றவன்கண்டு "இச்செய்கையாருடையது" என்றுவினவ "எனதே" என்று மறுமொழிகூறினனும். இது நியாயமாகுமா? இவ்வண்ணம் நடத்தலிற் ஏதேனும் பயனுண்டோ?

எல்லாவற்றிற்கும் "தெய்வபலம் வேண்டாமா" என்று அநேகர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அதின் பொருளென்ன? மனிதர்களது பலமும், முயற்சியும் எவ்வளவு இருந்தபோதிலும் தெய்வசகாயமும் வேண்டுமென்பதே. எவருமறியாவொணு ஈசற்கல்லது, மற்றவர்களுக்கு எச்செய்கைகளையும் செய்துவைக்க சாமர்த்தியமுண்டோ? அவ்வண்ணமிருக்க அவரை நம்பாமல், அவர் சகாயத்தை எவ்வண்ணம் சம்பாதித்தல்கூடும்?, 'அவனல்லாது அணுவுமசையாது" "அவனன்றி யோரணுவுமசையாதெனும் பெரிய வாப்தமொழியொன்று" என்ற இவைகள் யாவருமறிந்ததே. ஆகையால் அவரை நம்பவேண்டுவது ஆவசிகமே. முயற்சி மெய்வருந்தக் கூலிதந்தபோதிலும், முழுதும் காரியசித்திபெறச்செய்வது தெய்வகடாட்சமே. இவ்விதமிருப்பதால், தெய்வத்தை நம்பினோர்கள் கைவிடப்படமாட்டார்கள். இவ்வண்ணம், நம்பியிருப்பவர்களே, பெருமையிற் சிறந்தோர், ஞானத்திலுயர்ந்தோர், வல்லமையில் சிலாக்கியத்தைபெற்றோர், இன்பாநுபவத்தில் நிகரற்றோர்.

மேற்கூறிய வண்ணம், கடவுளை நம்புவதால், நிர்ப்பாக்கிய தசையில் நமது மனமடையக்கூடிய வருத்தத்துக்கு, நாம் தக்க சாதனத்தைச் சம்பாதித்தவர்களாகிறோம். நமது ஜீவன் நம்மைவிட்டகன்று, புதியவுலகத்தையும், புதியகாட்சியையும் கண்ணுறச்செல்லுங்கால், கூடவந்து துணைசெய்பவர் கடவுளைத்தவிர்த்து வேறு எவரேனுமுளரோ? நமது நண்பர்களால் கூடுமா? நமதுறவினர்களாலாகுமா? அயலார்களால் சாதிக்கத் தகுந்ததா? வேலைக்காரர்கள்தான் வந்து உதவிசெய்ய முடியுமா? அவரொருவரால் தானாகவேண்டும்.

கஜேந்திரன் முதலைவாயி லகப்பட்டு பரிதவிக்குங்கால், எவ்வளவோ பலத்துடன்கூடிய அவன்சுற்றத்தார்களிலநேகர், அக்கஜேந்திரனை முதலை வாயினின்று விடுவிக்கமுயன்றும் பயனில்லாது போய்விட்டது. கடைசியாக, கடவுளொருவரால் தானுதவேண்டுமென்ற திடநம்பிக்கைக்கொண்டு "ஆதிமூலமே" என்றழைக்க, கருணாகரக்கடவுள், தன் பக்தனைக் காப்பாற்றுதற்பொருட்டு தன் வாகனமாகிய கருடன் மீதுவந்தும், அவ்வேகம் போதாது கண்டு, நடுவழியில் வாகனத்தினின்றுமிறங்கி, நடந்து வெகு வேவேகமாய்வந்து அம்முதலையைக்கொன்று கஜேந்திரனைக் காப்பாற்றினுரென்ற விஷயம் நாம் படித்தறியாததா? ஆகையால் அவரை நம்புவதில் நாம் பயனையடைவோம். அப்படி நம்புவோமேயாகில் நாம் கைவிடப்படமாட்டோம். "கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்" என்ற வாக்கியமுண்மையே. "தெய்வமிகமேல்" என்பதௌவையின் வாக்கன்றோ?

"அறக்கடனீயே யருட்கடனீயே யருங்கருணாகரனீயே
திறக்கடனீயே திருக்கடனீயே திருந்துளமொளிபட ஞான
நிறக்கடனீயே நிகர்கடந்துலகின்னிலையு நீயுயிரு நீநிலைநான்
பெறக்கடனீயே தாயுநீயெனக்குப்பிதாவு நீயனைத்து நீயன்றோ."

---

## 2. வாய்மை அல்லது பொய்யாமை.

---

"வாய்மையெனப் படுவதியாதெனின் யாதொன்றுந்
தீமையிலாதசொலல்."

பிறிதோருயிர்க்குத் தீங்குசிறிதும் பயவாதசொற்களேமெய்ம்மையாமென வரைந்தனர், தெய்வப்புலமை திருவள்ளுவநாயனுர். ஆகையால் நாம், நடந்த வற்றைக்கரவாது கூறுதலினும், அச்சொற்கள் பிறிதோருயிர்க்கு கெடுதல் விளைத்தல்கூடாது. எவ்வாற்றுனும் உயிர்கட்கு தீங்கு பயத்தல்கூடாதாம் என்பதை வற்புறுத்த அவ்விதம் கூறியுள்ளார். சிறிதும் தீமைபயவாது, நன்

மையேபயக்கும் வழி, பொய்யுரையும் வாய்மையே; சிறிது தீமைபயக்கும்வழி, வாய்மையும், பொய்மையே. இவ்விதம் அவர் கூறியிருப்பதால், பொய்சொல்லலும் கூடுமென்றெண்ணி நாம் பொய்யையே சொல்லல்கூடாதெனவற்புறுத்தினர்.

நமது நாட்டின்கணுள்ள, பெரியோர்களெல்லாம், உலகிற் பெரும்பாவங்கள் ஐந்தாமெனவும், அவற்றுள் "பொய்" ஒரு பாவமெனவும் கூறியுள்ளார்கள்.

"பொய்யுரையஞ்சுமின் புறஞ்சொற்போற்றுமி
னூனூண்டுறமினுயிர்க் கொலைநீங்குமின்

*           *           *

பொய்க்கரிபோகன்மின் பொருண்மொழி நீங்கன்மி
னறவோரவைக்கள மகலாதணுகுமின்

*           *           *

கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக்கோட்டியும் விரகினிலொழிமி
னின்மையுஞ்செல்வமும் யாக்கையுநிலையா."

(சிலப்பகதிகாரம்.)

"கள்ளும் பொய்யுங் காமமுங்கொலையு
முள்ளக்களவு மென்றுரவோர் துறந்தவை."      (மணிமேகலை)

(உரவோர்—அறிவுடையோர்.)

பொய், ஐம்பெரும் பாவங்களுளொன்றாகையால், திரிகரணத்தாலும், அதைப்பற்றாது ஒழுகுவது சிறந்த அறமாகும். இப்பெரும்பாவங்களுள்ளும், பொய்யே, மிகப்பெரிய பாவமென்றும், ஏனையபாவங்களுக்கெல்லாம் இப்பொய்யே காரணமாயிருக்கிறதெனவும், சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். மனப்பரிசுத்தமில்லாவிடத்து, பாவவெழுச்சி மனத்திடத்து உற்பவிக்கிறது. அம்மனப்பரிச்சுத்தமோ வாய்மையாலுண்டாகிறது.

"அகந்தூய்மை வாய்மையாற்காணப்படும்" என்பது குறள். ஆகையால் மனப்பரிசுத்தமில்லாவிடத்து மற்ற பாவங்கள் பிறக்கிறது. ஆகையால் இவைகளுக்கெல்லாம் காரணம் பொய்யேயாகிறது. எல்லாவற்றின் பயனையுமொருங்கே தரத்தக்க இப்பொய்யாமையையே மேற்கொண்டொழுகல் நல்லதாகும்.

"பொய்யாமை பொய்யாமை யாற்றினறம்பிற
செய்யாமை செய்யாமைநன்று."

பொய்யாமையே இடைவிடாது செய்பற்க. எல்லாவறத்தின் பயனையும் இப்பொய்யாமையே தரத்தக்கதென, இக்குறளிலிருந்து நாமுணரலாகும். எப்படிப்பொய்யாமை எல்லாவறத்தின் பயனையும் தரவல்லதாகுமோ, அப்படியே பொய்யும் எல்லாவித தீங்குகட்கும் காரணமாகுமென நாம் அறியலாகும்.

பொய்யுணர்வு, பொய்யுரை, பொய்யொழுக்கம் என மூவேறு வகுப்பாக இப்பொய்யை பெரியோர் பிரித்திருக்கின்றனர். பெரியோர்கள் உண்டெனக் கொண்டவற்றை, யிலவென்று கொள்ளுதல் பொய்யுணர்வாகும்.

"அற்றன்றாதலறிதான் மனஞ்செய்தல்
சொற்றன்மாட்டு நிகழ்த்தல் பிறனோர்த்தன்
மற்றித்தன்மைபடுமாயின் மாண்பிலாக்
குற்றப்பொய் யென்றுரைப்பர் குணமிக்கார்."

பிறர் கேட்குமாறு, நடவாதனவற்றை தாமறிந்தும், நடந்ததாகச்சொல்லல் பொய்யுரையாம். பொய்யுரையாமையே பேரறமெனக்கருதி "ஸத்யம்வத" என நமது சாஸ்திரங்களுமுறையிடலாயிற்று. இது முக்கியமாய், நியாயஸ்தலங்களில் சாட்சி சொல்லுகிறவர்கள் கவனிக்கத்தக்கதாம். ஒன்றைக்கண்ணால் கண்டு, மற்றொன்றை, சாட்சியமாகக்கோரும்போது நாம் சொல்வது, மகா பாவத்துக்குள்ளாக்குமென கற்றுணர்ந்தோர் கூறுவார்கள். "கண்டொன்று சொல்லேல்" என்ற ஔவையார் வாக்கும் நோக்கத்தக்கது. "பொய்ச்சான்றுரைத்தவன், வஸ்திரமில்லாதவனாய், பொட்டைத்தலையனாய், குருடனாய், பசிதாகங் கொண்டு, தன் சத்துருவின்வீட்டில் பிச்சையெடுப்பான்." என மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லப்பெற்றுளதை யாவருமறிவார்கள். "நெஞ்சாரப் பொய்தன்னைச்சொல்லவேண்டாம்," "காணாத வார்த்தையைக் கட்டுரைக்கவேண்டாம்" இவைகள் உலக நீதிவாக்கியங்களன்றோ?

"தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச்சுடும்."

தானறிந்தும், பொய்யைச்சொன்னால், தன்மனமே தன்னைச்சுடுமென்பது பொய்யாமொழியன்றோ. மேலும் "சீவகசிந்தாமணியில்"

"மெய்யுரை விளக்குமணி மேலுலககோபுரங்க
ளையமிலநின்ற புகழ்வையகத்துமன்னு
மையல்வினைமாநரக கோபுரங்கள்கண்டீர்
பொய்யுரையும்வேண்டா புறத்திடுமினென்றான்."

(மெய்யுரையைக்கூறினால், அதற்கு இப்பூமியில் நிலைநின்ற புகழ்கிடைக்கும். மேலுலகத்து மணிக்கோபுரங்களையுடைய கோயில்கிடைக்கும்; பொய்யுரையைக்கூறினால், அதற்கு இப்பூமியிற் பழிஉண்டாக்கும்; மறுமையிலும் நரகத்துக்கோயில்களே கிடைக்கும்; இவ்விரண்டும் சந்தேகமில்லை; ஆதலால் பொய்யுரையை கைவிடுமினென்று கூறினான்.)

நமது நாட்டிலும், நமது முன்னோர்கள், பொய்ச்சான்றுரைப்பதைப் பெரும்பாவமென மதித்திருக்கிறார்கள். ஒன்றைச் செய்வதாகச் சொல்லித்தவறும் விஷயத்தில், "பொய்ச்சான்றுரைத்தவன்போகும் பாவத்தில்போவேனாகவு" மெனச் சாசனங்களெழுதிக்கொள்வது, முற்காலத்து வழக்கமாயிருத்தல் புலப்படுகிறது.

ஆயினும் சிறிதும், தீமைபயவாதவழி, பொய்யுரை பாவமாகாதென்ற விஷயத்தைப்பற்றி முன்னமேயே கூறப்பெற்றுளது.

சாஸ்திரங்களிற் கூறப்பெற்றுள்ள, நன்னெறிகளின் உண்மையிலொழுகாநின்று, பிறரை வஞ்சித்தற்பொருட்டு, அவ்வண்ணம் நடப்பதாக பாவனைசெய்து நடித்தலே வஞ்சவொழுக்கமாம். இதுவும் பெருப்பாவத்துக்கிடனாம்.

"நெஞ்சிற்றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணாரில்."

ஆகையால் 'ஷோய்' பெரும்பாவமென்றறிந்தோம். மேலும், இவ்வுலகத்தில் உண்மையே யில்லாது, பொய்யே உலவுவதாயிருந்தால், நாம் ஒரு காரியமே செய்தலொண்ணாது; ஒருவரையுமே நம்பலியலாது; நம்மிடத்துக்கூறப்புகும் சமாசாரங்களை நம்ப நாம் மனந்துணியோம். நாம் பொய்வார்த்தைகளால் மோசமுடைய, ஒருவரையும் நம்ப, நாம் இஷ்டமில்லாதவர்களாகிறோம். நமது காரியங்கள் நடந்தேறுவது, மிக்க கஷ்டமாகிறது. சென்னையிலிருக்குமொருவர், கல்கத்தாவிலிருக்கும், தமது நிலம், பணம் முதலானவைகளை மேற்பார்க்க, குமாஸ்தாவொருவரை நியமித்திருப்பதாக வெண்ணிக்கொள்வோம். அவர், அக்குமாஸ்தாவை நம்புவதாயிருந்தால், அவைகளினின்றும், தமக்கு அவ்வருடத்தில் கிடைத்திருக்கும் வருமானத்தை, அவருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாகும். ஆனால், தமது மனிதர், பொய்சொல்லிவிடுவாரென்ற பயங்கொண்டால், தானே நேரில் போய்ப்பார்த்து வரவேண்டியதாய், அவருக்கு நேரிடும்; வீண்பொருட்சிலவும், தேகசிரமும், அவருக்கு ஏற்படுகிறது. உலகத்தில் பொய்ம்மிகுந்தால் இவ்விதசிரமம், எல்லோருக்குமே ஏற்படும்.

"தமது சரக்குகளே நல்ல சரக்குகள்" எனச்சொல்லி சிற்சில சமயங்களில், வியாபாரிகள் மோசஞ்செய்கிறார்கள். இது சொற்பகாலத்துக்கு, அவர்களுக்கு இலாபத்தையுண்டுபண்ணினும் பிற்காலத்து வெகு நஷ்டத்தையே அவர்களுக்கு விளைவிக்கிறது. இவ்விதம் மோசம்செய்வதாகத் தெரிந்தபின்னர், ஒருவருமே, அவ்வியாபாரிகளிடத்து, சரக்குக்கொள்ளார்கள். நல்ல சரக்குகளைவைத்து, பின்னர் அவர்கள் வியாபாரஞ் செய்தபோதினும், ஜனங்கள் பொதுவாய், அவர்களிடத்து வியாபாரஞ்செய்ய, பயப்படுவார்கள். ஆகையால் அவர்கள் நஷ்டமேயடைகிறார்கள். "பையனும், புலியும்" என்ற கதைபோலாகிறது. ஆகையால் பொய்யைத்தள்ளி மெய்யையே பேசவேண்டும்.

மேலும் பொய்யுரைப்பவனை எல்லோரும் இகழுவார்கள். அவனைநம்பி ஒருவரும் அவனுக்கு வேலைகொடார்கள். ஜீவனார்

த்தத்துக்கு வேலையகப்படுதல்கூட அவனுக்குக் கஷ்டமாகிறது. மெய்யுரைப்பவனை யெல்லோரும் கொண்டாடுவார்கள். அவனுக்கு சகலவித சம்பத்துகளும் பெருகும். "பொய்யுரைப்பவன்" என்று ஐயப்படுவதற்கு ஆளாவதைப்போல், அவ்வளவு மனவேதனையுண்டாக்குவது மற்றொன்றுமேயில்லை. இப்பழிப்பையொருவன், ஒரு கணமேனும் பொறுத்தலரிது. பொய்யனென்று புகலப்படுவது சாலவும் அவமதிப்பைப் பயக்கின்றது. இப்படியிருக்க, யாம் உண்மையுடையவர்களாயிருக்கச் சிறிதும் கருத்துக்கொள்ளாதிருப்பது யாது காரணம்பற்றியோ?

"மெய்யதைச்சொல்வா ராயின் விளங்கிடுமேலுநன்மை
வையகமதனைக்கொள்வார் மனிதரிற்றேவராவர்
பொய்யதைச்சொல்வாராகில் போஜனமற்பமாகும்
நொய்யவரிவர்களென்று நோக்கிடாரறிவுள்ளாரே."

இவ்வாறு, பொய்யாம் பெரும்பாவத்தைச் செய்யாதிருத்தலே பேரறமாம் என்பதைவிளக்க நமது நூற்களிற் பல கதைகள் உளவாம்.

'அரிச்சந்திரன்' என்னுமரசன், ஒருபொய் கூறமாட்டாது தன்னரசிழந்து, மனையிழந்து, மகனிழந்து, தானும் புலயற்கடியனாகிப் படாதனபட்டும், பின்னர் எல்லாவற்றையும் திரும்பவடைந்தது யாவருமறிந்ததே

"பதியிழந்தனம் பாலனையிழந்தனம்படைத்த
நிதியிழந்தனமினி நமக்குளதெனநினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலேமென்றோர்
மதியிழந்துதன் வாயிழந்தருந்தவன் மறைந்தான்."

(அரிச்சந்திரபுராணம்.)

'தசரதன்', பொய்கூறலறியாது, தன்மகனை காடுபோக்கி தன்னாருயிர் துறந்தனன். 'நக்கீரனாரும்' பொய்யாமைக்கு ஒரு சான்றுவார். "கொங்கு தேர்வாழ்க்கை" என்னுஞ் செய்யுட்கு, தாமறிந்த குற்றத்தை நச்சீரனார்கூறவே, அச்செய்யுளை அருளிச்செய்த, நமதிறைவன், இவர் முற்போந்து தமது நெற்றிக்கண்ணைக்

காட்டி, தாந்தெய்வமாதலை இவர்க்குணர்த்தினார். இறையனார் இவருக்கு, இப்படி உணர்த்தியகாலத்தும் "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என நக்கீரனார்கூறி நின்றதை தமிழுலகும் நன்கறிந்ததே.

"பிரான்சு" தேசத்தில், அரசனைத்தள்ளி, குடியரசு, ஏற்படுத்திய காலத்தில், எவ்வகைப் பயன்விளைந்தாலும் கவனியாது, அஞ்சாமல் உண்மை உரைத்தற்கு ஏற்ற உதாரணமாய் நடந்த கதையொன்றுண்டு.

"லாம்பேல்" என்னும்சீமாட்டி, அரசன் பக்கத்தில் பேசுகிறாளெனப்பிடிக்கப்பட்டு, 'பாரீஸ்' நகரத்து ஆட்சியைக்கைக்கொண்டவர்கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டு, "கொடுங்கோலரசை விலக்கவேண்டும்; உயர்வுதாழ்வின்றி குடிகளனைவரும் ஒரே நிலையிலிருக்கவேண்டும்; இராஜனையும் இராணியையும் பகைக்கவேண்டும்." என்று எல்லாரையும்போல் பிரமாணஞ்செய்யச் சொன்னகாலத்து, இறுதியிற் கூறியதற்குமாத்திரம் சம்மதிக்கமாட்டேன் என்றனள். "அப்படிச்செய்யாவிடின், உயிர்நீப்பாய்" என்றும் அவர்களால், அச்சீமாட்டி பயமுறுத்தப்பட்டாள். அதற்கும் அவள் அஞ்சாது "பொய்மொழி புகல்வதில்லை" எனப்பகன்றனள். மறுநிமிஷத்தில் அவளுயிர் மாய்க்கப்பட்டது. உண்மைக்காக உயிரைக்கொடுத்த, அவள் நெஞ்சுறுதியை உன்னுங்கால், சொற்ப கஷ்டத்திற்கஞ்சி, உண்மையுரைக்க பின்வாங்க, நமது மனம் வெட்கமடையாதா?

சிலர், பொய்யை மெய்போற்காணும் வண்ணம் சொல்வதுமன்றி, அதுபொய்யாகாதெனவு முரைக்கிறார்கள். அது மெய்யாகாது. "சித்திரம்பேசேல்" என ஔவையார் வசனம் கவனிக்கத்தக்கது. மேலும், நமக்கு தெரியாதவற்றை, "நாமறியேம்" என்றுகூறுவதே சிலாக்கியமாகும்.

'பொய்' இத்தனைவித கெடுதல்களை விளைவிக்கக்கூடியதாயிருப்பதால், பொய்யைத்தள்ளி மெய்யையேபேசவேண்டும். உள்ளபடியின்றி நம்மை மறுவகையாகத் தோற்றுவிக்காமலிருக்கவும்,

மனத்தின்கண் இல்லாதவற்றை வாயினால் உரைக்காதிருக்கவும் நாம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிஷமும் முயலவேண்டும்.

"எல்லா விளக்கும் விளக்கல்லசான்றோர்க்கு
பொய்யா விளக்கேவிளக்கு."

## 3. "சோம்பித்திரியேல்"

ஆத்திச்சூடி

சோம்பலடைந்து நீ வீணாகக்காலங் கழித்துத் திரியாதே என இவ் ஔவையார் வாக்குப் பொருள் கொள்ளும். எப்பொழுதும் மனிதன்வேலையேசெய்து கொண்டிருத்தல் வேண்டுமென்ன இவ்வாக்கியம் பொருள் படுமென்று எண்ணல்கூடாது. எப்போழ்தும் வேலை செய்துகொண்டிருந்தால் தேகஞ் சீர்கெட்டு தொலைந்தேபோகும். "எப்பொழுதும் வேலையும், விளையாட்டேயில்லாதிருத்தலும் ஒரு மனிதனை மந்தகதனாக்கிறது; அம் அம்மாதிரியே எப்போழ்தும் விளையாட்டும் வேலையேயில்லாதிருத்தலும் ஒருமனிதனை மந்தமுள்ளவனாக்குகிறது" எனக்கவிவாணரொருவர் கூறியுள்ளது யாருமறியாததில்லை. ஆகையால் சிற்சில வேளைகளில் வேலையில்லாது சும்மாயிருக்கவேண்டுவது ஆவசிகமே. மேலும் உடலின் உறுப்புகள் எவ்வளவு அதிகமாக ஓடியாடி உழைக்கின்றனவோ, அவ்வளவுக்குச்சரீரம், இளைத்து நஷ்டமடைகிறது. இந்நஷ்டத்தை ஈடுசெய்ய வேலையின்றிச் சுகமாயிருத்தல்வேண்டும். இல்லாவிடில் நமது தேகசௌக்கியம் கெட்டு, சரீரபலங் குறைந்துபோகும். "மரங்களடியில் தினம் இரண்டு மணிநேரம், பக்கத்தோடும் ஓடையின் சப்தத்தைக்கேட்டுக்கொண்டும், மேலிருக்கும், ஆகாயமண்டலத்தைக் கவனித்துக்கொண்டும், சாயங்காலவேளைகளில், படுத்திருப்பது சோம்பலாகாது. இது ஒவ்வொருவரும், தினந்தோறும் செய்யவேண்டிய முக்கிய கடமைகளுளொன்றும். சுத்த ஆகாயமும், காற்றும் சரீர சௌக்கியத்துக்கு இன்றியமையாதது என ஒரு

ஆங்கிலவித்வான் கூறியுள்ளார். ஆகையால், சோம்பலென்பது, நாம் வேலைசெய்ய வேண்டியகாலங்களை, அவ்வண்ணம் வேலை செய்ததற்குபயோகியாது வீணிற்சிலவழித்தலேயாகும். இவ்விதச்சோம்பலே கேட்டைவிளைவிக்கும்; உலகத்தில் நம்மை தலையெடா வண்ணஞ்செய்யும்.

சோம்பல் நம்மை யணுகாவண்ணம் நாம்மிக்க கவலையுடனிருத்தல்வேண்டும். அதற்கிடங்கொடுப்பின், நாம் ஒரு வேலையும் செய்யமுடியாதவர்களாய் விடுவோம். பள்ளிப்பிள்ளையொருவன், ஒரு நாள் சோம்பலினால் பாடம் படியாதிருப்பின், மறுநாளுமப்படியேயிருப்பதில் ஆநந்தம் கொள்கிறான். இவ்விதமிருந்து, பின்னர் பாடங்கள் படிப்பதே, கஷ்டமான தொழிலெனவுணர்கிறான். கடைசியாக, பரீட்சை காலத்தில் பாடம் மிகுதியாக யிருக்கக்கண்டு, பாடங்களைப்படிக்க முடியாதவனாகி, பரீட்சையில் அவன் தவறுகிறான்; பரீட்சையே, வேலைக்கு யோக்கிதா பத்திரமாயிருப்பதால், நல்லவேலைகள் ஒன்றுக்கும் பயன்படாதவனாகிறான்; அப்படியே வேலையகப்பட்டுச் சென்றாலும், அங்கும், சோம்பலால் தன் வேலையைச் சரிவரச்செய்யாது, சேர்த்து வைக்கிறான்; கடைசியாக, எல்லா நாட்களின் வேலையையும். ஒரே நாளில் செய்யவேண்டுமெனமுயல்கிறான்; அப்படி முயல்வதில் வேலை சீர்பெற நடவாதுபோகிறது; "அவசரக்கோலம் அள்ளித்தெளித்தாற்போலாகிறது"; மேல் உத்தியோகஸ்தர்கள் கண்டு கோபிக்கிறார்கள்; சிற்சிலசமயங்களில். வேலையினின்றுமே அவன் நீக்கப்படுகிறான். சோம்பலால் வேலையிழந்து, சோம்பேரி துக்கமடைகிறான். "சோம்பரெம்பவர் தேம்பித்திரிவார்" என்பது பொய்யாமொழியாகிறது,

"சோம்பன் பிசாசின் தலையணை" சோம்பித்திரிகிறவர்களை தங்களை வேலைபைச்செய்யாவண்ணம் பிசாசு தடுக்கிறதாம். ஆகையால் சோம்பலுக்கு நாம் இடங்கொடுத்தலே கூடாது. அன்றையதினம் செய்யவேண்டியகாரியங்களை அன்றையதினமே நாம் செய்து முடித்தல் வேண்டும். நாளை செய்வோமென்று நாம் ஒரு காரியத்தையும் பாக்கிவைத்தல் கூடாது. "இன்றை

க்குச் செய்யமுடியுமான காரியங்களை இன்றைக்கே நீ செய்து முடி ; நாளை யென்று நீ வைத்துகொள்ளாதே ; நாளைக்கென்பது என்றைக்கு மில்லை" என்ற ஆங்கில பழமொழியை யாவருமே யறிவார். "சரியான காலத்து ஒரு பொத்தலை மூடுவது ஒன் பது பொத்தலை மூடின தொக்கும்" எனவும் சொல்வார்கள். ஆகையால் சோம்பலில்லாமல், நமது வேலைகளை, நாம் செய்து வருவோமேயாகில், நமது வேலைகளும் முடிந்துவிடும். நமக்கு அவ்வேலைகளைச்செய்வதில் கஷ்டமுமிராது.

"வேலைசெய்ய வேண்டுவதாவசிகமில்லை" எனச்சில செல்வவா ன்கள் சொல்லிக்கொள்ளல்கூடும். அச்செல்வவான்களும், சோம் பலினல் அடையும் பிரயோஜனமொன்றுமில்லை. செல்வவான் கள், வயிற்றுப்பாட்டுக்குழைப்பது அனுவசியமாயினும், தேகம் சௌக்கியமாயிருத்தற்கும், மனம் உற்சாகத்தோடிருப்பதற்கும், உழைப்பது ஆவசிகமாகும். கையிற்றடுப்பும், அரையிலே கச் சையுமணிந்து பந்தடிக்கப் போகிறவர்களையும், சாயங்கால வேளைகளில் வெளியேசென்றுகாற்றினுலாவி வருபவர்களையும் நாம் பார்த்திருக்கலாம். அவர்கள் அவ்வண்ணம் என் போகி ருர்கள் ? நாள்முழுதும், வீட்டுக்குள்ளேயிருந்து, எங்கும் அசை யாமல் உட்காரந்திருப்பவர்கள், வியாதியும், அசௌக்கியமு முடையவர்களாய் வருந்துவார்கள். அவர்கள் உடம்பில், உதி ரம் ஓடுகிறவேகம், மிகவும் மட்டிட்டு, ஜீவாதாரமான சக்திகள் மந்தமடைகின்றன.; உணவு ஜீரணமாகாமல் பசி மந்தித்துப்போ கின்றது ; இரவுநேரங்களில் செவ்வையாகத் தூக்கம்வருவதில்லை; அதினுல், பகலிலும் உடம்பு சோறவுற்றேயிருக்கும், வருந்தி யுழைப்பதும், பயிற்சிசெய்வதும், தேகத்தின் ஒவ்வொரு உறு ப்பையும் வலிமைப்படுத்துகின்றன. தேகத்தில் எந்தப்பாகம் வே லைசெய்கிறதோ, உடனேக்குடனே அந்தப்பாகத்தில் புதிதாய் இரத் தம்போய்ச்சேருகிறது. இரத்தம்வேகமாய் ஓடத்தலைப்பட்டால், அதுபற்றி மற்ற உருப்புகளும்வேகமாய் அசைகின்றன. இரு தயம்விரைவாய் அடித்துக்கொள்ளுகிறது ; தன்னிடத்து இரத்தம் வந்து சேரும்போதெல்லாம், அதைச்சுத்தி ,செய்யப்போதுமான

காற்றைவிரைவாய் சுவாசாசயம் ஏற்றுக்கொள்ளுகிறது; சுத்த இரத்தம் தேகமெங்கும்பரவி, கெட்டுப்போயிருக்குமிடங்களைச் சுத்திசெய்கிறது; இரத்தம், செல்லுமிடங்களெல்லாம் ஊட்டம் கொடுத்துக்கொண்டேபோகிறது; இவ்வாறுவிரைவாய்ஓடிய இரத்தம், ஒவ்வொரு உறுப்பிற்கும், உறுதியையும், உற்சாகத்தையு மூண்டாக்குகிறது. இரப்பை, உணவைசெவ்வையாய் ஜீரணமாக்குகிறது; குடல் அதின்வேலையைச் செவ்வனேசெய்கிறது; வேர்வை நன்றாயுண்டாகிறது; உட்கொண்ட உணவுசீக்கிரம் ஜெரிப்பதால் பசி நன்றாய் எடுக்கிறது; வியாதி உண்டாகாமலிருக்கிறது; வியாதியணுகாவண்ணம், நமதுசரீரம் சௌக்கியமாயிருக்க, நாம்வேலையின்றி சும்மாயிருத்தல் கூடாதெனக்கண்டோம். தொழிற்சாலைகளில் வேலைசெய்து, சாமானுங்கையுமாய் கடைத்தெருசென்று, சாமானைவிற்றுப்பிழைக்கும் ஏழை மனிதனோ, பசியில்லாமை, அஜீரணம், கைகால்பிடிப்பு, முதலிய வியாதிகளால் ஒருபோதும் வருந்துவதில்லை. ஆகையால் வேலைசெய்யாது சோம்பலோடிருப்பது வியாதியை வருந்தியழைப்பதாகும்.

வேலைசெய்யாதிருப்பின் "சோம்பேறி" என உலகத்தாரால் அவமதிக்கப்பெற்று மரியாதையை இழக்கிறான். வேலையில்லாமற்போனால் காலம்போவதே கடுமையாகவிருப்பதை அநேகர் உணர்ந்திருப்பார்கள், வேலையில்லாதிருப்பது, கெட்டசெய்கைகளைச்செய்ய, மனமிடங்கொடுக்கிறது. "சோம்பனுடைய மூளை பிசாசின் தொழிற்சாலை" என்றவண்ணம், வேலையில்லாமனிதன் கெட்ட எண்ணங்களையெண்ணி, சிந்தையையடக்காமல், துர்வியாபாரங்களில் தலையிட்டுக்கொள்கிறான். இவ்வண்ணம், சோம்பல் மனிதனுடைய நன்னடக்கையையே, கெடுத்துவிடுகிறது.

"நிழலினருமை வெயிலில் சென்றால்தான் விளங்கும்" என்றவண்ணம், ஓய்வின்சுகம் வேலைசெய்தாலன்றோ இத்தன்மைத்தென்றுவிளங்கும். வேலைசெய்யாது சோம்பலுடனிருத்தல் 'சோம்பலம்பலம் வேகுதய்யா, அடேவாய்தான் வலிக்கவில்லையோ" என்று தீப்பிடிக்குங்காலத்தும் சொல்லிக்கொண்டே, கூரைவீட்

டினுள் படுத்துக்கிடந்த சோம்பேறிகள் எய்தின நிலையை, நம்மையும் அடையச்செய்யும். மேலும், "ஒரு தொழிலுமில்லாதான் முகடியாகும். ஒன்றுக்குமுதவாதான் சோம்பனாகும்" என்ற ஆன்றோர்வாக்கியங்களையும் இங்கு கவனிக்கத்தக்கதே.

"அழன்மண்டு போழ்தினடைந்தவர்கட்கெல்லாம்
நிழன்மரம் போனேரொப்பத்தாங்கி—பழுமரம்போல்
பல்லார்பயன்றுய்ப்பத்தான் வருந்திவாழ்வதே
நல்லாண்மகற்குக்கடன்."

## 4. "கடமுண்டுவாழாமை காண்டலினிதே"

இனியவைநாற்பது.

"டாக்டர் ஜான்ஸன்" தனது நண்பரொருவருக் 'கடன்கொள்ளல்' என்னும் விஷயத்தைப்பற்றி பின்வருவாறு எழுதியிருப்பதாகக் கூறப்பெற்றுள்ளது.

"கடன்வாங்குவதை, அசௌகரியமெனமட்டும் நாம் நினைத்தல் போதாது. கடன்வாங்கல் கஷ்டத்துக்குள்ளாக்கும். கடன் வாங்காதிருக்கமுயல்வதே நமது முதல்கடமையாகும். தரித்திரம் துயரைவிளைவிக்கும்; இன்பமநுபத்திற்கு, தரித்திரமே இடையூறு, ஆகிலுங்கடன்கொள்ளலோ, நமது அந்தஸ்த்தைக்குறைக்கும்; கவலையை யுண்டாக்கும்; பிறருக்குநம்மை அடிமையாக்கும். ஆகையால் நம்மிடத்திலிருக்கும் பொருளுக்குக்குறைந்தே நாம் செலவுசெய்யவேண்டும். செட்டுக்குடித்தனம் நன்மையைப்பயக்கும். தனக்கிருக்கும் பொருளைச்செலவழித்துக் காலட்சேபம்செய்பவனே உத்தமனுவான். கடன் வாங்கிப்பிழைப்பவன் பிறர்பொருளில் பிழைப்பவனாகிறான். அது அடாத காரியமுமாகும்."

இவ்வண்ணம் எழுதியவரோ, மிக்க ஏழையாயினும், அதிக மனோதைரியத்துடன்கூடியவர்; குழந்தைப்பருவமுதலே, தரித்திரமிவ்வித மிருக்குமென்பதையும், கடன் எவ்விதக்கேட்டை விளைவிக்குமென்பதையும், நன்கறிந்தவர்; பள்ளியில் படிக்கும்

காலத்து, கிழிந்த பாதரட்சைகளையும் உபயோகித்தனர். தம்மிடத்துப்பணமில்லாது மூன்றணாவுக்கே ஒருநாள் சாப்பாடு அவர் செய்வார்; படுக்குமிடத்துக்கு வாடகைகொடுக்கும் வகையறியாமலும், கடன்வாங்க அஞ்சியும் இராமுழுதும், தெருக்கள்தோறும் சுற்றி அலேவார். அவர் பசித்திருந்த நாட்கள் எத்தனையோ? இப்படியெல்லாமிருந்தும், அவர் கடன்கொள்ளாதிருந்ததால் பின்னர் சுகத்துடன் வாழ்ந்தார்.

கடன்வாங்கல் என்னும் விஷயத்தைப்பற்றி, இவர் சொல்லியிருப்பது, இவரதுசொந்த அனுபவத்தின் மீதேசொன்னதாகும். அவ்விஷயத்தினுண்மையை அவரே நன்கறிந்தவருமாவார்.

கடன், கேட்டைவிளைக்குமெனக் கூறப்பெற்றது. கடன் வாங்குவதால், வருவாய்க்குத்தக்க சிலவுசெய்கிற வழக்கமென்பதே, நம்மிடத்தில்லாதுபோகிறது. கடன்வாங்கத்துணிந்த மனம் சிலவு அதிகஞ்செய்யத்துணிகிறது. இவ்விதம், கடன்வாங்கிச் சிலவழித்துக்கொண்டேவரின், கடன்கொடுத்தவர்கள், திரும்பவும் பணம்கேட்கும்போது நாமென்செய்வோம்? அப்பொழுது கொடுக்க வகையறியாது நாம் மதிமயங்குகிறோம்; அவமானத்துக்குள்ளாகிறோம். ஆகையால் சிலவைச்சுருக்கி, வருவாய்க்குள் சிலவழிப்பதே உத்தமமாகும்.

"ஆனமுதலிலதிகஞ் செலவானான்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
யெல்லார்க்குங்கள்ளனா யேழ்பிறப்புந்தீயனாய்
நல்லோர்க்கும் பொல்லனாநாடு."

கடன்கொள்ளல், சிநேகத்தன்மையை நீக்கும். கொடுத்த கடனைக்கேட்கில், கோபங்கொள்ளல் யாருக்கும் சகஜமே. கடனைப்பெற்ற பணத்தை, பெற்றவரிடம், திரும்பக்கொடாவிடின் அவர்கள் வருத்தமுறவேதுவாகிறது. இதினின்றும் சிநேகத்தன்மைக்குப் பங்கமேற்படுகிறது.

கடன்வாங்குகிறவர்கள், கொடுக்கத்தவறினால், கடன்கொடுத்தவர்களின் முகத்தைப்பார்க்கவே நாணுகிறார்கள். அவர்கள் காணவண்ணம் மறைவாய்த்திரிய விரும்புகிறார்கள். அப்படி

யிருப்பினும், பணம்கொடுத்தவர்கள், இவர்களைத் தேடிப்பிடித்துப் பல சிநேகிதர்கள் முன்வைத்துக்கோபிக்கிறார்கள். இதினால் நாம் அவமானத்துக்குட்பட வேண்டியிருப்பதுமல்லாமல், நமது மரியாதையையும், அந்தஸ்தும்கெடுகிறது. "கடனில்லாக் கஞ்சிகாக் கஞ்சியாயினும் சிலாக்கியந்தான்" என்ற சாமான்யர்களின் மொழியையும் நோக்கத்தக்கது.

கடன்கொள்ளுகிறவர்கள், சத்தியத்தைக்காப்பது கஷ்டமே. "பொய், கடன்மீது குதிரையேறுகிறது" என, சாமான்ய மொழியொன்று வழங்கிவருகிறது. ஒருவரிடத்துக் கடன்வாங்கும்பொழுது, கடன்கொடுப்பவரைத் திருப்திசெய்யும்பொருட்டு, "தனக்கு வேறிடத்தில் கடனேயில்லையென" சிலர் சாதிக்கிறார்கள். உண்மையில், அநேக மனிதர்களுக்குக்கடன் கொடுப்பவர்களாக, அவர்களிருப்பார்கள். மேலும் வாங்கினதொகையைக்குறித்த தேதியில் செலுத்துவதாகச்சொல்லி, அப்படிச் செய்யத்தவறினும், அதுவும் பொய்யேயாகும். குறித்ததேதியில் செலுத்துவதென்பதோ, இவர்களால் முடியாதகாரியம். அப்படியிருக்கக் கடன்வாங்குபவர்கள் எப்படி சத்தியத்தைக் காப்பாற்ற முடியும்?

"கடன்கொள்பவன், கடன் கொடுக்கிறவனுக்கடிமையே" எனப்பெரியவரொருவர் கூறியுள்ளார். கடன்கொள்பவன், கடும் வட்டி முதலானவை கொடுக்கமாட்டாது, தனது சொத்துக்களேதேனுமிருப்பின் அவர் வசமொப்புவித்துவிட்டு, காலட்சேபத்துக்கும் அவர்கைபார்த்தே பிழைக்கவேண்டியவனாகிறான்.

கடன் மனிதர்களை மோசஞ்செய்யச் செய்கிறது. நாம், திரும்பிக்கொடுக்க முடியாதெனத்தெரிந்தும், கடன்கொள்வது மோசஞ்செய்ய வெண்ணியதேயாகும். மேலும் சிலர், தங்கள் வசம், பிறர் ஒப்புவித்தபொருளை, அவர்களறியாது தங்கள் பொருளௌனவெண்ணிச் சிலவுசெய்கிறார்கள். இது முற்றிலும் பிசகே. இப்படிச்சிலவுசெய்வது நமது சிலவுகளை விருத்திபண்ணும். கடைசியில் நம்மிடமொப்புவித்த பணத்தை நாம் திருப்பிக்கொடுக்க சக்தியற்றவர்களாகி, நம்பிக்கை துரோகத்துக்குட்படவேண்டியவர்களாகிறோம்.

"கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கைவேந்தன்" என்று கம்பர்பாடிய வண்ணம், கடன்பட்டாருக்கு மனச்சமாதானமென்பதே கிடையாது ; எப்பொழுதும் கவலையேபீடித்த மனத்தையுடையவனாகயிருக்கிறான். இவனது குடும்பத்தவர்களுக்கும், சுகமென்பதிராது. இவனைப்பீடித்த கவலை, அவர்களையும் பீடிக்கும். ஆகையால் கடன்பட்டார் குடும்பமே சுகமடையாது.

கடன்வாங்குவது மேற்கூறிய கெடுதல்களை விளைவிக்கிறது. இவ்விதக்கெடுதல்கள் மத்தியிலிருக்கநேரிடும், நாம் எங்குசுற்றியும் கஷ்டத்தையேகாண்கிறோம். ஆகையால் கடன் கஷ்டத்துக்கேயாளாக்குகிறது. இதையறிந்தும், மாந்தர், கடன்வாங்க உடன்படுகிறதையென்ன ஆச்சரியமாகவிருக்கிறது. சிலர் தாம் பட்ட அவஸ்தைகள் போதாதென்றெண்ணி, தம்பிள்ளைகளையும் கவலையுறும் வண்ணம்செய்கிறார்கள். இவர்கள், இறந்தபின்னர், இவர்களது பிள்ளைகள் படுமவஸ்தையை என்னென்றுரைப்பது! எத்தனை வியாஜ்ஜியங்களுக்கு அவர்கள் ஈடுகொடுப்பது! இது விஷயத்தில், நமது இராஜாங்கத்தார்செய்திருக்கும் நன்மைக்கு, நாம் என்றும் நன்றியறிதலை யுடைத்தவர்களாயிருத்தல்வேண்டும். தகப்பனாரால்கொள்ளப்பட்ட கடன், தகப்பனார் சொத்து பிள்ளையிடமிருந்தாலன்றி அவர்களைப்பாதிக்காதென சட்டமேற்படுத்தியுள்ளார்கள். அப்படியிருந்தும், பிள்ளைகளுக்குக் கவலையொழிகிறதில்லை.

நாம் காலட்சேபம்செய்வதில், சற்று கவலையோடிருப்பின், நாம், ஒருவாறு, கடன்வாங்காதிருக்கலாகும்.

வருவாய் இவ்வளவென்று நிதானித்து, நாலு கூறாக்கி, மூன்று பாகத்தைமட்டுமே நாம் செலவுசெய்தல்வேண்டும்; மற்றொருபாகத்தைப் பிற்காலத்துக்குபயோகமாகும்பொருட்டு சேர்த்து வைத்தல்வேண்டும். அநாவசியமான செலவை கூடுமானவரை, நாம்நீக்க முயலல்வேண்டும். செலவுகளை அன்றாடகம் எழுதிக்கொண்டுவந்தால்மட்டுமே, எது அநாவசியமான செலவு எனப்பார்த்து நாம் அச்செலவுகளை நீக்கலாகும். ஒருமாதத்தில்

நாம் அதிகம் சிலவழிக்கவேண்டியவரினும் வரலாம்; எதிர் பாராத சிலவுகள் நேரிடலாகும். அக்காலத்து நாம், மீதமாக்கிவைத்திருக்கும் பணத்தையே எடுத்துச் சிலவழிக்கவேண்டும். அதுபோதாவிட்டால், அவசியமாகவிருக்கும்பக்ஷத்தில், வேண்டுமானவளவுமட்டும் நாம் கடன் வாங்கிக்கொள்ளவேண்டும்.

"கடன்கொண்டும் செய்வன செய்தலினிதே" என்றவண்ணம் கடன்கொண்டாவது செய்யவேண்டிய காரியங்களைச்செய்தே முடித்தல் தகுதியாகும். ஆகிலும் கடன்வாங்கினவுடன், எவ்விதத்திலும் அக்கடனை தீர்க்கமுயலுவதே நமது முதற்கவலையாகவிருத்தல்வேண்டும். தீர்த்தபின்னர், நமது வருவாயிலிருந்து கொஞ்சமேனும் மீதம்பிடித்து முன்போல பணம்சேர்க்க நாம் முயலவேண்டும்.

நமக்கு வேண்டுமானபொருட்களை நாம் இரொக்க விலைகொடுத்தே பெற்றுக்கொள்ளல்வேண்டும். இரொக்கவிலைக்கென்றால், பொருளும் சொற்பவிலைக்ககப்படும். கடனுக்குப்பொருள் கொள்வதென்றால், கடைக்காரர்கள் சொல்லும்விலையையே நாம் கொடுக்கநேரிடும். மேலும் இரொக்கவிலை கொடுத்துவாங்காது, கடனுக்குப்பண்டங்களைக் கொள்வது, அநாவசியமாயிருக்கும் பொருளையெல்லாம் கொள்ள நாம் தூண்டப்படுவோம். வர்த்தகர்களும் விலையாகாத, பண்டங்களையெல்லாம், நம்மிடமொப்புவித்து, கணக்கில் பதிவுசெய்துகொள்வார்கள். இவ்விதம், பலவிதத்திலும் நமக்கு நஷ்டம் ஏற்படும். இவ்வளவு சிலவுசெய்கிறோமென்று நாமறிய ஏதுவில்லாதுபோய், கடன்கொள்ளவேண்டிவரும்.

பண்டங்கள், மலிவாய்க்கிடைக்கிறதெனவெண்ணி, எல்லாவற்றையும் கொள்ளுதலாகாது. அப்பொருள்களால் நமக்கு பிரயோஜனமிருக்கிறதாவென, அப்பொருள்களைக்கொள்ளுமுன் நாம் பார்த்தல்வேண்டும்.

குடி, முதலான விஷயங்களில் பிரவேசியாது நாம் வெகு ஜாக்கிரதையுடனிருத்தல்வேண்டும்.

மேற்கூறியவண்ணம், ஒருவாறு, காலட்சேபம் செய்துவரு வோமேயாகில், கடனில்லாமல் பிழைக்கலாகும். இதற்கென்று விதிகள் ஏற்படுத்திமுடியாது. அவர்கள் விவேகத்துக்கெட்டின மட்டில், காலட்சேபம்பண்ணிக் கடன்வாங்காதிருத்தலே, மே லாகும். கடன், எப்பொழுதும், ஒரு மனிதனுடைய வரும்படி யைப்பொறுத்திருக்கவில்லையெனக்கூறலாகும். ஒரே கச்சேரி யில், பதினைந்துரூபாய் சம்பளம்வாங்குகிறவொருவன், தன் சம் பளத்தினின்றும், ஆயிரம்ரூபாய்சேர்த்து, ஐம்பதுரூபாய் சம்ப ளம் வாங்குகிறவனுக்குக்கடன் கொடுப்பதைப்பார்க்கலாகும். மே லும், ஐம்பதுரூபாய் சம்பளம் வாங்குகிறவனுடைய குடும்ப மும், சிறுகுடும்பமாகவேயிருக்கும். ஆகையால், சிலவுசெய்கிற வர்களுமிருக்கிறார்கள், சேர்க்கிறவர்களுமிருக்கிறார்கள். "கடன் வாங்குகிறவர்கள், கடன்கொடுப்பவர்கள்" என இருவிதம் மானி டர்களுக்குளிருப்பதாக "சார்லஸ்லாம்ப்" கூறியுள்ளார்.

மேலும் நமது நாடுகளில், கல்யாணங்களுக்காகவும், சாவு களுக்காகவும், அதிகப்பணத்தை விரயஞ்செய்து கடனுக்குள்ளா க்கிக்கொள்கிறார்கள். இதுமுற்றிலும் பிசகேயாம்.

"ஜாமீன்" ஏற்றுக்கொண்டு கடன்வாங்கி சிநேகிதர்களுக் கொடுக்கிறார்கள். சிநேகிதர்களுக்குதவி செய்யவேண்டுவது நமது முதற்கடமையே. அக்கடனைத்தீர்க்கும் சக்தி, தமக்கேயிரு க்கிறதென வெண்ணுபவர்களும், சிநேகிதர்கள் கொடாது போனாலும், வேண்டுவதில்லையென நினைக்கிறவர்களும், இப்படிச் செய்தல் உத்தமமாகும். இப்படி எண்ணிச்செய்தாலே, சிநேகி தர்களுக்கு உதவிசெய்ததாகும். இல்லாவிடின், தான் கெடுவது மன்றி, பிறரையுங் கெடுத்ததுபோலாகும்.

கடன்கொள்வதினால் வருங்கேடுகளை ஒருவாறு அறிந்தோம். ஆகையால், கடன்கொள்ளல் கஷ்டத்துக்காளாக்கு மெனவெ ண்ணி, கடனில்லாது வாழமுயலுவதே நாம் செய்யவேண்டிய கடமைகளுளொன்றும்.

## 5. அறிவே வலிமையுடைத்தாம்.

"தண்ணீர் மண்ணைக்கரைக்கிறது; காற்று தண்ணீரைக்குடிக்கிறது; மின்சாரநெருப்பு, காற்று இருந்தவிடந்தெரியாமல் போகச்செய்கிறது; மனிதனோ, மண், தண்ணீர், காற்று, மற்றுமுண்டான இயற்கைப்பொருள் யாவற்றையும் தன்னறிவாலடக்கியாளுகிறான்" என ஒரு ஆங்கிலவித்வான் கூறியுள்ளார்.

முன்னொருகாலத்து, பரமசிவன் தனதிருகுமாரர்களையும் நோக்கி, எவனொருவன் பூமியைச்சுற்றி, சீக்கிரம் தன்னிடம்வந்து சேருகிறானோ, அவனுக்குத்தக்க பரிசளிப்பதாகக் கூறினாராம். முருகக்கடவுள், மிக்கப்பெருமையுடன் தனது மயில்வாகனத்தேறி, பூமிவலம்வர வெகு விரைவாய்ப் புறப்பட்டனராம். விநாயகக்கடவுளோ, மெதுவாய்எழுந்து, பரமசிவனையே வலம்வந்து "பரிசெங்கே" என்றனராம். பரமசிவனிடத்தே எல்லாமடங்குமாதலால், அவரைப் பிரதட்சிணஞ்செய்வது பூப்பிரதட்சிணஞ் செய்ததை யொக்குமென்ற சிறந்தஞானத்தை யானைமுகக்கடவுள் கொண்டிருந்ததால், சிரமம் அதிகமில்லாது காரியசித்தியடைந்து, உலகத்துக்கும், "அறிவே வலிமையுடைத்தாகுமென்றும், புத்திமானே பலவான்" என்றும் அவர் காட்டினார். முருகக்கடவுளோ அதையறியாது, பூமிமுழுதையும் சுற்றியலைந்து அலுத்துச் சலித்துப்போனதுமன்றி, பரிசில்லாமலும்போனார்.

எவ்வித அருமைவாய்ந்த காரியங்களும், அறிவின் சிறப்பால் சித்திபெறலாகுமென, மேற்கூறப்பெற்றுள்ள வசனம் பொருள் கொள்ளும்.

முற்காலத்திருந்த இந்தியாவின் நிலையையும், இப்பொழுதிருக்கும் நிலையையும் உற்றுநோக்குவோம். அக்காலத்திருந்த மனிதர்களுக்கு, இக்காலத்திருப்பவர்களைப்போல் கை, கால்கள் இல்லாதிருக்கவில்லை. அப்படியிருந்தும் அவர்கள் வாசஸ்தலங்களோ, மரங்களின் கொப்புகளாலாகிய குடிசைகள். இடையில் ஆடையாகத்தரித்ததோ, தோல், தழை இவைபோன்றவைகளே.

மேலும் அவர்கள், ஆறு, குளங்களை நீந்தியேகடந்தார்கள்; ஒரு ஊரிலிருந்து, மற்றொருவூருக்கு நடந்தேசென்றார்கள்; சிக்கிமுக்கி கற்களைக்கொண்டே நெருப்புப்பற்ற வைத்துக்கொண்டார்கள்.

இக்காலத்தவர்களோ, வசிக்க அழகான வீடுகளை அமைத்துக்கொள்கிறார்கள்; ஆறு, குளங்கள், சமுத்திரங்கள் இவைகளையெல்லாம், நொடிநேரத்தில் புகைக்கப்பலைக்கொண்டும், படகைக்கொண்டும் அவர்கள்கடந்து செல்லுகிறார்கள்; ஒரு ஊரிலிருந்து மற்றொருவூருக்கு வெகுசீக்கிரத்தில் புகைவண்டியேறிச் செல்லுகிறார்கள். எப்பொழுதுவேண்டுமாகினும், நெருப்புப் பற்றவைத்துக்கொள்ள, நெருப்புப் பெட்டிகளைவாங்கி தம்வசம் வைத்துக்கொள்ளுகிறார்கள்; இன்னமும் எத்தனையோவிதங்களில், வேண்டுமான சௌகரியங்களைத் தேடிக்கொள்ளுகிறார்கள்.

மேலும், இப்பொழுது "இலண்டன்மாநகர்" இருக்கும் நிலைமையையும் 2000 வருஷங்களுக்கு முன்னிருந்த நிலைமையையும் ஒப்பிட்டுநோக்குவோம். ஆகருதியிலும், தேகவலிமையிலும், இப்பொழுதிருக்கு மனிதர்களைக்காட்டிலும் அக்காலத்திருந்தவர்கள் குறைந்திருந்தவர்களாகத் தெரியக்காணோம். அவ்வண்ணமிருந்தும், அறிவினுதவி அவர்களுக்கில்லாததால், ஒருவித சௌகரியமும் அவர்களால் செய்துகொள்ளக்கூடவில்லை.

"தேம்ஸ்" நதியை அநேகமாய் நீந்தியே அவர்கள் கடந்தார்கள் அவர்கள் சிற்சில சமயங்களில் படகுகள் உபயோகிப்பார்கள்; வஸ்திரம் ஆட்டுத்தோலே, வீடுகளோ குடிசைகளே; அக்குடிசைகளிலிருக்கும், துவாரங்களே ஜன்னல்கள்.

இக்காலத்திலோ, ஆற்றைக்கடக்க நீராவிக்கப்பல்கள், குடியிருக்க மேன்மையான வீடுகள், உலோகங்கள் முதலானவைகள் பதம்பண்ணும் பட்டடையோசை நிரம்பியவும், மற்றுமான வேலைகள் செய்யப்படுகிறதுமான தொழிற்சாலைகள், சமயசித்தாந்தங்கள் ஓங்கிவளருமான தேவாலயங்கள், இரயில்வேஸ்டேஷன்கள், சாப்பாடுவிடுதிகள் இவைகளெல்லாம் வெகு சிறப்புட

னமைக்கப்பெற்றிருப்பதை நாம் கண்ணுறலாகும். மேலும் நதிகளைக்கடக்க எத்தனையோ பாலங்களமைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாகும். உன்னதமான விருட்சங்களுள்ள காடுபோல் காணப்படும் கொடிச்சீலையுடன்கூடிய கப்பல்கள் எத்தனையோ கடற்றுறைகளில் காணலாகும். இவ்வித மேம்பாடுகளமைந்த "இலண்டன்" மாநகரை முற்காலத்திய மனிதனொருவன் பார்க்க நேரிடின் என்ன ஆச்சரியங்கொள்வான்! தற்காலத்தவர்களெல்லாம் தேவலோகத்திலிருப்பதாக நிச்சயிப்பானல்லவா? இவ்வண்ணம் தற்காலத்தவர்கள் செய்திருக்கும் செய்கைகளைக்கண்டு, முற்காலத்தவன் ஆச்சரியமடைவதேன்? அறிவுவளர்ச்சியின் காரணமே, இவ்வண்ணமெல்லாம் செய்திருக்கிறதெனச் சொல்லவும்வேண்டுமா? இக்காலத்தவர், விசேட அறிவு விளக்கம்பெற்ற பெருமையினாலன்றோ, நுட்பவித்தைகளைக்கற்று சுகாநுபவத்துக்கதிகாரிகளாயினர். அறிவு விளக்கத்தின்காரணத்தால், ஒரேவகை மானிடர்களே, மேல், கீழாகப்பேதப்பட்டிருத்தலைக்கண்டோம்.

காந்தத்தின் குணங்களையறிந்து, நட்சத்திரமே வானத்துதிக்காத இருட்டு ராத்திரிகளிலும், சமுத்திரத்தை இக்காலத்தவர் எளிதாய்க்கடக்கிறார்கள். மெல்லிதாய் இருப்புக்கம்பிகளிழுத்து, அக்கம்பியை மலைகளின்மீதும், சமுத்திரங்களின் கீழாகவுமமைத்து, மனோவேகம் இணையன்று, என்று சொல்லக்கூடிய வெகு வேகத்துடன், பல செய்திகளை அக்கம்பிமூலமாய் தூரதேசங்களுக்குத்தெரிவித்து கனவிலும் நினைக்கவொண்ணா அதிசயத்தை இக்காலத்தவர் புரிந்திருக்கிறார்கள்; மேலும் பேசும்பேச்சு நெடுந்தூரத்தில், அவசியமானபோது ஒன்றுக்கு ஐம்பதுபங்காய் உரத்துக்கேட்கும்படியாகக் கருவிகளும்இக்காலத்தவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்; ஆழமான காறுறுகளின்மீது, அந்தரத்தில் தொங்குவதுபோல் பாலங்களமைத்தும், பாறைகளைத்துளைத்து, மலைகளைத்தவிடுபொடியாக்கி, பள்ளங்களைத்தூர்த்தும், செம்மையான பாதைகளை அதிகசிரமமின்றி நிமிஷநேரங்களிலேற்படுத்தி புகைவண்டிகளை யோடச்செய்திருக்கிறார்கள்; தரையிலும், தண்ணீரிலுமுண்டாகும், நாம் பிரயோஜனமற்றதென நினைக்கும் குப்

பைகளினின்று, மருந்துகளையும், திராவகங்களையும் உண்டாக்குகிறார்கள்; நேர்த்தியான ஆடைகளை நிமிஷநேரங்களில் நெசவுசெய்து உடுக்கிறார்கள். இவைகளெல்லாம், அறிவு அபிவிர்த்திக்காரணமேயென வறியாதார்யாருமுளரோ? சாஸ்திர ஆராய்ச்சி விருத்தியடைய, அடைய, இயற்கை சுபாவங்கள்கூட மனிதர்களது அதிகாரத்துக்குட்படுகிறதெனச் சொல்லலாகும். ஆகையால் அறிவே வலியுடைத்தாகும்.

மேலும் நாகரீகம்மிகுந்த இக்காலத்தவர்களாகிய புத்திமான்கள், சாஸ்திரபாரங்கதர், பெரியோர்கள், ஆகிய இவர்களெல்லோரும், ஒருநொடி நேரத்தழியநேரிடினும், அவர்கள் விஷயங்களும், கொள்கைகளும், புத்திமதிகளும் அழியாவண்ணம், கிரகித்து எல்லோரும், எக்காலத்திலும் அறிந்துகொள்ளும்படி, கடிதத்தில் அச்சிட்டு எந்நாளும் ஜீவித்திருக்கச்செய்யவல்ல அச்சுயந்திரங்களுமிக்காலத்துக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதுவும் அறிவின் அபிவிர்த்திக்காரணமேயாகும்.

கஷ்டமதிகமில்லாமல், அதிகலாபத்தைக் கொடுக்கக்கூடிய விதம், வேலைசெய்வதென்றால் யாரும் சந்தோஷங்கொள்ளாதிரார்கள். ஒருதச்சன் நாடோறும், மிக்க சிரமத்துடன் மேஜை ஒன்றுசெய்து முடிப்பதாகவெண்ணிக்கொள்வோம். மற்றொருவன், இந்தத்தச்சன் படுகிறபாடுமில்லாமல் இரண்டல்லது மூன்று மேஜைகளை ஒரேநாளில் செய்கிறதென்றால் ஆச்சரியமாகவிருக்காதா? பிற்கூறப்பெற்றுள தச்சன் தனது அறிவுவிளக்கத்தால் சிரமமில்லாது வேலைசெய்து, அதிக இலாபம்அடைய, சீக்கிரத்தில் அதிகவேலை செய்யும்படியான இயந்திரமொன்றைக்கண்டுபிடித்துக்கொள்கிறான்.

ஆகையால், அறிவின் விருத்தியினாலேயே, பெரியகாரியங்களைச்சுலபமாய்ச் செய்யலாகுமன்றி வேறு எவ்வகையானும் செய்தலசாத்தியம். இவ்வறிவை நாமுபயோகிப்பதற்குத் தக்கவண்ணம் பயனைத்தருகின்றன. இதுவிஷயத்தில் மேனாட்டார் அடைந்திருக்கும் அபிவிருத்தியை நாமறிய ஆச்சரியத்துக்கள்

விராது. பகவத்சிருஷ்டியாகிய இயற்கைப்பொருள்களையே தம் வசப்படுத்திவிடுகிறார்களென்றால், இன்னம் என்னவேண்டும்? அறிவின் ஆநந்தமே ஆநந்தம். அறிவுடையோருக்கு, சகலமான சத்புருஷர்களும், பண்டிதர்களும் நேசர்களாவர். அறிவுடையோர் மன்னோர்களோடு மகிழ்ந்துபேசுவார்; மேலான காரியங்களைமுடித்த மஹான்களோடு உல்லாசமாய் உரையாடுவார். ஆகையால், இம்மாநிலத்தில் ஒருவன் பரம்பரையாகப்பெறத்தக்க பெரும்பாக்கியமும், அனுபவிக்கத்தக்கப் பேராநந்தமும் இவ்வறிவினைவிட மற்றொன்றுமில்லை. ஒருவனுக்கு அறிவுஉண்டானால் எல்லாமுண்டாகும். அறிவில்லாவிடின் மற்றெதுவுமில்லை.

இவ்விதம் நாற்றிசைகளிலும் விளங்கும் அளவற்ற பெருங் காரியங்களைச் சிரமமின்றி, நிமிஷநேரத்தில் சாதிப்பது அறிவினுலல்லவா? அவ்வண்ணமிருக்க அறிவு வலியற்றதென யார்தான் சொல்லக்கூடும்,

"அறிவுடையாரெல்லா முடையரறிவிலா
ரென்னுடையரேனுமிலர்"

## 6. "நோய்க்கிடங்கொடேல்."

ஆத்திச்சூடி

வியாதி உன்னை அணுகும்படி, நீ இடங்கொடாதே என, இவ்வாக்கியம் பொருள்கொள்ளும்.

"இவ்வுலகின்கண், மனிதர்களுக்கு மிக்கச்சிறந்தது தேகசௌக்கியம், இரண்டாவது அழகு, மூன்றுவது, நற்வழியிற் றேடிய செல்வம், நான்காவது இளமையின்பெருமை" எனவும், "தேகசௌக்கியமில்லா உயிர்வாழ்கை பெரும்பாரமாம். தேக சௌக்கியத்துடன்கூடிய வாழ்க்கை, இன்பாநுபவமாம்" எனவும் ஆன்றோர்கூறியுள்ளார்கள்.

மானிடஜென்மத்துக்குரிய கடமைகளைச் சரிவரச்செய்யவும், இவ்வுலகிலிருக்கும் பொருள்களை நன்கனுபவிக்கவும், பிறருக்குச் சுமையாகவிராமல் பிறவிப்பேறுகிய பரோபகாரத்தை யாவருக்

குஞ்செய்யவும் நாம் நினைக்கின், கூடுமானவரை சௌக்கியமாக வாழ்ந்திருத்தல் ஆவசிகமாகும். நோயுடன் கூடியிருப்பவர்கள், தாங்களும் சுகமடையார், தங்களைச்சேர்ந்தோர்களையும் சுகமடையவொட்டார்கள். ஆகையால் சரீரத்தை நோயில்லாதிருக்கப் பார்த்துக்கொள்வதே நமது மேலான கடமைகளுளொன்றாகும்.

மேலும், வியாதி, காலநஷ்டத்தையும், திரவியச் செலவையுமுண்டாக்கும். சில வியாதிகள் தொத்துவியாதியாகவிருக்கலாம். ஒருவனுக்கு, அந்நோய்வரநேரிடின் மற்றவர்களையும் தொடரும் ஒரு குழந்தைக்கு அம்மைகண்டால், அது ஊர் முழுதும் வியாபித்து பல குழந்தைகளின் மரணத்துக்கும் ஏதுவாகின்றது. இவ்விதமே அநேக வகைத்தான வியாதிகள், ஒருவனிடமிருந்து பலபேரைத்தொடருகிறது. சரீரம் சௌக்கியமாயிருக்கவேண்டிய ஏற்பாடுகளைச்செய்துகொண்டால், இவ்வியாதிகளை அணுகவொட்டாமல் செய்துகொண்டிருக்கலாகும். ஆகையால் நோயற்றவாழ்வே செலாக்கியமாம்; அதுவே நமக்கு அருமையான பேறும்.

இவ்வுலகிலநேகர் பாடுபட்டுழைத்தே, ஜீவிக்கவேண்டியிருக்கிறது. பாடுபட்டுழைக்க, நமதுசரீரம் வியாதியொன்றுமில்லாது திடமாயிருக்கவேண்டும். சரீரம் வியாதியுடனிருப்பின், காரியஞ்செய்ய முடியாமலும்போய், ஜீவனம்நடப்பதே பெருங்கஷ்டமாய்விடும்.

சாதாரணமாய், தேக அசௌக்கியம், அஜாக்கிரதையினுலாவது, அவிவேகத்தினுலாவது உண்டாகிறது. முதலில், நமது தேகஉறுப்புகளின் தன்மையையும், உபயோகங்களையும் நாம் அறிந்துகொள்ளவேண்டுவது ஆவசிகமாகும். எப்படி ஒரு இயந்திரமியக்குவோன், அவ்வியந்திரத்தின் பல பாகங்களைப்பற்றி நன்கறிந்திருந்தாலல்லது, சரிவர அவ்வியந்திரத்தை நடத்தவல்லவனுகானே, அவ்விதமே, நாமும் நமது தேகக்கூறை நன்கறிந்தாலன்றி, தக்கபடி அவைகளைப் பாதுகாப்பதற்கான முறைகளை நாம் அறிந்துகொள்ளவியலாது. தங்கள் தேகதத்துவங்களை

நன்றாய் அறிந்துகொள்ளாமைபற்றி, வருஷந்தோறும், அநேகர் நோயில்பிடியுண்டு வருந்துவதன்றியும் உயிரையும் இழக்கிறார்கள். ஆகையால் நமது சரீர அமைப்பை நாம் நன்கறிந்துகொள்வதுடன் நமது குழந்தைகளுக்கும், கொஞ்சங்கொஞ்சமாய் அறிவுறுத்தல்வேண்டும்.

தேகசௌக்கியத்தை யநுபவிக்கவிரும்புகிறவன், காற்று, உணவு, தேகப்பயிற்சி, அசுத்தமின்மை முதலான விஷயங்களை நன்கு கவனிக்கவேண்டும்.

தேகசௌக்கியத்துக்குச் சுத்தமானகாற்று அத்தியாவசியம். சுவாசிக்கும்போது, நாம் உட்கொள்ளும் காற்றுக்கும், சுவாசம்விடும்பொழுது நாம் வெளியே விடுங்காற்றுக்கும் மெத்தவித்தியாசமுண்டு. நாம் உட்கொள்ளும் காற்றில் பிராணதாரவாயு அதிகமுண்டு. நாம் வெளிவிடுங்காற்றில் அசுத்தவாயு அதிகமிருக்கிறது. அதையே நாம்திரும்ப உட்கொண்டால், வியாதி சம்பவிக்கும். இவ்வித அசுத்தவாயுநிறைந்த அறைக்குள் தீபங்கூடஎறியாது அணைந்துபோகும். அவ்வித விஷக்காற்றை நாம், உட்கொள்ளுவதென்றால், நோயையடையாதிருக்க எதிர்பார்த்தல் தகுமா? ஆகையால் நாம் எப்பொழுதும் சுத்தமானகாற்றையே உட்கொள்ள ஏற்பாடு செய்துகொள்ளவேண்டுவது ஆவசிகமாகும் முக்கியமாய் நாமிருக்குமறைகளிலும், ஜனங்கள் அடர்ந்திருக்குமறையிலும் வேண்டியவரை சுத்தமான காற்று உலாவச்செய்வது ஆவசிகமாகும், ஏனெனில், உட்கொள்ள நல்லகாற்று அங்கே இல்லாதுபோனால், உட்கொண்டு வெளியேவிட்ட காற்றையே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிவரும். இப்படியே நாம் செய்துகொண்டுவரின் பிராணனை இழக்கவேண்டுவதுதான். பெட்டியலடைபட்டிருக்குமொருவன் கொஞ்சகாலத்துக்குப் பின்னர் உயிரோடிருத்தலரிது. என்? பெட்டி நிரம்ப அவன், மூச்சுவிடுகிற விஷக்காற்றே நிரைந்துபோய் அவ்விஷகாற்றையே மென்மேலும் உட்கொள்ள வேண்டியவனாகிறான்.

'பிளாக்ஹோல்' என்னுமொருயிருட்டறையில் நடந்த பயங்கரமான செய்தி நாமறியாததல்ல. பதினெட்டுஅடி சதுரமான அந்த அறையில், 146 ஆங்கிலேயர்கள் பலவந்தமாய் அடைக்கப்பட்டனர். சொற்ப நேரத்துக்குள், அவர்கள், கேட்போர் அஞ்சி நடுங்கத்தக்க அவஸ்தைகளை அனுபவித்தனர். விடியுமுன் அவர்களில் 123 பேர் மாண்டனர். இதற்குக்காரணம் நல்ல காற்றில்லாமையே; ஆகையால், நாம் வாசஞ்செய்யும் வீடுகள் கொஞ்சமும் காற்றுநுழைய இடமில்லாது, இருட்டறைகளாகக் கட்டியிருத்தல்கூடாது. நல்லகாற்று நமது வீடுகளில் வியாபிக்கும்வண்ணம் ஏற்பாடு செய்துகொள்ளல்வேண்டும்.

நாம், நோயணுகவொட்டாது கவனிக்கவேண்டிய விஷயங்களுள், அடுத்தது ஆகாரமாகும். நோயைச்சிலர் ஆகாரத்தைக் கொண்டே மிதப்படுத்துகிறார்கள். வியாதிக்காலத்து, சில பதார்த்தங்களைச் சாப்பிடக் கூடாதென்று விலக்கியும், சாப்பிடும் பதார்த்தங்களை இன்னின்னவிதமாய் பக்குவப்படுத்திச் சாப்பிடுவதென்றேற்படுத்தியும் வியாதியைத் தணிக்கிறார்கள். சில பதார்த்தங்கள் சுலபமாய் ஜீரணமாவதில்லை. பாதிபழுத்த பழங்கள் நெய்ப் பசையுள்ள வஸ்துக்கள், மாப் பண்டங்கள் முதலான சீக்கிரம் ஜீரண மாகாத பதார்த்தங்களை அடிக்கடி உண்ணல்கூடாது. அவைகளைச் சாப்பிடா திருத்தலே மேலாகும். பழம் பதார்தங்களைப் புசிப்பது வியாதிக்கிடனும். மேலும் "அளவுக்கு மிஞ்சினால், அமிர்தமும் விஷமாம்'' என்று கூறிய வண்ணம் மிதமாகாருசெய்வதே சிலாக்கியமாகும். சரீரம் வேண்டுமளவுக்கு ஆகாரம் குறைந்தால், எப்படி தேகபலம் குறைகிறதோ, அம்மாதிரியே ஆகாரத்தினளவு அதிகமானாலும் ஜீரணக் கருவிகள் பல ஹீனமடைந்து, தேக சுகம் குலைந்து போகும்.

சதாசர்வகாலமும் ஆகாரஞ்செய்து கொண்டிருத்தல் கூடாது. தினந்தோறும் அதற்கென்று ஏற்படித்திக் கொண்டிருக்குங் காலங்களிலேயே நாம் புசிக்க வேண்டும், ஒழுங்கான காலங்களில் ஆகாரம் செய்வது வியாதியணுகாவண்ணம் காக்கிறதென பெரிய வைத்திய ரொருவர் கூறி யுள்ளார், பசியில்லாக்

காலத்து உண்ணுதல் கூடாது. பசிக்குங் காலத்துண்ணுதலும், உண்ணுங் காலத்து சந்தோஷத்துடனும் மனவமைதியுடனிருத்தலும் தேக சௌக்கியத்தை விருத்தி செய்யும். அவசரச் சாப்பாடு, ஜீரணக் கருவிகளை மலினமாக்கும்.

சுத்த ஜலத்தையே நாம் அருந்தல் வேண்டும். நோயையுண்டாக்கக்கூடிய பலவித கிருமிகள் அசுத்த ஜலத்தில் வாசஞ் செய்கின்றன. அவ்வித அசுத்த ஜலத்தை யருந்துவதால் பல வியாதிகளை நாமே தேடியடைகிறோம்.

அதிகக்குடியும், அதிகமாய் சுருட்டு முதலான லாகிரி வஸ்துக்களைச் சேர்ப்பதும் வியாதியை உண்டாக்குகிறது.

சுத்தமான உடைதரிப்பதும், நமது தேகத்தைச் சுத்தியாக வைத்துக்கொள்வதும், வியாதியையணுகவொட்டாது தடுக்கும் மார்க்கங்களிலொன்றாகும். நமதுசரீரத்தின் மேற்றோல் மிகவும் சிறிய துவாரங்களால் அடர்ந்து நிறைந்திருக்கின்றன. கண்ணுக்குப்புலப்படாத இந்த துவாரங்களே மயிர்க்கால்களெனப்படும். இத்துவாரங்களின்வழியாக எப்பொழுதும் கசியும் நீரே வியர்வையெனப்படும். இவ்வியர்வை நீர், பாதிநீருப், பாதி அழுக்குமாய்க் கலந்திருக்கின்றது. இந்தநீர் காற்றடித்துலர்ந்துபோனால், அழுக்குமாத்திரம் நமது தேகத்திலேயே தங்கியிருக்கும். இப்படிச் சேருமழுக்கினால் நமது தேகமும், நாமுடுத்தியிருக்குமாடையும் அசுத்தமடைகின்றன. அப்போதைக்கப்போது அவ்வழுக்கைக் கழுவித்துடைத்து ஆடைகளையுங்களைந்து பரிசுத்தஆடை உடுக்காவிடின், பார்ப்பவர்களுக்கு அருவருப்பும், நமக்கு வியாதியையுமுண்டாக்கும். இவ்வழுக்கை தினந்தோறும் கழுவி நீக்காவிடின், இவ்வழுக்கு நமது சரீரத்தின் மேலேயேயிருந்துகொண்டு, உள்ளேயிருக்கும் கெட்ட அழுக்குகள் வெளியே வரவொட்டாமல் மயிர்க்கால்களை அடைத்துவிடும். தினந்தோறும் நீராடி உடம்பைச்சுத்தமாக வைத்துக்கொள்ளாதவர்கள், தலைவலி, ஜலதோஷம் முதலிய வியாதிகளாலும், சொறி, சிரங்கு முதலான

சருமவியாதிகளாலும் அவஸ்தைப் பட்டுக்கொண்டேயிருப்பார்கள். தேகத்தை சுத்தமாக வைத்துக்கொண்டிருப்போர்களுக்கு உடம்பில் இப்படிப்பட்ட பிணிகள் அதிகம் காண்கிறதில்லை.

அம்மாதிரியாகவே நாமுடுக்குமாடைகளிலும் வியர்வையாலுண்டாகிற அசுத்தங்கள் ஊறிக்கொண்டேயிருக்கும். நமது ஆடைகளையும் நன்றாகக்கசக்கியுடுக்கவேண்டுவது மாவசிகமாகும். "கந்தைத்துணியானாலும் கசக்கிவுடு" என்ற ஆன்றோர் வாக்கையும் நோக்குக. அழுக்குதேகத்தின் மீதிருந்தால் எவ்வளவுதீங்கு விளையுமோ அவ்வளவுதீங்கு அழுக்காடைகள் மேலே பட்டிருந்தாலுமுண்டாகும்.

மிதமான தேகப்பயிற்சியும், தேகசௌக்கியத்துக்கு இன்றியமையாதவைகளுளொன்றாகும். தேகபயிற்சியில்லாவிடத்து சௌக்கியமில்லை. நாம் எப்பொழுதும், சுறுசுறுப்பாயிருந்து வேலை செய்யப் படைக்கப்பட்டிருக்கிறோமேயல்லாது, சும்மா அசைவற்று உட்கார்ந்திருக்கப் படைக்கப்படவில்லை. நாம் அங்குமிங்கு மோடியாடித்திரிவது, இருதயம், ஈரல், சுவாசப்பை முதலிய உறுப்புகளை நன்கு வேலைசெய்யச்செய்கிறது. நாள்முழுதும் வீட்டுக்குள்ளேயிருந்து எங்குமசையாமல் உட்கார்ந்திருப்பவர்கள், வியாதியும் அசௌக்கியமுடையவர்களாய் வெகுவாய் வருந்துவார்கள். செல்வவந்தர்களிற் பலர், தேகசௌக்கியம் இத்தன்மைத்தன்றேயறியார்கள். இதற்குக்காரணம், இவர்கள்இருந்த இடத்திலே இருப்பதுதான். இப்படியிருப்பதால், அவர்கள் உடம்பில் உதிரம் ஓடுகிறவேகம் குறைகிறது. அதினால் மற்றைய உருப்புகளின் சக்தி மலினமாகிறது; உணவு ஜீரணிக்கிறதில்லை; இராக்காலங்களில் செவ்வையாக அவர்கள் தூங்கிறதில்லை. இதினால் சகலவித வியாதிகளுமநுபவிக்க காரணமாகிறார்கள்.

மற்றப்படி எப்பொழுதும், ஓடி யாடி. வேலைசெய்யும் கூலியாளோ, பசியின்மை, அஜீரணம், கை கால் பிடிப்பு முதலான நோய்களால் ஒருபோதும் வருந்துவதில்லை, ஆகையால் வருந்தி

யுழைப்பதும், பயிற்சி செய்வதும், தேகத்தின் ஒவ்வொரு யுறுப்பையும் வலிமைப்படுத்தி, அதற்கேற்ற வேலைகளை நன்கு செய்யச்செய்து, வியாதி அணுகாவண்ணம் காக்கிறது.

சரீரப்பயிற்சி வீட்டுக்குள் செய்வதைக்காட்டிலும் வெளியிடங்களில் செய்வது மேலாகும்; உதிரம் நன்றாய் ஓடி தேகமெங்கும் பரவக்காரணமாகும்; வெளியேயிருக்கும் பிராணதாரவாயு, இரத்தத்தில் அதிகம் கலக்கும்; இரத்தத்திற்கு உயிர்ப்பிக்கும் சக்தி அதிகமுண்டாகி அது வெகு விரைவாய் வியாபிக்கும்.

அளவுக்கு அதிகமான தேகப்பயிற்சி கெடுதலையேயுண்டாக்கும். தேகத்தினுறுப்புக்கள் சீக்கிரம் பலவீனமாய்விடும்.

தேகப்பயிற்சியில், போக்குகிறகாலம் வீண் என்று எண்ணல் தப்பிதமே. அவ்வாறு கழிக்கும் காலத்தால் அதிக இலாபத்தையேயடைகிறோம். மனம் வலுவடைந்து, வேலைசெய்ய உற்சாகங் கொள்ளுகிறோம். நெடுநாள் நோயால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த, அரசனொருவன், தேகப்பயிற்சியால் சௌக்கியமடைந்த கதையை நாம் யாவருமே கேட்டிருக்கலாகும்.

இராக்காலங்களில் அதிக நேரம் முழித்திருப்பது வியாதியை உண்டாக்கும். ஆகையால் அவ்வழக்கத்தை நம்மிடமிருந்து அகற்ற நாம் முயலல்வேண்டும்.

வியாதிகள் மிகுதியாகப் பரவக்கூடிய காலங்களில், அவைகள் அணுகாவண்ணம், வீட்டை வெள்ளையடித்து சுத்தமாய் வைத்துக் கொள்ளவேண்டும். வியாதி ஒருக்கால் நம்மையணுக நேரிடினும், அதனை நீக்கும்பொருட்டு தக்க வைத்தியனைத் தேடித்தருந்த மருந்து சாப்பிடவேண்டும். நகத்தால் கிள்ளவேண்டியதை, பின்பு கோடரிகொண்டுவெட்டியெறியும்படி வைத்துக் கொள்ளல்கூடாது.

"வெள்ளம் வருமுன்னே அணைபோட்டுக்கொள்ளவேண்டும்" என்றவண்ணம் வியாதி நம்மையணுகாவண்ணம் தடுத்துக் கொள்வதே சிலாக்கியமாகும். வந்தபின்னர் தீர்த்துக்கொள்ள

லாமென்றிருத்தல் மதியீனமாகும். நோயணுகாதிருக்கச் செய்யவேண்டிய விஷயங்களை கீழ்வரும் செய்யுளிலும் நன்குவிளக்கியிருக்கிறார்.

"சனிபுதன் றனிலெண்ணெய் வெந்நீரில்மூழ்குவார்
சாருமிளவெயில் விரும்பார்.

* * *

சதாகாலம் வழியிநடவார்
பனியிலுங்காற்றிலும் மெய்வருந்தாமடைப்
பள்ளியிற் சேவகமிரார்
பழங்கறியருந் தாரிரண்டடக்காரொன்று
பலகாலமும் விட்டிடார்.
கனியோடுகிழங்குகண் மிகுந்தபுசியார்பல
கலந்தன்றி யுணவுசெய்யார்
காய்ச்சுபாலுண்பர் நீர்மோர்கூட்டுவார்தினங்
காவேரிதனில் மூழ்குவார்
மனிதரிவர்பேர்சொன்ன பேர்க்குநோய்சேருமோ."

## 7. குடியின்கேடு.

இவ்வுலகின்கண், ஜனங்கள் அநுசரிக்கும் துர்வழக்கங்களுள், கள்க்குடித்தலுமொன்றாம். இதினால் ஜனங்களுக்குவிளையும்கேடுகளோ அநேகம். இங்கிலாந்துதேசத்துக் குன்றாப்புகழ்பெற்ற இராஜதந்தரியான "கிளாஸ்டன்" பிரபு அவர்கள், "யுத்தம், கொள்ளைநோய், பஞ்சம், இம்மூன்றினாலும் ஜனங்களுக்குண்டாகும் கெடுதல்களைவிடக்குடி அதிகத் தீங்குகளையுண்டாக்குகிறது" எனச்சொல்லியுள்ளார். முன் கெவர்னர்ஜெனரலாயிருந்த "லார்டுகர்ஸான்", துரையவர்கள், "குடியானது, ஒருபெரிய ஜனசமூகத்தில்விழுந்திருக்கும், கொடூரமான குஷ்டரோகக்கிருமியெனவும், ஜனங்களின் ஜீவாதாரசத்துக்களைத்தின்று அதினாலுண்டாகும் கெடுதல்களை, அவர்கள் ஆயுளோடுநிற்கவிடாது, யாவரும்

கண்டு நடுங்கத்தக்கதரித்திரம், குற்றம், துக்கம், இவைகளால் நிறைந்த ஒருபெரிய பிதிர்ரார்ஜ்ஜிதமாக, தலைமுறைதத்துவமாய்க் கொடுக்குமொரு இராமபாணப்பூச்சி" எனவும் கூறியுள்ளார்.

சிலநாடுகளில் இக்கொடியவழக்கம் அதிகமாய்ப்பரவியிருக்கிற தெனவறியலாகும். குடியானது தற்காலத்து நாகரீகத்தின் முக்கிய இலட்சணமெனக் கருதப்படுகிறதுபோனும், நமது நாட்டினும், அநேகருக்குள், இவ்வழக்கம், தீவிரமாய்ப்பரவி வருவதைப்பார்க்கலாகும். நமதுதேசத்தில், ஆதிகாலத்தில் ஜனங்களுக்குள், குடிக்கும்வழக்கம் இல்லையெனச்சொல்லிச் சாதித்தல் முடியாது; ஆனல் இவ்வழக்கம், மிகவும் ஈனஜாதியாரிடம், ஆதிகாலத்தில் பரவியிருந்தது. அவர்கள் குடிக்கும்பானங்களும், தென்னை, பனை இவைபோன்ற மரங்களினின்றும் இறக்கப்படும் இரசமேயல்லாது, மிக்கவிலை உயர்ந்ததும், சரீரத்திற்கு மிக்கக்கேடுகளை விளைவிக்கக்கூடிய நவீனசாராயவர்க்கங்களல்ல. உயர்ந்த வகுப்பினர்களோ, இதைக்கண்ட மாத்திரத்தில் உடல்நடுங்கி ஓடிஒளிந்தார்கள். "கள்விற்றுகலக்காசு சம்பாதிப்பதிலும், கர்ப்பூரம்விற்று கால்க்காசு சம்பாதிப்பதேமேல்" என்ற சாமான்யர்களதுமொழியே, இக்கொடியவழக்கம், ஜனங்களால் எவ்வளவு இழிவாக மதிக்கப்பட்டுவந்தது என்பதைத்தெரிவிக்க போதுமான சான்றாகும். மேலும் "குடிக்கும், கொலைக்கும், பிராயச்சித்தமேகிடையாது" என நமது சாஸ்திரங்களில் கூறியிருப்பதாக நமது குலகுருக்கள் பலமுறை சொல்வதையும் கேள்விப்பட்டிருக்கலாம்.

"காதல்கவருடல் கள்ளுண்டல்பொய்மொழிதல்
வீதன்மறுத்தலிவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகுந்திருநாடசெம்மை
நினையாமை பூண்டார்நெறி"

ஆகையால் இவ்விஷயங்களெல்லாம், கள்க்குடித்தலென்னும் வழக்கத்தை ஜனங்கள் இழிவாக எண்ணியிருந்தார்களென்பதை விளங்கச்செய்கிறது. இப்பொழுது இவ்வழக்கம், ஈனஜாதியாருள் பரவிவருவதுடன்மட்டும் நிற்கவில்லை. மேல்வகுப்பாரும் இதின் வலையில் சிக்கிக்கொள்கிறார்கள்.

துறைமுகங்களில் கப்பல், கப்பலாய்வந்திறங்கும் சாராயக் குப்பிகளை அளவு அறியாது குடித்துவிட்டு, கண், கால், தலை தெரியாமலும், உடுத்தவாடைபோன இடந்தெரியாமலும், கண்ட இடங்களில்கிடந்து புரளுபவர்களைக்கண்டோர் கவனித்து பரிதபிக்காதிருப்பவர்களுமுளரோ ? மானமழிந்து மதிகெட்டுபோன திசையெல்லாம் சீ, சீ என்று யாவராலும் நம்மைவெறுக்கச்செய்வது இம்மாயக்குடியே, படைத்த செல்வமெல்லாவற்றையும், பஞ்சுபோல் பறக்கச்செய்து, ஒரு கவளச்சோற்றுக்கு ஊர் ஊராய் நம்மைத்திரியச்செய்வதும் இக்குடியே. சண்டை, சச்சரவு, கொலைகளவு முதலான குற்றங்களுக்குட்படுத்தி, கச்சேரி வாசலுக்குக் கழுத்தைப்பிடித்துத் தள்ளிக்கொண்டுபோய் நம்மை தண்டணைக்காளாக்குவதும் குடியே. சற்றுநிதானித்துப் பாருங்கள் ; நம்மைப்படைத்துக் காக்கும், கடவுளுக்கும், நாம் வழிபடும் மதத்திற்கும், நாம் உண்டு உறவாடும், உற்றோர், பெற்றோர்க்கும், பெண்டீர், பிள்ளைக்ட்கும், நமது புகழுக்கும், மேன்மைக்கும், சிறிதேனும் சம்மதமாகாத இக்கொடிய வழக்கத்தையனுசரித்து அநியாயமாய் ஜென்மத்தைக் கெடுத்துக் கொள்ளலாமா? நம்மதமல்லாமல் பிறமதங்களெல்லாம், குடியைக்கண்டித்துப் பேசவில்லையா ? நமது முன்னோர்கள், இக்குடியைப் பஞ்சமா பாதகங்களுள் ஒன்றெனமதித்து விலக்கவில்லையா ?

"கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையு
முள்ள களவு மென்றாரவோர் துறந்தவை"

மணிமேகலை

"கள்ளுங்களவு காமமும் பொய்யும்
வெள்ளைக்கோட்டியும் விரகினிலொழிமி
னிளமையுஞ்செல்வமும் யாக்கையு நிலையா"

சிலப்பதிகாரம்

நாம் உற்பவித்தது முதலாய், இப்பிரபஞ்சமாயைக் குட்பட்டு உழல் கின்றோம். அம்மாயையின் மயக்கத்தை ஒழிக்க நமக்கு வல்லமையில்லாது வருந்திக்கிடக்கும்பொழுது, இக்குடிமயக்கத்தையும் நாமே வலியத்தேடியடைவது அறமாகுமா? பெறுமானிடப் பிறப்பையடைந்தும், நற்காரியங்கள் புரியாது, குடி

த்து அறிவுகலங்கி, தங்கள் நாட்களையெல்லாம் பாழாக்கிறைப்ப வரை என்னென்று சொல்வது ; "இல்லாதகாரியத்தை யிச்சித்துச்சிந்தைவழி செல்லாதிருத்தல் மேலாம்" என்பது பேரியோர் வாய்ச் சொல்லன்றே ? "விவேகத்தைப்பெற்றுத் தீவினையை யொழித்தவர்கள், ஜெனன மரணங்களைக் கடந்து முக்தி பெறுவார்கள்" எனபரம ஞானிகளும், வேதமுஞ்சொல்ல, அதைச்சிறிதும் யோசியாது மதுவை மனங்கூசாது குடித்துழல்கின்ற தெப்படியிருக்கிற தென்றால், வீடுபற்றியெரியும்போது அந்நெருப்பை நெய்யினலவிப்பதுபோலிருக்கிறது.

இக்கேடுகளையெல்லாம் அறிந்தும், சிலர் "சாராயம் முன்னோர்களாலெடுக்கப்பட்டப் பூஜாத்திரவியம், தெய்வத்துக்கு நைவேதனஞ்செய்து அதைச்சாப்பிடுதல் மிக்க உத்தமம்" எனச் சொல்லிச் சிலாக்கிறார்கள். கள்க்குடித்தலை பஞ்சமா பாதகங்களு ளொன்றாகச் சேர்த்திருக்கும் நமது பெரியோர்களா, இதைப்பூஜாத்திரவியமாகக் கொண்டாடியிருக்கப் போகிறார்கள் ?

மேலும் "குடிக்தல் மருந்து சாதனமென்றும் தேகத்திற்கு பலமும் ஊக்கமும் கொடுத்து நெடுநாள் ஜீவிக்கச்செய்கிறது" எனச்சொல்லித் திரிபவர்களைப்பற்றி நாம் என்ன சொல்வது? சரீரம் சௌக்கியமாயிருக்குங் காலத்தும், வியாதியாலவஸ்தைப்படுங்காலத்தும், கட்குடியே கூடாதெனசில வைத்தியர்கள் சாதிக்கிறார்கள். மருந்து சாப்பிடுங்காலத்து "கட்குடித்தல்" கூடாதென அறிந்து வைத்திய சாஸ்திரங்களில் கூறப்பெற்றுளது. அப்படியிருக்க இது மருந்து சாதனமாகுமா? மருந்து சாதனமென்றால் வியாதி நீங்கிய பின்னர், அக்குடியை என் நிறுத்தல் கூடாது? ஊக்கந் தரத்தக்கதான வஸ்துக்களையுண்டு, நமது சரீரத்தை ஊக்கப்படுத்திக் கொள்வது, அசௌக்கியத்தை நாமே தேடி அழைத்துக்கொள்வது போலாம். அப்படிச் செய்வது சரீர பலத்தைசீக்கிரம் குறைக்கச்செய்து, ஆயுளையும் குன்றச்செய்கிறதென பல வைத்தியர்கள் சொல்லியுளர். குடி சற்றேனுமில்லாதவர் அதிக வேலை செய்பவராயும், அதிக ஊக்கத்துடனிருப்பவராயுமிருப்பதை நமதனுபவத்தில் பார்க்கலாகும். "மாணபண்டு" காரர்

களெல்லாம், குடியே சற்றுமப்பியாசிக்காதவர்களுக்குச் சொற்ப தொகைக்கு அதிக இலாபம்கொடுக்க உடன்படுகிறார்கள்; ஏன்? குடியுள்ளவர்கள் நீண்ட ஆயுளுடனிருத்தலரிது என்ற எண்ணங் கொண்டே அவ்விதஞ்செய்கிறார்கள். அப்படியிருக்க, குடி ஆயுளை விருத்தி செய்யுமென்றுசொன்னால் நம்பத்தக்கதா?

மகாச்சிறந்த வைத்தியரான டாக்டர் "டாடா" குடியைப் பற்றிப் பின்வருமாறு சொல்லுகிறார்.

"சாராய சம்மந்தமான பானங்கள் எல்லாவற்றையும், முழுதுமே விலக்கிவிடு. சாராயத்தின்மிதஉபயோகம், இரப்பையை உஷ்ணமாக்குகிறது. சாராயத்தை வழக்கமாய் உபயோகிக்கின், அது இரைப்பையின் ஜீரண சக்திக்குரிய மேற்றளத்தைக் கெடுக்கிறது; அது நுரையீரலை உஷ்ணமாக்குகிறது; சிலவேளைகளில் அதைமுழுதுமே தின்று மாமிசப்பிண்டம்போலாக்குகிறது; அது சுவாசாசயத்துள்ள உட்குழாய்களை விரியப்பண்ணிக்கெடுக்கிறது; நமக்குப் பிராணாதாரமாயுள்ள, பிராணவாயுக்களின் அணுக்கள் நிறைந்து நமது தேகத்தினுள் ஓடிக்கொண்டிருக்கும் சுத்த இரத்தத்தைக் கெடுக்கிறது; மூளை, ஜீவாதார நரம்புகள் இவைகளின் மேற்றோலைத் தடிக்கச்செய்து, உடல் நடுக்கம், பைத்தியம், முதலிய விபாதிகளை உண்டுபண்ணுகிறது. யாவராலும் ஆட்சேபிக்க முடியாததும், பிரத்தியட்சப்பிரமாணமாயுமுள்ள இவ்விஷயங்களையெல்லாம் வாசித்தும், கேட்டும், சிந்தித்துமான பின்னர், நீ குடியில் வெறுப்படைவாயா? விருப்படைவாயா? வெறுப்படைவாயானால் அதைச் சீ என்றுதள்ளிவிட்டு நமது இராஜ்யமே கண்டு நடுங்கும் படியான இந்தச்சத்துருவின் கெடுதல்களை உன் நட்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் எடுத்துரைக்க நீ சிறிதும் நாணமடையாதே"

"கள்ளுண விரும்புதல் களவுசேர்தன்மா
லுள்ளுறப்பிறர் மனைநயத்த லொன்னலர்க்
கொள்ளரு ஞாட்பினுளிரியல் செய்திடல்
வள்ளியோயறி நெறிவழுக்கு மென்பவே"

"துஞ்சினர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

## 8. "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்."

தாமெடுத்த காரியங்கட்கு இடையூறு பல அடுத்தவரினும், விடாதுழைத்து, அக்காரியத்தை முடிக்க முயலுவதே முயற்சியாகும். இம்முயற்சி நன்முயற்சி, தீயமுயற்சி யெனவிருவகைத்தாம். தீயமுயற்சியினும், நன்முயற்சியே உயர்ந்ததெனயாவருமறிவார். அறிவு அபிவிருத்தி, தொழில், பரோபகாரம், இவை போன்ற விஷயங்களில் முயற்சிசெய்வது நன்முயற்சியாகும். தனக்கும், பிறருக்கும், கெடுதி உண்டாக்கும் விஷயங்களில் முயற்சிசெய்வது தீயமுயற்சியாகும். இம்மாநிலத்து மானிடரனைவரும், ஒரேதன்மையான வர்களாயினும் இயற்கையிலேயே, வெவ்வேறான குணங்களும் யோக்கிதைகளும் உள்ளவர்களாகப் பிறக்கிறார்கள், சிலர், நாணயம், கல்வி, அறிவு, பரோபகார சிந்தை, பக்தி முதலிய நற்குணமுடையவர் களாயிருக்கிறார்கள், சிலர், பொய், புறட்டு, களவு, அடுத்தவரைக் கெடுத்தல் முதலிய தீக்குண முடையவர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு, தீயவழிகள் தவிர, மற்றெதிலும் முயற்சியேகிடையாது. இவ்விருவகைத்தான முயற்சியே, மனிதர்க்குள், விசேஷமாய், ஏற்றதாழ்ச்சி உண்டாக்கக் காரணமாயிருக்கின்றது. தேசமெங்கு மேற்பட்டிருக்கிற மேல் வகுப்பு, கீழ் வகுப்பு, உயர்ந்தபதவி, தாழ்ந்தபதவி, இவைகளுக்கு ஆதிகாரணம் அவரவர்கள் செய்யும் முயற்சிவகையே.

நற்காரிய மொன்றெடுப்பின், இடையூறுகள் பலவால், அது நிறைவேறாவண்ணம் தடுக்கப்படுவது சகஜமே. அவ்விதம் இடையூறுகள், பலநேரினும், மனமதளராது, இடைவிடாது முயன்றுகருதிய பொருளை எய்துபவரே உத்தமராவர். தொழிலைச் செய்யத்தொடங்கி, இடையூறு வருங்காலத்து, கைசோர விடுபவர் மத்திமராவர். இடையூறுக் கஞ்சித்தொழிலையே செய்ய முயலாதிருப்பவர்கள் அதமராவர்.

விடாது நாம் செய்யும் முயற்சி மேலும் மேலும் பொருளை விருத்தி செய்யும்; சுற்றத்தார், நட்பினர் இவர்களைக் காப்பாற்றச் செய்யும்; எல்லோருக்கும் பரமவுபகாரியாகவிருக்கச்செய்யும்; இலட்சுமி கடாக்ஷத்தை யுண்டுபண்ணும்; கஷ்டதிசை வந்த காலத்தும் சுகத்தையே கொடுக்கச்செய்யும்; முயற்சியிற் சிறந்தவர்கள், அறிவில் குறைவுற்றிருப்பினும், முயற்சியில்லாத அறிவுடையவர்களினும் உயர்வு பெற்று, அவர்களையும் அடக்கி ஆளுபவர்களாவர். ஆனதுபற்றியே, உத்தமர்கள், மெய்வருத்தம் பாராமலும், பசிநோக்காமலும், கண்டுஞ்சாமலும், எவ்வெவர் தீமையையும் மேற்கொள்ளாமலும், அவமதிப்புக் கொள்ளாமலும், தம்மனத்தை ஒரு நிலைப்படுத்தி, காரியங்கைகூடும் தனையும், இன்பதுன்பங்களை இலட்சியஞ் செய்யாது, இடையறாது முயல்வர்.

பெரும்புத்தகங்கள்போல் விரிந்துகிடக்கும், பகவத்சிருஷ்டியாகிய இயற்கைப்பொருள்களை நோக்கினும், "முயற்சி எவ்வகைத்தான வேலைகளையும் செய்துமுடிக்கத்தக்கது" என்பதினுண்மை யறியலாகும். தேனீக்கள், தேனைச்சேமிப்பதும், எறும்புகள் ஆகாரத்தைச்சேர்த்து வைப்பதும், அவைகளது முயற்சியினாலேயாம். மேலும் சமுத்திரங்களில், சிலநீர்வாழும் ஜந்துக்கள், இடையறாது உழைப்பதால் தீவுகள் ஏற்படுகின்றன.

பகீரதன் கங்கை கொண்டுவந்தது விடாமுயற்சியாலல்லவா? அதுபற்றியே இப்பொழுதும் "பகீரதபிரயத்தினம்" எனச்சொற்றொடரும் பழமொழியாக வழங்குகிறது. "ஸ்காத்திலாந்து" அரசனாகிய 'புரூஸ்" (Bruce) ஆறுமுறை தோல்வியடைந்து, சண்டையையும் ஒழித்து விடலாமாவென்ற வெண்ணங்கொண்டவனாய், ஒருகுகையினுள் படுத்திருந்தான். அப்பொழுது சிலந்தியொன்று தனது நூலை ஒரு கம்பத்திற்சேர்க்க ஆறுதடவை முயன்று தவறியதையும், அச்சிலந்தி அப்பொழுதும் மனம் சோராது ஏழாந்தடவை முயன்று காரியசித்தி யடைந்ததையும், அவ்வரசன்பார்த்தான். இதைக்கண்டதும், தானும் ஏழாந்தடவை முயன்று, வெற்றிபெற்று அரசடைந்தான். இவ்வித முயற்சி செய்ய

கற்றுக்கொடுத்த சிலந்திவர்க்கத்தை, இன்றும் "ஸ்காத்திலாந்து" தேசத்தவர்கள் மனசார ஹிம்சியார்களாம்.

ஆகையால் அரியனைமீதமர்ந்திருக்கும் அரசனுக்கும், குடிசையில் வீற்றிருக்கும் குடியானவனுக்கும், அவர்களடையும் போகம், அவர்கள் புரியும் முயற்சி வயத்ததாயிருக்கிறது.

"செயத்தகு முயற்சி செய்திடிற்செயிர்தீர்
செய்யவண் மணாளனுமிறங்கி
வியத்தகு வேண்டுமியாவையுமளிப்பன்
விளம்புறு முயற்சி செய்யானே
னயத்தகு போகமளித்திடானென்று
ஞானிலத்தறிஞர் நன்குரைப்ப
ருயத்தகு நெறிமாலடி யுனலென்றே
யோர்ந்தமாதவப் பெருங்கடலே

எத்தொழிலெடுப்பினும், அத்தொழிலில் முயற்சி செய்ய இடமிருக்கிறது; சேவகத்தொழிலிலும் முயற்சிக்க விடமிருக்கிறது; நியாயாதிபத்யத்தொழிலிலும் முயற்சிக்க விடமிருக்கிறது. பார்க்கும் பெரிய மனிதர்களெல்லாம், அவரவர்கள் முயற்சியினாலேயே, அவ்வண்ணமாயிருக்கிறார்கள். ஒரு தொழிலை யெடுத்து, கொஞ்ச முயன்று, பின்னர் கைகூடாதென்றெண்ணித் தள்ளி, வேறொரு தொழிலையெடுத்து முயன்று அதையுந்தள்ளி, மற்றொன்றை முயல்வது பிரயோஜனமற்றதாகும். கடைசியாக, காரியம் கைகூடாததுடன் வீண்காலச்சிலவும், பொருட்சிலவுமேயாகும்.

மேலும் "சிலகாரியங்கள் முயற்சியால் கைகூடாது; அறிவின் வலியால்தான்கைகூடும்" என்று சொல்லி, சிலர் யாதொரு முயற்சியும் செய்யாதவர்களாயிருக்கிறார்கள். அவ்விதம், அறிவின் வலியால் கைகூடுமான காரியங்கள், இல்லையெனச்சொல்லத் துணிவது பிசகேயாம். அவ்விதகாரியங்கள் மிகவும் சொற்பமாகும். அக்காரியங்களைச்செய்து முடிக்கு மறிஞர்கள் சிலரே. சாதாரண அறிவுடன் கூடியவர்கள், அதைபற்றி யோஜிக்கவேண்டுவதேயில்லை. அவர்கள் செய்துமுடிக்க வேண்டியகாரியங்கள் அநேகம்உள. அக்காரியங்களில், அவர்கள் முயற்சியுடனி

ருந்தால் போதுமானது. மேலும் "வருந்தினால் வாராதது ஒன்றில்லை" என்றவண்ணம் நாம் முயற்சி செய்வோமேயாகில், எக்காரியமும் கைகூடாது போகாது. வித்வான்கள், பிறக்கும் பொழுதே, வித்வத்தன்மையுடன் பிறக்கவில்லை. வருந்தியுழைத்தே அவ்விதமானார்கள்; நேர்த்தியானபாடல்களைப்பபாடக்கற்றார்கள். "டிமாஸ்தனிஸ்" நெடுநாள் முயன்றபின்னரே பேசுந்திறமை பெற்றான். "லார்ட் பீகன்ஸ்பீல்ட்" முதலில் "பார்லிமெண்ட்" சபையில் பேசியகாலத்து, எல்லோரும் அவரைப்பார்த்து நகைத்தார்களாம். அப்பொழுதும், இவர் மனோதைரியமிழவாது, "எல்லோரும் நாம்பேசும் பேச்சைக்கவனிக்குங் காலமும்வரும்" எனக்கோபத்துடன் மொழிந்தனராம். அந்நாள்முதல், இடையறாதுழைத்து, பேசுந்திறமையடைந்து அச்சபையிலேயே எல்லோரும் மெச்சும்வண்ணம் பேசினராம். சித்திரம் எழுதுபவன் "சித்திரம் கைப்பழக்கம்" எனவெண்ணி வருந்தியுழைக்க வுழைக்க சாமர்த்தியத்தையடைகிறான். அறிவினால் செய்துமுடிக்கக் கூடாத விஷயங்களையும், முயற்சியினால் செய்துமுடிக்கலாகும். இடைவிடாது வருந்தியுழைப்பவர்கள், பரீட்சைகளில் தேறுவதையும், அறிவுடன்கூடி உழைப்பில்லாதவர்கள் அவைகளில் தவறுவதையும் நாம் பார்க்காதிருக்கவில்லை. ஆகையால், சில காரியங்களைச்செய்ய அறிவினுதவிவேண்டியிருப்பினும், முயற்சியால் வெகுகாரியங்களைச் செய்துமுடிக்கலாகும்.

மேலும் சிலர் "நமது முயற்சியால் என்ன ஆகும்? எல்லாம் ஈசன்செயல்" எனச்சொல்லி யாதொரு முயற்சியும்செய்யாது வீணாய்க்காலங்கழிக்கின்றனர். "தான் தானே பாடுபடுகிறவர்களுக்குத்தான் தெய்வம் துணைசெய்யும்" என்னும் பழமொழியை இவர்களறியார்போலும். தனக்கு வேண்டுமானவற்றை உன்னி அநுதினமும் முயற்சிசெய்தால்தான் கடவுளுமதனைத்தந்தளிக்கும். நெடுநாள் பக்திசெய்ததின் பின்னரே, வேண்டுமான வரத்தை அநேகர் அடைந்திருப்பதாக நாம் கதைகளில் வாசித்தறியாததா? இதனையொட்டியே பேரறிஞர்களும் "முயற்சி செல்வத்தைக்கொடுக்கும், சோம்பல் தரித்திரத்தைஉண்டாக்கும்" எனக்கூறியுள்ளார்கள்.

"முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை
யின்மை புகுத்திவிடும்"

என்பது பொய்யாமொழியன்றோ? முயற்சியுடையவர்கள், பெரியகடலையும் சிறுகுட்டமெனமதித்து நீந்தலாகும்; துன்பந் தருஞ்செயல்களெல்லாம், அவர்களுக்கு இன்பந்தருவனவேவே யாகும்.

தெய்வபலத்தால் ஆவதொன்றுமில்லையென நாம் சொல்லத் துணியவில்லை.

"ஆவதுவிதியெனி னனைத்துமாயிடும்
போவதுவிதியெனி னெவையும்போகுமாற்
றேவருக்காயினுந் தீர்க்கத்தக்கதோ
வேவருமறியொணு வீசற்கல்லதே"

இமையவர்கள் தலைவனாகிய இந்திரனுக்கு வியாழபகவனாகிய குருவும், வச்சிராயுதமும், ஐராவதமும், விண்ணுலகரசாட்சியு மிருந்தும், செருவிற் பகைவர்க்குடைந்துநின்றான். இவ்விதம் புத்திபலம், ஆயுதபலம், சேனாபலம், வாகனபலம் எல்லாமிருந் தும் பிரயோஜனமில்லாதுபோயிற்று. ஆகையால் எல்லாவற்றிற் கும் தெய்வபலமும் வேண்டியேயிருக்கிறது. ஆகினும் நாம் முயற்சிசெய்யாதிருக்கலாகுமா? முயற்சியால் தெய்வத்தையும், ஒவ்வொருசமயத்தில், மனமிரங்கச்செய்யலாகும். இது விஷய த்துக்கு மார்க்கண்டயரே சாட்சியாவர்.

"உலையாமுயற்சிகளை கணூழின்
வலிசிந்துவன்மையுமுண்டே—யுலகறியப்
பான்முளைதின்று மறலியுயிர்குடித்த
கான்முளையே போலுங்கரி."

ஆகையால் முயற்சியின்றி, கவலையற்றிருந்தால் "தெய்வந் தானேவந்தூட்டும்" என்று எண்ணிச் சும்மாயிருத்தல்கூடாது.

"தெய்வத்தானாகாதெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்."

தெய்வபலமில்லாது நாம்செய்யும் முயற்சியால் காரியம் கைகூடாமற்போகலாகும். ஆனாலும் நமது சிரமத்துக்குத் தகுந்தவாறு கூலி கிடைக்காதுபோகிறதில்லை. மிகுந்து முயற்சிசெய்து படிக்குமொருவன், விதிவசத்தாற் பரீட்சையிற்றவறினும், அவன் முயற்சியனளவுக்குத் தகுந்த ஞானமடையாமற்போகிறதில்லை.

ஆகையால், இவ்வுலகின்கண், எக்காலத்தும், எவரும் துணிவழியாமல் முயற்சியே கொண்டொழுகுவார்களாக. முயற்சியே பெருமைக்குக்காரணமாகும். முயற்சியுள்ளோர்களுக்கு இகழ்ச்சியேகிடைக்காது. முயற்சியுடையோர்களுக்குக் காரியங் கைகூடாவிடினும் புகழ்ச்சியேகிடைக்கும். "ஏதோ தன்னாலாகிய முயற்சியைச்செய்தான். தெய்வபலமில்லை யாக்கும்; காரியங்கைகூடவில்லை" என ஜனங்கள்சொல்லி, முயற்சிப்பவர்களுக்கிரங்கி, அவர்களுக்கு வேண்டுமான சாதகங்களைச்செய்வார்களேயொழிய, ஒருநாளும் அவர்களை இகழவேமாட்டார்கள்.

ஆகையால் முயற்சி எவ்வளவு சிறப்புள்ளதுபாருங்கள்! முயற்சியுடையோர்கள், எவ்வளவு வருத்தமுள்ள வேலையாகவிருப்பினும் தளருவதில்லை; எவ்வளவு இடுக்கண்நேர்ந்தாலும், மனச்சோர்வடைவதில்லை. மனிதரது நல்வாழ்க்கையை மேன்மேலும் விருத்திசெய்யக்கூடியது முயற்சியே; முறையே நாள்தோறும், நவ நவமான மகோபகாரங்களைச் செய்துவருகிறது முயற்சியே.

"உறுதிபயப்பகடை போகாவேனு
மிறுவரைகாறுமுயல்ப—விருமுயிர்க்கு
மாயுண்மருந்தொழுக்க நீதன்றேலல்லனபோ
லாவனவு முண்டேசில."

---

# 9. வியாபாரமும் கைத்தொழிலும்.

---

எத்தேசத்திலும் ஜனங்களுடைய வாழ்க்கைக்கு வியவசாயம், கைத்தொழில் இவ்விரண்டும் அவசியம். வியவசாயத்தால் கிடைக்கக்கூடிய பொருள்களைக்கொண்டே மனிதன் ஜீவிப்ப

தரிது. வியவசாயத்தால் மனிதனுடைய ஜீவனத்திற்கு அவசிய மான பொருள்கள்மட்டும் கிடைக்கின்றன. அறிவும் நாகரீகமும் அதிகரிக்க அதிகரிக்க அதற்குத் தக்கபடி மனுஷனுடைய சுக சௌகரியாதிகள் அதிகப்படுகிறபடியால் அவைகளுக்கு அவசிய மான சாமான்கள் தொழில்களாலேயே கிடைக்கவேண்டும்.

இந்த வித்தியாசத்திற்குற்றபடி வியவசாயத்தாற் கிடைக்கும் பொருள்கள் அளவிற்குட்பட்டனவாயும் தொழில்களாற் கிடைக் கும் பொருள்கள் அளவிற்குட் படாதனவாயுமிருக்கின்றன. தக்க படி உரமிட்டு, நீர்ப்பாய்ச்சி மற்ற சௌகரியங்களையும் அமை த்து விவசாயம்செய்தாலும், அளவிற்குட்பட்டுப்பூமி விளையுமே யல்லாமல் அளவுமீறி விளையாது. தொழிலோ இவ்விதமான அளவுகளுக்குட்பட்டதல்ல. மனிதனுடைய சாமர்த்தியத்திற்குத் தக்கபடி தொழில்கள் வித்தியாசப்படுகின்றன. சுவல்ப முதல் போட்டு சிறு வியாபாரம் செய்கிறவர்களும், கோடிக்கணக்காய் முதல்போட்டு ரயில்வேபோன்ற பெருத்த தொழில்கள் செய்கிற வர்களுமுண்டு. ஒரு தொழிலில் ஒருவரால் நிர்வகிக்க முடியாவிட் டால் ஆயிரம் பத்தாயிரக்கணக்கான ஜனங்களைச்சேர்த்து கம்பெ னிகள்வைத்து அதை நடத்தி அதிக லாபத்தைச் சம்பாதிக்கக் கூடும். தொழில்செய்து உண்டாக்கும் பொருள்கள் ஓரிடத்தில் விலைப்படாவிட்டாலும் வேறிடங்களுக்குக் கொண்டுபோய் அவை களை விற்கலாம். உலகத்தில் எந்த ஜனங்களுக்கு எந்தப்பொருள் தேவையோ அதை நாமிருக்குமிடத்திலேயே செய்து தேவையான இடங்களுக்கு அனுப்பலாம். மான்செஸ்டரில் வசிப்பவர்களுக் குப் பருத்தியினாற்செய்யப்பட்ட துணிகள் அவசியமில்லாவிட் டாலும், இந்தியர்களுக்கு அவசியமென்றறிந்து இந்தியாவில்விளை யாகியும் பருத்தியைத் தருவித்து அவற்றை ஆடைகளாக நெய்து இங்கு கொண்டுவந்துவிற்றுக் கோடிக்கணக்கான லாபத்தைச்சம் பாதிக்கிறார்கள். இதே மாதிரியாக நமது தேசத்தில் உற்பத்தியா கும் அநேக இயற்கைப்பொருள்கள் அன்னியதேசங்களுக்கு அனு ப்பப்பட்டு நமது உபயோகத்திற்கும் சௌகரியத்திற்கும் தக்க படி செயற்கைப் பொருள்களாக மாற்றப்பட்டுவருகின்றன. இவ்

விதமாகக் கைத்தொழில்களுக்கு வேண்டிய பொருள்கள் நம் தேசத்திற் கிடைக்காவிட்டாலும் அவைகளை அந்நிய தேசங்களி லிருந்து வரவழைத்துவேண்டிய தொழில்களைச்செய்யலாம். ஆகை யால் அளவில்லாமல் செல்வம் குவிக்க வேண்டுமானால் தொழில் களால்மட்டும் சாத்தியமேயல்லாமல் விவசாயத்தால் சாத்திய மல்ல.

இந்த நுட்பத்தை நம் தேசத்தவர்கள் அறியவேண்டிய தவ சியம். விவசாயத்தையே முக்கிய மாகக்கொண்டிருக்கும் ஜனங் கள் வறுமையினுற் பீடிக்கப்படுகிருர்களென்பதற்கு நாம் நம் முடைய அனுபோகத்தினுலேயே தெரிந்துகொள்ளுகிறோம். நம் தேசத்தில் விவசாயிகள் சாதாரணமாய்ப்படும் கஷ்டங்கள் இவ் வளவு அவ்வளவென்று சொல்லமுடியாது. இது ஒவ்வொரு வரும் கண்ணுற்கண்டு அனுபவிக்கும் அனுபோகமாகும்.

விவசாயிகள் படும் கஷ்டத்தை ஒருவாறு நிவிர்த்திசெய்யும் பொருட்டு 1904-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் 10-வது ஆக்டாகிய ஐக்கிய நாணயச் சங்கங்களின் சட்டம் (co-operative Credit Socities act) ஒன்று செய்தார்கள். இதன் நோக்கம் என்னவெனில், ஏழை விவசாயிகளும், தாழ்ந்த கைத்தொழிலாளிகளும், சாவுகாரர்களாகிய சர்ப்பங்களின் வாயில் தேரைகளாகி நசுக்குண்டு மாளுவதுபோற் போகாமல், சிக்கன மாகவும் கூட்டுறவாகவும் ஜீவனம்செய்ய வேண்டுமென்பதாம். இம்மாதிரி நாணயச் சங்கங்களுக்குச் சர்க்கார்செய்யும் ஒத்தா சைகள் என்னவென்ருல் (1) இந்தமாதிரி சங்கங்களை இனுமாக ரிஜிஸ்டர்செய்து கொடுக்கிருர்கள். (2) ஸ்டாம்பு ரிஜிஸ்தர் செல வுகள், வருமானவரி முதலானவைகளை நீக்கிவைத்திருக்கிருர் கள். (3) இந்தச்சங்கத்துக் கணக்குகளை யாதொரு கட்டண மில்லாமலே சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் பரிசோதனை செய் கிருர்கள். (4) இந்த மாதிரி ஏற்படும் சங்கங்களுக்கு முதலில் கடன்கொடுத்து உதவுகிருர்கள். ஒவ்வொரு கிராமங்களில் இம் மாதிரி சங்கங்கள் ஏற்படுமானுல் விவசாயங்களுக்கு மிகுந்த நன் மையைப்பயப்பதுடன், நசித்துப்போயிருக்கும் கைத்தொழில்

களும் பிரபலமடையும். பணமுள்ளவர்கள் தங்கள் பணத்தை இம் மாதிரி சங்கங்களிற் போட்டோ அல்லது புதிதாக ஐக்கியசங்கங் கள் ஏற்படுத்தியோ நம் தேசத்துத் தொழில்களைப் பலப்படுத்த வேண்டும்.

இம்மாதிரி சங்கங்கள் ஏற்பாடு ஒழுங்காயும் கண்யதையா யும் நடந்தேறுவதற்கு முக்கியமாய் இரண்டு குணங்கள் அவசிய மாயிருக்கின்றன. அதாவது இச்சங்ககளிற்சேரும் ஒவ்வொரு வரும் நல்ல நாணயத்துடன் பரஸ்பர நம்பிக்கையுள்ளவர்களாயிரு க்கவேண்டும். மேன்மேலும் பொருள் விளைவிக்கும்படியான வியாபாரங்களில் செல்வத்தை உபயோகிப்பதற்கு நாணயமே மிகு ந்த சாதனமாயிருக்கின்றது. பொருளைப் பயன்படத்தக்க வழி களில் வினியோகப்படுத்த அதுவே பெருந்துணையாகின்றது. பண்டமாற்றல் செய்யும் விஷயங்களில் பணத்துக்குப் பிரதியாய் உண்டி, பாங்கிநோட்டு, செக்கு என வழங்கும் பலவகைச் சீட்டு கள் நாணயத்தினாலல்லவோ நாடெங்கும் வழங்குகின்றன. நாக ரீகப்பெற்ற நாடுகளனைத்திலும் எவனும் மிகுதியாய்த் திரவியத் தை தன் கையிலேயே வைத்துக்கொண்டிருப்பது அருமை; அன் றாடகம் செலவுக்குப்போதுமான அளவுமாத்திரம் கையில் வை த்துக்கொண்டு மிகுதியாயுள்ளதை வெகுவாய் பாங்கிகளில் மூல தனமாக வைக்கின்றனன். அவ்விடங்களில் அந்தத் திரவியம் ஊதி யம் கிடைக்கும்படியான வியாபாரங்களுக்கு உபயோகப்படுகின் றது. ஆயினும் பலபேர்கள் மூலதனமாய்வைக்கும் திரவியத் தை உத்தரவாதமாய்ப்பெற்றுக்கொண்டு அவர்களுக்கு எந்த நிமிஷத்தில் வேண்டுமோ அந்த நிமிஷத்தில் அவர்கள் தெரிவித்து வாங்கிக்கொள்ளும்படி அனுமதிகொடுப்பதும், வைத்திருந்தகால த்துக்கு வட்டி கொடுப்பதுமாகிய ஸஹாயத்தைச்செய்வது காசுக் கடைக்காரர்களுடைய பொறுப்பாயிருக்கின்றது.

ஆகையால் பணமுள்ளவர்கள் சுவல்பவட்டிவந்தால் போது மென்றெண்ணி, புதிதாகப் பாங்கிகள் ஏற்படுத்தி வியாபாரம் தொழில் முதலியவைகளில் பிரவிருத்திசெய்தால் நாட்டுக்கு நன் மையுண்டாவதுடன் அவர்களுக்கும் இலாபம்கிடைக்கும். நம்

முடைய தேசத்தில் பெரும்பான்மையான ஜனங்கள், விவசாயஞ்செய்து தொழில்கள் வேண்டியமட்டும் இல்லாமையினாலேயே வறுமையினால் பீடிக்கப்படுகிறார்கள். விவசாயத்தினாலேயே செல்வம்பெற்று வாழும் ஜனங்கள் உலகத்திலில்லை. விவசாயத்தைமட்டும் நம்பியிருக்கிற ஜனங்கள் வறுமையுள்ளவர்களாகவேயிருப்பார்கள். இந்தியாவைப்போல "ருஷியாவும்" விவசாயத்தையே நம்பியிருக்கும் தேசமானதால் அதுவும் நம் தேசத்தைப்போல வறுமையால் வருந்துகின்றது. ஜாமனி தேசம் சுமார் 50 வருஷத்திற்கு முன்னால் விவசாயமேசெய்கிற தேசமாயிருந்து சமீபத்தில் தொழில்கள் அபிவிர்த்தியானபடியால் விவசாயஞ்செய்த ஜனங்களில் பெரும்பாகத்தர் தொழில்கள்செய்து வாழுகிறார்கள். ஜப்பானும் விவசாயத்தால் செல்வம் பெருகாதென்றறிந்து ஐரோப்பிய தேசங்களைப்போல் தொழில்கள்செய்து வருகிறதுமன்றி தொழிற் பொருள்களை அந்நிய தேசங்களுக்குத் தங்கள் கப்பல்களில் கொண்டுபோய் விற்றுப்பெருத்த லாபங்களைப்பெற முயலுகின்றது. ஆகையால் இந்தியாவும் விவசாயத்தையே நம்பியிராமல் தொழில்களைப்பெருக்கவேண்டும். அப்படிப் பெருக்குவதற்குச் செல்வம் படைத்தவர்களும், தேசாபிமானிகளும், தொழில்களிற் பணத்தைப்போட்டுத் தாங்களும், லாபம் பெற்றுத் தேசத்திற்கும் நன்மைசெய்ய வேண்டியதவசியம்.

---

## 10. வியவசாயமும், ஐக்கிய நாணயச்சங்கமும்.

---

"சீரைத்தேடி னேரைத்தேடு"

நெடிய கடல்சூழ்ந்த இப்பூவுலகின்கண்ணுள்ள, எல்லாவித ஜீவராசிகளின் வாழ்க்கைக்கு மின்றியமையாதது, உணவே. இவ்வுணவையடைந்துய்யும்பொருட்டு, மனிதர் பாடுபட்டுழைக்குந் தொழிலுக்கே, கிருஷித்தொழில் அல்லது விவசாயம் எனப்

பெயராகும். நம் இந்தியநாடு, தொன்றுதொட்டு, வேளாண்மைத்தொழிலே, மிக்க உயர்ந்ததாக மதிக்கப்பட்டுவந்த நாடென்பது யாவருமறிந்த விஷயம்.

'உழுதுண்டுவாழ்வரேவாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்''

எனத்தெய்வப் புலமைத்திருவள்ளுவநாயனாரும்.

"தொழுதூண் சுவையினுழுதூணினிது" என அறிவிற்சிறந்த ஔவைப்பிராட்டியும்,

"ஆற்றங்கரையின் மரமுமரசறிய
வீற்றிருந்தவாழ்வும் விழுமன்றே—யேற்ற
முழுதுண்டுவாழ்வதற் கொப்பிலைகண்டீர்
பழுதுண்டு வேறோர்பணிக்கு''

என நல்வழிக்காரரும், கூறியிருப்பவைகளே, இத்தொழிலின் பெருமையை நன்குவிளக்கும்.

ஒவ்வொருகைத் தொழிலினபிவிருத்தியும், இவ்விவசாயத்தைச் சார்ந்ததாயிருப்பதால், வியவசாயமே, எல்லாக்கைத் தொழில்களுக்குமாதாரமாயிருக்கிறது. நம்நாட்டு ஜனங்களுள், அநேகர், விவசாயத்தையே தங்களுக்கு முக்கிய ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டாரும் தங்கள் அரசிறை வருமானத்தின் மேம்பாகத்தை விவசாயிகளிடத்திருந்தே வசூலிக்கிறார்களெனச் சொல்லலாகும். இவ்விவசாயமே நாட்டின் க்ஷேமத்திற்குக் காரணமாயிருக்கின்றது.

,,அலகிலாமறைவிளங்கு, மந்தணராகுதிவிளங்கும்
பலகலையாந்தொகைவிளங்கும், பாவலர்தம்பாவிளங்கு
மலர்குலாந்திருவிளங்கு மழைவிளங்கு மனுவிளங்கும்
உலகெலாமொளிவிளங்கும், உழவருழமுழவாலே.''

இப்பாடலொன்றினாலேயே, கிருஷித்தொழில் மிகவும் முக்கியமான தென்றறியலாகும். ஆகையால், இதின் அபவிருத்தியின் பொருட்டு துரைத்தனத்தாரும், மிக்க உழைத்து வருகிறார்கள். சென்ற ஐம்பது, அறுபது, வருஷங்களாக, நமது இரா

ஜாங்கத்தார், வியவசாய விஷயமாக, இலட்சக்கணக்கான ரூபாய் சிலவுசெய்தும், வியவசாயத்தில், நமக்கு எவ்வளவு இலாபம், கிடைக்கவேண்டுமோ அவ்வளவு இலாபத்தை நாம் அடையவில்லை. ஒவ்வொரு வியவசாயிகளும், வியவசாய அபிவிருத்தியில் கருத்துள்ள ஒவ்வொருவரும், இதின் காரணமென்னவென்று நீரயோஜித்து, வியவசாயத்தை மேம்பாடடையச்செய்ய முயலல்வேண்டும். இம்முக்கியமான தொழிலில், நம்மவர்களும் மிக்க முயற்சி செய்து, சாஸ்திர ஆராய்ச்சியுடன், தற்காலம் நடந்துவரும் வியவசாயமுறைகளைப் பழகிப்பயிர்செய்தால், நாம்தக்க மேன்மையடையலாகுமென்பதில் சற்றேனுமையமில்லை.

வருஷாவருஷம், ஜனத்தொகையோ, அதிகரித்துக்கொண்டேவருகிறது. மனிதர்கள் உண்டுஉய்யும்பொருட்டு, அதற்குத் தக்கவாறு, நாம் சாகுபடிசெய்யும் நிலவிஸ்தீர்ணமும், நமக்குக் கிடைக்கும் மகசூல்களினளவும் மற்றுமுள்ளவைகளும் அதிகரிக்கவேண்டுமல்லவா? ஒவ்வொரு கிராமக்கணக்கையும் நாம், பரிசோதிப்போமேயாகில், முன் பயிரில்லாது தரிசாய்க்கிடந்த நிலங்களெல்லாம், சாகுபடியாயிருப்பதையும், புஞ்சை நிலங்களெல்லாம், நஞ்சையாக மாற்றப்பட்டிருப்பதையும், காணலாகும். குடிகள் விருத்தியடைய யடைய, இவைகளும் விருத்தியடைவது இன்றியமையாததே. ஆனால் நிலவிஸ்தீர்ணம், அதிகப்படுதல் மட்டும்போதாது; அதற்குத்தக்கவாறு மற்ற அபிவிருத்திகளும் வேண்டுவது அவசியமாகும். நிலங்களைத் தக்கவாறு சீர்திருத்தி அவைகளுக்கேற்ற உரமிட்டு, அதிக இலாபத்தைத் தரத்தக்கதான பயிர்களை, பருவத்தே பயிர்செய்து விளைவிக்கச்செய்தாலல்லவோ நமது நாடு க்ஷேமமடைந்ததாக நாம் கருதலாகும். அவ்வகை விருத்திகள் மனம்போனபோக்கில், செய்யப்படாதவைகளாய், பற்பல சாஸ்திரமுறைகளை அனுசரித்ததாயிருப்பது மிகவும் சிலாக்கியமாகும்.

பயிரிடும் குடிகள், தொன்றுதொட்டு வழங்கிவரும் விவசாய முறைகளையே அனுஷ்டித்து, வருகிறார்களேயொழிய, காலத்துக்கேற்ப அம்முறைகளை மாற்றிக்கொண்டார்களில்லை. இப்படி

யிருப்பது, அவர்கள் அறியாமைக்காரணமோ, அல்லது வறுமைக்காரணமோ? ஆகிலும் நமதுநாட்டு, வியவசாயிகளுக்கு, அத்தொழிலில் சிறிதும் தேற்சியில்லையெனச் சொல்லவியலாது. பல நூற்றுண்டுகளாய் வழங்கிவரும், "ஆடுபயிர்காட்டும், ஆவாரை நெல்காட்டும், உரம் ஏற்று உழவுசெய். ஆற்றுமண்ணுக்கு வேற்றுமண் உரம், பட்டம்தப்பினல் நஷ்டம், பாழில்போட்டாலும் பட்டத்தில்போடு" என்ற பழமொழிகளே அவர்களுக்கு வியவசாய விஷயத்தில் போதுமான ஞானமிருந்ததென்பதற்குச் சாட்சியமாகும். ஆனல், நமது பயிரிடும் ஜனங்கள், பல நிலங்களின் மண்ணின்தன்மையும், அந்தந்த நிலத்தில் பயிராகக்கூடிய பயிர்களையு மறிவார்களேயல்லாது, இதர வஸ்துக்களால் நிலத்தின் தன்மையை மாற்றலாகுமென்பதையும், எவ்வகைப்பொருள்களால், எவ்வகைத்தான நிலங்களைப் பண்படுத்தலாமென்றும், அவர்கள் அறியார். சாணமும், சாம்பலும், இலையும், தழையும், நிலங்களுக்கு உரமாகுமென்று அவர்கள் அறிவார்கள்; ஆனல், இவைகளினுஞ்சிறந்த எருவுளதென்பதையும், நிலத்துக்குத்தகுந்த எருக்களிடும்வகையும், அவர்கள் அறியார்கள்; விவசாயத்தொழிலுக்கு மாடுகள் அவசியமென்று அவர்கள் அறிவார்கள்; ஆனல் அவைகளை அபிவிருத்திசெய்து வளர்க்குமுறைகளை அவர்கள் அறியார்; கால்நடைகளுக்கு நேரிடும் உபாதிகளை அவர்கள் உணர்வார்கள்; ஆனல் அவைகளை நீக்குமுபாயங்களை அவர்களறியார்.

வியவசாயிகளின், இத்தன்மைத்தான அறிவின்மையை நீக்குதற்பொருட்டு, நமது காருண்ய துரைத்தனத்தார், பிரத்தியேகமான உத்தியோகஸ்தர்களுடன், விவாசாய இலாகாவொன்றை புதிதாய் ஏற்படுத்தியுள்ளார். இந்த டிபார்டுமெண்டாரின் முயற்சிகளை முற்றுப்பெறுவிப்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு விவசாயசங்சம் ஏற்பட்டு, அந்தந்த ஜில்லாகலெக்டர் துரையவர்களே, அச்சங்கங்களுக்குத் தலைமையதிகாரி (President) களாகவுமிருக்கிருர்கள். இந்தியாவிலுள்ள பற்பல மாகாணங்களிலும், அந்நியநாடுகளிலுமனுஷ்டிக்கப்பட்டுவருமநவீன விவசாய முறைகளைச்சேகரித்து, அவைகளை அந்தந்த ஜில்லாக்

 3458

களின் சுயபாஷைகளில், கிருஷிகர்களுக்கெட்டுமாறு பிரசுரஞ் செய்தலும், இம்முறைகளை விவசாயிகள் சுலபமாய், அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரக்கூடிய ஏற்பாடுகளை அவர்களுக்குச் செய்து கொடுத்தலும், திருவிளாக்காலங்களில், விவசாயக்காட்சிச்சாலை, கால்நடைகளின் காட்சிச்சாலை இவைகளை கூட்டுவித்தலுமாகிய இவைகளே, மேற்கூறப்பெற்றுள்ள சபையின் முக்கிய கடமைகளாகும். மேலும், விவசாய அபிவிர்த்திக்கு அனுகூலமான எவ்வகைத்தான ஏற்பாடுகளையுஞ்செய்துகொடுப்பதே இச்சபையின் முக்கிய நோக்கமாகும். ஆனால், இவ்விவசாயசங்கங்களால், ஜனங்கள்விருத்திக்கு வந்திருப்பதாக இன்னமும் தெரியக்காணோம். நமது இராஜதானியில், தஞ்சாவூர் விவசாயசங்கத்தார்கள், மிகவும் பிரயாசைப்படுவதாகச் சொல்லலாகும். திருவிழாக்காலங்களில், விவசாயப்பொருட்காட்சி, கால் நடைக்காட்சி இவைபோன்றவைகளைக் கூட்டுவித்தலே, மற்றச் சபையார்கள் முக்கியமாய் நடத்திவரும் வேலையாகவிருக்கிறது. சிற்சில சமயங்களில், இவைகளும் செவ்வனேயும், ஒழுங்காயும், நடந்தேறுகிறதில்லை. இவ்வகைக் காட்சிசாலைகளால் தற்காலத்தில் ஜனங்கள் பிரயோஜனமடைந்திருப்பதாகச் சொல்லமுடியாது. விவசாயிகள் புதிதாய்க்கற்றுக்கொண்டது, ஒன்றுமேயில்லை எனக்கூறலாகும். விவசாயிகள், விருத்தியடையவேண்டியதற்கான முக்கிய அம்சங்களை முதலில்கவனித்து, சில வருஷங்களுக்கப்பால், விவசாயக்காட்சிகளை ஏற்பாடுசெய்தால், விவசாயிகளுக்குள் உண்மையான ஊக்கம்பிறந்து, ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு விருத்திக்கு வரவேண்டுமென அவாப் பிறந்து அவர்கள் அபிவிருத்தியடைய ஏதுவாகும். எவ்வளவு குறைந்த செலவில், நவீன விவசாயமுறைகளையனுசரித்து அதிகப் பலனையடையக்கூடுமென்பதை விவசாயிகள் மனதில் பதியும்வண்ணம், இவ்விவசாயச்சங்கங்கள் எடுத்துக் காட்டல்வேண்டும்.

தற்காலம், இதற்கு துரைத்தனத்தார் செய்யும் உபாயம் என்னவெனின், வியவசாய விஷயங்களடங்கிய குறிப்புக்களை அந்தந்த ஜில்லா கஜெட்டில் பிரசுரஞ்செய்து வருகிறார்கள்.

ஆனால் ஜில்லா கெஜட்டை, ஜனங்களில் பெரும் பாலர் பார்க்கிறது கூடக்கிடையாதெனச் சொல்லலாகும். இவ்விஷயப் பத்திரிகைகளைத் துண்டுப் பத்திரிகைகளிலச்சிடுவித்து, இரவினியூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், இவர்கள் சவாரிபோகுங்காலத்து, அந்தந்த கிராமக்குடிகளுக்கு இப்பத்திரிகைகளைக் கொடுப்பதுடன், இதைப்பற்றிய விஷயங்களெல்லாம் அவர்கள் மனதில் நன்றாய்ப் பதியும்படி எடுத்துரைக்கவும் வேண்டும். மேலும், நவீனமுறைகளை யநுசரித்துச்சாகுபடி செய்யவேண்டிய வழிகளைக் குடிகளுக்கு விளங்கக்காண்பிக்கும் பொருட்டு, பத்துமைல் சுற்றளவிலுள்ள கிராமங்களுக்குப் பொதுவாய், ஒரு மாதிரிப் பண்ணை யேற்பாடு செய்து, அது சரிவரநடந்தேறும் பொருட்டு, வியவசாய வித்தியாசாலையில் பயின்று பட்டம்பெற்ற ஒருவரை அங்கே இருக்கச் செய்யவும்வேண்டும்.

மேற்கூறியவாறு செய்து வந்தால், குடிகள் சாஸ்திரயுக்தமாய் விவசாயஞ்செய்ய ஒருவாறு பிரியப்படுவார்களென்பதில் சற்றேனுமையமில்லை. சாஸ்திரயுக்த விவசாயத்துக்கு கையில் முதல் வேண்டும். நம்நாட்டு பயிரிடும் குடிகளின் நிலையோ மிக்கப் பரிதபிக்கத்தக்கது. துரைத்தனத்தாரும், இதனையறிந்தே, நிலவிருத்தி சம்மந்தமான வியவசாய காரியங்களைச் செய்ய முன்வருகிற ஏழைக்குடிகளுக்குக் கடன் கொடுத்துதவுகிறார்கள். மேலும்; விவசாயிகளே தங்களுக்குள் சங்கங்களை ஏற்பாடுசெய்துகொண்டு, ஒருவருக்கொருவர் உதவியாக விருத்தல்பொருட்டு, பிரத்தியேகமாய் ஐக்கியநாணயச் சட்டமொன்று அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படி ஐக்கியநாணயச் சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் ஏற் படல் வேண்டும். இவ்வண்ணஞ் செய்வது துரைத்தனத்தாரால் சாத்தியமில்லை. ஆனால், இவ்வாறு சங்கங்கள் ஏற்படுத்து வதற்கு வேண்டுமான ஏற்பாடுகளை, அவர்களே புரிந்து தவியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும், கிராமத்திலு முள்ள தனவான்களும், ஜமீன்தார்களும், மிட்டாதார்களும், மற்று முள்ளவர்களும், வியவசாயிகள் இப்பொழுது படுங்கஷ்டத்தைக் கண்ணுற்று, வேறு விஷயங்களில் தங்கள் பணத்து

க்கு வட்டி பெறுவதைக் காட்டிலும், வியவசாயிகளுக்குப் பணத்தைக் கடன் கொடுத்து நியாயமான வட்டி பெறுவதேசர்வ சிலாக்கிய மென்றெண்ணி, அவரவர் களாலியன்றவளவு பொருளுதவி செய்து, வியவசாய நாணயச்சாலைகளை யேற்படுத்துவது தங்களது கடமையேயாகு மென்றெண்ணி முயற்சி செய்தல் வேண்டும். இவ்வித "பாங்கி" அல்லது நாணயசாலைகளுக்கு அவர்களே காரியதரிசியாகவும், பொக்கிஷதாரராகவும், அங்கத்தினர்களாகவும் ஏற்படுவதால், தங்கள் பொருள் போகாவண்ணம் காத்துக்கொள்ளவும் ஏதுவாகிறது. இவ்வித நாணயசாலைகள் ஏற்பாடாவதில் ரிவினியூ உத்தியோகஸ்தர்களும், கிராமத்தாரோடு கலந்துமுயற்சி புரிதல்வேண்டும்.

ஐரோப்பா, அமெரிக்கா முதலியகண்டங்களிலும், ஜப்பான் தேசத்திலும் வியவசாயத்திற்காக, துரைத்தனத்தார் செய்யு முதவி தவிர, வியவசாயிகளும் தாங்களே சேர்ந்து சங்கங்கள் உண்டாக்கிக்கொண்டு, வியவசாயத்தை அநேக மார்க்கங்களில் விருத்தி செய்து வருகிறார்கள். 'டேன்மாக்' என்னுமொரு ஒருசிறிய தேசத்தில், வியவசாயி களெல்லாம், சொற்ப காலத்திற்கு முன்முழுகிப்போகும் நிலை யிலிருந்தார்கள். வியவசாயச் சங்கங்கள் ஏற்பட்டு, ஜனங்கள் எல்லோரும் வியவசாய விஷயமாய் முயற்சி செய்ய ஆரம்பிக்கவே, வெகுசீக்கிரத்தில் அந்தேசம் நல்ல நிலைமைக்கு வந்தது. இப்மாதிரியே "பிரான்சு, ஜெர்மேனி" முதலிய தேசங்களில் வியவசாயச் சங்கங்கள் ஏற்பட்டு கிருஷித்தொழில் விருத்தியடைந்திருக்கிறது. ஐயர்லாந்து, தேசத்து வியவசாயிகள் நம்மைப்போல் எளியவர்களே. ஆனாலும், அவர்கள், தங்களுக்குள் சங்கங்களும், நாணயசாலைகளு மேற்படுத்திக்கொண்டு, சொற்பகாலத்துள் விருத்திக்கு வந்திருக்கிறார்கள். இவ்வித மெல்லா மிருக்க, நமது நாட்டிலும் சங்கங்களும், நாணயசாலைகளு மேற்பட்டால், வியவசாயம் விருத்தியாகி, நாடு ஏன்க்ஷேமமடையாது?

ஆகையால், வியவசாய அபிவிருத்தியில் கருத்துள்ள ஒவ்வொருவரும், "வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக்குடியுயரும், குடியுயரக்கோலுயரும், கோலுயரக்கோனு

யுயர்வான்" என்ற நம்மூதாட்டி ஔவைப்பிராட்டியாரின் திருவாக்கை மனதிலுன்னி, கண்ணுங்கருத்துமாய்ப் பயிர்த்தொழிலில் பாடுபடல்வேண்டும்.

"சீர்வளருமறை வளருந்திறல் வேந்தர்முடிவளரும்
பேர்வளரும் வணிகருக்குப்பெருநிதிய மிகவளரும்
ஊர்வளருந்திருவளரு மிசைவளருங் கடல்சூழ்ந்த
பார்வளருங் காராளர்பயிர் வளருந்திறத்தாலே."
"உழுவித்திரு வரிருவருழுவித்து முழுதுமுண்லாகு
முழுதுண்பவரே தமக்குரியருப காரியரென்பாரவரே
தொழுதுண்பவரேபிறர்குரியார் தொழின்முற்றுழுந்து முழவினர்
[பான்
மூழுதுமடுப்பவேண்டுதலின் முதன்மைத்துழ வென்றறிமைந்தா"

## 11. போதுமென்றமனமே பொன்செய்யுமருந்து.

போதுமென்றெண்ணுவது திருப்தி யெனப்படும். திருப்தி நமது மனத்தைச்சார்ந்ததேயல்லாது, நம்மிடத்துள்ள பொருள்களைச் சார்ந்ததில்லையெனக் கூறலாகும். மனதோ, எப்பொழுதும் சலித்துக்கொண்டேயிருக்குந் தன்மையுடைத்தது. மனத்தை அடக்குவதே பெருங்காரியமென்றெண்ணி முயற்சிசெய்யும் பெரியவர்களெல்லாரும், மனத்தை அடக்குவது மகா கஷ்டமெனச்சொல்லியிருக்கிறார்கள். "நாம் மதயானையை நம் வசப்படுத்தி வாழலாம்; புலி, கரடி முதலிய துஷ்டமிருகங்களின் வாயைக்கட்டலாம்; சிங்கத்தின் முதுகின்மீது ஏறிக்கொண்டு அதைக் குதிரையைப்போல் நடத்தலாம்; ஒருவருமறியாது இவ்வுலகத்திலேயே சுற்றித்திரியலாம்; தேவர்களை, நாமிட்ட வேலையைச்செய்யும் வண்ணஞ்செய்யலாம்; எப்பொழுதும், இளமைப் பருவத்துடனிருக்கலாம்; பரகாயப் பிரவேசஞ்செய்யலாம்; ஜலத்தின்மீதும், கனன்மீதும் கஷ்டமின்றி பூமியின்மீது நடப்பதுபோல்நடக்கலாம்; நிகரில்லா சித்திகளை அடையலாம்; ஆனால்

மனத்தையடக்கி சும்மாயிருக்கும் திறமரிது'' என்று பெரியவ ரொருவர்சொல்லி தெய்வத்தைப் பிரார்த்திக்கிறர். மனதை, அடக்க முயற்சிசெய்யாது, அதின்போக்குப்படி விட்டோமேயாகில் அது ஒரு பொருளைவிட்டு, மற்றொருபொருளின் மீதுபாயும்.

பிச்சக்காரனொருவன், பசிக்குங்காலத்து அவ்வேளைச்சாப்பாடு கிடைத்தால் போது மென்றெண்ணுகிறன். அவ்வேளைச் சாப்பாடுகிடைத்து அருந்தினபின், ஏதேனும் சொல்ப பணம், தன்னிடமில்லாதிருக்கிறதைப்பற்றி விசனிக்கிறன். அப்பொருளும் கிடைக்க நேரிடின், அம்மட்டுடன் அவன் மனம் திருப்தியடைகிறதில்லை. இதற்குமேல் ஏதேனு மொன்றையடைய விரும்புகிறன். இவ்விதம் ஆசை பெருகிக்கொண்டு போகிறதேயல்லாது, இலேசில் அடங்குகிறதில்லை. இது மானிடஜன்மத்துக்கு சுபாவமென்றும் கூறலாம். இதைக்குறித்தே தாயுமானவரும்

"ஆசைக்கோரளவில்லை யகில மெல்லாங்கட்டி
யாளினுங்கடன் மீதிலே
ஆணைசெலவே நினைவரளகேச நிகராக
வம்பொன் மிக வைத்தபேரு
நேசித்து ரசவாத வித்தைக்கலைந்திடுவர்
நெடு நாளிருந்த பேரு
நிலையாகவேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சு புண்ணு வரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாக முடியும்
உள்ளதேபோது நாளு னெனக்குளறி
யொன்றை விட்டொன்று பற்றிப்
பாசக்கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்கு மொருநீக்க மற நிறைகின்ற
பரிபூரணனந்தமே''

எனக்கூறியுள்ளார்.

இப்பூ வுலகுமுழுதும் தமதுகைக்குள்ளிருந்தும், சமுத்திரங்கள் மீது தமதாணை செல்லவில்லையே என வருந்துவதும், குபேரனுக்கு ஈடானபொன்தம் மிடத்திருந்தும், இரசவாத வித்தை

அறிந்திருந்தால், எல்லாவற்றையும் பொன்னாகவே சமைத்துக் கொள்ளலாகுமேயென வெண்ணியேங்குவதும், பேராசை கொண்ட மனிதர்களது சுபாவமாயிருக்கிறது. "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்ற சாமான்யபழமொழி வழங்கிவருவதையும் கவனிக்கத்தக்கது. தான்தொட்டதெல்லாம் பொன்னாக மாறவேண்டுமெனவரம் பெற்ற "மைடாஸ்" பட்ட பாட்டையாவருமறிவார்கள். ஆகாரத்தைத் தொடவும் பொன்னாகமாறியது. சாப்பிட முடியாது தவித்தான்; தனதருமைக் குமாரத்தியைத் தொடவும் அவள் பொன்னாக மாறினாள். இவ்விதமாக எல்லாம் மாறவே, எப்பொழுதும் அவன்மனம் வருந்தநேரிட்டது. ஆசையேத் துக்கத்துக்கு காரணமானது. அவனுக்கு மனத்திருப்தி யேற்பட்டிருந்திருக்குமாகில், இவ்வித சங்கடத்துக்கு அவனாளாக வேண்டுவதில்லை. ஆகையால் மனத்தை அலையாவொட்டாது அடக்கியாள்வதே சிலாக்கியமாகும். "மனம் போனபோக்கெல்லாம் போகவேண்டாம்" என்பது உலகநீதி வசனமன்றோ? அப்படி அடக்கியாளா விடின்நாம் எப்பொழுதும் மனவருந்து வேண்டுவதுதான்.

"சினமிறக்கக் கற்றாலுஞ்சித்தி யெல்லாம் பெற்றாலு
மனமிறக்கக் கல்லாக்கு வாயேன் பராபரமே"

ஆசை மனக்கிலேசத்தை உண்டுபண்ணுகிறது. இவ்வாசை, நம்மினுமுயர்ந்தோனுடன் நம்மை ஒப்பிட்டு நோக்கிக்கொள்வதிலும், அவர்களைப்போல் நாயமிருக்க விரும்புவதிலுமிருந்தும், நம்மனத்துள் உதிக்கிறது.

"தம்மின் மெலியாரை நோக்கித்தமதுடைமை
யம்மா பெரிதென்றக மகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்கு நாமென்று"

ஆகையால் எப்பொழுதும், நமக்குக் கீழான நிலைமையிலுள்ளவர்களுடன் நம்மை ஒப்பிட்டு நோக்கி, அவர்களினும் நாம் நல்ல நிலையிலிருக்கிறோமெனச் சந்தோஷங் கொள்வதே மேலாகும்; அதுவேநமக்கு இன்பத்தைப்பயக்கும்; சரீரதிடத்தையுண்டாக்கும். சந்தோஷமெய்தச் செய்யும்.

மேலும் நம்மிடத்தில்லாத பொருள் பிறரிடத்திருக்கக் காணின், அது மிக்கசிலாக்கியமாகத் தோன்றுவது நமது மனோசுபாவமாகும். முயற்சிசெய்து, அப்பொருளை நாம் அடைவோமேயாகில், அப்பொருள் சிலாக்கியமில்லையென நமக்குப்புலப்படும். இதின் பின்னர், வேறுபொருளின் மீது ஆசை கொண்டு, அப்பொருளை நாட நமது மனம் பிரியங்கொள்ளும். இது நமது மனோசுபாவமாகும். இப்படி மேலும் மேலும் ஒன்றை விட்டு மற்றொன்றையடைய விரும்புவதால், நமது நெஞ்சம் புண்ணாகிறதேயல்லாது, நாம் வேறொரு பலனையுமடைவதில்லை.

ஆகையால், எப்போழ்தும், "போதுமென்றமனத்தவ" ராயிருத்தலே மேலானதாகும். நல்லபொருள்களை தம்மிடத்தமைந்திராத மனிதர்கள், இவ்வுலகின்கண்ணே யில்லையெனக் கூறலாகும். ஒருவன் பரமதரித்திரனாயிருப்பான்; அவன் தேகசௌக்கியத்தைப் பெற்றிருப்பான்; இதற்காக இவன் சந்தோஷமடையலாம் ஒருவனுக்கு பணமில்லாவிடினும், அவனுக்கு வேண்டுங்காலத்தெல்லாம், உதவிசெய்ய, செல்வவந்தர்களான சிநேகிதர்களும், சுற்றத்தார்களும் இருப்பார்கள்; அவர்களுதவிகொண்டு இவன் கஷ்டமடையாது சுகமாய் வாழலாகும். நல்ல சிநேகிதர்களகப்படாவொருவன் புஸ்தகங்களை வாசித்துப்பொழுதைப்போக்கித் திருப்தியடையலாகும். வியாதியே யனுபவிக்குமொருவன், தன்னிடத்து, தன் உற்றார், பெற்றார், சிநேகிதர் இவர்கள் கொண்டிருக்கும் பிரியத்தை எண்ணியும், அவர்கள் அடிக்கடிவந்து பார்த்துப் பேசிப்போவதையும்கண்டு சந்தோஷமடையலாகும். ஒன்றுமே யனுபவிக்கக்கொடுத்துவைக்காதவொருவன், தான் எப்பொழுதும் நேர்வழியில் நடந்துவருவதே, சந்தோஷமடையக் காரணமாகும். இவ்விதமாக, மனிதர்கள் எவ்விதத்திலும், ஒருவிதத்தில் மனத்தைத்திருப்திசெய்துகொள்ள இடமிருக்கிறது. ஆகையால் தன்னிடத் தில்லாததைப்பற்றி யேங்கிமனவருத்தபட வேண்டுவதில்லை. அப்படி வருந்துவதால், சரீரசௌக்கியம் குன்றுமேயன்றி, வேறொன்றும்கிட்டாது. இதை நாம் சொந்த அனுபவத்திலும் பார்க்கலாகும்.

"வருந்தியுழைத்தாலும் வாராதவாரா
பொருந்துவனபோவென்றாற் போகா — இருந்தேங்கி
நெஞ்சம்புண்ணாக நெடுந்தூரந்தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர்தொழில்."

ஒருவனுக்கு, பொருளும், இன்பமும், உளவாதல் விதியின் வலியினாலேயாம். நமக்குக் கிடைக்கத்தக்கது, எப்பொழுதும் கிடைத்தேதீரும். உலகின்கண் ஒருவனுக்கு எஃது எத்துணை எய்துமாறு விதிக்கப்பட்டதோ அஃது அத்துணையினும் அதிகம் கிடைக்கமாட்டாது. மேகம் பெருமழைபொழியினும், சாதகப் புள்ளின் வாயில்வீழ்வது இரண்டுமூன்று துளிகள்தான். இவ் வுலகின்கண், வளம்படவேண்டாதார் யாருமேயில்லை. அப்படி யிருப்பினும், எல்லோருமே அப்படியாகுகிறார்களா? அப்படி யிருக்க ஏன் நெடுந்தூரம் நாம் நினைத்து நமது மனத்தைப்புண் ணாகச் செய்துகொள்ளல்வேண்டும். போதுமென்று திருப்திய டைதலே பொன்செய்யுமருந்தாகும்.

"ஆழவமுக்கிமுகக்கினு மாழ்கடனீர்
நாழிமுகவாது நானாழி — தோழி
நிதியுங்கணவனு நேர்படினுந்தத்தம்
விதியின்பயனேபயன்."

மேலும் ஆசை பலவித பாவங்களுக்குக் காரணமாகும். நாம் ஒருபொருளைநாட இச்சித்து அதைநேர்வழியில் சம்பாதிக்க முடியாவிடின், தீயநெறியிலேனும் அப்பொருளையடைய நமது மனம் நாடுகிறது. அவ்விதம்நாடுகிற மனத்தை அடக்காவிடின், தீயவழிகளில் அது பிரவேசிக்கவுஞ்செய்கிறது; பாவச்செய்கை களை அது புரிகிறது; இம்மாதிரி நாம் ஆசையால் பாவத்தையே சம்பாதிக்கிறோம்.

ஆசையில்லாதவனுக்குத் துன்பமும் இல்லை. ஒருபொருளை அடைய ஆசையுறின் எத்தனையோ சங்கடங்களை அனுபவிக் கநேரிடுகிறது.

"அவாவில்லார்க்கில்லாகுந் துன்பமஃதுண்டேற்
றவாஅது மென்மேல்வரும்."

என்றது தெய்வப்புலமை திருவள்ளுவநாயனாரது வாக்கன்றோ.

ஆசை நம்மைக் கவலைக்குள்ளாக்குகிறது; சம்சாரசாகரத்தில் அழுந்தச்செய்கிறது. "அற்றது பற்றெனில் உற்றதுவீடு" என்பதையும் நோக்கற்பாலது. ஆசையைவிட்டால், உடனே மோட்சமடையலாகும். இல்லாவிடின், கோவணத்தைக்காப்பாற்றுதலிற் இச்சைகொண்ட சந்நியாசி, கிராமத்தை உண்டாக்கியது போலாகும்.

"கோவணமொன்றிச் சிப்பகூடின வேபந்தமெல்லாந்
தூவணஞ்சேர் மேனியாய்சோமேசா—மேவி
லியல்பாகுநோன் பிற்கொன்றின்மையுடைமை
மயலாகுமற்றும் பெயர்த்து."

ஆசையால் ஆசையென்பதையே, மனத்தினின்றுமொழிக்க வழிதேடல்வேண்டும். திருப்தியுடனிருப்பதே சிலாக்கியமாகும். நமக்கு இன்பத்தைப் பயக்கக்கூடியது திருப்தியே.

ஆகினும் சில விஷயங்களில்மட்டும், மனத்திருப்தி யேற்படாதிருப்பதே சிலாக்கியமாகும். கல்வி விஷயத்தில் நமக்கு திருப்தியிருத்தலேகூடாது.

—"தம்மினுங்
கற்றாரைநோக்கிக் கருத்தழிககற்றதெல்லா
மெற்றேயிவர்க்கு நாமென்று."

தம்மைக்காட்டிலும் கற்றவர்களைநோக்கி நாம் கற்றிருக்கும் கல்வி இவர் கல்விக்கு எம்மாத்திரம் என்றெண்ணி மேலும் மேலும் கற்றல்வேண்டும் நம்மைக்காட்டிலும் சிறந்த நன்னடக்கையுள்ளவர்களைக்கண்டு, நாமும் அவர்கள்போல் நன்னடக்கையுடையவர்களாக வேண்டுமென்ற அவாக்கொள்ளல்வேண்டும். ஆனல் அவர்களைக்கண்டு பொறாமை கொள்ளல்கூடாது. அது மனத்துயரையே விளைவிக்கும்.

"ஆசையெனும் பெருங்காற்றூடிலவம்பஞ்செனவு மனதலையுங்காலம்
மோசம்வருமிதனலே கற்றதுங் கேட்டதுந்தூர்ந்து முத்திக்கான

நேசமு நல்வாசமும்போய்ப் புலயினுற்கொடுமைபற்றி நிற்பரந்தோ
தேசுப்படமுத்தருள்பழுத்த பராபரமே நிராசையின்றெற்றெய்வமுண்
[டோ.''

''அஞ்சுவதொருமறனே யொருவனே
வஞ்சிப்ப தோருமவா.''

## 12. வேண்டுமென்றுல் வேரிலேயும் காய்க்கும், வேண்டாமென்றுல் கொப்பிலும் காய்க்காது.

இவ்வசனம் நமதுநாட்டில் நெடுநாட்களாயிருந்து வருகிறதுமல்லாது, எல்லோராலும் சிற்சில சமயங்களில் உபயோகப்படுத்தப்பட்டும்வருகிறது. இப்பழமொழியினுண்மை எச்சமயத்தும் சரியாகவிருக்குமென வெண்ணலியலாது. நமது வேண்டுகோளுக்கிணங்கி, நம்மைத் திருப்திசெய்ய அவாக்கொண்ட குருடனொருவன், தனதிருகண்களையுந் திறக்க விரும்பினுல், அவனுல் அப்படிச்செய்தலாகுமா? "அவன் அப்படிச்செய்ய முடியவில்லையே" என்றகாலத்து, "வேண்டுமானுல் வேரிலேயும் காய்க்கும். வேண்டாமென்றுல் கொப்பிலும்காய்க்காது. கண்களைத்திறந்துகாட்ட உனக்கு இஷ்டமில்லையென்று சொல்லிவிடேன். என் முடியவில்லை என்று சொல்லவேண்டும்" என்று நாம் அவனுக்குப்பதிலுரைத்தல் தகுதியாகுமா?

"நெப்போலியன்" என்ற போர்வீரன் "முடியாது" என்ற வார்த்தையையே அகராதியைவிட்டு நீக்கிவிடவேண்டுமென்று, ஒருகாலத்துத்தானிட்ட கட்டளையின்வண்ணம் நடக்கமுடியாதெனத்தெரிவித்த மற்றொரு போர்வீரனுக்குச் சொன்னுராம். இது எச்சமயத்தும் பொருந்தாது. ஆனுல், முடியாதென எண்ணும் சில காரியங்களை, பனேதிடத்தாலும், செய்துமுடிக்கவேண்டுமென்ற ஆசைகொள்வதாலும் செய்து முடிக்கலாகுமென்பதேயாம். கொஞ்சம் கஷ்டப்பட்டு முடிக்கவேண்டிய காரியங்களாயிருந்தால் கைகளைக்கட்டி உட்கார்ந்துகொண்டு "நம்மால்

முடியாது, இது அசாத்தியமான காரியம்'' என இவ்விதம் சிலர் சொல்லுகிறார்கள். அவர்கள், சோம்பலையொழித்து, காரியத்தைமுடிக்க வேண்டுமென்ற அவாவுடன் கொண்டு, கஷ்டப்பட்டுழைத்தால், சீக்கிரத்தில் அக்காரியத்தைச் செய்துமுடிக்கலாகும். இவர்களைக்குறித்து இவ்வசனத்தை உபயோகிக்கலாம். இப்படி இருந்தவிடத்து சும்மா அமர்ந்திருப்பவர்களைக்காட்டிலும், புத்தியிலும், தேகவலிமையிலும் குறைந்திருப்பவர்கள், மனோதிடத்தாலும், செய்துமுடிக்கவேண்டுமென்ற அவாவாலும், அக்காரியங்களைச் செய்துமுடிப்பதை நாம பார்க்கலாகும். ஏகலவன் கதையை யாருமறிந்திருக்கலாம். அவன் துரோணரிடம் சென்று அவரைத்தனக்கு குருவாயிருக்கவேண்டவே, அவர் முடியாதென மறுத்தார். உடனே இவ்வேகலவன் மனோதைரியத்தை கைவிடாது, தனது வீடுசென்று, துரோணரைப் போலுருவமொன்றமைத்து எதிரேவைத்துக்கொண்டு, அவரையே குருவாகமனதுனுள்ளும் பாவித்து சகல கலைகளையும் கற்கத்தொடங்கினான். கொஞ்சகாலத்துக்குள் கல்வியில் தேற்சிபெற்றான். துரோணரின் முக்கிய சிஷ்யனான அருச்சுனன்மட்டும், தெரிந்திருந்த யந்திரத்தை இவ்வேகலவன்கற்றான். துரோணர், மறுத்தவுடன் ''நமக்குக் கல்விவராது ; துரோணரோ குருவாயிருக்க சம்மதிக்கவில்லை'' என்று எண்ணி மனோதைரியத்தைக்கைவிட்டு, ஏக்கங்கொண்டு முயற்சிசெய்யாது ஏகலவன் இருந்திருப்பானேயாகில், ஒருபலனையும் மடைந்திருக்கமாட்டான். ஆகாததொன்றில்லை என எண்ணி முயற்சிசெய்ததினாலல்லவோ அவ்வளவு தூரம் சாஸ்திரப்பயிற்சி அவ்வேகலவன் அடையநேர்ந்தது.

மேலும், ''கீரீக்'' தேசத்திலிருந்த ''டிமாஸ்தனீஸ்'' என்பவரின் சரித்திரத்தையறியாதோர் ஒருவருமேயில்லையெனக் கூறல் தகும். இவரது பால்யபருவத்தில், இவர் திக்குவாயார்; இவர் குரலும் வலியையுடைத்தன்று, சுவல்ப தூரமட்டிலே கேட்கக்கூடிய குரலையே இவர் அடைந்திருந்தார். ஆகிலும், பெரிய கூட்டங்களிற்சென்று, பிரசங்கங்கள் புரியவேண்டுமென்ற ஆசை மட்டும், எப்போழ்தும் இவர் மனத்தை பிடித்துவந்தது. நம்ம

வர்கள், இதைக்கேட்கின் நகைப்போம். இவரோ, இடைவிடாதுமுயன்று திக்கிப்பேசுவதை நிவிர்த்தியாக்கிக்கொண்டதுமல்லாது, குரலையும் வலிமைப்படுத்திக்கொண்டார். சமுத்திரத் தருகேசென்று அலையொலியுடன் சப்தமிட்டும், மலையேறிக்கொண்டே கத்திக்கொண்டும், பயிற்சிசெய்து தமது குரலை வலிமைப் படுத்திக்கொண்டார். தமது வாயில்பரல் கற்களைப்போட்டுக் கொண்டு பேசியே, திக்கலைப் போக்கிக்கொண்டார்.

இச்செய்கையை முடியாதெனயாவரும் எண்ணக்கூடியதே. ஆகிலும் மனோதிடத்தாலும், ஆவலாலும் "டிமாஸ்தனீஸ்" செய்துமுடித்தார். இதுபோன்ற பலவிஷயங்களை, நமக்குமட்டும் ஆவல் இருக்குமேயாகில், செய்துமுடித்து விடலாகும். ஆனால், அவ்விதம் செய்துமுடிக்குங் காரியங்களுக்கு எல்லை இல்லாதுபோகவில்லை. நாம் இஷ்டப்படின், எல்லாக்காரியங்களையுமேசெய்து முடித்துவிடலாகாது. மேற்கூறப்பெற்றுள்ள "டிமாஸ்தனீஸே" "பிலிப்" அவர் தேசத்தின்மீது படையெடுத்தகாலத்து, தேசத்தைக்காப்பாற்ற எவ்வளவோமுயன்றும் பயனில்லாதுபோயிற்று. அப்பொழுது "அவர் வேண்டுமென்று முயற்சிசெய்யுவில்லை" எனச் சொல்லல்தகுமா?

பிறர், நம்மை ஏதாவதொரு காரியத்தைச்செய்து தரவேண்டினல், நாம் சோம்பலினல், முடியாதெனப் பலதடவைகளில் அவர்களுக்குச் சொல்லிவிடுகிறோம். அப்பொழுது அவர்கள் இப்பழமொழியை உபயோகிக்கலாகும். ஏனெனில், நமக்கு அவர்கள் மீதுபிரியமிருக்கும் பட்சத்தில், அக்காரியத்தை அவர்களுக்குச்செய்து தரவேண்டுமென்ற அவா, நம்மனத்துள் உதிக்காது போகாது. அப்படி உதிக்குங்காலத்து நாம் சோம்பலை ஒரு பொருட்டாய்எண்ணோம்; எவ்வித கஷ்டமிருப்பினும், இலட்சியம்செய்யாது, முயன்று அக்காரியத்தைமுடிப்போம். ஆகையால், அக்காரியத்தில் நாம் பிரவேசியாதகாரணம், சோம்பலும், வெறுப்புமே.

ஆகையால் இவ்வசனம், உண்மையேயாகினும், எச்சமயத்தும், தவராதிருக்குமியல்பினையுடைய தென்றெண்ணுதற்கிடனில்லை.

## 13. "பொருடனைப் போற்றிவாழ்"

ஆத்திச்சூடி.

---

திரவியத்தை வீண்சிலவுசெய்யாமல், காப்பாற்றி நீ வாழ்வாயாகவென இவ்வாக்கியம் பொருள்கொள்ளும்.

"வடுவிலாவையத்து மன்னியமூன்றில்
நடுவணதெய்த விருதலையுமெய்தும்
நடுவணதெய்தாதானெய்து முலைப்பெய்
தடுவது போலுந்துயர்."

"அருளிலார்க்கவ்வுலகமில்லை, பொருளில்லார்க்
கிவ்வுலகமில்லாகி யாங்கு"

இவ்வுலகின்கண், இன்பம், அறம் முதலியவைகள், அநுபவித்தற்குப்பொருளே முக்கிய காரணமாகும். முனிவர்கள், மன்னர்கள், நினைப்பவைகளெல்லாம் பொன்னான்முடியும். ஆனதுபற்றியே, நாமும், இவ்வுலகத்தில், பொருள்தன்னைக்காப்பாற்றி வாழவேண்டுவது ஆவசிகமாகும்.

பொருளுடையவர்களையே எல்லோரும் மதிக்கிறார்கள். ஒருவன் இழிகுலத்தோனாயினும், கல்லாதோனாயினும், பொருளுடையவனாயிருப்பின், அவன், எல்லோரிலும் அதிக நன்மதிப்படைகிறான். பொருளில்லாதவனிடத்தே தாம் கொள்ளக்கூடாமையிருத்தலன்றியும், அவருக்குத்தாம் கொடுக்கவேண்டுவதும் நேரிடுதலால், சுற்றத்தார்யாவரும் அவனைக்கைவிடுவார்கள். "பொருளில்லாதவன் எதற்குப்பிரயோஜனம்" என்று ஜனங்கள் அடிக்கடி சொல்லிக்கொள்வதையும் நாம் கேட்கலாகும்.

"கல்லானேயானாலுங் கைப்பொருளொன்றுண்டாயி
னெல்லாருஞ்சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளுமவேண்டாள் மற்றீன்றெடுத்ததாய்வேண்டாள்
செல்லாதவன் வாயிற்சொல்."

என ஔவையே கூறியுள்ளாள்.

பொருளில்லாதவனைப் பெற்றெடுத்த தாய்விரும்பாள், இல்லாள்வேண்டாள், மைந்தர் முதலாயினவரும் அவமதிப்பர். ஒரு நன்மையும் இல்லாதவராயினும், பொருளுடையவரை அவர் பகைவரும் நன்குமதிப்பர். செல்வமில்லாதவர் சிலாக்கியமான மொழிகளைச்சொன்னபோதிலும் சபைகளில் எடுபடாது. "ஏழை சொல் அம்பலமேறாது" என்னும் பழமொழியையும் நோக்கற்க. ஏழை எவ்வளவு கற்றறிந்தவனாயிருப்பினும் பயனில்லை. "பணமில்லாதவன் பிணம்" என்பது சாமான்யர்களது மொழியன்றோ? பொருளில்லார்க்கு இன்பமில்லை, கீர்த்தியில்லை, மனிதருள்ளே பெருமையும், உறவுமில்லை. நினைத்தது முடித்ததுமில்லை, உலகத்திலே அவர்கள் நடைப்பிணமாவர்.

"பொருளிலார்க்கின்பமில்லை புண்ணியமில்லை என்றும்
மருவியகீர்த்தியில்லை மைந்தரிற்பெருமையில்லை
கருதியகருமமில்லைக்கதி பெறவழியுமில்லை
பெருநிலந்தனிர்சஞ்சாரப் பிரேதமாய்த்திரிகுவாரே"

ஆகையால் பொருள்தன்னை இடையறா முயற்சியோடுவருந்தி சம்பாதித்துக்காப்பாற்றலே தகுதியாகும்.

மேலும், "பணம் பந்தியிலே, குலங்குப்பையிலே" என்று நம்மவர்கள் சொல்வதை நாம் கேட்டிருக்கலாம். பணமுடையவனே உயர்குலத்தவனாகிறான், அவனே அறிவுடையவனாகிறான், கல்விகேள்விகளிற் சிறந்தவனாகிறான். இதற்கு மாறாக, பொருளையீட்டலுந்துன்பம், ஈட்டியபொருளைக்காத்தல் துன்பம், அதைச் சிலவிடற்றுன்பம், அப்பொருள் நாசமுறிற்றுன்பம், இங்ஙனம்பொருள் பல துன்பங்களையும் பயக்கத்தக்கது, எனச்சிலர் சொல்லக்கூடும், ஆகினும் எல்லாவிதப்

பொலிவுக்கும் காரணம் பொருளெனக்கண்டோம். பொருளில்லாதவர், வறுமைத்துன்ப மொன்றினுன்மாத்திரம் வருந்துவதில்லை. அதுமூலமாக, பொருளுள்ளார் வீட்டுவாயிலை நோக்கிச் செல்லுதற்றுன்பம், அவரைக் காணுதற்றுன்பம், கண்டாலும் அவர்மறுத்த போதுதுன்பம், மறுக்காதவிடத்து அவர் கொடுத்ததை ஏற்றுக்கொள்ளல் துன்பம், அதனைக்கொண்டுவந்து வேண்டுமானவைகளைக் கூட்டுதற்றுன்பம் ஆகிய பல துன்பங்களாலும், அவர்கள் நாடோறும் வருந்துவார்கள்.

மேலும், அழியாப்பொருளாகிய கல்வியையும், அதற்கு சாதகமான புத்தகங்களைக்கொள்ளுதற்கும், கவலையின்றியிருந்து கல்விகற்றற்கும், கற்ற கல்வியை அழகுசெய்தற்கும் கருவியாயுள்ளது செல்வமே.

பொருளுக்கு, தானம், போகம், நாசம் எனமூவித நிலைகள் உள. தானம் தக்கோர்க்கீதல், போகம் உண்டுடுத்து, பூசிமுடித்தனுபவித்தல், நாசம், கள்வர்முதலியோர்களால் கவரப்படுதல் மூன்றுவது நிலையையடையவிடாது பொருளைக்காப்பாற்றுவதே நமது கடமையாகும். முற்கூறிய இருவகை நில்மைக்கும், பிரயோஜனமற்றதாக, பொருள் ஆகுமேல், அது மூன்றுவது நிலையையடையு மென்பதற்கையமேயில்லை. ஆகையால் பொருளை அறத்தின்பொருட்டு சிலவுசெய்தலும், அனுபவித்தலும் வேண்டும். இதுவே காப்பாற்றுமுறையாகும்.

"ஆற்றினளவறிந்தீக வதுபொருள்
போற்றி வழங்குநெறி"

எனத்தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனுர் கூறியிருத்தலை யாவரு மறிந்திருக்கலாம். பொருளை, அளவறிந்துகொடுக்கும் கொடையும், சற்பாத்திரத்திற் சிலவு செய்தலுமே காப்பாற்றியதாகும். எப்படி, சாணைபிடிட்ட மணி, உருவிற்குறையினும், ஒளியிற்மேம்பாடடைகிறதோ, அவ்விதமே அறத்தின்பொருட்டிட்ட பணம், ஒளியினையடையும். இவ்வித அறச்சிந்தையையே

மக்கள், கடைப்பிடித்தொழுகல்வேண்டும். இல்லாவிடின், அசரப் பொருள்களினும் அவர்கள் கடையாவர். அவ்வசரப்பொருள்களுள் ஒன்றேனும், மனிதருக்கு உபயோகமில்லாததில்லை. அறச்சிந்தையில்லா மாந்தரோ, ஒருவருக்குமே உபயோகப்படமாட்டார். ஆகையால் மானிடப்பிறவியின்பேறே, அறச்செய்கைகளாகும். ஈகையின் புகழேமக்கட் பிறப்பின்பலனாகும். வேண்டுமான பொருளையாவருக்கும் நல்கி, தன்உடலினின்று உயிர்நீங்குங் காலத்தில், "யாதுவேண்டும்" எனக்கேட்ட கிருஷ்ணபகவானுக்கு கர்னன் உரைத்ததுயாது?

"மல்லலைந்தொடையனிருபனை முனிவன்மகிழ்ந்து நீவேண்டியவர [ங்கள்
சொல்லுகவுனக்குத்தருது மென்றுரைப்பச்சூரன் மாவதலையுஞ்சொ [ல்வா
னல்லல் வெவ்வினையாலின்ன முற்பவமுண்டாயினுமே ழெழுபிறப்பு
மில்லை யென்றிரப் போர்க்கில்லை யென்றுரையாவித யநீயளித்தரு [ளென்றான்."

அவ்வாறிருக்கப்பொருளைப் போற்றி வைத்துக்கொண்டு அறஞ்செய்யாவிடின் என்னாம்? "பிச்சையிட்டுக் கெட்டாரும், பிள்ளைபெற்றுக் கெட்டாருமில்" என்பது உலக வழக்கன்றோ?

பொருளைச்சேமித்து வைத்தல் கேட்டைவிளைவிக்குமென அபிப்பிராயங்கொண்டு, பொருளைச்சேர்த்து வைத்தலே கூடாதெனப் பல்லோர் பகர்வர். கவிவாணரொருவர் "எங்குபணம் அதிகம் சேருகிறதோ, அங்குமனிதர்கள் நாசமுறுகிறார்கள்; மேலும் விவசாயஞ்செய்து ஜீவிப்பவர்களெல்லோரும் நாட்டைவிட்டு ஏகவும் நேரிடுகிறது" என இம்மாதிரி அபிப்பிராயங்கொள்ளுகிறார். விவசாயிகளைத்தான், தேசத்துள்ளோருக்கு ஆகாரமளிப்பவர்களாகக்கூறல் வேண்டும். அவர்கள் நாட்டைவிட்டு ஏகுவதென்றால், பணத்தைச்சேமித்து வைப்பது பிரயோஜனமற்றதாகும். ஆனால், விவசாயிகள் இது காரணமாக நாட்டைவிட்டு ஏகுவதாகத்தெரியக்காணோம்.

மேலும் பொருளைச் சேமித்தல், கெட்ட சிலவுகளையும், உபயோகமற்ற சிலவுகளையும் செய்யச்செய்து ஜனங்களை கெடுத்துவிடுவதாக சிலர் நினைக்கிறார்கள். உபயோகமற்ற சிலவு செய்தற்கும், உபயோகமுள்ள சிலவு செய்தற்கும் வேண்டுவது பணமே. ஆயினும் பகுத்தறிவுடன் கூடிய நாம், யோஜித்துச் செய்ய வேண்டிய வைகளை, பணத்தின்மீது ஏற்றினால் என்னபயனுடைத்தாகும். "ஆதனீயர்கள்" தங்களுக்குக் கிடைத்த பணத்தையெல்லாம் கோயிற் கட்டுவதிலும், சிறந்த கட்டடங்களமைப்பதிலும், ஜனங்கள் விருத்தியடைதற்குச் சாதனமானவழிகளிலும் சிலவழித்துப் பயன்பெற்றார்கள். "ரோமனியர்கள்" நல்லசாப்பாடு சாப்பிடுவதிலும், விளையாட்டுச் சண்டைகள் புரியச்செய்து வேடிக்கைபார்ப்பதிலும், இடாம்பீகச்சிலவுகளிலும் பணத்தைச்சில விட்டார்கள். பணத்தால் "ஆதனீயர்கள்" பயனையடைய வில்லையா? ஆகையால் பணம் பயனைவிளையாதுபோகவில்லை.

"பொருடனைப் போற்றிவாழ்" என்று சொல்லியிருத்தலால், பொருளைக்கடும் வட்டிக்குக்கொடுத்து விருத்திசெய்து காப்பாற்ற வேண்டுமென விபரீதருத்தம் பலர் கொள்ளுகிறார். அதுமுற்றிலும் பிசகேயாம். மலரின்கணுள்ளமதுவை, மலர்வாடாது எப்படிவண்டுகள் பருகுகிறதோ, அவ்விதம்பிறர்வருந்தாவண்ணம் அவர்களிடத்துப்பணங்கொள்ளலே தகுதியாகும். பொருள்சம்பாதிக்குமிடத்து, தருமநெறியாலே சம்பாதித்தல் வேண்டும். களவு, பொய்ச்சான்றுரைத்தல், பொய்வழக்குப் பேசல், பரிதானம்வாங்கல், முதலியபாவநெறிகளால் பொருள்சம்பாதிக்கலாகாது. பாவநெறியால்வந்த பொருள் இம்மையில் தீராதவசையை உண்டுபண்ணும்; சந்ததியை நாசமுறச்செய்யும்; இராஜதண்டனையை உண்டுபண்ணும்; சீக்கிரத்திலுமழிந்துபோகும். அநியாயத்திற்குடன்படாமலும், சத்தியந்தவறாமலும், சன்மார்க்கத்திலிருந்தும், பொருள் தேடி காப்பாற்றிமுயல்வதே மேன்மையாகும்.

மேலும் நமது வருவாயத்தனையுஞ் சிலவுசெய்யாது பிற்காலத்துக்காக கொஞ்சம் பொருளைச்சேர்த்து வைத்தல்வேண்டும்.

பின்னர்வரும் ஆபத்துக்களை நாமறியமுடியாது. அப்பொழுது பணமில்லாது வருந்துவதினும் இப்பொழுதே ஜாக்கிரதையுடனிருத்தல் நலமாகும். முதலிற் சிலவு சுருங்கினால் பொருள்ஒருகாலத்தும் நீங்காது. எவனுக்கு முதலிற்சிலவுமிகுமோ, அவன்வாழ்க்கை உள்ளதுபோலத்தோன்றிப் பின்னர் கெடும்.

ஆகையால் தருமத்துக்கும் இன்பத்துக்கும் துணைக்காரணம் செல்வம். அதனைக்காப்பாற்றி வாழ்வதே நமதுகடமைகளுளொன்றாகும்.

"நற்பொருளறத்தையின்ப நலத்தை ஞானத்தைமிக்க
பற்பலருறவை நட்பைப்பகைதவிர்த்தி டுந்திறத்தை
சொற்பெரும்புகழை யென்றுந் துகளிலாப் பெருமைதன்னைப்
பொற்பெருங் கதியையெல்லாம் பொருளலாற்றருவதின்றே"

"தரித்திரங்களிப்பாங் கடலுக்கோர்வடவை
சாற்று[illegible]மெண்ணங்கள் வாழிடமாம்
தரித்திரம் பற்பறக்க முந்தோன்றத்
தக்க பேராகாரமென்ப
தரித்திரநன்மை சாலொழுங் கென்னுந்
தழைவனந் தனக்கழ லெனலாந்
தரித்திரங்கொடிய வெவற்றினுங் கொடிதத்
தகையதை யொழித்தனன்றாமே"

## 14. ஏகாந்தத்தின் அருமைபெருமை.

"இனியது கேட்கிற்றனி நடுவேலோய்
இனிதுவினிது ஏகாந்தமினிது"

எனமூதாப்பிராட்டியாகிய ஔவைகூறியுள்ளாள். அவ்விதமிருந்தும் "ஏகாந்தத்தையே விரும்புகிறவன், மானிடர்களதுநிலைமைக்கு மேற்பட்டிருத்தல் வேண்டும் அல்லது கீழ்பட்டிருத்தல் வேண்டுமென பெரியவரொருவர் கூறியிருப்பதும் நோக்கற்பாலதே. மேலும் ஔவையே

"இனிதுவினிது ஏகாந்தமினிது
அதனினுமினிது ஆதியைத்தொழுதல்
அதனினுமினிது அறிவினர்ச்சேர்தல்
அதனினுமினிது அறிவுள்ளாரைக்
கனவினு நனவினுங் காண்பதுதானே"

என்றுகூறியுள்ளதையுங் காணுமிடத்து, ஏகாந்தமே எல்லாவற்றினும் சிலாக்கியமெனச்சொல்லாதிருத்தலும் புலப்படுகிறது. அறிவினர்களின் குழாத்தையடைவது அவ்வேகாந்தத்தினும் இனிதெனச்சொல்லியுள்ளாள்.

ஆகினும், "பெரியோர்கள்" எனச்சொல்லக் கூடியவர்களெல்லோரும் ஏகாந்தவாழ்க்கையையே சிலாகித்திருக்கின்றனர். ஏனெனில், உலகின்கண், எல்லோருமே நல்லவர்களாயிருப்பார் களென எதிர்பார்த்தலியலாது. நல்லோர் தீயோர் இருவர்களும் சேர்ந்தேயிருப்பார்கள். தீயோர்சேர்க்கையை அப்பெரியோர் விரும்பார்கள்; அவர்கள் செய்கைகளைக்காண அவர்கள் மனஞ்சகியார்கள். இவைகளைக்கண்ணுறு திருத்தற் பொருட்டே அவர்கள் ஏகாந்தத்தையே விரும்புகிறார்கள். தீயோர்கள் நடுவிலிருப்பதிலும் ஏகாந்தமினிது.

மேலும், நமது இரிஷிஸ்வரர்களும், தவசிகளும் ஏகாந்தவாழ்க்கையையே இனிது கொண்டாடிக்காடுகளிலிருந்தே, ஏகாக்கிர ஹசித்தத்துடன் கடவுகளை தியானித்தவண்ணமாயிருந்தும், கிரந்த ஆராய்ச்சிகளைச்செய்துகொண்டும் காலத்தைக்கடத்தியிருக்கின்றனர். ஆங்கிலக்கவிவாணராகிய "மில்டன்" உலகப்பொருள்களொன்றையும் பார்க்கமுடியாமலும், மனிதர்களது செய்கைகளைக்காணமுடியாமலும், கண்களிரண்டும் போனபின்னரே, பெரியகிரந்தங்களையியற்றினதாகக் கூறப்பெற்றுளது. "ஷெல்லி" என்பவர் தன்மனைவிக்கு பின்வருமாறு நிருபமெழுதியிருக்கிறதாகவும் அறிகிறோம்.

"ஜனசங்கத்தை விட்டொழிவதே எனக்குப் பேருவகையாகும், உன்னுடனும், குழந்தைகளுடனும், நிர்மானுஷ்யமான

தீவொன்றுக்குப் போகவிரும்புகிறேன்.'' இவ்விதமாகவே அநேக ஆங்கிலக்கவிவாணர்கள் கூறியுள்ளார்கள்.

மலை, காடுசெடிகள் நிறைந்திருக்குமிடத்தின் மத்தியிலிருந்து கவலையில்லாது பெரும்விஷயங்களைப்பற்றி சிந்திக்கலாகு மென்பதே, அவர்கள் கருத்தாமெனத்தோற்றுகிறது. அப்படி அவர்கள் சிந்தித்துக்கொண்டிருக்குங் காலத்து, தங்களைத்தொந்தரவு செய்ய மனிதர்கள் சமீபத்தில்லாமையும், அவர்கள் மனத்தைப் பேதிக்கத்தக்கதான விஷயங்கள் அங்கில்லாமையுமே காரணமாகும்.

மனது, எப்போழ்தும் சலித்துக்கொண்டிருக்கும் தன்மையையுடையதாகவிருக்கிறது. அதை அடக்கி ஆள்வதென்றால், மிக்க சிரமமான காரியமேயாகும்.

''சொல்லானதிற்சற்றும் வாராதபிள்ளையைத்
தொட்டில்வைத் தாட்டியாட்டித்
தொடையிணைக்கிள்ளல்போற் சங்கற்பமொன்றிற்
றொடுக்குந் தொடுத்தழிக்கும்

பொல்லாதவாதனை யெனுஞ்சப்தபூமியிடை—
போந்துதலை சுற்றியாடும்
புருஷனிலடங்காத பூவைபோற்றானே
புறம்போந்து சஞ்சரிக்குஞ்

கல்லோடிரும்புக்குமிக வன்மைகாட்டிடுங்
காணாது கேட்டவெல்லாங்
கண்டதாக்காட்டியே யணுவாய்ச்சுருக்கிடுங்
கபடநாடகசாலமோ

எல்லாமும் வலதிந்த மனமாயை யேழைடா
மென்னாலடக்க வசமோ
இகபரமிரண்டனிலு முயரினுக்குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே''

இவ்விதம்பெரியோர்களே முறையிட்டிருக்கின்றனர். ஆகை ஏகாந்தத்திலிருப்போமேயாகில் மனத்தைக்கவரக்கூடிய வஸ்து

க்கள் அதிகமிராதெனு எண்ணங்கொண்டே ஏகாந்தத்தைச்சிலர் சிலாகிக்கின்றனர்.

ஆகிலும், ஏகாந்தத்திலேயேயிருந்து வாசஞ்செய்வது, மனிதர்களுக்கு மனச்சலிப்பையுண்டாக்குவதுடன், தமதுதவிகொண்டு உலகத்தாரை உய்விக்கச்செய்தலுமியலாது. அறிவு வளர்ச்சிக்கு, ஏகாந்தத்தினும், ஜனசமூகமே நல்லயிடமாகிறது. ஜனசங்கமுள்ளவிடத்து, தம்மினும் மேம்பாடுகளுடன்கூடிய அறிவினர்களுடன்கூடி சம்பாஷித்துத் தன் அறிவை அபிவிர்த்தி செய்துகொள்ளலாகும். அறிவினர்களுடன்சேர்ந்து பழகாவிடின், புத்தி செப்பமுறுதெனவும், பல நாடுகளிற்சென்று, பல ஜாதியார்களுடன் பழகுகிறவர்களது அறிவு விருத்தியடைகிறதெ வும் மேலோர் கூறியிருக்கிறார்கள். ஐம்புலன்களேயும் பாவநெறியிற் செல்லவொட்டாது ஜனசங்கத்து நடுவண்ணிருந்து தடுப்பதே மேலான காரியமுமாகும்; சிலாக்கியமுமாகும். மேலும் மேற்கூறப்பெற்றுள்ள "ஷேல்லி" ஜனசங்கத்தை விட்டொழித்து ஏகாந்த இடத்தை நாடிச்செல்லவேண்டுமென்ற இச்சைகொண்ட காலத்தும், தன் மனைவி மக்களுடன்போக விரும்புகிறார். "கேளபர்" என்னும் ஆங்கிலக்கவிவாணர் தாம் செய்த செய்யுளொன்றில், "இரிஷீஸ்வரர்களெல்லாம், கண்டதாகச்சொல்லுகிற சிலாக்கியதைகளெல்லாம் நான், ஏ! ஏகாந்தமே!! உன்னிடத்தில் காணமுடியவில்லையே" என்று நிர்மானுஷ்யமான தீவிலிருக்க நேரிட்ட "அலக்ஸாந்தர்" சொன்னதுபோல் சொல்லியிருக்கிறார்.

ஆகையால், ஏகாந்தம் எப்பொழுதுமே, மனிதருக்கு இன்பம் பயவாது. மனச்சஞ்சலமடையுங்காலமாகிய சில சமயங்களிலும், ஏதேனும் பெரிதொரு விஷயத்தைப்பற்றிச் சிந்திக்குங் காலத்தும், வேறு சில வேளைகளில்மட்டுமே ஏகாந்தம் இன்பத்தைத் தரத்தக்கது. மேலும் ஏகாந்தத்திலேயே வாசஞ்செய்வது சாதாரண மனிதர்களது அறிவை அபிவிருத்திசெய்யாது; நடத்தையை சீர்பெறச்செய்யாது; மனத்துக்கும், இன்பத்தையளிக்காது.

## 15. "ஙப்போல்வளை"

மூதாப் பிராட்டியாராகிய ஔவை இயற்றிய "ஆத்திச்சூடி" வசனங்களுள் இதுவொன்றாகும் 'ங' எழுத்தைப்போல், நீயும் உன்னினத்தைத் தழுவுவாயாக என இவ்வசனம் பொருள் கொள்ளும்.

நமது தமிழ்பாஷையில் 'ங' 'ங்' இவ்விரண்டுமே வார்த்தைகளில் உபயோகப்படுவதின்றி, 'ங'கரயினம் வேறொன்றும் உபயோகத்திலிருப்பதாகத் தெரியவில்லை. அப்படியிருந்தும் தமிழ் அரிச்சுவடியில் "ஙா" "ஙி" "ஙீ" முதலான எழுத்துக்கள் எல்லாவற்றையும், மற்றவர்க்கங்களுளிருப்பதுபோல, 'ங' கர வர்க்கத்திலும்சேர்க்கப்பட்டுள்ளதை நாம் பார்க்கலாகும். இவை 'ங' காத்தின்பொருட்டே, அரிச்சுவடியில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்விதம் 'ங' கரமானது, பிரயோஜனமில்லாத தன்னினத்தார்களையும் தழுவிக்கொண்டிருக்கிறதோ, அவ்விதம் நீயும், பிரயோஜனமில்லாத உன் சுற்றத்தார்களையும் தழுவிக்காப்பாற்ற வேண்டுமென வாக்கியம் பொருள்கொள்ளும்.

ஈஸ்வரசிருஷ்டியில், ஜீவராசிகளுள்பல, தன்னினத்தார்களுடன் வாழ்வதை நாம் பார்க்கலாகும். எறும்புகள் கூட்டங்கூட்டமாய் வசிப்பதையும், தேனீக்கள்கூட்டமாயிருந்து, தங்களினத்துக்குள்ளொன்றை அரசனாகத்தேர்ந்தெடுத்து, அத்தேனீக்கு வேண்டுமான மரியாதைகளைச்செய்தும், காலங்கழிக்கிறதை நாம் பார்க்கலாகும். யானைகள் கூட்டங்கூட்டமாய் வனத்துள் உலாவுவதாகவும், ஒருயானைக்கு ஆபத்து வந்தகாலத்து, மற்றயானைகள் அந்த யானைக்கு உதவிசெய்ய முயல்வதாகவும் நாம் கூறக்கேட்டிருக்கிறோம். மேலும் நாம் போஜனமருந்துமுன் கொஞ்சம் அன்னத்தைவெளியே கொண்டுபோய்ப்போட, காக்கைகள்கூவி தன்னினத்தார்களை அழைத்துக்கொண்டு, அவ்வன்னத்தை உண்ணவருகின்றன.

"காக்கைகரவாகரைந் துண்ணுமாக்கமு
மன்ன நீரார்க்கேயுள"

இரைகிடைக்கும் விஷயத்தில் காக்கை தன்னினத்தாரை யழைத்துண்ணும். அவ்விதமான செய்கை நல்லினத்தார்க்குள் உளவாமெனக்கூறப்பெற்றுளது. மேலும் ஜல இராசிகளில் நகம் கூட்டங்கூட்டமாய் வாழ்கின்றன. "மனிதனும் கூட்டத்துடன் வாழ்பவனே" என ஒருபெரியவர் கூறியுள்ளார். அவ்விதமிருந்தும் நமது சுற்றத்தார்களை நாம் ஆதரிக்காவிடின் என்ன பிரயோஜன மாகும்? "ஆபத்துவந்தகாலத்து தமது நட்பினர்களுக்கும், சுற் றத்தார்களுக்கும் உதவிபுரிய விருப்பில்லாதிருப்பவன் "மனிதனே யல்லன்" என ஒருவர் கூறியுள்ளதையும் நோக்குக. அப்படிச் செய்யாவிடின் நாம் பிறந்ததாலாகிய பயன்தானென்ன? எவருக் கும் உபகாரம் புரியத்தயாராகவிருப்பதே மேலான தர்மமாகும். பரோபகாரமே உத்தமற்கு இயற்கை. தமது காரியத்தை விட் டேனும் சுற்றத்தார்களுக்கும் நட்பினர்களுக்கும் உதவிபுரிபவர் களே உத்தமராவர். இவ்விதமிருக்க பொருளையுந்தேடிவைத்து க்கொண்டு தானுமனுபவியாமல் பிறரையும் ஹிம்சித்துக்கொண்டி ருப்பவர்களை என்னென்றுரைப்பது? அவர்கள் இவ்வுலகின் கண் பிறந்தும் பிறவாதவர்களே.

"தோன்றிற்புகழொடு தோன்றுகவஃதிலார்
தோன்றலிற் றோன்மைநன்று

எனத்தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் கூறியவாறு புக ழின்றிப்பிறந்தும் பயனில்லை. இடர்ப்பட்டார்மாட்டு அருளுடை யராதல் வேண்டும். அவ்வருளில்வழி அகத்தூய்மை நம்மிடத்து யில்லையெனவே நாம்சொல்லப்படுவோம்.

"மெய்ப்பயன் கொண்டார்
சுளியார் சுமைபோடுதற்கு"

என்றவாறு பிறர்க்குதவி புரிதலையே பேறெனக் கொண் டோர், தமதுடலையும் ஒருபொருட்டாக மதியார். ததீசிமுனிவர் தமது முதுகெலும்பை வச்சிராயுதம் பண்ணிக்கொள்ள தேவர்க ளுக்குக் கொடுத்து தமதுயிரைமாய்த்துக் கொள்ளவில்லையா?

இவ்விதம் பிறருக்குதவிபுரிவதே நமதுகடமையாயிருக்க, நமது சுற்றத் தவர்களைக் காப்பாற்றுதிருப்பது மேன்மையாகுமா? மேற்கூறிய வண்ணம், கேவலம் பட்சிஜாதியாகிய காகங்களுக்குள்ளே, பந்துப்பிரிய மிருக்கும்பொழுது, மனிதர்களுக்கு எத்தனையோமடங்கு அதிகமிருத்தல் வேண்டாமா? மெலிந்துபோன நமது பந்துக்களைக்காப்பதே மேலான தர்மமாகும். "கிளையாருட்கழிந்தாரெடுக்க" எனவும் கூறப்பெற்றுளதல்லவா?

நாமடைந்திருக்கும் செல்வத்தினாலாகிய பயன்தான் என்னை? நாமுண்டுடுத்து மீந்ததையாவது நமது சுற்றத்தார் பொருட்டுபயோகிக்கலாகாதா? நமது சுற்றத்தார்களெல்லோருமே நல்ல ஸ்திதியிலிரார்கள். கூன், குருடு, செவிடு, தீராவியாதியுடையவர்கள், தரித்திரம் இவைகளில் ஏதேனுமொன்றை அடைந்து சிலர் இருப்பார்கள். இவர்களைத்திண்டாடிப் பரிதபிக்கும்வண்ணம் தெருவில்விட்டு, தாமட்டும் சுகித்திருத்தல்தகுமா? தெய்வத்துக்குத்தான் அது சம்மதமாகுமோ? பிணியாதி பலதீமைகளும், மனக்கிலேசமும், பிறரால் அவதூறும், சம்பவிக்காது, கண்ணை, யிமைகாப்பதுபோல சுற்றத்தார்களைக்காப்பதே, நமது கடமையாகும்.

"செல்வத்தைப்பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும்வாடாமற் பாத்துண்டு—நல்லன
தானமறவாத்தன்மை யரேலஃதென்பர்
வானகத் துவைப்பதோர்வைப்பு."

செல்வத்தைப்பெற்றவர்கள், கோபமில்லா மனத்துடையவர்களாய், தங்களுக்குக்கிடைத்த பொருளை, சுற்றத்தவர்களுக்கும் கொடுத்து, தானுமுண்டு, நன்மையைத்தருவதாகியப் பலதான தருமங்களையும் மறவாமல் நடத்திவருந்தன்மையு முடையவர்களாயிருப்பார்களாகில், அப்புண்ணியமே, அவர்களுக்கு மேலுலகில் தேடிவைக்கும் பொருளாகும். "செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்" என நாம் அறியாததா? ஆகையால், நமது சுற்றத்தார்கள் உபயோகமில்லாதவர்களாயிருப்பினும், அவர்களைக்காப்பது நமது கடமையெனக்கொண்டு, அவர்களையும் தழுவி

வாழ்தலே மேலான தர்மமாகும். அவர்களாலும் ஒருசமயத்து நமக்கு உபகாரமேற்படினும் ஏற்படலாகும். "மனிதன்கூட்டத்துடன் வாழ்பவ" னாதலால் எல்லோருடைய உதவியுமே மனிதன் எதிர்பார்க்க வேண்டியவனாயிருக்கிறான்.

சுற்றத்தார் சுற்றப்படவொழுகல் செல்வந்தான்
பெற்றதால் பெற்றபயன்."

## 16. ஸ்தலசுய ஆட்சி.

இவ்விந்து தேசத்துத்துரைத்தனமுறை, அநேகமாய் இராஜாங்கத்து உத்தியோகஸ்தர்களாலேயே நடத்தப்பட்டுவருகின்றதாயினும், சிற்சில இடங்களில், அவ்வவ்விடத்து ஜனங்களே அவரவர்கள் சௌகரியத்திற்கும், நன்மைக்கும், ஏற்றவாறான சில விஷயங்களைப்பற்றிக் கவனித்துச்செய்யக்கூடிய ஒருவித இராஜாங்க சுதந்திரத்தைப்பெற்றிருப்பதற்கு, "ஸ்தலசுய ஆட்சி" என்று பெயர். இவ்வித அரசாங்க சுதந்திரத்தைப்பெற்றிருக்கும் இடங்கள் 'யூனியன்' 'முனிசிபாலிட்டி' 'லோக்கல்போர்டு' எனப்பல பெயர்கொள்ளும்,

துரைத்தனத்தாரால் பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தின்வண்ணம்' யூனியன்' என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற யாதொரு கிராமம் அல்லது கிராமங்கள் யூனியன் எனப்பொருள்கொள்ளும். இவ் 'யூனியன்'மேஜர் (பெரியது) மைனர் (சிறியது) என இருவகுப்பாகும். 5000 க்கு அதிகப்பட்ட, குடித்தொகையுடைய பிரதி 'யூனியனும்' மேஜர் யூனியனாகும்; இதரப்பிரதி' யூனியனும்' மைனர் யூனியனாகும். ஒவ்வொரு கிராமத்திலுள்ள 'யூனியன் பஞ்சாயத்துக்கும்,குறைந்தது ஐந்து மெம்பர்களி (அங்கத்தவர்கள்) ருக்கவேண்டும். 'யூனியனிலடங்கிய' பிரதிகிராமத்தின் பெரிதனக்காரர் உத்தியோக முறைமையில் பஞ்சாயத்தைச்சேர்ந்த மெம்பரா

வர். 'யூனியன்' மெம்பர்களெல்லாம் 'தாலூகாபோர்டு பிரசிடெண்டு' சிபார்சையின்மேல் இராஜாங்கத்தாரால் நியமிக்கப்படுகிறார்கள். அந்தப்பஞ்சாயத்துக்கு 'பிரசிடெண்டும்' இராஜாங்கத்தாராலேயே நியமிக்கப்படுகிறார். நியமனமான தேதிமுதல், ஒவ்வொருவரும் மூன்றுவருஷம் வேலைபாக்கலாம். 'யூனியன்களுக்கு' முக்கிய வருமானம் வீட்டுவரியே. ஒவ்வொரு யூனியனும், அதனதின் எல்லையிலுள்ள ஜனங்களின் நன்மைக்காக, 'தாலூகாபோர்டு' உத்திரவின்மீது, அவர்களுக்குக்கிடைக்கலான பணத்தைச் சிலவழிக்கவேண்டும். 'யூனியன்' பணம், தெருக்களைக் கூட்டி சுத்திசெய்வதிலும், பாதைகளைச் செப்பனிடுவதிலும், இராக்காலங்களில், இரஸ்தாக்களில் விளக்குப்போடுவதிலும் அநேகமாய்ச் சிலவு செய்யப்படுகின்றது.

'தாலூகாபோர்டு', 'டிஸ்டிரிகட்போர்டு' இவைகளைச் சாதாரணமாய் 'லோக்கல்போர்டு' என்று சொல்வதுவழக்கம். ஒவ்வொரு தாலூகாவுக்கும் 'தாலூகாபோர்டு' என்ற சங்கமொன்றுண்டு. இச்சங்கத்திற்குபதிமூன்றுமுதல் இருபத்திநான்குவரை மெபர்களிருப்பார்கள். இவர்களனைவரும், இராஜாங்கத்தாராலேயே முன் நியமிக்கப்பட்டுவந்தார்கள். மூன்றில் ஒருபங்கு, பட்டாதார்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்ற ஏற்பாடு இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது. அந்தந்தப் பிரிவிலிருக்கும் (டிவிஷன்) 'தாலூகாபோர்டுக்கு' அந்தந்த 'டிவிஷனல் ஆபீஸர்களே 'பிரசிடெண்ட்' ஆவார். தங்கள் அதிகாரவரம்பிற்குட்பட்ட எல்லையிலுள்ள 'யூனியன் பஞ்சாயத்து' வேலைகளை மேல்பார்ப்பதோடு 'யூனியன் பஞ்சாயத்து' இல்லாத கிராமங்களிலும் ஜனங்களுக்கு அத்தியாவசியமாயுள்ள சௌகரியங்களைச் செய்துகொடுப்பதே இச்சங்கத்தாரின் வேலையாகும். 'தாலூகாபோர்டுக்கு' மேல் ஒவ்வொரு ஜில்லாவும் 'டிஸ்டிரிக்ட்போர்டு' என்ற சங்கத்தைக்கொண்டிருக்கிறது. இச்சபைக்கு இருபத்திநாலு அங்கத்தவர்களு (மெம்பர்கள்) க்குக்குறையாமல் இருத்தல்வேண்டும். இம்மெம்பர்களில் சிலர் இராஜாங்கத்தாராலும், சிலர் 'தாலூகாபோர்டு' மெம்பர்களாலும் நியமிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு 'டிஸ்டிரி

க்ட்போர்டு' க்கும், அந்தந்தஜில்லா கலெக்ட்டரே 'பிரசிடெண்டு' ஆவார். இந்த 'போர்டாரின்' வேலை 'தாலூகாபோர்டின்' வேலையைச்சரிபார்த்து ஒழுங்கபடுத்தவேண்டுவதே.

நிலங்களின் வருஷாந்ததீர்வை மதிப்பின்மீது, பிரதி ஜில்லாவுக்கும், இவ்வளவென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிற நிலவரி, சாதாரணமாய், 'யூனியன் பஞ்சாயத்தாரால்' கொடுக்கப்படும் வீட்டுவரி, மார்க்கட்டுகளையும் (சந்தைகளையும்), மீன்பிடிக்கும் துறைகளையும் குத்தகைக்குவிடுவதால் வசூலாகுப்பணம், ஆறுகளில் படகுவிடுவதிலிருந்து வசூலாகும குத்தகைப்பணம், சுங்கச்சாவடிகளைக் குத்தகைக்குவிடுவதால் வசூலாகும்பணம் ஆகிய இவைகளே 'லோக்கல்போர்டின' வருமானமாகும். இவ்வருமானத்துக்கெல்லாம், மொததமாய் 'லோக்கல்பண்டு' என்று, பெயர். இந்தப்பணமானது ஒருகிராமம் அல்லது கிராமங்களில் தாலூகா அல்லது தாலூகாக்களில் வசூலிக்கப்பட்டு, அவ்விடங்களிலுள்ள ஜனங்களின் சௌகரியத்தின்பொருட்டு சிலவழிக்கப்படுகிறது.

புதியபாதைகளை ஏற்படுத்துவது, பழையபாதைகளைச் செப்பனிடுவது, ஆறுகள் கால்வாய்கள் இவைகளுக்கு வாராவதி அமைப்பது, குடித்தனக்காரர்களுக்கு நல்லதண்ணீர் கிடைக்கச்செய்வது, ஜனங்களின் வித்தியாபிவிருத்தியின்பொருட்டு ஆங்காங்கு பற்பலவிடங்களில் பாடசாலைகளை ஏற்படுத்துவது, தர்ம வைத்தியசாலைகள் ஏற்படுத்துவது, இனமாக அம்மைகுத்த ஏற்பாடுசெய்வது ஆகிய இவைபோன்றவைகளுக்குச் சிலவுசெய்வதே 'லோகல்போர்டின்' சிலவாகும்.

நாட்டுப்புறங்களில் 'யூனியன் பஞ்சாயத்து' லோகல்போர்டுகள்' ஏற்பட்டிருப்பதுபோல் பெரிய பட்டணங்களில் 'முனிசிபாலட்டி' என்ற சங்கம் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முனிசிபல்கௌன்சிலுக்கும், பன்னிரண்டுக்குக்குறையாமலும், இருபத்திநாலுக்கு மேற்படாமலும் மெம்பர்களுண்டு. இதில் பாதிக்குமேல் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். முனிசிபல்

சேர்மன் சிலவிடங்களில் கவர்ன்மெண்டாராலும் சிலவிடங்களில் கௌன்சிலர்களாலேயும் நியமிககப்படுகிறார்கள்.

முனிசிபல் எல்லைக்குள், ஜனங்கள் செய்யும், சகலவிதத் தொழில், வியாபாரம், உத்தியோகம் இவைகளுக்கு ஏற்பட்ட வரி, கட்டிடங்கள், நிலங்கள் அல்லது இவ்விரண்டிற்கும் ஏற்பட்ட வரி, தண்ணீர்வரி, சாக்கடைவரி, வண்டி, பல்லக்கு, மற்றுமுள்ள வாகனாதிகள்மீது ஏற்பட்டவரி முனிசிபல் எல்லைக்குள் நுழைகிறவண்டி பல்லக்கு மற்றுமுள்ள வாகனாதிகள் மீது ஏற்பட்ட சுங்கம் இன்னும் பலவகைத்தான வரிகளுமே, முனிசிபாலிடியின் வருமானமாகும்.

'முனிசிபாலிடியின்' பணமுழுவதும், சமீபத்திலிருக்கப் பட்ட பொக்கிஷத்தில் போட்டுவைத்தல்வேண்டும். பணம் வேண்டும்பொழுது, 'முனிசிபல் சேர்மன்' கையெழுத்து அல்லது 'சேர்மனால்' அதிகாரம்பெற்ற இரண்டு 'கவுன்சிலர்களின்' கையெழுத்துயில்லாமல் பொக்கிஷத்திலிருந்து பணம்பெறமுடியாது.

'முனிசிபல்' எல்லைக்குள்வசிக்கிற எல்லா ஜனங்களுக்கும் இனமாக அம்மைகுத்த ஏற்பாடுசெய்வது, ஜனங்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்கச்செய்வது, தெருக்களைக்கூட்டி சுத்திசெய்வது, இரஸ்தாக்களைச் செப்பனிட்டு, இராக்காலங்களில் விளக்குப் போடுவது, அந்தந்த தெருக்களின் பெயரை, பலகையில் தெளிவாயெழுதி சகலருக்கும் தெரியும்படியான இடத்தில் மாட்டிவைப்பது, வாடகை வண்டிகள் நிற்கஇடங்களை ஏற்படுத்துவது, கசாப்கடைகள் இருக்க இடமேற்பாடுசெய்வது, பப்ளிக்மார்க்கெட்டுகள் ஏற்பாடுசெய்வது, சாக்கடைகளைச் செம்மையாகக்கட்டி சீர்திருத்துவது, சுகாதாரமானவிஷயங்களொவ்வொன்றையும்பற்றி கவனிப்பது, தர்மவைத்தியசாலைகள் ஏற்படுத்துவது, பிரேதங்களைப் புதைக்கவோ அல்லது எரிக்கவோ அவைகளுக்குவேண்டியபடி இடங்களை ஏற்படுத்துவது, ஜனனமரணக்கணக்குகளைப் பதிவுசெய்ய ஏற்பாடுசெய்வது, வித்தியாபிவிருத்தியின்பொருட்டு பாடசாலைகளை ஸ்தாபிப்

பது, இவைகள் போன்றவைகளுக்கெல்லாம் செலவழிப்பதே முனிசிபாலிடியின்' செலவாகும்.

புதிதாய் வரிகள் ஏற்படுத்தவும், பழைய வரிகளைப்புதிப்பிக்கவும் அரசாங்கத்தார் உத்திரவுவேண்டும்.

முதல் முதல் 'முனிசிபாலிடிகள்' 'லோக்கல்போர்டுகள் இவைகளெல்லாம் இராஜாங்கத்தார்வசமே ஒப்புவிக்கப்பட்டிருந்தன. பிற்பாடு காருண்யமுள்ள நமது கெவர்ன்மெண்டார் நாம் இராஜாங்கப்பயிற்சி பெறவேண்டுமென்ற விருப்பத்தால் நம்சௌத்திலேயே இந்தஸ்தல சம்ரட்சணைகளை விட்டுவிடவேண்டுமென உத்தேசித்தார்கள். இந்தியஜனங்களின் நன்மையை வெகு கருத்துடன்நாடின கவர்னர்ஜெனரலான 'லார்டுரிப்பன்' துரையவர்கள் இருபத்தாறு வருஷத்துக்குமுன் இந்த இரகசியத்தை அறிந்து ஸ்தல ஸ்தாபனங்கள் அரசாங்க அதிகாரிகள் வசமில்லாமல், ஜனங்களாலேயே நிர்வகிக்கப்படவேண்டுமென்று, 'முனிசிபாலிடிகளையும்' 'லோக்கல்போர்டுகளையும்' ஜனப்பிரதி நிதிகள்வசம் ஒப்புவித்தார். ஐரோப்பிய நூலாசிரியர்கள், இந்த ஸ்தல ஸ்தாபனங்களை, இராஜாங்கசுதந்திரம் கற்றுக்கொடுக்கும் மூலாதாரப் பள்ளிக்கூடமென்று கூறுகிறார்கள். நாம் இந்த ஸ்தலஸ்தாபனங்களை நிர்வகிக்கும்விஷயத்தில் எவ்வளவுக்கெவ்வளவு பயிற்சியும், தேற்சியும் அடைகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நமது அரசாங்கச்சுதந்திரங்கள் விசாலப்படுத்தப்படுமென்பதற்குச் சற்றேனுமையமில்லை.

---

## 17. கல்வி.

---

இவ்வுலகின்கண் மானுடராய்ப்பிறந்தோர் தேடற்பாலனவாகிய கல்விப்பொருள், செல்வப்பொருள் இவ்விரண்டினுள் கல்விப்பொருளாலேயே நாம் உண்மையான ஆனந்தத்தை அடையலாமேயன்றி செல்வப்பொருளான் அடைதலரிது, பங்காளிகள், கள்வர், வலியவர் முதலிய இவர்களால் செல்வப்பொருள் அபகரி

க்கப்படும். கல்விப்பொருள் அவ்வாறாகாது கற்ரேரால் உபகரிக்கப்படும். செல்வப்பொருள் அக்கினியாலாயினும் வெள்ளத்தாலாயினும் அழிவுறும். கல்விப்பொருளோ அவ்வாறன்றிக்கற்ரேர் தம்முள்ளத்துக்குடிபெரும். செல்வப்பொருள் பிறருக்குக்கொடுக்கக்கொடுக்கக்குறையும்; கல்விப்பொருளோ கொடுக்கக்கொடுக்க நிறைவுறும். செல்வம் துன்பத்தையே கொடுக்கும்; கல்வியோ சொற்சுவை, பொருட்சுவை முதலியவைகளை அனுபவித்தலானும் புகழைப் பெறுதலானும் இன்பத்தையே நமக்கு விளைவிக்கும் பலவாறு சொல்லியென்? கல்வி எதனைத்தான் பயவாது? ஆதலின் செல்வப் பொருளினும் கல்விப்பொருளே சிலாக்கியமுடையது.

இவ்விதப்பெருமைவாய்ந்த கல்விப்பொருளை சற்குரு மூலமாகவும், பெரியோர்கள் கிருபையாலும் கிரந்த வாராய்ச்சிமூலமாகவும் அற்பப்பொருள்களையும் நன்கு கவனிப்பதாலும் நாமடையலாகும். சற்குரு கடாட்சமும், பெரியோர்கள் சல்லாபமும், எக்காலத்தும் எவ்விடத்தும் கிடைப்பதரிதாயினும் கிடைக்கின் விசேஷமென்பதற்கையமேயில்லை. ஆகையால் வருந்தியே நாம் அவர்கள் கடாட்சத்தையும் சேர்க்கையையும் பெறமுயலவேண்டும். குருமுகத்தாலே அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்களும் பெரியோரிடமிருந்து தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களும் பலவுள. அப்படி அவர்களைத்தேடிக்கற்கும் கல்வி நமக்குக்கண்ணாகும், மெய்ப்பொருள் விளக்குமோர் கருவியுமாகும், மனச்சோர்வுக்குற்றதோர் துணையுமாகும், அறிவு அபிவிருத்திக்கோர் சாதனமுமாகும். ஆகையால் இக்கல்வியறிவை அடையத்தொடங்குங்காலத்து துன்புறினும், பிற்காலத்து நீண்ட இன்பத்தையே நாம் அனுபவிக்கிறேம்.

இனிக்கிரந்த ஆராய்ச்சியைப்பற்றி நோக்குவாம். அவற்றை நாம் உபயோகிப்பதற்கு தக்கவண்ணம் அவை நமக்கு பயனைத்தருகின்றன, நமக்கு அறிவுண்டாக்க எச்சமயமென்ருலும் சித்தமாயிருக்கின்றன. "தடி, தண்டம் இவைகள் உதவியில்லாது கற்பிக்கக்கூடியவைகளும், காசு, பணம் விரும்பாது சொல்லித்த

ரக்கூடியவைகளும் கிரந்தங்களே; ஒன்றையும் ஒளியாது சொல்லிக்கொடுக்கக்கூடியது புஸ்தகங்களே; தவறினால் கோபியாது, திட்டாது, நாம் அறிந்துக்கொள்ளாவிடின் கேலிசெய்யமாட்டாது." ஆகையால் தற்பயிற்சியால் அறிவை அபிவிருத்திசெய்து கொள்வதற்கு, நூல்களைப்போல் வேறு சுலபமான சாதனங்கள் கிடையா. இதுகாரணங்கொண்டே நமது பெரியோர்கள் கிரந்தங்களைச் சேர்த்துவைப்பதில் பெருங்கவலை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பொருளையும், நாம் நன்கு கவனித்துப்பார்ப்பதால் நமது அறிவு வளர்ச்சிபெறக்கூடும். "இயற்கைப்பொருள்களே பெரும் புத்தகமாம்" எனப்பெரியவரொருவர் வரைந்திருப்பது நாமறியாததல்ல, "நீயூட்டன்" புகழ்பெற்றதும், "ஜேம்ஸ்வாட்சன்" பரோபகாரத்துக்குக்காரணபூதரானதும், அற்ப விஷயங்களையும் நன்கு கவனித்ததாலன்றோ? ஈஸ்வர சிருஷ்டியில் அற்பமென்று உபேட்சைசெய்யக்கூடிய பொருள் எதுவுமேயில்லை. நாம் காணக்கூடிய பொருளாகட்டும், கேட்கக்கூடிய பொருளாகட்டும், எந்தப்பொருளாயினும், அவற்றின் காரிய காரணங்களையும் சுபாவத்தையும் அறிந்துகொள்வது அறிவு அபிவிருத்திக்குக் காரணமாகும.

இதுகாறும், கற்றற்குறிய சாதனங்களைப்பற்றி ஒருவாறு நாம் கவனித்துவந்தோம்; இனி கற்றல்முறையை ,நாம் ஆராய்வோம் ஐயம், திரிபு அற நாம் கல்விகற்றல்வேண்டும். ஒரு பொருளில் துணிவில்லாது, இதுவோ, அதுவோ, எனச்சந்தேகங்கொள்ளல் ஐயமாகும். ஒன்றை மற்றொன்றாகத்துணிதலே விபரீதமாகும். மேலும் கல்வியிற்தேர்ச்சிபெற நாம் விரும்பின் இடையறாது கற்றல்வேண்டும். நாடோறும் சோர்வில்லாது சிறிதாயினும், கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவராவர். "ஓதாமலொருநாளுமிருக்கவேண்டாம்" என்ற உலகநீதியை நாம் இங்கு கவனிக்கத்தக்கதே. தாம் அதிசமர்த்தரென விபரீத எண்ணங்கொண்டு சிற்சில வேளைகளில் மாத்திரம் கற்கின்றவர் அதிகத்தேர்ச்சிபெறுவதரிது.

"தொட்டனைத்தூறுமணர்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்தூறுமறிவு"

தோண்டத்தோண்ட மணர்கேணியில், தண்ணீர் ஊறுவது, போல் படிக்கப்படிக்க அறிவு அபிவிருத்தியாகும். ஆகையால் கல்விபை மென்மேலும் கற்றதே தகுதியாகும்.

தாம் படித்தவைகளை நாடோறும் போற்றல்வேண்டும். அப்படிப்போற்ருது மேலும், மேலும் கற்கத்தொடங்கல், தம்மிடத்துள்ள பொருளைப்படுகுழியிலிட்டு வேறுபொருளை தேடிக்கொண்டிருத்தல்போலாகும்.

"வருந்தித் தாங்கற்றனவோம் பாதுமற்றும்
பரிந்துசில கற்பான்ருெடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட்டரிபரிந்தாங்
கெய்த்துப் பொருள் செய்திடல்."

ஆகையால் கற்றுக்கேட்டப் பொருள்களைச்சிந்தித்தலும், பலருடனும் பழகி தாம் ஐயுற்றபொருளை விஞவுதலும், கேட்டறிந்தவைகளைக்காத்தலும், கல்வி பயில்வோர்களுக்குக்கடன்களாகும்.

நாம் கற்குங்காலத்து மனவமைதியுடனிருந்து கற்றல்வேண்டும். இல்லாவிடின் படிப்பவைகள் நம்மனதிற் பதியா. கவலையுடனிருக்குங்காலத்து கல்வி கற்றலை விலக்கவேண்டும். இது காரணங்கொண்டே முதுமைப்பருவத்தினும், இளமைப்பருவம் கல்விகற்க ஏற்றகாலமெனப் பெரியோர்கள் வரைந்துள்ளார். முதுமைப்பருவத்து, நமது மனம் சம்சார சாகரத்திலழுந்தி, கவலைக்குட்பட்டு பரிதபித்துக்கொண்டிருக்கும்; அப்பொழுது நாம் கற்கும் கல்வி பிரயோஜனமற்றதாகும்.

மேலும் வயது அதிகமாக அதிகமாக ஞாபக சக்தி குன்றுகிறதென மனேதத்துவநூலாராய்ச்சிக்காரர்கள் கண்டுபிடித்திருக்கிருர்கள். இளமைப்பருவத்து பயின்றவை எப்பொழுதும் மன

த்துள் அழுந்திக்கிடப்பதையும், முதுமைப்பருவத்துப்பயின்றவை உடனே மறந்துபோவதையும் சுயாநுபவத்திலும் பார்க்கலாகும். ஆகையால் இளமைப்பருவமே கல்விகற்பதற்கேற்ற காலமாகும். "இளமையிற்கல், சிறுபோதே கல்வி சிலையிலெழுத்து, இளமைபருவத்துக்கல்லாமைகுற்றம்" என்பவைகளையும் நன்கு கவனிக்கத்தக்கதாகும். சில ஐரோப்பியநாடுகளில் இளமையிற் கல்வி கற்காவிடின் இராஜதண்டனை உண்டு.

இவ்வுலகின்கண் நாம் கற்கவேண்டியவைகள் அசாத்தியமாயிருக்கிறது. நமது ஆயுளோ மிகச்சொற்பம்.

> கல்வி கரையில கற்பவர் நாள்சில
> மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதி
> னாராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப்
> பாலுண் குருகிற்றெரிந்து"

"கண்டதைக்கற்கப்பண்டிதனுவான்" என்று இருந்தபோதிலும் ஆராய்ந்து கற்கவேண்டியவைகளைக்கற்றலே சிலாக்கியமாகும். நற்போதனைகளைப்புகட்டக்கூடியபுஸ்தகங்களைப்படிப்பதே, நமக்கு பயனையுண்டாக்கும். தீயபுஸ்தகங்கள் நமது நடத்தையைக்கெடுத்து நம்மையும் தீயவைகளைச்செய்யத்தூண்டும். அவ்வண்ணம் நாம் செய்ய உடன்படுவோமாயின் நாம் எல்லோராலும் அவமதிக்கப்படுவோம். "சிலபுஸ்தகங்களின் சாராம்சங்களை சுவைத்தல்வேண்டும்; சிலவற்றின் சாராம்சங்களை முழுங்கல்வேண்டும்; சிலவற்றின் சாராம்சங்களை மென்றுதின்று உட்செலுத்தவேண்டும்" என்று ஆங்கிலப்புலவரொருவர் கூறியிருப்பதையும் நோக்கற்பாலதே.

இனிக்கல்வியாலாகிய பயனைப்பற்றி பேசப்புகுவோம்.

விலங்கினங்களினின்றும் நம்மை உயர்த்திக்காண்பிப்பது நம்மிடத்துள்ள பகுத்தறிவே. அதுவொன்றில்லாவிடின் நமக்கும் விலங்கினங்களுக்கும்வேற்றுமையேயில்லையெனக்கூறலாகும். ஆகாராதிவிவகார விஷயங்களில் நமக்கும், விலங்கினங்களுக்கும் வேற்றுமையேயில்லை, பசித்தகாலத்து விலங்கினங்கள் உணவை எற்கி

ன்றன; நாமும் பசித்தகாலத்து போஜனம் செய்கிறோம். சிரமம் நீங்க விலங்கினங்கள் தூங்க நாம் காண்கிறோம்; நாமும் இளைப்பு நீங்க அயர்ந்து நித்திரை செய்கிறோம். ஆகையால் நம்மிடத்துள்ள பகுத்தறிவே நமது சிரப்புக்குக்காரணமாகும். அப்பகுத்தறிவும் கல்வியாலேயே ஒளிபெருகிறது. கல்வியில்லாவிடின் பகுத்தறியும் சக்தி பலமடையாது. ஆகையால் நம்மை மிருகங்களினின்றும் உயர்த்திக்காண்பிப்பது கல்வியறிவேயாகும்.

"கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லாதவர்"

கற்றவர்களே முகத்திரண்டு கண்களையுடையவர்களாக மதிக்கப்படுவார்கள்; மற்றவர்கள் முகத்தில் இரண்டு புண்ணைக்கொண்டிருப்பவர்களாவார். புரக்கண்களிரண்டு, வாண்முகத்திருந்த போதிலும், வானில் சூரிய சந்திரர்கள் எழுந்தாலன்றி இந்நிலவுலகிலுள்ள பலபொருள்களையும் பார்த்தலரிதாகும். புரத்துள்ள வஸ்துக்களைப்பார்ப்பதற்கே புறக்கண்களால் முடியாதிருக்க, புண்ணியம், பாவம், இம்மை, மறுமை, வீடு இவைகளை அறிவது அக்கண்களால் எப்படி சாத்தியமாகும்? ஆகையால் அகக்கண்ணில்லாதவிடத்து புறக்கண்கள் என்னும்? இதைக்குறித்தே தெய்வப்புலமை திருவள்ளுவநாயனாரும் மேற்கூறியுள்ள குரளைப்பாடியுள்ளார். பொருளொன்றை புறக்கண்களால் பார்ப்பதினால்மட்டும் நமதுமனம் திருப்தியடையாது. இன்பாநுபவத்தையடையவேண்டின் அகக்கண் அவசியம்வேண்டும். அகக்கண்ணோ கல்வியால் தான் கிடைக்கக்கூடும். ஆகையால் கல்வித்தேர்ச்சியுடையவர்களையே கண்ணுடையவர்களெனச் சொல்லல்வேண்டும்.

"சித்திரம் கைப்பழக்கம், செந்தமிழ் நாப்பழக்கம், கல்வி மனப்பழக்கம்" என்று தொன்றுதொட்டு வழங்கிவருகிற வசனத்தை யாவருமே அறிந்திருப்பார். எப்படி ஆகாரத்தால் சரீரம் புஷ்டியடைகிறதோ அப்படியே கல்வியால் மனம் வளர்ச்சிபெருகிறது. ஆகாரமில்லா உடம்பு மெலிந்து வியாதிக்குட்படுவது போல் கல்விப்பயிற்சியில்லாமனம் இருளடைந்து மெலினப்படு

கிறது. கல்விப்பயிற்சியுடன் கூடியமனமானது சந்துஷ்டியடைந்து எப்பொழுதும் இன்பாநுபவத்தையே பெற்றிருக்கிறது.

அரம்பொருளின்பமும் வீடும் பயக்கும்
புரங்கடை நல்லிசையுநாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க்குற்றதுணை"

துன்பமுற்றுழி உதவுவது கல்வியினும் வேறென்றில்லை கல்விச்செல்வமுடையவர்களுக்குக் கைப்பொருள் வேண்டுமென்பது ஆவசிகமில்லை; கைப்பொருளினும் சிலாக்கியமான மெய்ப்பொருள் அவரிடமிருக்கிறது. அதைக்கொண்டு துன்பத்தை அவர்கள் நீக்கிக்கொள்ளல்கூடும். எம்பெருமானைத் தன்னுடன் புறப்பட்டுவரச்செய்த, கணிகண்ணரது சரித்திரத்தை யறியாதார் யாவரேனுமுளரோ ?

"கற்றவர்க்குச்சென்ற விடமெல்லாம் சிறப்பு" அரசன் தான் இராஜ்ஜிய பரிபாலனஞ்செய்யும் நாடுகளில்மட்டும் பூஜ்யதையை யடைகிறான். கற்றவர்களோ எங்குசென்றபோதிலும் பூஜ்யதையைப்பெறுகிறார்கள். வித்வான்கள் தங்கள் கல்வித்திறமையால் எல்லோரையும் வசீகரித்துக்கொள்ளுகிறார்கள். இவர்களது கல்வித்திறமையைக்கண்டு ஜனங்கள் இவர்களைப்புகழ்ந்து மரியாதை செய்கிறார்கள். அரசர்களும் அவர்களைப் போற்றுகிறார்கள். ஆகையால் வித்வான்கள் சென்றவிடமெல்லாம் சிறப்பையே யடைகிறார்கள்.

கற்றோர் இழிகுலத்தோராயினும், கல்லாத உயர் குலத்தவனினும் சாலவே மதிக்கப்படுகிறான்.

"களர் நிலத்துப்பிறந்த வுப்பினை சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக்கொள்வர்
கடைநிலத்தோராயினுங்கற்றுணர்ந்தோரைத்
தலை நிலத்து வைக்கப்படும்"

எப்படி உப்பானது களர் நிலத்துப்பிறந்த போழ்தும் நெல்லினும் அதிக சிலாக்கியமாய் மதிக்கப்படுகிறதோ, அம்மாதிரியாகவே கற்றுணர்ந்தோர்கீழ்குலத்தோராயினும்,மேல்குலத்தோரினும் அதிகம் மதிக்கப்படுகிறார்கள். எப்படிஉப்பானது உணவுக்கு இன்றியமையாததாகயிருக்கிறதோ அம்மாதிரியாகவே வித்வான்களும் உலகுக்கு இன்றியமையாதவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் கல்விகுலத்தை உயர்த்துகிறது. உயர்குடிப்பிறந்தோனாயினும் கல்வித்தேற்சி அவனிடமில்லாவிடின், ஜனங்கள் அவனை, அத்துணையாக மதியாதிருப்பதை நமதநுபவத்திலேயே நாம் பார்க்கலாகும்.

சபையில் நமக்குச் சிறப்பை உண்டாக்குவது கல்வியே. சங்கங்களிலே கற்றவர்களே போற்றப்படுகிறார்கள். மிக்க மரியாதை பெறுகிறார்கள். கல்லாதவர்கள் அவமதிப்பையே பெறுகிறார்கள். கற்றறிந்தவர்கள் சபையிற்சென்று, கல்லாதவர்கள் வாய்திறத்தல் "பட்சிகள் புல்லுருவைக்கண்டு பயப்படுவதுபோல், என் வல்லுருவைக்கண்டு அஞ்சன்மின்'' என்று சொல்லுவதுபோலிருக்கிறதெனப்புலவரொருவர் சொல்லியிருப்பது நாமறியாததா ? மேலும்.

''கல்லாது நீண்டவொருவனுலகத்து
நல்லறிவாளரிடைப்புக்கு—மெல்ல
விருப்பினுநாயிருந்தற்றேயிராஅ
துரைப்பினுநாய் குரைத்தற்று"

என்ற நாலடிச்செய்யுளையும் நோக்கற்பாலதே.

கற்றோர்கள் பிர்ம்மதேவரினும் மேம்பட்டவர்களாவர். பிரம்மதேவர் சிருஷ்டிக்கும் பொருள்களெல்லாம் அழியும் தன்மையுடைத்தாகும்; மற்று வித்வான்கள் செய்யும் பாடல்களோ புகழ்பொருந்தி என்றும் அழியாதிருக்கக்கூடியவைகளாகும்.

''கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினு
மலரவன் வண்டமிழோர்க்கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்புமாய் வனபோன்மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யுமுடம்பு"

எல்லாவித தானங்களினும் வித்தியாதானமே சிறந்தது. நாம் கல்விச்செல்வம் பெற்றிருந்தால் அத்தானத்தை சிரமமின்றிச்செய்யலாகும், அன்னவஸ்திரம் முதலியவைகளை ஒருவருக்குக்கொடுத்தல் அவ்வொருவர் மாத்திரமே அவைகளால் பயன்பெறவே துவாகும். பயன்படுவதும் சிறிது பொழுதுமாத்திரமே. எப்படி ஒருவிளக்கினின்று பலவிளக்குகள் ஏற்ற ஏதுவாதல்போல் ஒருவருக்கு கல்வி கற்பித்தல் அவ்வொருவரிடத்தில் எண்ணில்லாதவர் கல்வி கற்றுக்கொள்ளுதற்கு ஏதுவாகும். ஆகையால் வித்தியாதானத்துக்குச்சமமாகிய தருமம் யாதொன்றுமில்லை.

கல்வியே முக்திக்கு வித்தாகும். கல்வியால் நாம் அகக்கண் பெறுகிறேமென்று முன்னமேயே கூறப்பெற்றுளது. அகக்கண் உதவிகொண்டு சேதன அசேதன பதார்த்தங்கள் இன்னதென்றும், நித்தியா நித்திய வஸ்துக்கள் இன்னதென்றும் நாம் அறிகிறேம். அறிந்த மாத்திரத்து விவேகம் நமக்கு ஜனிக்கிறது. விவேகமுண்டானகாலத்து பலாபேட்சையின்றி கருமங்களைச் செய்ய நாம் ஆரம்பிக்கிறேம். பலாபேட்சையை விட்டவர்கள் மோட்சத்தை எளிதில் அடைவார்கள். "அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்றது சவனிக்கத்தக்கதே.

"கற்கக் கசடர கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக"

நூல்களைக்குற்றமில்லாது கற்றல்மட்டும் போதாது; கற்றபின்னர் அந்நூல்களிற் சொல்லியவண்ணம் நன்னெறியிலேயே நடக்கமுயலவேண்டும். அதாவது கற்றறிந்தவர் நல்வழியிலே ஒழுகுதலும், மாணுக்கர்களுக்கு கல்வி கற்றுக்கொடுத்தலும், எல்லோருக்கும் நல்லுபதேசம் செய்தலும், தாம் கற்றுவிட்டோமென்ற பெருமைகொள்ளாதிருத்தலுமே தமக்குக்கடனாகக்கொண்டொழுகல்வேண்டும். இவ்வியல்புடையவர்களே, மேற்கூறப்பெற்றுள கல்வியின் பயனெய்தினவர்களாவார்; மற்றவர்கள் அவமதிப்பையே அடைவார். நமது மூதாப்பிராட்டியாகிய ஔவை முதலில் "வித்தைவிரும்பு" என்றுகூறி, பின்னர் "வீடுபெற நில்" என்

றும் அதற்கடுத்து "உத்தமனுயிரு" என்றும் வரிசையாய் கூறியிருத்தலேயும் ஆராய்ந்தறிக. மோட்சமடையவேண்டின் ஞானம் பெறத்தக்கதான கல்வியை விரும்புவதுடன் உத்தமனுயுமிருக்கவேண்டுமென்பதும் பொருள் படுகிறது. ஆகையால் நற்குணங்களில் சிறந்தவனுயிருந்தால்மட்டுமே, கல்வியின் பயனே நாமடைந்தவர்களாவோம். உண்மையான ஆனந்தத்தையடைய முக்கிய சாதனமாயிருக்கிறதும், எவ்விதப்பயனேயு மளிக்கக்கூடியதுமாயிருக்கிற கல்வியை எல்லோருமே கற்றல் ஆவசிகமாகும்.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலேமுனியாது கற்றனன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற்ருயுமனந்திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோருள்ளு
மூத்தோன் வருக வென்னு தவரு
ளறிவுடை யோனுறரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட்படுமே"

"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லே
மிக்க சிறப்பினரசர் செறின்வவ்வா
ரெச்சமென வொருவன் மக்கட்குச்செய்வன
விச்சை மற்றில்லேபிற"

---

## 18. "தந்தை தாய்ப்பேண்"

ஆத்திச்சூடி.

---

தந்தையையும் தாயையும் நீ காப்பாற்று என்று இவ்வசனம் பொருள்கொள்ளும். அவர்கள் சொற்களேப்பூஜித்துக்காப்பாற்றுவது நமது கடமையாம்.

"தகப்பனையும் தாயையும் நீ காப்பாற்றி வாழ்வாயாக" என்று சாமான்யர்களுள் வழங்கிவரும் வசனத்தை நாம் கேள்வியுற்றிருக்கலாகும். நமக்குக்குழந்தை பருவத்து ஊணும், உடையுமளித்துதவினவர் யார்? துஷ்ட சகவாசஞ்செய்யாதும், சூதாடிப் பொய்பேசாது, சத்தியத்தையே கடைபிடிக்கச்செய்தவனும்யார்

"அள்ளிக்கொடுக்கின்ற செம்பொன்னுமாடையு மாதரவாக்
கொள்ளிக்கும்பட்ட கடனுக்குமென்னைக் குறித்தலல்லால்
துள்ளித்திரிகின்ற காலத்திலேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்குவைத்திலனே தந்தையாகிய பாதகனே"

என்றுஎண்ணி நாம் விசனப்படுவதற்கேதுவில்லாமல் நம்மைக் குழந்தைபருவத்தில் கல்விச்சாலையில் புகுத்தி கல்விபயலச்செய்தவன்யார்? சபையோர்களெல்லாம் நம்மைபூஜிக்கத்தக்க யோக்கியதைப்பெறச்செய்தவன் யார்? தகப்பனன்றோ. நம்மைப்பத்துமாதஞ்சுமந்து ஈன்றெடுத்து தாராட்டிச்சீராட்டி, நோயணுகாவண்ணம் மருந்தளித்து தான் பத்தியமிருந்து, அபாயம் யாதொன்றுமணுகாது பாதுகாத்து நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக குழந்தைப்பருவந்தொட்டு காப்பாற்றினதுயார்? தாயன்றோ.

"நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்றும் தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் வாக்கை அறியாதவரும்உளரோ? அந்நன்றியும் பயனை உத்தேசியாது செய்யப்படின் மிகவும் சிலாக்கியமாகும் என்று சொல்லப்பெற்றுளது.

"பயன்றூக்கார் செய்தவுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது"

தாய் தந்தையர்கள் பலனை உத்தேசித்தாநமக்கு நன்மை புரிகிறார்கள்? அவ்விதமிருக்க நாம் அவர்களைக்காப்பாற்றி அவர்கள் சொற்களை ஆதரித்தல் வேண்டாமா? இல்லாவிடில் நம்மைப்பழி பாவங்கள் அணுகாதா?

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை
செய்நன்றி கொன்றமகற்கு"

என்றதும் நாம் கவனிக்கத்தக்கது. ஆகையால் பெற்றோர்களை அச்சத்தோடும் அடைவோடும் நாம் வழிபடல்வேண்டும். அவர்கள் குற்றஞ்செய்தார்களாயினும் அவைகளை ஒரு பொருட்படுத்தாது நாம் பொறுத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் சொற்படி நடத்தல் நமக்கு நன்மையேதரும். தாய் தந்தையர்களா நமக்குத் தீமையையெண்ணுபவர்கள் ? அவர்கள் சொற்படி நடவாதிருப்பது, தீமையை நாமே வருந்தியழைப்பதுபோலாகும். "மூத்தோர்சொல்வார்த்தை அமிர்தம்" என்றது கவனிக்கத்தகுந்ததே. வார்த்திகதிசையில் அவர்கள் வருத்தமுறாவண்ணம், அன்ன, பானாதி, வஸ்திர முதலியவைகளை அவர்களுக்குக்கொடுத்து நாம் காப்பாற்றல்வேண்டும். அவர்கள் நோயுற்றிடின் சிறந்த வைத்தியர்களைக்கொண்டு மருந்துசெய்வித்தல் நமது கடனாகும்.

"தாய்சொற்கேட்டலுந் தந்தைசொற்கேட்டலும்
பாசத்தன்பினைப்பற்றற நீக்கலும்
ஈசற்கேகடன்"

என்று ஆன்றோர் மொழிவழங்குகிறது.

மாதுர்வாக்கிய, பிதுர்வாக்கிய பரிபாலனம் பண்ணவேண்டுவதே நாம் புத்திரனாய்ப்பிறந்ததற்குச் செய்யவேண்டிய கடமை என்று ஸ்ரீ இராமசந்திரமூர்த்தியே தனதுநடையால் காட்டவில்லையா ? சிறியதாயார் சொல்லைக்காக்கும்பொருட்டே அவர் கானகஞ்சென்றனர். கடலைத்தோண்டியசகரர் தந்தை ஏவலிற்றலைநின்று, உயிர்நீத்தும் புகழ்பெற்றிருக்கிறார்களன்றோ ?

"மகரவேலைமண்டொட்டவண்டாடுதார்ச்
சகரர்தாதைபணிதலைநின்றுதம்
புகரில்யாக்கையினின்றுயர்போக்கிய
நிகரின்மாப்புகல்நின்றதன்றோவென"

"தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்றதை மேற்கொண்டு பரசுராமன் தன் தந்தையாகிய சமுதக்கினி பகவான் சொற்படி ஒழுகவில்லையா?

'தந்தையுரைதட்டினவன்றாயுரையிழந்தோன்
அந்தமுறுதேசிகர்தமாணையைமறந்தோன்
வந்தமுறை வேதநெறி மாறினவர் நால்வர்
செந்தழிலின்வாயினிடை சேர்வது மெய்கண்டீர்"

ஆகையால் இவர்களைப் பேணுவதே நமது முதற்கடமையாகும். அவர்கள் இஷ்டத்தையே நாம் தினந்தோரும் நாடவேண்டும். அவர்களுக்குப் பணிவிடை செய்வதே மேலானதர்மமாகும்.

"தந்தையினிற்சிறந்தகுருவில்லை" நமக்கு முதலில் பிர்மமோபதேசம் முதலியவைகளைச் செய்வது நமது தந்தைமார்களே. அவர்களாலேயே மோட்ச சாம்பிராஜ்யத்தையடைய யோக்கியதையுடையவர்களாகிறோம். ஆகையினாலே, தந்தைமார்களே சிறந்தகுருவாகபாவிக்கப்பட்டது. மேலும் அவர்கள், என்னகஷ்டப்பட்டினும், அதையெல்லாம் சிறிதும் கவனியாது, தன்புத்திரர்கள் கற்றுதேர்ந்தவர்களாகி நன்மையடைய வேண்டுமென்று எண்ணியே பாடுபடுகின்றார்கள். நாமடையும் கல்விச் செல்வத்துக்குக் காரண பூதர்கள் அவர்களே. இப்படியிருக்க இவர்களை நாமாதரியாதுவிடலாகுமா?

"மகன்றந்தைக் காற்று முதவியிவன் தந்தை
யென்னோற்றான் கொல்லென்றஞ்சொல்"

பெற்றோர்களை பேணாவிடின் இச்சொல்பிறக்குமா? வசையே நமக்கு எய்தும்.

"தாயினிற்சிறந்த தெய்வமில்லை" தெய்வத்தின் தொழில் நம்மைக் காத்தலேயாகும். தாயும் நம்மை எவ்வகை ஆபத்தினின்றும் காபாற்றுகிறவளாகிறாள். தெய்வமொன்றுளதென்றறிவதற்கே தாய்காரணமாகிறாள். "அன்னையுபிதாவும்முன்னறிதெய்வம்" என்பதும் யாவருமறிந்ததே,

சிலர், பெற்றதாய்தந்தையர்கள் பசித்திருக்க அன்னதானஞ்செய்ய ஆரம்பிக்கிறார்கள். இவர்கள் அறிவை என்னென்றெடுத்துரைப்பது. "அப்பன் சோற்றுக்கழுகும்போது, பிள்ளை கும்பகோணத்தில் கோதானஞ்செய்கிறது" மேலாகுமா ? தாய் உடுக்கவஸ்திரமின்றியிருக்க பிள்ளை ஊருக்கெல்லாம் வஸ்திரதானம் செய்வது பெருமையாகுமா? இவைகளெல்லாம் ஊரார் புகழச்செய்வதேயாகும். பெற்றோர்களைப்பேணுவதே பெரியதர்மமாகும்.

"பெற்றோர்களைப் பேணவேண்டாமா ? அவர்கள் மனநோக நடக்கலாமா" என்றுசிலரை வினவினால், "அவர்களால்தானே நான் இவ்வுலகில் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது; அவர்கள் ஏன் என்னைப் பெறவேண்டுமென" விடைபகர்கின்றனர்கள். அந்தோ! இவர்களைகண்டு நாம்இரங்க வேண்டியிருப்பதேயல்லாது, வேறொன்றும் பேசுதற்கிடனில்லை. நூறுவயதளவும், இரவுபகலும் நமது பெற்றோர்களுக்கு அடிமைத்திறம் பூண்டபொழுதும், மூவலகிலுள்ள பொருள்களனைத்தையும் அவர்களுக்குக் கொண்டுவந்து கொடுத்தகாலத்தும் நம்மை அவர்கள் ஒருநாள் வளர்த்ததற்கீடாகாதென்ற ஆன்றோர் மொழியை அவர்களறியார்போலும். நாம் வளர்க்கும் நாய்கூட அல்லவோ, அது சாகுமட்டும் நம்மையே காத்திருக்கிறது.

"ஈன்றுவளர்த்த தாய்தந்தைக் கெவரே கைம்மாறியற் றிடுவா
ரான்றமதலை நூறுவயதளவு மடிமைத்திறம்பூண்டு
மூன்று புவனத்துள்ள பொருண் முற்றுமளித்து முறை முறையே
யென்று வழிபாடியற்றிடினு மொருநாள் வளர்த்தற் கியையாதே."

ஆகையால் பிதா மாதா முதலாயினோரை நிந்திக்காது காப்பாற்றலே தகுதியாம். எதையுந் துறந்தபட்டினத் தடிகளுமன்றே, தாயார் இறந்தகாலத்துவந்து, செய்யவேண்டிய கிரிகைகளைச் செய்தார்? அப்படியிருக்க, இதுவிஷயத்தைப்பற்றி வேறுஎன்னன சொல்லவேண்டியுளது.

"தாயினிற் சிறந்ததெய்வமில்லையுயர் தந்தை தன்னி
னேயநற் குருவுமில்லை யென்னின்மற்றிவர்கடாளிற்

றுய்மலர் தூவிநாளுந்தொழுதிடு மறிஞர்தாமே
யாய்கதிர் பரடபும் பொன்னுட் டமரராயினிது வாழ்வார்."

## 19. இராவ்பஹதூர் கனம் கோபால்ராவ் அவர்கள்

தஞ்சாவூர்ஜில்லாவில் கணபதி அக்கிரகாரத்தில், 1832ம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தில், மேன்மைபொருந்திய மகராட்டிர பிராமண குலத்தில் இவர்பிறந்தவராவர். இவரது முன்னோர்கள், நெடுங்காலம் தஞ்சாவூரில் அரண்மனை வித்துவான்களாக விருந்தவர்கள். குழந்தைப்பருவத்தில் இவர் எப்போழ்தும் பந்துவிளையாடிக்கொண்டும், துடுக்கான செய்கைகளை வெகுவாய்ச் செய்துகொண்டும் இருப்பாராம். ஆகிலும் எப்போழ்தும் சுருசுருப்புடன் கூடியவர்; சித்திரமெழுதுவதில் வெகுப்பிரியமுடையவர்; எப்பொழுது பார்த்தாலும் வடமொழி, மராத்தி சுலோகங்களை மனனப்படுத்தி ஒப்புவித்துக்கொண்டே யிருப்பார். இவர், தனக்குப் பாடுந்திறமையில்லா திருந்தபோதிலும் பாடுபவர்களைக் கண்டு ஆநந்தங்கொள்வதுடன், அச்சாஸ்திரத்திலும் நல்லதேர்ச்சிபெற்றவருமாவார். இவரது இளமைபருவத்திலேயே, இவரதுதகப்பனர் தேகவியோகமாக நேர்ந்தது, ஆகையால், இவருக்குப் பள்ளிப்படிப்பு ஒழுங்காய் நடந்தேற முடியாது போயிற்று. தேவாஜிராவ் அவர்களே இவருக்குப் பிரதமப் படிப்பைப்புகட்டினவராவர். உயர்தரப்படிப்பு இவரே முயன்று கற்றதாகும்.

"நான் ஒருபள்ளியிலும் நேராககற்கவில்லை. பதினைந்தாவது பிராயத்தில் நானேவாசித்துணர விடப்பட்டேன். அப்பொழுது சொற்ப ஆங்கிலேபமே நானறிவேன். எனக்குத் தெரிந்த, ஆங்கிலப் படிப்பெல்லாம், நானே வருந்தி யுழைத்ததாகும்; புஸ்தகங்களே எனக்கு உபாத்தியாயர்களாகும்" என இறக்கும் நாலுவருடங்களுக்குமுன் இவரே சொன்னாராம்.

அவரது பதினேழாம் வயதில் தஞ்சாவூர் கலெக்டர் கச்சேரியில், இவர் குமாஸ்தாவாக நியமனம் பெற்றார். இரண்டுவருடங்களுக்குள் மராமத்து இலாகா மானேஜர் ஸ்தானத்துக்கு இவர் உயர்த்தப் பெற்றார். இவர், வெகுசாமர்த்தியத்துடன் வேலைபார்த்து வந்தவராவார்; ஆபீஸில் நடக்கும் அக்கிரமங்களை யெல்லாம், நன்கு கவனித்து இவர் அப்பொழுதைக்கப்பொழுது கண்டித்து வந்தார். தஞ்சாவூர் உதவிகலெக்டராயிருந்து, பின்னர் சென்னை ஹைகோர்ட்டு ஜெட்ஜுகளுள் ஒருவராயிருந்தவரும், நமது ராயரவர்களுக்கு அத்யந்த சிநேகிதருமான கனம் "ஹாலோவே" பிரபு (Mr. Halloway) இவர் வேலைத்திறனைப் பற்றி மிக்கப் புகழ்ந்துபேசி யுள்ளார்.

பதினெட்டாம் வயதில் "ராதாபாய்" என்னும் மாதை இவர் விவாகஞ் செய்தார்.

1854ம் ஆண்டில், அதாவது இவரது 22-வது வயதில் வித்தியாவிலாகாவில் வேலைக்கமர்ந்தார். அப்பொழுது கும்பகோணம் கல்லூரியில், உதவியாசரியராக நியமனம் பெற்றார். 1857ம் ஆண்டில், சென்னை சர்வகலாசபை (University) ஸ்தாபனமான பொழுது, மெற்றிகுலேஷன் பரீட்சையில் இவர் தேறினார். 1859ம் ஆண்டு B. A. பரீட்சையும் தேர்ந்து பட்டம்பெற்றார். அவ்வருடத்தில் இவரொருவர்தான் முதல் வகுப்பில் தேறியவராகும். இவர், தானுகவேயுழைத்து பாடுபட்டு, பிறருதவியில்லாமலே, பரீட்சையிற் றேறினவர் ஆவார்.

முப்பது ஆண்டுகளுக்மேல், இவர் வித்தியா விலாகவிலேயே வேலைக்கமர்ந்திருந்தார். இவ்வாண்டுகளில் பெரும்பாகம், கும்பகோணம் கல்லூரியிலேயே வேலையாகவிருந்தார். அக்கல்லூரியிலிருக்குங்காலத்து, கணிதமும், ஆங்கிலேயமும் இவர் போதித்து வந்தார். கணிதபாடத்திலும் இவர் மிகத்தேர்ச்சி பெற்றவரெனக் கூறலாகும். சென்னை இராஜதானிக் கலாசாலையிலும், ஒருவருடம் கணிதபோதகராக விருந்தார். அக்காலத்து, இவர் சாமர்த்தியத்தை, ஜனங்கள் வெகுவாய்க்கொண்டாடினார்கள், ஆங்கிலேய

பாஷை, அந்நியபாஷையாக விருந்தபோதிலும், அதில் இவரடைந்திருந்த தேர்ச்சி நிகரற்றதெனக்கூறலாம். அப்பாஷா விலக்கியப்புஸ்தகங்களை எப்பொழுதும் படிப்பதே இவருக்குமிக்கப்பிரீதியாகும்.

1867ம் ஆண்டில், இவர் சென்னை சர்வகலாசபையினங்கத்தினரொருவராக நியமிக்கப்பெற்றார். இவ்வேலைக்கு நியமனமான சுதேசியர்களுள் இவர் மூன்றாவதாவர். 1870ம் வருடமுதல் 1872ம் ஆண்டுவரை, ஆறாவது டிவிஷன் வித்யாவிலாகா இனிஸ்பெக்டராக இவர்வேலைபார்த்து வந்தார். 1872ம் வருடமுதல் இரண்டு வருடம், கும்பகோணம் கல்லூரி இவர்வசத்திலேயேயிருந்ததாகக் கூறலாகும். கும்பகோணம் கல்லூரி சிறப்புப்பெற்றது, இவரது முயற்சியாலும், கனம் போர்ட்டர் துரை அவர்கள் முயற்சியாலுமே என்று சொல்லவேண்டும். இவர் வசத்து அக்கல்லூரி இருந்தகாலத்து மாணவர்கள் வெகுவாய்த்தேறினார்கள். டைரக்டர் துரையவர்கள், நமது இராயரவர்களுக்குத்தலைமை யதிகாரம் கொடுக்கவேண்டுமென சிபார்சும் செய்தனராம். 1878ம் ஆண்டில் சென்னை இராஜதானிக் கலாசாலையில், இவர்சரித்திர போதகராக நியமனஞ்செய்யப்பட்டார். அப்பொழுது இவருக்கு இராவ்பகதூர் பட்டமு மளிக்கப்பட்டது.

1883ம் ஆண்டு இவர், உடம்பு அசௌக்கியமில்லாதவரானார். அதிகவுழைப்பால் இவ்வியாதி சம்பவமாயிற் றெனவைத்தியர்கள் கூறினார்கள். அந்நாள் முதல், பழையதேக நிலைமையை அவர் எய்தவேயில்லை. தேகநிலமை வரவர க்ஷீணித்து வந்ததால், தம்தேக வலிமையைத் திரும்பவும் பெறுதற்குன்னி மிகுந்தயோஜனையின் மீது, ஆறுமாதகாலத்துக்கு இரஜாப்பெற்றுக்கொண்டார். ஆனால் தெய்வச்செயலின் அந்தரெங்கத்தை அறிந்தவர்யாவர்? இராஜாவிலிருக்கும்பொழுதே, தேகசௌக்கியம் குன்றி 1886ம் வருடம் மேமீ 11வ சென்னையிலேயே, இவர் மண்ணுலகை நீத்துவிண்ணுலகு சேர்ந்தனர்.

இவர் இறந்தசெய்தி, இவரது மாணவர்களுக்கும், நட்பினர்களுக்கும் இடிவிழுந்தாற்போலிருந்தது. இவர்தேக அசௌக்கியமாயிருந்ததையே அநேகர் அறியார்கள். அறிந்திருந்த சிலரும் இவர் சௌக்கியமேயடைவாரென எண்ணியிருந்தார்கள். இவ்வளவு சீக்கிரத்தில், இவர் எமனுக்கிரையாவரென்று ஒருவருமே எண்ணவில்லை.

இருபது வருடகாலம் நமது இராயருடன் அத்யந்த சிநேகிதராயிருந்த கனம் போர்ட்டர் துரையவர்கள் இவர்மரணத்தைக்குறித்து சிநேகிதரொருவருக்குப் பின்வருமாறு எழுதுகிறார்.

"இரண்டுவாரங்களுக்கு முன், கோபால்ராவ் இறந்த செய்தியைக்கேட்டு, ஆச்சரியத்தையும், துக்கத்தையுமடைந்தேன்"

ஆக்டிங்டைரக்டராயிருந்த கனம் டன்கன்துரையவர்கள் இராஜங்கத்தாருக்கு எழுதிய நிருபத்தில் கூறியுள்ளது :—

"இராஜதானிக் கலாசாலையிலும், சென்னை சர்வகலாசபையிலும் அவருடன் சேர்ந்திருக்கப்பாக்கியம் பெற்றதிலிருந்து, இவர் மரணம் வித்தியாவிலாவுக்கு ஒரு நஷ்டமென நான் மதிக்கிறேன்".

இவரே இவரதுமூத்த குமாரருக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"நான் இவரை வெகுநாட்களாகவறிவேன். புத்திசாதுரியத்துக்கும், நன்னடக்கைக்கும், நான் இவரைப்புகழ்ந்திருக்கிறேன். இவருடன் கூடியிருந்த நாட்களில் ஒருநாளேனும், சிநேகத்துக்குப்பங்க மேற்படும்படியான வார்த்தைகளொன்றும் நடந்ததாக எனக்கு ஞாபகமில்லை. இவர்கூடவேலையிலிருந்தவர்களும், இக்கஷ்டம் உங்களுக்கு நேர்ந்ததற்காக துக்கிக்கிறது மல்லாது. இந்நஷ்டம் அவர்களுடையதெனவும் மதிக்கிறார்கள்."

"என்னிலும் அதிகமாய், உமது தகப்பனார் இறந்ததற்கு, அவர்கள் சிநேகிதர்களுள் துக்கிக்கிறவர்களும், தென்னிந்தியர்களே அடைந்த இந்நஷ்டத்தைக் குறித்து நினைக்கிறவர்களும் இல்

லை" என இராவபஹதூர் இரங்கநாத முதலியாரவர்கள் எழுதினார்கள்.

ஸர் டி. முத்துசாமி ஐயரவாகள் எழுதியது- கோபால் ராவ் மரணம் தஞ்சாவூர் ஜில்லாக் காரர்கள் ஓர் ஆபரணத்தையிழந்த தொக்கும்.

இவ்விதம், பலர் பலவிதமாயெழுதி அவரவர்களுடைய வருத்தத்தைத் தெரிவித்தார்கள். கோபால்ராவ் அவர்கள் போதகாசரியராக, நிகரற்றவரெனக் கூறலாகும். மாணவர் மனத்துள் பாடங்களைப் பதியச்செய்வதில் அவர் வெகுசமர்த்தர். அவர் நடத்திய பாடங்களை, மாணவர்கள் திரும்பவும் படிக்கவேண்டுவதில்லை. எப்பாடத்தைக் கற்பிக்கினும், அதைக்குறித்த விஷயங்களனைத்தையுமே போதிப்பார். பரீட்சைக்கு வேண்டுமானதைமட்டும் போதித்து மற்றதை விடார். பரீட்சையிற் றேறுபவர்களும், அவரிடம் படித்தவர்களே அதிகமாவார். மாணவர்களையும், தாங்களே உழைத்துணரவுஞ்செய்வார். ஆங்கிலங்கற்பித்த முப்பதுவருடங்களுள் அவருக்குநிகர் ஒருவருமேயில்லையெனக்கூறலாகும்.

ஆடம்பரமாய் உடுப்பவரல்லர். சுத்தமானஉடையை உடுப்பவராவர். குதிரை சவாரிசெய்வதில் வெகுப்பிரியர். நேராகவும், ஒழுங்காகவும் அவர், தமது காரியங்களைச்செய்துமுடிப்பவர்.

"தோன்றிற்புகழொடு தோன்றுகவஃதெனிற்
தோன்றலிற் தோன்ருமைநன்று"

---

## 20. அமராவதி சேஷய்யசாஸ்திரிகள் கே.ஸி.எஸ். ஐ.

ஸர் சேஷய்ய சாஸ்திரிகள் கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலம் போகுமார்க்கத்து வெட்டாற்றுத் தென்கரையிலிருக்கும் அமராவதியென்னும் கிராமததில் 1829-ம் ஆண்டு பிறந்தார்,

இவரது பெற்ருேர் மிக்க பூஜ்யராயினும் எளியோர். அக்காலத்தில், ஆங்கில பாஷாப்பியாஸமென்று பெயர் வகிக்கத்தக்க படிப்பு சென்னையில் மாத்திரந்தான் சரிவர நடந்துவந்தது. ஆகையால் அப்பொழுதுதான் ஸ்தாபிக்கப்பெற்ற பச்சையப்பன் கலாசாலையில் கல்வி பயிலும்பொருட்டு நமது இளஞ்சாஸ்திரி சென்னைக்கனுப்பப்பெற்ருன். பச்சையப்பன் பள்ளியில் சாஸ்திரி மாணுக்கனுயிருந்த காலத்துப்படிப்பில் மிக்க கவலை செலுத்துபவனுயிருந்ததுமன்றி, பிரசங்கம் செய்வதில் மிக்க வல்லமையுடையவனென்றும் மதிக்கப்பெற்ருன். 1846-ம் வருடத்தில் சேஷய்ய சாஸ்திரிதான் பயிலும் கல்விச்சாலையிலேயே ஒரு உபந்யாசஞ்செய்தான். அப்பிரஸங்கத்து வாக்கியங்களிற் சிலவற்றை "கிரஸன்ட்" எனும் பத்திரிகையில் புகழ்ந்தும், மதாசார விவகாரங்களைப்பற்றி இவரது அபிப்பிராயத்துக்கும், ஹிந்து மதத்தினின்று கிறிஸ்துவரானவரும் பாதிரிமார்களால் சிலாகிக்கப் பெற்றவருமான ராஜாகோபாலென்பவரின் அப்பிராயத்துக்கு முள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டியுமிருந்தது. 1848-ம் வருடம் (Proficiency) பரீக்ஷையில் முதல்வகுப்பிற் தேறி நமது சாஸ்கிரிபட்டம்பெற்ருர். பவ்வல்துரை இவரைப் பற்றி நல்ல அபிப்பிராயங்கொண்டார். 1848-ம் ஆண்டு செப்டம்பர்மீ சாஸ்திரியார் ரிவினியூபோர்டு ஆபீசில் 25ரூ. குமாஸ்தாவாய், சர்ஹென்ரி பைக்கிராப்ட துரையினிடத்து வேலை பார்த்தார்.

1849-ம்ஹூ சூன்மீ போர்டாபீஸ் ஸீனியர் மெம்பர் சர்வாட்டர் எலியட்டு துரையுடன் நமது சாஸ்திரியார் வடசர்க்கார் மாகாணச் சுற்றுப்பிரயாணஞ்சென்ருர். அங்கு இவர் ஆபீஸ் நடவடிக்கை கற்றுக்கொண்டதுமன்னியில், தாவரசாஸ்திர நாணயபுராதன ஆராய்ச்சி விஷயங்களில் எலியட்டு துரைக்கு மிக்க சகாய கராயுமிருந்தார்.

1851ம்ஹூ மேமீ சேஷய்யசாஸ்திரியார் மஸூலிபட்டணம் தாசில்தாராக நியமனஞ் செய்யப்பெற்ருர். 1854-ம் ஆண்டு பிப்ரவரி மீ த்தில் நாயிப் சிரஸ்ததாராக இவர் ஆக்கப்பெற்ருர்.

இவ்விடத்திலேயே இவர் தெலுங்குபாஷையைக் கசடறக்கற்றூர். 1855-ம் ஆண்டில் இவர் மஸூலிபட்டணம் தலைமை சிரஸ்தா தாராயினூர். ஹிந்துஸ்தானியும் இவர் நன்குபேசுவார். அர சிறையரசாட்சியில் கிருஷ்ணு ஜில்லாவை இவர் சீர்திருத்தினூர். மஸூலிபட்டணத்துக்கு வேலையாய்ச்செல்லுங்காலத்து, மிக்க க்ஷீணதிசையிலிருந்தது அந்த ஜில்லா. 8வருடங்கழித்து 1859-ம் ஆண்டில் அதினின்றும் இவர் மாற்றப்பெற்ற காலத்து, நிரம்பவும் நல்ல நிலைமையிலிருந்தது. அஜ்ஜில்லாவுக்கு இவர் செய்த சீர்திருத்தங்களை ரெவினியூபோர்டாபீஸ் ரிகார்ட்மூலமாக இன்றைக்குங்கண்ணுறலாம். இந்தியாவில்விளைந்த பெரிய கலககாலத்தில் மஸூலிபட்டணத்து தலகக்காரர்களைக் கலகத்தினின்றும் தடுக்கவேண்டிய முயற்சிகளை வெகுவாய்ச்செய்திருந்தார்.

மகாராணியவர்கள் இந்தியாராஜ்யபாரத்தை வகித்தகாலத்து இந்தியாவிலிருந்து அனுப்பப்பெற்ற அநேக (அட்ரஸ்களில்) ஆசிப்பத்திரிகைகளில் நமது சாஸ்திரியாரதுவே நன்றாகவிருந்ததென்று எல்லோரும் இவரைக் கொண்டாடினூர்கள்.

இனும் கம்மிஷனர் ஜியார்ஜ் நோபில் டேயிலரின் கீழ் டிப்டி கலெக்டராக வேலைசெய்ய 1859-ம் ஆண்டில் நமது சாஸ்திரியார் உத்திரவுபெற்றூர்.

இனும் கமிஷன் டிப்டி கலெக்டராகவும், ஸ்பெஷல் அஸிஸ்டண்டாகவுமிருந்து சிரமமும் பிரயோஜனமும்பொருந்திய செய்கைகளை நமது சாஸ்திரியார் 1859-ம் ஆண்டு முதல் 1866-ம் வருடம்வரைக்கும் செய்தார்.

1872-ம்வருடம், திருவாங்கூர் திவானுக சர். டி. மாதவராவுக்குப் பிறகு நமது சாஸ்திரியாரை அனுப்பினூர்கள். அங்கு இவர் 5 வருடகாலம் வேலைபார்த்து அவ்விராஜியத்திற்கு அநேக நன்மைகளைச்செய்தார். திருவாங்கூர் சமஸ்தான வருமானத்திற்காஸ்பதமான வரிகளைச் சரிப்படுத்தியதே இவர் அந்த இராஜ்யத்திற்செய்த முதற் சீர்திருத்தம். அந்த சமஸ்தானத்தைச்சார்

ந்த அன்னதான சத்திரங்களில் நடந்துவந்த ஊதாரிகளை இவர் வேரறக்களைந்தார். உப்பு வியாபாரத்தில் நடந்த அநேகவித மோசங்களை அடியோடு நீக்கவேண்டிய ஏற்பாடுகள் பலவற்றை நமது திவான் செய்து முடித்தார். அக்காலத்து உப்பு வியாபாரிகள் உப்பு வாங்குவோர்களுக்கு அநேகவித மோசங்களைச் செய்வார்கள். உப்பு வாங்கும்சாமான்ய ஜனங்கள் தாங்கள் சரியாக வாங்குவதாய் நம்பினவர் நம்பிக்கையையே காரணமாகக்கொண்டு அவ்வியாபாரத்திற் கென்றேற்படுத்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் வாங்குபவர்களை வஞ்சித்து அதனுல் வருமதிக லாபத்தைத் தாங்களே ஸ்வீகரித்துக் கொண்டிருந்தார்கள். இவ்விதம், இராஜாங்கத்திற்கு இலாப மில்லாமலும் ஜனங்களுக்கு நன்மை யில்லாமலும், தப்புப்படிகளாலளவைசெய்து வியாபாரிகளடித்த கொள்ளையை நிறுத்த, நமது சாஸ்திரியார் முகத்தளவைப்படி உப்பு விற்கக் கூடாதென்றும், நிறுத்தலளவே உப்பு விற்க உபயோகிக்கப்படவேணடுமென்றும் உத்திரவு பிறப்பித்தார். இவ்வித அளவின் படியும் வியாபாரிகள் மோசஞ் செய்யக்கூடுமென்றுலும். அம்மோசத்தைசாமான்ய ஜனங்கள் கண்டுபிடிக்க ஏதுவாயிற்று.

ஜனங்களுக்கு முந்தி எவ்வளவு உப்புக் கிடைத்ததோ, அதைவிட அதிக உப்பு இப்பொழுது அதேபணத்துக்குக் கிடைப்பதாயிற்று.

இராஜாங்கத்தைச் சேரவேண்டிய வரிவசூல் தொகை அநேககுடிகளிடத்துப்பாக்கியிருந்தது. இவ்விதமாய் வெகு காலம் வரை சேர்ந்து நின்ற வரிப்பணத்தைக் செலுத்தச் சக்தியற்றவர்களாய் ஜனங்கள் மிக்க கஷ்ட திசையிலிருந்தார்கள். அவர்களளிக்கிற வரிப்பணம் பழையபாக்கிக்குச் செல்லாயும். அவ்வருடத்திய புதுவரி அடுத்த வருடத்துப்பழைய பாக்கியாயு மிருந்துவந்தது. குடிகளின் ஏழமையை உத்தேசித்துப் பழைய பாக்கியை முற்றிலும் தள்ளுவது உசிதமென்றுலும், இவ்விதஞ் செய்வதசாத்தியமென நமது திவானுணர்ந்து, குறிப்பிட்ட தினத்தில் செலுத்து

3458

வோர்களுக்குப் பழைய பாக்கியிற் கொஞ்சம் தள்ளிக் கொடுக்கப்படுமென விளம்பரஞ் செய்யச் சொன்னார். இவ்விதம் வாக்களிக்கப் பெற்ற நமது திவானவர்களின் நன்மையை யடையும் பொருட்டுக் குடிகள் சீக்கிரத்தில் பணஞ்சேர்த்துத் தங்கள் பாக்கியைச் சடுதியில் தீர்த்தார்கள்.

நமது திவான் காலத்துக்கு முன் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஒவ்வொரு ரிகார்டும் பனையோலையிலெழுதப் பெற்றிருந்தது. அடியோடே இவர் அவ்வழக்கத்தை நிறுத்தினார் ; பனையோலைக்குப் பதிலாகக் கடிதங்களை உபயோகிக்கச் செய்தார்.

1875-ம் ஆண்டில் நமது திவான், நியாயஸ்தலத்தையும் வக்கீல்களையும் பற்றிய சீர்திருத்தங்களைச்செய்ய முன்பட்டார். பரீட்சைதேறியவர்களாகவாவது அல்லது யோக்கியதா பட்டம் பெற்றவர்களாகவாவது வக்கீல்கள் அவ்வூரில் இருந்தவர்கள் அல்லர். யாதொரு பரீட்சையும் அவ்வேலைக்காக அங்கே ஏற்படவில்லை. ஆகையாலதைச் சீர்திருத்துவதே முக்கியமான விஷயமென்றெண்ணி ஒரு பரீட்சையை ஏற்படுத்தினார். அதில் தேறியவர்களே பெரியகோர்ட்டிற் பேசலாமென்றும் சட்ட நிரூபணஞ் செய்தார். ஐந்து வருடகாலம் திவானாகவிருந்தபிறகு மாதமொன்றுக்கு 500 ரூ வீதமுபகாரச் சம்பளம்பெற்று நமது சாஸ்திரியாரவர்கள் 1877ஹு திருவாங்கூர் சமஸ்தான வேலையினின்றும் நீங்கி இளைப்பாறுவானமர்ந்தார்.

1877ம்ஹு ஜனவரிமீ முதல்தேதி இவருக்கு கே. ஸி. எஸ். ஐ. பட்டமளிக்கப்பட்டது. வேலையை விட்டபிறகு இவர் கனம் வெப்ஸடர் துரையுடன் 1887-ம்ஹு பஞ்சத்தால் பீடிக்கப்பெற்ற ஜனங்களுக்கு இங்கிலாண்டு ஆண்மனையாரால் அனுப்பப்பட்ட (Mansion house) பணத்தைப் பலருக்கும் வினியோகித்தார்,

இச்சமயத்தில் புதுக்கோட்டை இராஜ்யம் மிக்க க்ஷீண திசையிலிருந்தது. ஆதலால் அவ்விராஜ்யத்தைச் சீர்திருத்த 1878-ம் ஆண்டில் மதராஸ் கவர்னராயிருந்த பக்கிங்காம் பிரபு (Duke of Buckingham) இவரை அவ்விராஜ்யத்துத் திவா

ளுக நியமித்தார். இவர் வேலையை ஒப்புக்கொண்ட காலத்து அவ்விராஜ்யத்துக் கஜானு வறண்டிருந்ததாகவே கூறலாம். இராஜ்ய வருமானமோ நிலவரி ஒன்றை மட்டுமோ பொருந்தியிருந்தது. இதுவும் அமானி ஏற்பாட்டின்படி வாங்கப்பெற்று வந்தது. இவ்வித வரி வாங்கும்வழக்கம், இராஜ்யத்திற்கும் ஜனங்களுக்குங் கெடுதலாகவிருந்தது. உப்படிகாலங்களில் நிலங்களில் விளைந்திருக்கும் தானியங்களுக்கு மதிப்புப் போடவும், அதை அறுத்துக் களஞ்சியம் சேர்க்குங் காலத்துக் கண்காணிக்கவும், இறைக்காகவந்த தானியங்களைச் சேர்த்து வைக்குமிடங்களில் அதைக் காவல்காக்கவும் அநேக சிப்பந்திகள் ஏற்படுத்த வேண்டியிருந்தது. இவ்வித ஏற்பாட்டால் குடிகளுக்கு நஷ்டங்கள் ஏற்படும். அவை இராஜாங்கத்தாரையும் விடா. எப்படி எனில் சரியான காலத்தறுத்துக் களத்திற்சேர்ப்பதிற் கில்லாமல் அதிகாரிகளின் வரவை நோக்கியவண்ணமிருந்து தாமதப்படுவதால் தான்ய நஷ்டம் குடிகளுக்கேற்படும். அதிகாரிகள் மதிப்புப்போடுவதில் மிகுதியான தான்யங்களைத் தாங்கள் அபகரிப்பதினுலும், வரியாகவந்த தான்யங்களைக்காப்பாற்றி நியமிக்கப்படுஞ் சிப்பந்திச்செலவுகளாலும் இராஜ்யத்திற்கு உபாதை நேரும். மேற்கூறியவிதம் சர்க்கார் உத்தியோகஸ்தர் புரியும் அயோக்கியத்தன்மையால் அவஸ்தைப்படும் குடிகள்நாளடைவில் சாகுபடிசெய்ய மனமற்றவர்களானுர்கள்.

இவ்விதம் வரிவாங்குவதும், இதை இறுப்பதும், அதனுல்விளையும் கேடுகளும் இராஜியத்திற் கேற்காதனவென்றுதிவான் இராஜவிடங்கூறியபின், அவ்விராஜாவும் சாஸ்திரியார் மனப்படி சீர்திருத்தஞ்செய்ய வனுமதித்தனர். ஒவ்வொரு சீர்திருத்தத்திற்கும் பிரதானமாயிருக்கவேண்டிய பணம் பொக்கிஷத்தில் இன்மையால் இதை நிரப்பக்கருதியவராகி நமது சாஸ்திரிகள் வரிவிஷயச் சீர்திருத்தத்தை முதல் முதலிற்செய்ய ஆரம்பித்தனர். 'அமானி' வழக்கத்திறகு இராஜாக்கொடுத்துவிட்டுப் பணமாகவே வரியைக்கட்டும்படி குடிகளுக்காஞ்ஞாபித்தார். இதற்கு ஓர் சட்டத்தையும் ஜாரிசெய்வித்தார். ஆனுல்

குடிகள் இதன் அனுகூலங்களையறியாது ஆரம்பத்தில் கூக்குரலிட்டார்கள். குடிகள் வாயில் சாஸ்திரிகள் கண்டபடி விழுவாராயினர். இதை நிறுத்தும்பொருட்டு அவர்களுக்குள்ளிருக்கும் மற்ற பெரிய குடித்தனக்காரர்களை நேரிற்கூட்டிப் புதுவேற்பாட்டின் சாதகங்களை எடுத்துவிளக்கி ஒப்பமொழிந்தார். அவர்களால் குடிகள் அடங்கினார்கள்.

இவ்விதமாய் 4, 5 வருஷங்களுக்குள் அமானியேற்பாடு முழுதும் நின்றுவிட்டது. இதற்குப்பின் வாரவரி யேற்பாடும் வந்தது. இவ்வித ஏற்பாட்டின்வண்ணம் ஜனங்களுக்கு ஏற்படும்வரி அதிகமில்லாவிடினும், இராஜ்யத்தின் வருமானமும் செலவுபோகமிகுந்த நின்றபணமும் அதிகமாகவேயிருந்தன. இவ்விதம் மிகுந்துநின்ற பணத்தைக்கொண்டு வெகுகாலமாகத் தூர்ந்திருந்த கண்மாய்களையும் கால்வாய்களையும் வெட்டெடுக்கத் திவானவர்கள் உத்திரவு பிறப்பித்தார்.

புதுக்கோட்டை இராஜ்யத்து இரஸ்தாக்கள் அக்காலத்தில் வெகுகெட்ட ஸ்திதியிலிருந்தன. கற்களிட்டுக்கெட்டிபடுத்தப்பட்டசாலைகள் பிரயாணத்துக் குபயோகமில்லாமலும், அவ்வண்ணஞ்செய்யப்படாத பாதைகள் புழுதிமயமாயும் மணலாயுமிருந்தன. மேலும் அப்பட்டணத்து வீதிகளை இராக்காலத்தில் விளங்கவைப்பதற்கேற்ற விளக்குகள் எங்கங்கேயும்கிடையா. நியாயஸ்தலங்களும் சரியான நிலையில்லை.

தேசாசார நியாயவிசாரணைகள் இவ்விராஜாங்கத்தில் அங்குமிங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கோர்ட்டு முனிசீப்கள் சிலராலும், இம்முனிசீப்கள் விசாரணை தீர்ப்புகளின் நியாய அநியாயத்தை மறுபடியும் விசாரிக்கத்தக்க அதிகாரத்தோடுங்கூடிய மேல்உத்தியோகஸ்தராலும், தேசாசார அரசிருக்கை முதலிய விஷயங்களின் விசாரணை அதிகாரம்பெற்ற புதுக்கோட்டை நியாயஸ்தல நீதிபதி ஒருவராலும், தமது ஆலோசனைகளில் 'ஷிரிகில்' அல்லது திவானால் உதவிசெய்யபெற்று அரசனால் மேல் பார்க்கபெ

ற்று விளங்கும் இராஜாங்க முழுமைக்கும் ஒரே நியாயஸ்தல மாகவுள்ள அப்பீல் கோர்ட்டின்றினும் நடத்தப்பெற்றுவந் தன. துஷ்க்கிருத்தியத்தைப்பற்றிய நியாயவிசாரணைகள் அவ் விராஜாங்கத்தில் சிற்சிலவிடத்துள்ள சப்மாஜிஸ்திரேட்களாலும், தாசில்தார்களாலும், டிப்டி கார்வார்களாலும் விசாரிக்கப்பெற்று வந்தன. வித்தியாவிஷயங்கள் மேம்பாடான நிலையிலிருக்க வில்லை. பிரதமப்படிப்பைப் பரவச்செய்ய மிக்ககவலை எடுத்துக் கொள்ளவேண்டிய ஆவசியமு நேர்ந்தது. பெண்கள் கல்வியும் முக்கியந்தானென்று அக்காலத்தில் அவ்விராஜாங்கத்தில் ஒருவரு மறிந்திருந்ததாகத் தெரியவில்லை. பெறும்பேறுகளால் ஆதரி க்கப்பட்ட தேவஸ்தான கைங்கிரியங்கள் மிக்க அஜாக்கிரதையு டன் செய்யப்பெற்றதால், காரிய விசாரணையும் கண்காணிப்பும் வேண்டுவ தவசியமெனத்தெரிந்தது. சுருக்கமாக, அரசாட்சி யினொவ்வொருபகுதி உத்தியோகங்களும், உடனே சீர்திருத்தப் படாவிடின் க்ஷீணதிசையை யடையும்போலிருந்தது. வருஷத் திற் செலவுபோக அரசிறைப்பணத்து மீதமாகிய சொற்ப தொ கையைக்கொண்டு எல்லாவித சீர்திருத்தங்களையும் உடனேசெய் வது அசாத்தியமெனக்கண்டார். ஏககாலத்தில் அரசாட்சியி னொவ்வொரு பகுதிக்கும் சீர்திருத்தம் ஏற்படாவிடின், அர சாட்சி முழுதுமே நாசமுறும் என்பதையும் ஆலோசித்தார். அதிருப்திக் காஸ்பதமான காரணங்களுக்காக முன்னோரால் கொடுக்கப்பட்ட இனும் நிலங்களைக்குடிகளிடம் இருந்து இராஜா ங்கத்திற்கு சேர்த்துவதாகவும் உறுதி செய்துகொண்டார்.

அரசாட்சியின் ஒவ்வொரு பகுதியிலுள்ள கெடுதல்களையும் செம்மைப்படுத்திக் குறைவுகளைப் பூர்த்தி செய்யத்தம்மால் எவ் வளவு சாத்தியமோ அவ்வளவையும் அதிக சாமர்த்தியத்துட னும்செய்ய நமது திவான் தீர்மானித்தார்.

மகாராஜா பள்ளிக்கூடம் 1882-ம் வருஷத்தில் 2-வது கிரே ட்காலேஜாக மாற்றப்பெற்றது. இவர் சீர்திருத்தம்செய்ய நினைத்த அடுத்த விஷயம் காட்டிலாகாவைப்பற்றியது. புதுக்கோட்டைப் பட்டணத்துக்கும் அதைச்சார்ந்திருந்த ஊர்களுக்கும் அடுத்த

காட்டிவிருந்த விறகே உபயோகமாகிவந்தது. நாளடைவில் காடுமுழுதும் இதனுல் அழிந்துபோய்விடும் என்றெண்ணி இவ்விராஜதானிக்குத் தெற்கேயுள்ள ஜில்லாக்களில் சவுக்குமரங்கள் விறகுக்கு உபயோகமாவதைநோக்கி பாலாற்றுக்கரையில் ஆயிரக்கணக்கான சவுக்குமரங்களைப் பயிரிடும்படி உத்திரவளித்தார். இவர் மனத்தைக்கவர்ந்த அடுத்த விஷயம் குளங்களின் நிலைமை. ஜனங்களுக்கு ஸ்நானபானத்துக்கு உபயோகமாகும் வண்ணம குளங்களைச்செய்து அதில் வேண்டியவளவுஏராளமான தண்ணீரை நிரப்பி அதிலுள்ள சேற்றையும் வண்டல்களையும் அப்போதைக் கப்போது நீக்கிவைப்பதே அவசியமென்ருர். இதற்காகச் சிறுகச்சிறுக வேலை நடத்திவந்தால் காலதாமதம் அதிகமாகுமென்று கருதி இராஜ்யத்தைச் சேர்ந்த சிறு கிராமங்களிலுள்ள வேலையாட்களை யெல்லாம் முறைப்படியே வந்து வேலைசெய்யவேண்டுமென ஆஞ்ஞாபித்தார். 3000 முதல் 7000 ஜனங்கள் வரை ஒரு குளமல்லது மற்றொருகுளத்தில் வேலைசெய்தார்கள். ஆகையால் சொற்ப காலத்திற்குள் பெருங்குளங்களிலிருந்து சேறும், வண்டலும் எடுக்கப்பட்டன. இவ்வேலை ஆரம்பித்து முடிக்கப்பெற்ற சில வருஷங்களில் நம் அதிர்ஷ்டத்துக்கேற்ற வண்ணம் மழை அதிகமில்லை. இவ்வண்ணம் குளங்களையெல்லாம் தூர்வையெடுத்து, வருஷமுழுது முபயோகமாகும் வண்ணமவைகளைச் செய்தபிறகு, புதுக்கோட்டையிலிருந்து கோகர்ணம் போகிறரஸ்தாவையும், திருச்சி தஞ்சாவூர் மதுரை செல்கிற ரஸ்தாக்களையும் கவனித்தார். புதுக்கோட்டை ரோட்டுகளெல்லாம் நன்ருய்ச் சாலைகளிடப்பெற்றுக் கெட்டிப்படுத்தப்பட்டன. புதுக்கோட்டை இராஜ்யத்துச் சாலையும், ஆங்கிலேய அரசாட்சியினுர்களின் சாலையும், சேருமிடத்தில் ஒருகுருடன் நின்று பார்த்தாலும் முந்தியசாலைகளை விசேஷமானவையென்றே கண்டுபிடிப்பான். திருச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கும், புதுக்கோட்டையிலிருந்து தஞ்சாவூர் திருச்சிக்கும் இடையே ஓடும் ஜட்காவண்டிக் குதிரைகளுக்குப் புதுக்கோட்டை சமஸ்தான இரஸ்தாவிலிருந்து

வேறு ஊர் இரஸ்தாவுக்குச் செல்லும் பொழுது உற்சாகம் குறை வதை இன்னும் நாளையும் நாமே நோக்கலாம்.

புதுக்கோட்டை இராஜா, 1886ஷ எப்பிரல்மீ த்தில் காலஞ்சென்றார். இளையவர் ராஜாபட்டங் கட்டிக்கொண்டார். இவர் மைனரானபடியால் திவான், அதுமுதல் மந்திரியும் அதி பதியுமானார். தாம் அநேக நாட்களாகச் சிந்தித்துக்கொண்டி ருக்கும் இராஜாவின் அநுமதி கிடைப்பது சிறிது சிரமமாயிரு ந்த சீர்திருத்தங்களை எல்லாம் இப்பொழுது தாமே உண்டாக் கும் வல்லவராயினர். இராஜா இறந்ததின்பின் இவர் சீர்திருத்த எடுத்துக்கொண்ட முதல் விஷயம் அப்பீல்கோர்ட்டு சீர்திருத்தம். அப்பீல் கோர்ட்டு காரியங்களை யெல்லாஞ்செய்ய இதுவரை ஒரே ஒரு உத்தியோகஸ்தர்தானிருந்தார். அப்பீல் ஜட்ஜிகளுள் கடைசியான வெங்கிட்டராவ் அப்பொழுதுதான் உபகாரச்சம் பளம் பெற்று வேலையைவிட்டார். அதுமுதல் அப்பீல்கோர்ட் டும் எடுபட்டது. 1887ஷ ஜனவரிமீ முதல்தேதியன்று இதற் குப்பதில் சென்னை ஹைகோர்ட்டின் மாதிரி 3 ஜட்ஜிகளுடன் புதுக்கோட்டையில் நியாயஸ்தலமொன்றை இவர் ஏற்படுத்தினர்.

திவான் மனத்தை கவர்ந்த அடுத்தவிஷயம் இனம் நிலங் களை சுவாதீனப்படுத்துவதும், இப்பொழுது இருக்கப்பட்டவர் களாலேயாவது, அவர்கள் முன்னோர்களாலேயாவது இராஜாங் கத்துக்குச்செய்யப்பட்ட தொழில்களுக்கோ அல்லது செய்ததா கச்சொல்லிக் கொள்வதற்காகவோ கொடுத்திருக்கப்பட்ட சில வித கொடைகளைக்கைக்கொள்ளுதலுமே. முதலில் சொன்ன சீர்திருத்தத்தைச்செய்துமுடிக்க சில வருஷங்கள் வேண்டியிருந் தது. ஏனெனில் இனம் நிலங்களின் விஸ்தீரணத்தை அளந்தறி யவேண்டியிருந்தது. உண்மை அளவுக்குமேல் இனம் சொந்தக் காரர்களிடமிருக்கிற நிலத்தையெல்லாம் இராஜ்ஜியத்திற்குச் சேர் ந்தனவென்று பாத்தியம் கொண்டாடலாயிற்று. மற்றவைகளு க்கு சொல்பவரி போடப்பட்டது.

இச்சீர்த்திருத்தம் சில இனம்தாரர்களுக்கு வருத்தத்தை யுண்டுபண்ணியபோதிலும் கஜானவில் அதிகபணஞ்சேரச்செய்

தது. சேஷய்ய சாஸ்திரிகள் ஆளுகையில் அநேகஞாபகச்சின்ன ங்களுள் பப்ளிக் ஆபீஸ் கட்டடங்களுமொன்றே, புதுக்கோட் டையில் மூலைக்கொன்றாய் பல ஆபீஸ்கள் இருந்தன. ஒரேதின த்தில் இரண்டு ஆபீஸ்களின் சங்கதியறிய வேண்டியிருந்தவன் மிக்க கஷ்டத்திற்குள்ளாகவேண்டியிருந்தது. ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை செல்வதற்கே காலஞ்சரியாகவிருந்தது. அது இப்புண்ணியரால் நீங்கியது.

16-வருஷகாலம் திவானுகவும், திவான் ரீஜண்டாகவும் நமது சாஸ்திரியாரிருந்த காலத்துச்செய்த முக்கியமான சீர்திருத்தங் கள் மேற்கூறியவைகளே. ஒவ்வொரு சீர்திருத்தத்தையும் மிக்க ஜாக்கிரதையுடன் சிந்தித்து அபஜயமடையாது செய்துமுடித் தார். கஜானுவின் பணமின்மையும் சிற்சில சீர்திருத்தங்களைச் செய்ய அவரைக்கட்டாயப்படுத்தியது. அவ்வரியால் தாக்கப்ப ட்ட சிற்சிலர் அவ்வித சீர்திருத்தங்களைக்கண்டு முணுமுருத்தா லும், அச்சீர்த்திருத்தங்கள் நியாயமில்லையென்று நல்லறிவோடு கூடிய எவனும் சொல்லத்துணியான். இது சரசம். பொதுஜன நன்மைக் குபயோகப் படக்கூடிய கட்டிடங்களை ஸ்தாபித்தது, பல முக்கிய நிரந்தர சீர்திருத்தங்களைச்செய்தது, இராஜியத்திலு ள்ள இரஸ்தாக்களையெல்லாம் செவ்வைப்படுத்தியது, புதுக்குள ங்களைத்தோண்டிப் பழைய குளங்களைத் தூர்வையெடுத்தது, கல் விக்கு அதனிலும் விசேஷமாய்ப் பெண்கள் கல்விக்குத்தூண்டு கோலாகயிருந்தது-இவைகள் எல்லாம் அவரைப்பற்றிப்புகழ்ந்து பேசச்செய்கின்றன. 1300–ம் பசலி அரசாட்சி அறிக்கைப்பத் திரத்தில் அவர் கூறியதாவது:—

"புதுக்கோட்டை இராஜ்யம் சிறிது; எனினும் அதன்வி ஷயங்கள் பல பெரிய இராஜ்யமாகிய திருவாங்கூர்ச்செய்திகளை விட என் கவனத்தையும் கவலையையும் எடுத்துக்கொண்டன, அது எனக்கே அதிசயமாகவே இருக்கின்றது."

பத்து வருஷத்துக்கு முந்திப்பார்த்தவர்கள் இப்பொழுது பார்ப்பார்களேயாகில், அதுதானு புதுக்கோட்டை பட்டணம்

என்று கூறி அதிசயிப்பர் என்பதற்குத்தடையேயில்லை. புதுப்பேட்டைகளும், உபநகரங்களும், புதுக்குளங்களும். புதுத்தெருக்களும் இவரால் உண்டாயின. தெருத்தோறும் விளக்குகளும், சந்திகளில் தீபஸ்தம்பங்களும், பாதையொழுங்கும், நகரிற் செல்வோர் மனதைக்கவரத்தக்கனவே. பட்டாளத்திருத்தமும் போலீஸ் பந்தோபஸ்துச்சீர்மையும் சாஸ்திரிகளின் நினைவை யூட்டுகின்றன.

மேன்மைதங்கிய பிரஹதாம்பாள் சகாயன் மார்த்தாண்டபைரவிதொண்டைமான் அரியாசனத்தேரிய 1894௵ நவம்பர் மாசம் 27௳ நமதுசாஸ்திரியாரவர்கள் வேலையைவிட்டு நீங்கினர். அக்காலத்து சென்னைக்கவர்னராயிருந்த வேன்லாக்குப்பெருமான் நமது சாஸ்திரியாருக்கு முகமனாக பட்டங்கட்டிக்கொண்ட இராஜாவைப்பார்த்துச்சொல்லியதாவது:—

"இன்று பட்டங்கட்டப்பெற்று அடைகிற இராஜ்யமானது 20-வருஷங்களுக்கு முன் அதிக க்ஷீணதசையி லிருந்தது. இப்பொழுது இருக்கப்பெற்ற விஷயதோற்றங்களோ அப்பொழுதிருந்தவற்றிற்கு முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. கடனில்லாததும் 3-லட்சம் ரூ. கஜானாவில் இருக்கபெற்றதுமான இராஜ்யமொன்றைத்தாம்அடைகிறீர், இவ்விராஜ்யத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் ஆவசியமான சீர்த்திருத்தங்கள் தென்படுகின்றன. அரசாட்சியி னொவ்வொரு பகுதியும் சீர்திருத்தப்பட்டிருக்கின்றது. அறசிறை விருத்தியாகி யிருக்கிறது. ரோட்டுகள் மிக்க நேர்த்தியாக விருக்கின்றன. பொதுஜன நன்மைக்கான கட்டிடங்கள் இராஜதானி நகரை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. இத்தனைக்கும் காரணபூதர் நமது சாஸ்திரிகள்தான்."

வேலையை விட்டபிறகு சாஸ்திரிகளுக்குத் தமது கட்டையைவிடுவதற்கு ஏறக்குறைய ஒருவருஷத்துக்குமுன் தான், கெ. ஸி. எஸ். ஐ. ப்பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது, நமது சாஸ்திரியார் இறந்தமையைக் குறித்துச்சென்னை இராஜாங்கத்தார் பிறப்பித்த உத்திரவாவது.—

"கவர்னரவர்களும், கவுன் சிலர்களும் ஸர், சேஷய்ய சாஸ்திரிகள் காலஞ்சென்ற சமாசாரத்தை யறிந்து மிக்க விசனிக்கிறார்கள். காலஞ்சென்ற சேஷய்ய சாஸ்திரியார் 1848ஆ ரிவினியூ போர்ட்டு வேலைக்குப்புகுந்தார். 1894ஆ வரை நடுவில் சிற்சிலகாலம் நீங்கலாக இராஜ்யத்துக்கு உழைத்திருக்கிறார். நியாய மாகவும் புத்தி சாதுரிய மாகவும் எல்லா வேலைகளையும் பார்த்தார். இந்த இராஜதானியில் அவர்காலத்திலிருந்த கவர்னர்களெல்லோராலும் புகழ்பெற்றிருக்கிறார். ஜனங்கள் க்ஷேமத்துக்கு மிக்க யுழைத்திருக்கிறார். 1883ஆ த்தில் சட்ட சபையின் அவயவியாக விருந்தார். கவுன்ஸிலில் இவர் இடித்துக்கூறிய வை சாமர்த்தியமும் பாரபட்ச மில்லாதவையாயுமிருந்தன. இவர் பிறர் பின் பற்றக்கூடிய உதாரண சீலத்துவத்தையும், கண்ணியமை பொருந்திய பெயரையும் தமக்குப்பின் நிலைத்துநிற்கும் வண்ணம் செய்திருக்கிறார்." கவர்னர்ஜெனரல் கர்ஸன் பிரபுவுக்காக அந்தரங்க மந்திரி நமது சாஸ்திரியின் புத்திரருக்குக் கொடுத்த தந்தி செய்தி.—

"மிக்க கியாதிபெற்றவரும், இந்தியா சூழ்ச்சித்துணைவர்களில் முதன்மையானவரும், அநேக பொதுநன்மைக்குரிய விஷயங்களைச் செய்துள்ளவருமாகிய தமது தகப்பனார் காலமானது, கனம்வைஸ்ராய் அவர்களுக்கு ஆராத்துயரை உண்டாக்கியது."

சென்னப்பட்டணம் கவர்னருக்குப் பதில் அவர் பிரைவேட் செக்ரடரி எழுதுகிறார்:—

"இந்தியாவின் தென்பாகத்துக்கு மிக்கதேர்ச்சிபெற்றுந் தற்காலதுக்குக் கொப்ப நடக்கும் சூழ்ச்சித்துணைவ ரொருவர் இறந்து நஷ்டமுண்டானதைப்பற்றி மிக்க வருந்துகிறார்."

திருவாங்கூர் மகாராஜா எழுதியதாவது:—

"இச்சமாசாரத்தைக் கேட்டவுடன் துக்க சாகரத்தில் மூழ்கினேன். முதிர்ந்த சூட்சித்துணைவர் காலமானது ஜனங்களுக்கே ஏற்பட்ட நஷ்டமாதலால் எல்லோரும் வருந்துவார்கள். என்

க்ஷேமத்தையும் என் தேசக்ஷேமத்தையும் கோறி வந்த லிலாக்கி யதை பொருந்திய நன்பனொருவனை நானிழந்தேன்."

''சாதல் வந்தடுத்த காலுந் தனக்கொரு சாதலின்றிப்
பூதல மிருக்குங்காறும் புகழுடம் பிருக்கும்."
"ஒன்று உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன்றில்''

# அனுபந்தம் 1.

## 1. செய்ந்நன்றி மறவாமை.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

1. செய்ந் நன்றியறித லென்றால் என்னை, அது எத்தனை வகைத் தாமென்பது.

(தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமையே செய்ந் நன்றி யறிதலாம்.

காலத்தினாற் செய்த நன்றி, பயன்றூக்காது செய்த நன்றி, பயனை யெண்ணிப் புரிந்த நன்றி இவைகளின் விவரணை.)

2. இவ்வுலகில் நமக்கு முக்கியமாய் நன்மை செய்யப்பட்டிருப்பவர்கள் யார்?

தாய்
தகப்பன்
குரு
பெரியோர்
அரசன்
தெய்வம்

இவர்கள் எக்காலத்தும் நமக்கு நன்மையையே செய்கிறார்கள். இவர்களிடத்து என்றும்நாம் நன்றியுடையவர் களாயிருக்க வேண்டுமென்பது.

3. நன்றிமறப்பதால் சம்பவிக்ககூடிய தீமைகள்.

"எந்நன்றிகொன்றார்க்கு முய்வுண்டா, முய்வில்லை
செய்ந்நன்றி கொன்றமகற்கு"

பஞ்ச மகாபாதகங்களைச் செய்தவருக்குப் பிராயச்சித்தம் உண்டு. செய்ந்நன்றி மறந்தவருக்குஉய்வில்லை ; நரகமே

கிடைக்கும். இராமாயணத்தில் இலட்சுமணர் சுக்கிரீவனுக்குச்சொல்லியது.

''சிறைவகல் காதற்றாயைத்தந்தையைக் குருவைத்தெய்வப்
பதவியந் தணரையாவைப் பாலரைப்பாவை மாரை
வதைபுரிகு நற்குமுண்டாமாற்றலா மாற்றன்மாயா
வுதவிகொன்றாற் கென்றேனுமொழிக்கலா முபாயமுண்டோ''

4. நன்றிமறவாமையே ஒவ்வொரு மனிதனும் தங்கள் கடமைகளுள் ஒன்றாக பாவிக்கவேண்டுமென்பது. நன்றி செய்தவருடைய சிநேகத்தை விடலாகாது. நன்றி செய்தவன் தீமைசெய்யினும் அத்தீமையை மறப்பதே இலாக்கியம்.

''கொன்றன்ன வின்னாசெயினு மவர்செய்த
வொன்று நன்றுள்ளக்கெடும்''

''ஆன்முலையறுத்த வறனிலோர்க்கு
மாணிழைமகளிர் கருச்சிதைத்தோர்க்கும்
பார்ப்பார்த்தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய்மருங்கிற் கழுவாயுமுளவென
நிலம்புடைபெயர்வ தாயினுமொருவன்
செய்திகொன்றோர்க் குய்தியில்லென
வறம்பாடிற்றே யாயிழைகணவ.''

---

## 2. ''ஆறுவதுசினம்''

ஆத்திச்சூடி.

---

1. இவ்வசனத்தின் பொருள்.

2. மனிதனுக்கிருக்கவேண்டிய இன்றியமையா குணங்களுள் இதுவுமொன்று.

(கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய், தந்தை, கோபமே குடிகெடுக்கும். தீராக்கோபம் போராய்முடியும். கோபந்தோன்றின் மனக்கலக்கம் உண்டாகும். அது மூலமாய் அறிவுகெடும். அதிலிருந்து துன்பஞ்செய்ய உடன்படுவோம். ஆகையால் கோபத்தை அடக்க வேண்டும்).

3. மெலியாற்மேற்கோபஞ் சொய்யாதொழிதலே, சினமடக்கினதாகும்.

"சொல்லிடத்துக்காப்பான் சினங்காப்பான்னல்லிடத்துக்
காக்கினென் காவாக்காறென்"

(வலியாற் மேற்செய்யுங்கோபம் அவருக்கு தீங்குசெய்யாது).

4. ஒருவனுக்கு கோபத்தினும் மேற்பட்ட பகைவேறில்லை. ஆகையால் அதனையடக்கி ஆளவேண்டும்.

5. கோபத்தை யடக்குமுறை.

(தம்மை ஒருவன் இழிப்பின், தம்மிடத்து அவ்விழிவு குணமிருப்பின், அதை எடுத்துச்சொன்னதற்கு அவனைப் போற்றவேண்டும். இல்லாவிடின், "அவன்கூறுவது பொய், பொய் நிலைபெறாது" என்று எண்ணிச்சும்மாயிருத்தல்வேண்டும்.)

6. கோபத்தையடக்குவதால் நாமடையும் பயன்

"உள்ளியவெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளியெனின்"

(கோபத்தை நினையானாகில் தான் எண்ணியதை யெல்லாமடைவான்).

"சினத்தைப்பொருளென்று கொண்டவன்கேடு
நிலத்தறைந்தான் கைபிழையாதற்று"

---

## 3 சுதேசாபிமானம்.

1. தாம் பிறந்தவூர் எவ்வளவு சிறிதாயிருப்பினும், அவ்வூரில் பற்று இருப்பதும், அவ்வூரார்கள் நன்குவாழ நினைப்பதும் மனிதர்களுக்கு சகஜமே. இதுவே சுதேசாபிமானமெனப்படும். இவ்வெண்ணம் மனத்துதிக்காத மனிதர்களை மனிதர்களல்லவென்றே சொல்லல்வேண்டும். (Sir Walter Scott சொல்லுகிறது)

2. தேசச் க்ஷேமத்துக்குவேண்டிய முயற்சிகளைச்செய்வதென்று இவ்வபிமானம் பொருள்கொள்ளுமேயன்றி, சண்டைகளை விளைவித்துக்கொண்டு அச்சண்டைகளில் இவர்கள் சௌரியத்தைக் காட்டலென்று பொருள் கொள்ளாது.

(கல்வி விஷயங்களில் முயற்சி, சாஸ்திர ஆராய்ச்சிசெ செய்து தமதுநாட்டை நன்மைபெறச்செய்வது இவை போன்றவைகள் தேசாபிமானமாகும்).

3. வியாபாரம், கைத்தொழில் இவைகளில் சுதேசாபிமானம்

4. தேசாபிமானிகளின் சில உதாரணங்கள். தெல், ஹாம்ப்டன் ஷேக்ஸ்பியர், மில்டன்.

## 4. இளமைப்பருவமும் முதுமைப்பருவமும்.

1. எல்லாப்பருவங்களினும் இளமைப்பருவம் சந்தோஷமுள்ளதென்று மதிக்கப்படுவதேன்?
(இளமைப்பருவத்துக்கு உலகம்புதிது. கஷ்டங்கள் அதிகமில்லை. சகலவித விஷயங்களும் சந்தோஷத்தை விளைவிக்கக்கூடியது. புத்தி அபிவிருத்திசெய்யக்கூடிய காலம், மனத்தை சீர்பெறச் செய்யுங்காலம்.

2. மற்ற பருவங்களினும் இளமைப்பருவத்துக்கு அதிக சிலாக்கியதை ஏற்பட்டுளதேன் ?

(மற்ற பருவங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடிக்கொள்ளுங்காலம் இளமைப்பருவமே. கவலை அதிகமில்லாப்பருவம் இளமைப்பருவமே.)

3. "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றவண்ணம் இளமைப் பருவத்தில்படிந்த வழக்கங்கள் எந்நாளும் குடிகொண்டுவிடும். ஆகையால் அப்பருவத்தில் நல்லொழுக்கங்களையே பயில முயலவேண்டும்.

4. முதுமைப்பருவத்தின் சௌகரியங்கள்.

(முதுமைப்பருவத்தை எல்லோரும் நன்குமதிப்பார்கள்; கற்றோர்களாயிருப்பின் எல்லோருக்கும் கல்விபுகட்டி எல்லோரையும் உய்விக்கச்செய்யலாகும். முதுமைப்பருவத்தவர்கள் அனுபவஸ்தர்களாயிருப்பார்கள்.)

5 அப்பருவத்திலுள்ள அசௌகரியங்கள்

## 5. பரோபகாரம்.

---

1. பரோபகாரம் என்பதியாது?

2. இவ்வுலகின் கணுள்ள அசேதனப்பொருள்களிடத்தும் இக்குணம் காணப்படுகிறது.

(தருக்கள் சுவையுள்ள கனியைத்தருவது,விருட்சங்கள் நிழலைக்கொடுப்பது, புயலினம் மழைக்குக்காரணமாகிறது முதலியவைகள், காக்கை இனத்தாரை உண்பித்து தானும் உண்கிறது.)

3. ஆகையால் மனிதரிடத்து இக்குணமிருப்பது ஆவசிகமேயாகும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதெனிற்
தோன்றலிற் தோன்றாமை நன்று."

பிறருக்குதவிசெய்யாதவன் மனிதனாகமாட்டான் பிறவிப்பயனாகிய பரோபகாரத்தைச்செய்து புகழைத் தேடுவதே மேன்மையான காரியமாகும்.

4. ஆபத்துக்காலத்து உதவும் உதவியே மேன்மையுடைத் தாம், பிரதிப்பிரயோஜனத்தை எதிர்பார்த்துச்செய்யும் உபகாரம் உபகாரமல்ல.

5. இக்குணம் அறிவுடையவர்களிடத்து நன்குவிளங்கும் உதாரணங்கள்.

(ததீசிமுனிவர், குமணன், அமணன், கர்னன்).

"இடனில்பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சியவர்"

"மெய்ப்பயன் கொண்டார்
சுளியார்சுமை போடுதற்கு"

---

## 6 செட்டு.

---

1. செட்டுக்குடித்தனம் ஏன் அவசிமென்பது?

(சந்தோஷம், சௌக்கியம் இவைகளைத்தரும்).

2. செட்டுக்குடித்தனம் எப்படி சாத்தியம்.

(ஒன்றையும் வீணாக்கக்கூடாது. வரவுக்கு சிலவு குறைந்தேயிருத்தல்வேண்டும். அனாவசியமான சிலவைத் தள்ள முயலவேண்டும். பண்டங்கள் எவ்வளவுமலிவா யிருப்பினும் நமக்குத்தேவையில்லாவற்றை நாம் கொள்ளக்கூடாது. "பூசனிக்காய்போகிற இடந்தெரியாது

கடுகுபோகிற இடத்தையே" ஆராய்ந்து கொண்டிருத்தல் கூடாது.)

3. செட்டு எதினால் அசாத்தியமாகிறது?

(பிறர்போல தானும் செலவழிக்க வேண்டுமென்றெண்ணல், வீண்பெருமைகொள்ளல், சக்திக்குமீறின செலவுகளைச் செய்யத்துணிதல், பெரும்போக நுகர்ச்சி, மிகுந்த தாராளக் குணத்துடனிருத்தல், அஜாக்கிறதை.)

---

## 7. "வைகறைத் துயிலெழு"

ஆத்திச்சூடி.

---

1. இவ்வாக்கியத்தின் பொருள்.

(தினந்தோறும் விடியிற்காலத்தில் நித்திரையை விட்டு எழுந்திரு.)

2. அப்படி எழுதுவதால் என்னபிரயோஜனம்.?

விடியற்காலந்தான் சகலவித்தைகளையும் பயிற்சி செய்யத் தக்ககாலம், சகலவித்தியார்த்திகளும் காலை வேளையில் சிரமப்பட்டு வாசிப்பதை நாம் பார்க்கலாகும், விடியற் காலத்தில் விழிப்பவர்களுக்கு புத்திதெளிவாயிருக்கும், வாதம் பித்தம் சிலேஷ்மம் தங்கள் இடத்திலேயே பொருந்தும். காலையில் எழுந்திராவிடின் அசதி உண்டாக்குகிறதை பிரத்தியட்சாநுபவத்தில் காணலாம்.

"புத்தியதற்குப்பொருந்து தெளிவளிக்குஞ்
சுத்தநரம்பினறற்றூய்மையரும்-பித்தொழியுந்
தாலவழியாதபித்தந்தத்தநிலை மன்னு மதி
காலைவிழிப்பின் குணத்தைக்காண்."

6. காலையில்எழுவதற்கு உபாயம்.'' (இரவில்பத்துமணிக்கு படுக்கவேண்டும். சேமங்கிபுனுஞ்சாமத்துறங்கு.'' என்பதையும்நோக்குக,)

## 8. பழகப்பழக பாலும் புளிக்கும்

1. இப்பழமொழியின்பொருள்.

(மதிப்புடன்வைத்திருக்கும் பொருள், நாம் அடிக்கடி காண்பது காரணத்தால் மதிப்புக்குறையக்காண்கிறோம். நாம் அதிகம்பழகுமுன் ஒரு மனிதனை வெகுமரியாதையுடனும் வெகுமதிப்புடனும் பார்க்கிறோம். அதிகப் பழக்கம் அவர்களையும் சாதாரணமனிதர்களாக பாவிக்கச்செய்கிறது. ஒருவிஷயத்தைப் பற்றிநன்கறிவதின் முன்னர் மதிப்புக்கொள்வதுசகஜமே. "தூரத்துப் பச்சைவெழுமூன்றிக்கும்")

1. ஒருமனிதனுடன் அதிகம் நாம் பழகுவதாய், அவர்களிடத்துள்ள உள்ரந்திரங்களையெல்லாம்நா மறிகிறோம். அதினால் அவரிடத்துள்ள மதிப்புக்குறைகிறது.

3. வேடர்கள் காட்டுமிருகங்களைக் கண்டு பயப்படுவதில்லை, யுத்தவீரர்கள் போருக்கஞ்சுவதில்லை. இவைகளெல்லாம்பழக்கத்தின் காரணங்களே.

4. உண்மையான மதிப்புள்ளவர் எப்பொழுதும் மதிப்பை இழப்பதில்லை. (Socrates)

## 9. குறித்தகாலந்தவறுமை

1. இதின்பொருள்.

2. குறித்தகாலத்தில் காரியஞ்செய்கிறவனடையும் பயன். (காரியங்களை நன்கு செய்கிறான்; எல்லோராலும் நன்கு

மதிக்கப்படுகிறான்; சௌகரியம் அதிகமடைகிறான்; சுறு சுறுப்பு, ஊக்கம் பிறரை ஹிம்சியாதிருத்தல்; பொய் பேசாமை இக்குணங்கள் அவனிடம் காணலாகும்.)

3. குறித்தகாலந்தவறுதலின் கெடுதல்கள்.

(வேளைக்குச் சாப்பாடில்லை, தான் தொந்திரவடைதல், வேலைக்காரர்களுக்கும், குடும்பத்திலுள்ளவர்களும் ஹிம்சை, தான் பிறரால் அவமதிக்கப்பட்டு மரியாதை இழத்தல், காரியநஷ்டம். மாகராணியார் படம் பிடிக்கச் சென்றவன் குறித்த காலந்தவறிச் சென்றதால் அடைந்த நஷ்டம்.)

4. இந்துக்களிடத்து இக்குணமில்லாமை.

(அவர்களுக்குக் காலத்தினருமை தெரியாது. 2-மணி நேரங்களுக்கு முன் இரயிலுக்குப் போயிருத்தல். சாமான் விற்கிறவன் காலத்தைப் போக்குதல், பண்டங்கள் வாங்கச் செல்பவன் காலத்தைக்கழித்தல் முதலின.)

5. புகைவண்டி, தபால் இவைகள் குறித்த காலந்தவறினால் நாமடையும் கேடு

## 10. சக்கரநெறி நில்

ஆத்திச்சூடி.

1. இவ்வாக்கியத்தின் பொருள்.

(அரசனது ஆக்கினைக்கு நீ அடங்கி நட.)

2. அரசர்கள் நமக்கு சகலவித சௌகரியங்களையும் நன்மைகளையும்செய்கிறவர்கள்; ஆகையால் அவர்களிடத்து நன்றியுடனிருப்பது அவசிகம்.

3. "அரசன் கடவுளின் அவதாரம்," என்பது நமது முன்னோர் கொள்கை. ஆகையால் அரசர்களிடத்து தெய்வ பக்தி செலுத்தவேண்டும்.

(இந்த உத்தமமானகுணம் நமது நாட்டில் என்றும் இருந்து வருகிறது. சுபமுகூர்த்த காலங்களில் இராஜ தாம் பூலமென்று, அக்கிராமத்து நாட்டாண்மைக் காரர் களுக்கு இன்றும் வழங்கிவருகிறோம்.)

4. "வேந்தன் சீறின் ஆந்துணையில்லை" என்றவண்ணம் நாம் இராஜ ஆக்கினைமீறின் தண்டனைக்குள்ளாவோம்

5. இராஜபக்திக்குதாரணங்கள்.

---

## 11. தைரியம்.

---

நற்காரியங்கள்செய்வதில், எதற்குமஞ்சாது மனந்தளரா திருத்தலே தைரியமெனப்படும்.

(பயந்தெரியாது செய்யுஞ்செய்கைகளைத் தைரியத்துடன் செய்தார்களென்று சொல்லுவதும், குழந்தை அறியாது நெருப்பைத்தொடுகிறது, துஷ்ட ஜந்துக்களைப் பிடிப்பது போன்றதான செய்கைகளைத் தைரியத்துடன் செய்த தென்று சொல்லுவதும், ஒரு காரியத்தைச் செய்யா விடின் தண்டனை கிடைக்குமென்ற அச்சத்தால் கஷ்ட மான காரியமொன்றைச்செய்து முடித்தலும். இவைக ளெல்லாம் தைரியத்துடன்புரிந்த செய்கைகளாகா.

2, தைரியமுடையவர்களுக்கு எக்காரியமும் சாத்திய மாகும்.

3. அதிக தைரியம் முட்டாள்த்தனமேயாகும்.

(புகைவண்டி ஓடும்பொழுது, பண்டமேதேனும் கீழே விழுந்துவிட்டால், தான் அதிக தைரியசாலி என்றெண்ணி வண்டியினின்றும் குதித்து அப்பண்டத்தை எடுக்க

போவது முட்டாள்த்தனமேயன்றி தைரியத்தைக்காண் பியாது, இது அஜாக்கிறதையே காண்பிக்கிறது.

4. துன்பம் வந்தகாலத்திலும் துணிவழியாமல் தைரியத் தையே கொண்டொழுகல்வேண்டும். அது பெருமையை த்தருவதுடன் எல்லாவித காரியசித்திகளையும் உண்டு பண்ணும்.

---

## 12. மழை அதின் பிரயோஜனங்கள்.

---

1. மழைஎப்படி உண்டாகிறதென்பதும், எந்தக்காலத்தில அதிக மழைபெய்யுமென்பதும், மழைக்கு இன்றியமை யாதவைகளும்.

2. கல்மழை என்றால் என்ன? அதைப் பற்றிய விபரம்.

3. மழையின் உபயோகங்கள்.

உஷ்ணத்தைத்தணிக்கிறது; கெட்டகாற்றை விலக்குகி றது; சிலவியாதிகளைத்தணிக்கிறது, (கால்ரா, காய்ச்சல்) செழிப்பான பூமிகளுக்குக்கூட மழை ஆவசிகம் மழை த்தண்ணீரைத்தேக்கிவைத்து வேளாண்மைக்கு உப யோகித்துக்கொள்வது.

## 13. நதி. உபயோகங்கள்

---

1. நதி எவ்வாறு உண்டாகிறது.

2. உபநதி, கிளைநதி, நதியின் மூவகை நிலைகள்.

3. நதியின் பிரயோஜனங்கள்

4. நதியின் பிரவாகத்தாலுண்டாகுங்கேடுகள்

5. இருப்பினும் நதியின் அத்யாவசியம்

## 14. வைசூரி

1. வைசூரி என்றால் என்ன? அதுஎவ்வகைத்தானவியாதி. அதின் சரித்திரம்.

(இதுகொள்ளை நோய்களில் ஒன்று, இது மனிதனுக்கு ஒருதடவைக்கு மேல் வாராது; இது ஒருவகைத்தொற்று வியாதி, வியாதி கண்டவர்கள் பரிசித்தவேஷ்டியைத் தொட்டாலும், அவர்கள் சுவாசித்த காற்றை உட்கொண்டாலும் இவ்வியாதி தொற்றிக்கொண்டுவிடும். ஒரு ஊர் அல்லது கிராமம் முழுதும்பரவும். இந்தியா, சீனமுதலிய தேசங்களில் கி. மு. 1000 வருஷங்களுக்குமுன் இருந்ததாக வெளியாகிறது; கி. பி 800வருஷகாலவரை ஐரோப்பாவில் இல்லை; வைத்திய கிரந்தங்களால் மகம்மது பிறந்த வருஷத்தில் அரேபியாவில் வைசூரி இருந்ததென வெளியாகிறதாம். அரேபியர்கள் யுத்தத்திற்கு போன இடங்களெல்லாம் இவர்கள் மூலமாய்ப்பரவியது; மூர்ஜாதி ஸ்பெயின் சென்றபோது அங்குபரவினது; அங்கிருந்து ஐரோபாமுழுதும் பரவிவிட்டது. சுமார் 400 வருஷங்களுக்கு முன் அமெரிக்காவில் இவ்வியாதி கிடையாது; அம்மைவார்த்த ஆப்பரிக்காதேசத்தான் மெக்ஸிகோவில் இரங்கினனும்; அதுமூலமாய் அமெரிக்காமுழுதும் இவ்வைசூரிபரவிற்று.

2. வைசூரியுடன் சம்பந்தப்பட்ட வியாதிகளும் அவைகளின் விவரங்களும்.

(தட்டையம்மை. சின்னம்மை. முதலியவைகள்)

3. வைசூரியின் உற்பவம், சுபாவம், விருத்தி.

(வைசூரிவருமுன் காய்ச்சல் காணும், பின்னர்வரட்சி, நாடித்துடிப்பு, சிலருக்கு வாந்தி, தலைநொய், வயிற்றுவலி இவைகள் உண்டாகின்றன. பின்னர் கொப்புளங்கள், முதலில் முகத்தில் காண்கிறது. பின்னர் மற்றபாகங்களில் காண்கிறது. 8 நாள் சென்ற பின்னர் இவைகளுடைந்து பக்குக்கட்டி, உதிரும்)

4. இவ்வியாதியை வரவொட்டாமல் தடுக்கும் விதமும், அது எப்படிக் கண்டுபிடிக்கப் பட்டதென்பதும் (அம்மை குத்திக்கொள்ளல்) ஜென்னர் கண்டுபிடித்த ஆராய்ச்சி முதலியவைகள், இதனால் நாமடைந்திருக்கும் நன்மை.)

5. வைசூரிப் பிரயோகத்தின் பல வேறு பிரிவுகள்,

(ஒருவன் கையினின்று மற்றொருவன் கையிலெடுத்துவைப்பது; வைசூரிப்பாலைக் கண்ணாடிக்குப் பிகளில் எடுத்து வைத்து அப்பாலை பிரயோகிப்பது; பசுவினிடத்திலிருந்து நேராகப்பாலை எடுத்து வைப்பது.)

6. வைசூரிவைக்கு முறை, வைத்தபின்னர் செய்யவேண்டிய சிகிச்சை.

7. வைசூரி குத்திக் கொள்வதற்கு நமது காருண்ய கெவர்மெண்டார் செய்திருக்கும் ஏற்பாடுகள்.

---

## 15. நல்லொழுக்கம்

---

1. நல்லொழுக்கமென்பதியாது.?

(தாம் பற்றும் நெறி நன்னெறியென்று யாரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வழியில் நடப்பதே நல்லொழுக்கமாகும்,)

2. நல்லொழுக்கம் எவ்விதம் உற்பவிக்கிறது; எப்படி அதை நாமடையலாகும்?

(பணிவு, நல்லபுத்தி, யோக்கியதை, இவைளினின்று பொதுவாய் நல்லொழுக்கமுண்டாகிறது. ஜாதியைப் பொருத்ததென்றும். தேசத்து நடவடிக்கைகளைப் பொருத்ததென்றும். சிறுபான்மை சொல்லலாகும். கற்றுத் தேர்ந்த பெரியோர்களுடன் பழகுவதாலும், பெரியோர்கள் சரித்திரத்தை யுணர்ந்து அவர்கள் அடிச்சுவடு பற்றுவதாலும் நல்லொழுக்கங்களை உணரலாகும். "சிறு போதே கல்வி சிலையிலெழுத்தென்ற" வண்ணம் இளமைப்பருவமுதலே நல்லொழுக்கத்தை அப்பியசித்தல் வேண்டும். இல்லாவிடின் பின்னர் இதையடைவது அசாத்தியமாகும்.)

3. நல்லொழுக்கத்தை யனுசரிப்பதால் நாமடையும் பயன் என்ன;

(ஒழுக்கம் நாம் பெருமைபெற்று வாழமார்க்கமாகும்; நம்மைப்பலரும் கொண்டாடும் நிலையில் நாமிருப்போம்; நற்கதையடையு மார்க்கத்தை நாமடைந்தவர்களாவோம்; பூதவுடம்பு விறந்தக்காலும் புகழுடம்பு இவ்வுலகத்தில் வாசஞ்செய்யப்பண்ணும்; சந்தோஷம் அன்பு ஆதரவு, மரியாதை இவைகளைக்கொடுக்கும்.

4. ஒழுங்கீனமாய் நடப்பதின் தீமைகள்.

5. நல்லொழுக்கம் மனிதர்களுக்கின்றியமையாதென்பது.

# 16 காலத்தின் அருமை.

1. இகபரசுகங்கள் காலத்தைச்சரியாய் உபயோகிப்பதி லேயே சார்ந்திருக்கிறது.

2. இளஞ்சிறுவர்கள், காலம் தங்களுக்கு நிரம்பயிருக்கிற தெனவெண்ணிக் காலத்தை வீணாய்ச் செலவிடுகின்றனர் கள். அது முற்றிலும்பிசகு. (போனகாலம் திரும்ப வராது, காலம் முன்குடுமியையொக்கும். தவரவிட் டால் பிடிப்பதரிது. ஆறிலும்சாவு, நூறிலுஞ்சாவு, "செ ன்ற நாளெல்லாம் சிறுவிரல் வைத்தெண்ணலாம், நின்ற நாள் யாருக்குமுணர்வரிது.")

3. காலத்தைச்சரியாய் உபயோகிப்பதால் நாம் அடையும் நன்மைகள்.

(நாமும் நன்மையடையலாம், பிறரையும் நன்மைபெற ச்செய்விக்கலாம். மனம், சரீரம், புத்தி, நடத்தை, இவை களை கொஞ்சகாலத்தில் சீர்பெறச் செய்துகொள்ளலாம். காசு, பணம் சம்பாதிப்பதற்கும் காலத்தைச் சரியான படி உபயோகித்தல்வேண்டும்.)

4. குறித்தகாலத்தில் காரியங்களைச் செய்யாதிருப்பதிலும், நாளை நாளையென்று தள்ளிவைப்பதிலுமுண்டாகிற கெடு தல்கள்.

5. நாடகம்பார்ப்பது, நவீனக்கதைகள் வாசிப்பது, விளை யாடுவது, தேகப்பயிற்சிசெய்வது இவைகளில் மிதமாய் உபயோகப்படுத்தப்பட்ட காலம் வீணாய்ச் செலவழிக்கப் பட்டதல்ல.

6. ஒவ்வொருநாளும், நாம் நமது கடமைகளைச்சரிவர ச்செய்திருக்கிறோமாவென்று பார்த்தல்வேண்டும். அப்

பொழுதுதான் நமது காலத்தை நாம் சரிவரச்செலவழிக்க வகைதேடுவோம்.

## 17 நகரவாசமும், நாட்டுவாசமும்.

1. கற்றுத்தேர்ந்த பெரியோர்களும், வேதாந்திகளும் நகர வாழ்க்கையினும் நாட்டுவாசத்தையே விரும்புகிறார்களென்பது.

(பைரன் தன் சிநேகிதர்களைவிட்டு, மலைகள், நதிதீரம் இவைகளை விரும்புவது. கௌபர் "மனிதர் நகரத்தை உண்டாக்கினார்கள். தெய்வம் கிராமத்தை உண்டாக்கினார்.")

2. இவ்விதம் நாட்டுவாசத்தை ஏன் அவர்கள் புகழ்கின்றார்களென்பது.

(நாட்டுவாசத்தில், இறைச்சல், கூக்குரல், இவைகள் அதிகமில்லாமை; தொழிற்சாலைகளின் புகையின்மை: உவகையையளிக்கத் தக்கதான பசும்புற்றரைகள், தோட்டங்கள், வயல்கள், மலை, காஞறு, முதலியவைகள் நாடுகளில் இருத்தற்காரணம். இவைகளெல்லாம் நகரங்களில் கிடைப்பதரிது; மேலும் அங்கு நல்லகாற்று கிடைப்பதரிது, எப்பொழுதும் வண்டிகள் சப்தமும், ஜனங்களின் கூக்குரலும், தெருக்களிற்சென்றால் வண்டிகளினடுவே அகப்பட்டு செத்துவிடுவோமோ வென்ற பயம்.)

3 நாட்டுவாசம் தேகசௌக்கியத்தை விருத்திசெய்யும். (அதிக காலியிடம், சுத்தகாற்று, நல்லஜலம், இவைகள் சுலபமாய் கிராமாந்திரங்களில் கிடைக்கும்,)

4. சில அசௌகரியங்கள்.

(நல்ல பாதைகளில்லை, புஸ்தகசாலைகள் கிடையா. பெரிய கடைகள், கடைத்தெருவுகள் இல்லை.)

5. நகரங்களிலுள்ள சௌகரியங்கள்.

(பெரிய கல்விச்சாலைகள், புஸ்தகசாலைகள் சகலருக்கும் வேலை கிடைக்கக்கூடிய தொழிற்சாலைகள், புத்தியை அபி விருத்திசெய்து கொள்ளக்கூடிய காட்சிச்சாலைகள் முத லியவைகள் அங்கிருக்கக்காணலாகும், இவைகள் இரு ப்பதின் உபயோகம்.)

---

## 18. நாடகம்.அவற்றின் நன்மை தீமைகள்.

---

1. நாடகம் என்றால் என்ன?

2. நாடகம் எவ்விதம் தோற்றமானது.

இந்தியாவில் தோற்றமானது:—நாட்டியநூல் தேவர்கள் களிப்புறு வண்ணம் நான்முகக்கடவுளாற் படைக்கப் பட்டதென பரதமுனிவர் கூறுகின்றனர்

அதின் வரலாறு :—

"உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் வெளியிட்டுரைக் கும் அவாவை மனிதரியல் பினின்றும் வேறு படுத்தலிய லாது; ஆகையால் மனிதர்கள் தங்கள் எண்ணங்களை அபிநயங்களானும் சொற்களானும் வெளிப்படுத்துகின் றனர்; மனிதர்கள் பிறர் செய்வதைப் தாமுஞ் செய்வதில் இன்புறுகின்றனர். இவ்வண்ணஞ் செய்தற்கு ஆடல் பாடல் இன்றியமையாததாயிற்று; இதுவே நாடகத் தோற்றத்தின் ஆரம்பமெனவும் கூறலாகும்.")

3 நாடக விதிமுறையும் நாடகத்துக்கு இன்றியமையாத விஷயங்களும்.

4 நல்ல நாடகங்கள் பார்ப்பதின் நன்மைகள்.

(அநேக நல்ல சரித்திரங்கள் சாதாரண மனிதர்களுமறிய வேதுவாகிறது; நீதிமார்க்கங்களை யாவருமறியக் காரணமாகிறது மன்னியில் அந்நெறியில் நடக்க டலர் தூண்டப்படுகிறார்கள்; சரித்திர மறியாதவர்களுக்கு சரித்திர ஞானத்தை உண்டு பண்ணுகிறது; ஷேக்ஸ்பியரின் சரித்திர சம்பந்தமான நாடகங்கள், அவற்றின் உபயோகங்கள்.)

5 நல்ல நாடங்களில்லாதவைளின் தீமைகள்

(மனிதர்கள் புத்தியை பேதப்படுத்துகிறது; நடத்தையைக்கெடுத்து விடுகிறது.)

6 நாடகம் எல்லா ஜாதியாரிடத்து மிருந்து வருகிறது. (காட்டு மிராண்டி ஜனங்களும் தங்கள் வீரர்கள் சரித்திரத்தை நாடகமாக்கிப் போட்டுவருகிறார்களாம். ரோம் ஆதன்ஸ், இத்தேசங்களில் முற்காலத்தில் இராஜாங்கத்தார் நாடகங்களுக்கு வேண்டுமான உதவிசெய்து வந்தார்களாம்.)

---

## 19. உயுத்தமும் சமாதானமும்.

---

1. இருதிறத்தாருக்கிருக்கும் அபிப்பிராய பேதங்களை தீர்த்துவைப்பதற்கு யத்தமே காரணமாயிருப்பினும்; அதினால்விளையும் கேடுகளநேகம்,

(ஜனங்கள் ஹிம்சைப்படுவது; வியாபாரங்குன்றுவது பஞ்சம் நேரிடுவது; அநேகர் நமனுக்கிறையாவது;

அநேக விலையுயர்ந்த கட்டடங்களும், சிறந்த ஊர்களும் ; பாழாவது.)

2. பழையகாலத்தில் யுத்ததில் பிடிபட்டவர்களை நடத்திவந்த கொடுமைகள். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நன்மைகள்.

கழுவேற்றல், சித்திரவதைசெய்து சரீரங்களைக் கட்டித்தொங்கவிடல், பட்டணங்களைச் சூரையாடல், பட்டணங்களைத்தீயிடல்; இப்பொழுதோ சாஸ்திர ஆராய்ச்சிகள் அதிகரிக்க அதிகரிக்க அநேகவிதமான நவீன ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன ; இவைகள்மூலமாய் ஜனங்கள் ஹிம்சையில்லாது கொல்லப்படுகிறார்கள் ; காயம் பட்டவர்களுக்கு சிகிச்சைசெய்ய ஏற்படாயிருத்தல்

3. விவாதம் நேர்ந்தகாலத்தில், பிறதேசத்தவர்களை மத்தியஸ்தர்களாக ஏற்படுத்திக்கொண்டு யுத்தமன்றி வாதங்களைத் தீர்த்துக்கொள்வதே மேலாகும்.

4. சமாதானமே சர்வவித சௌகரியங்களுக்கும் காரணமாம்.

5. எவ்வகைத்தான தொழில்களையும், சாஸ்திர ஆராய்ச்சி முதலியவைகளையும் விருத்திசெய்வது சமாதானமே.

6. நற்வழி முயற்சியே சமாதானத்தை விருத்தியாக்கும்.

---

## 20. தேகப்பயிற்சி.

---

1. தேகப்பயிற்சி மனிதசரீரத்துக்கு இன்றியமையாதென்பது.

2. தேகப்பயிற்சியால் சரீரத்துக்குவிளையும் நன்மைகள். சரீரம் பலப்படும், சதை முதலியவைகள் இறுகும். இரத்தம் அதிசீக்கிரத்தில் சுத்தமாகி தேகமெங்கும் விரைவாய் ஓடும். வேர்வை அதிகமுண்டாகி தேகத்திலுள்ள அழுக்கையெல்லாம் வெளிப்படுத்தும், மூளை வலுவடைந்து மனோமுயற்சிகளைச்செய்ய சக்திகொள்ளும், ஜீரணக்கருவிகள் சரியான நிலையிலிருக்கும், அஜீரணம், பசியின்மை, கைகால்பிடிப்பு முதலிய வியாதிகள் நம்மிடம் அணுகாது.)

3. தேகப்பயிற்சி பருவத்துக்குத் தக்கவாறாகும்.

(பிள்ளைகளின் தேகப்பயிற்சி :— பந்துவிளையாடல், கிளிதட்டுவிளையாடல் முதலியவைகள்போன்ற விளையாடல் முதலியவைகள், பெண்களின் தேகப்பயிற்சி :— கும்மி, கோலாட்டம் முதலியவைகள்போன்ற விளையாடல்கள், பலவீனர்களுக்கும் வயது சென்றவர்களுக்கும் தேகப்பயிற்சி:— மெதுவாய் நடத்தல், வண்டி, பல்லக்குகளில் சவாரி செய்தல்.)

4. தேகபயிற்சி காலத்து கவனிக்க வேண்டியவைகள் (மிதமான பயிற்சியே புரிதல்வேண்டும். "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும்." போதுமான அளவுக்கு மேற்பட்ட பயிற்சி கெடுதலையுண்டாக்கும். கடினமான முயற்சி கூடாது. சுத்த ஆகாயம் நிறைந்த இடத்தில் பயிற்சி செய்யவேண்டும். பயிற்சி செய்யும் பொழுது மனசு சந்தோஷத்துடனிருத்தல் வேண்டும். பயிற்சி தினந்தோறும் செய்தலே சிலாக்கியமாகும்.)

5. தேகப்பயிற்சிக்கேற்றநேரம்.

(காலை, மாலை நேரங்கள். காலையே மிகுந்த சிலாக்கியமானது. உணவேற்று மூன்றுமணி நேரத்திற்குப் பின்னரே தேகப்பயிற்சி செய்தல்வேண்டும்.)

6. அவர்களது தேகநிலைமை, பலம், தொழில் முதலிய வை களுக்குத் தக்கவாறு ஒருவருக்குத்தேகபயிற்சி இரு த்தல் வேண்டும்.

## 21. நித்திரை.

---

1. நமக்கு இன்றியமையாதிருக்கப்பட்ட வஸ்துக்களுள் நித்தரையு மொன்று.

(தூக்கமேயில்லாமல் ஒருமனுஷன் 40 நாட்களுக்கு மேல் ஜீவித்திருப்பதரிதென பெரியவரொருவர் கூறியுள் ளார். அளவுக்கு மேற்பட்டால் மட்டும் நித்திரைகெடுதி விளைவிக்கக்கூடியதே யொழிய நித்திரை யில்லாமற் போ னால் மனிதன் சௌக்கியத்துடன் வாழ்வதரிது; பலவித வியாதிகளை உண்டாக்கும். "அநந்தலாடேல்" என்ற ஔவை மொழி கவனிக்கத்தக்கது.)

2. நித்திரையின் நன்மை.

(நாம் வேலை செய்வதால் சரீரமும் மூளையும் களைத்துப் போகிறது. இக்களைப்பு நீங்க நித்திரை ஆவசிகம். "மூளையே அறிவுக்குஸ்தானம்.")

3. நித்திரையின் அளவும், அதற்கேற்ற நேரமும். (இராக் காலங்களிலேயே நித்திரை புரியவேண்டும். பகலில் நித்தி ரை செய்யக்கூடாது, காலை வேளைகளில் நித்திரை செய் தல் அசதியைக் கொடுக்கும். காலை விழிப்பின்குணம்

"புத்தியதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்
சுத்தநரம்பினற்றூய்மையரும் பித்தொழியுந்
தாலவழியாதபித்தந் தத்தநிலை மன்னுமதி
காலைவிழிப்பின் குணத்தைக்காண்:"

புத்திக்குத் தெளிவையுணர்த்துகிற சுத்தநரம்புத்து வாரத்தின் நீர் கலங்கலின்றி இருக்கும். பயித்திய கோபம் நீங்கும். வாதபித்த சிலேஷ்ம முதலியவைகள்தத்தம் நிலைகளிலிருக்கும். "அந்திப்பொழுது கிடவாரென்றபடி" சாயங்கால வேளைகளில் படுக்கக்கூடாது. பருவங்களுக்குத் தக்கபடி நித்திரையின் காலம் வேறுபடும். குழந்தைகள் அதிக காலம் நித்திரை புரியவேண்டும். பொதுவாக ஒரு நாளை நான்கு சமபாகமாகப் பிரித்து ஒரு பாகத்தை நித்திரைக்கு உபயோகித்துக் கொள்ளல் வேண்டும்.)

4 நன்கு நித்தரை செய்ப, வேண்டுமான சாதனங்கள்.

(படுக்கறையில் சுத்தகாற்று வியாபித்திருக்கச் செய்தல், அவசியமின்றி பகல் நித்திரை செய்யாமை. போதுமான தேகப்பயிற்சி செய்வது, சாப்பிட்டு இரண்டுமணி நேரத்திற்குப் பின்னர் படுக்கச்செல்வது. படுக்குங்காலத்து கவலையில்லாதிருத்தல், தரையில் படுத்துறங்காது சற்று உயரமான படுக்கையில் படுத்தல்.)

## 22. கார்க்.

---

1. இதுவுருவகை மரம். இது எங்கு உண்டாகுமென்பதும் விவரணையும்.

(சீதள தேசத்தில் உண்டாகும் (France, Spain, Portugal) 15 அடி உயரமும் அதற்கு மேலும் வளரும். பின்னர் சுற்றியிருக்கும் புறப்பட்டை பொருக்குப்போல் தோன்றும்

2, இப்புறப்பட்டையின் உபயோகங்கள்

(a) சீசாக்களுக்கு அடைப்பான் செய்வார்கள்'

(b) ஒருவிதபாய் பின்னுவார்கள்.

(c) ஒருவித சட்டையும், அரைக்கச்சும் செய்வார்கள்.

(d) தூண்டிலுக்குக் கட்ட உபயோகப்படும்.

(அடைப்பான் செய்யும்விதம். மேற்கூறப்பெற்றுள பொருக்கை உளியால் கீறி மரத்துக்குக் கெடுதலில்லாமல் எடுத்து, அப்பொருக்குச்சுருண்டு கொள்ளாதபடி தண்ணீரில் ஊரவைத்துக் கொதிக்க வைக்கவேண்டும். பின்பு இதைத்தட்டையாய் அமுக்கி மேற்புறத்தை க்காய்ச்சவேண்டும். பின்னர் அதிலுள்ள துவாரங்களெல்லாம் நெருங்கிவிடும்; பின்பு அதைக்கார்க்காகப் பண்ணிக்கொள்ளலாம். சட்டை, இதைதண்ணீரில் மிதக்கும்வண்ணம் அணிந்துகொள்வது; சுரைக்குடுக்கை போல் உபயோகமுள்ளது-அரைக்கச்சு. இதுவும் இம்மாதிரியால் உபயோகமே உள்ளது; கப்பலில் செல்லுப்வர்கள் முக்கியமாய் உபயோகிப்பார்கள். யாவரேனும் கப்பலிலிருந்து கீழேவிழுந்துவிட்டால், இவ்வரைக் கச்சையை அவரிடமெறிந்து பிடித்துக்கொள்ளச்செய்து, படகைக் கொண்டுபோய் அவரை யேற்றிவருவார்கள்.

3. குணங்கள்.

இலேசானது. தண்ணீரில் மிதக்கக்கூடியது. மங்கல்நிறம் தண்ணீரைப்புறத்தே செல்லவொட்டாது; பருமனுக்குத் தக்கதாயிராத சிறு துவாரங்களிலும் செலுத்தக்கூடியது.

---

## 23. புஸ்தகசாலை.

---

1. புஸ்தகசாலை என்றால் என்ன.

(புஸ்தகங்களின் தொகுதியே புஸ்தகசாலை எனப்படும்; நற்போதனைகளைப் புகட்டக்கூடிய புஸ்தகங்களைச் சேர்த்தும், மனிதர் அறிவை சரியானவழியில் விருத்திசெய்ய

க்கூடிய புஸ்தகங்களைக்கூட்டி பலருக்கும் பயன்படு வண்ணமாயுமிருப்பதே சரியான புஸ்தகசாலையாகும்.)

2 பலவித புஸ்தகங்களின் பயன்.

(பல நூற்றாண்டுகளின் விஷயங்களை அறிவது; பெரியோர்கள் சரித்திரங்களை உணர்ந்து அவர் வழிச்சென்று நன்மைபெறுவது; சிறந்தசாஸ்திர ஆராய்ச்சிகளை அறிந்து பயன்பெறுவது; புஸ்தகங்களே நமக்கு இடுக்கண் நேர்ந்தகாலத்து தோழர்களாய் அமைகின்றன.

3. பலவித் புஸ்தகங்களினும் நன்மைபயக்கும் புஸ்தகங்களையே படித்தல்வேண்டும். அப்படியல்லாது வேறு புஸ்தகங்களைப் படிப்பின் தீமைக்குக் காரணமாகும்.

4. புஸ்தகசாலை இருக்குமறையே படிப்புக்கு வசதியான இடம், (வாசிக்கவேண்டுமெனு அவா ஏற்படக்காரணமாயிருக்கும். சப்தமின்றி இருக்கும்)

5. ஏழைக்கு புஸ்தகசாலையிருப்பதால் அதிகப் பிரயோஜனமாகும்.

(ஆகையால் ஒவ்வொரு ஊர்களிலும் எல்லோருக்கும் பயன் படக்கூடிய புஸ்தகசாலைகள் இருப்பது ஆவசிகமே,)

6. புஸ்தகசாலை எப்பொருளினும் மேன்மை பொருந்தியிருப்பதுந்தவிர, அவற்றுடன் ஒப்பிட்டுப்பார்க்க வேறொன்றுமில்லை.

(தடிதண்டம் இவைகளின் உதவியில்லாது கற்பிக்கக்கூடியவைகள் புஸ்தகங்களே; காசுபணம் கேட்காது கற்பிக்கக்கூடியது புஸ்தங்களே; எப்பொழுதுகேட்கினும் சொல்லிக்கொடுக்கத் தயாராகவிருப்பது புஸ்தகங்களே; ஒன்றையும் ஒளியாது சொல்லிக்கொடுக்கக்கூடியது புஸ்தகங்களே; தவறினுல் அவைகள் கோபிக்கா, திட்டமாட்

டா; தெரியாவிட்டால் கேலிசெய்யாது. ஆகையால் புஸ்தகங்கள் எவற்றினும் மேன்மைபொருந்தியது.)

## 24. நட்பு.

"உடுக்கையிழந்தவன் கைபோலவாங்கே
யிடுக்கண்களைவதாநட்பு."

1. நட்பென்றால் என்னவென்பதும், அது எத்தனை வகைப்படுமென்பதும்.

(உத்தமம், மத்திமம், அதமம். நீர்த்துளி முத்துச்சிப்பி வாயில் விழுந்தால் முத்தாகிறது; உத்தமர்கள் சேர்க்கைக்கு இது உதாரணமாகும். தாமரையிலையில், அந்நீத்துளிவிழநேரிடன் முத்துப்போலாகிறது; இதுமத்திமர் சேர்க்கையாகும். காய்ச்சின இரும்பு மீது விழுந்தால் இருந்த இடந்தெரியாமல்போகிறது; இது அதம சுபாவத்தை யொத்ததாகும்.

2. சிநேகஞ்செய்வது மானிடர்களது சுபாவமே.

("மனிதன் கூட்டத்துடன் வாழ்பவனே." தம்மினத்தார்களுடன் மனிதன்சேர்ந்திருப்பது இயற்கை சுபாவத்துடன் ஒத்ததே.)

3. சிநேகிதர்களைத் தேர்ந்தெடுத்தல்வேண்டும்.

"கணைகடற்றண்சேர்ப்ப கற்றறிந்தார்கேண்மை
நுனியிற்கரும்புதின்றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின்றன்ன தகைத்தரோ பண்பிலா
வீரமிலாளர் தொடர்பு"

"கல்லாரேயாயினுங் கற்றாரைச்சேர்ந்தொழுகி
னல்லறிவு நாளுந்தலைப்படுவர்—தொல்சிறப்பி
னொண்ணிறப்பாதிரிப் பூச்சேர்தலாற்புத்தோடு
தண்ணீர்க்குத்தான் பயந்தாங்கு."

4. உண்மையான சிநேகிதர்கள் இருப்பதின் உபயோகம்.

(இன்பானுபவத்தை விருத்திசெய்கிறது; துக்ககாலத்தில் கஷ்டத்தைக்குறைக்கிறது; கஷ்டகாலங்களில் நம்மை வருத்த மில்லாமலிருக்கச்செய்கிறது; கவலை நம்மை யணுகாவண்ணஞ் செய்கிறது.)

5. துஷ்ட சிநேகிதர்கள் இருப்பதின் அபாயம்

(துஷ்ட சகவாசம்பொல்லாது; அவர்கள் நமக்குத்தீமை யே விளைவிப்பார்கள்; அவர்களை நம்புதலுங்கூடாது)

6. நற்சிநேகத்தை விளக்குவோர் உதாரணம்.

(தாமனும், பிதியஸும்).

"முகநகநட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு."

## 25. அற்பவிஷயங்களும் அதிகப் பிரயோஜனத்தைத்தரும்.

அற்பவிஷயங்களை அவமதிக்கிறோம். இதுகூடாது. அவைகளும் பிரயோஜனத்தைத் தரத்தக்கன.

(சிறுதுரும்புப் பல்லுக்குத்தவுதவும்).

2. அற்பமென்றெண்ணிச்செய்யும் ஒவ்வொருநாள் சமாசாரங்களும் பிற்காலத்து கெடுதல் விளைவிப்பதை நாம் பார்க்கலாகும்.

3. அற்ப விஷயங்களைக்கொண்டே ஒரு மனிதனுடைய நடத்தையை அறியலாகும்.

4. நிலத்திலுள்ள, அற்பமென்றெண்ணக்கூடிய, புல் பூண்டுகளைக்கொண்டு, அதின்வளமை, சிலாக்கியம் முதலியவைகளை அறிந்துகொள்ளலாகும்.

## 26. சமாசாரப் பத்திரிகைகள்.

---

1. இவைகளின் நோக்கம்.

(கல்வி, கைத்தொழில் விருத்திபோன்ற விஷயங்க[illegible] பலருக்குமெடுத்துரைப்பது)

2. பத்திரிகைகளின் உபயோகம்.

(ஒவ்வொரு நாட்டிலுள்ள விஷயங்களை எல்லாம் அதிசீக்கிரத்தில் அறிந்துகொள்கிறோம். நமது அபிப்பிராயங்களை மற்றவருக்கறிவித்து, மற்றவர்கள் அபிப்பிராயத்தை நாமுமறிகிறோம்; இவ்விதங்களால் பலர் தேர்ச்சியடைகின்றனர்.)

3. சமாசாரப் பத்திரிகைகளை நடத்துபவரின் பொறுப்பு. (பொதுஜன அபிப்பிராயங்களையே தெரிவிக்கவேண்டும்; துவேஷ புத்திகூடாது; இகழ்ச்சி இல்லாதிருத்தல்வேண்டும்.)

4. ஒவ்வொரு ஊரிலும் சமாசாரபத்திரிகைகள் இருக்கவேண்டுவதின் ஆவசிகம்.

5. சமாசாரப்பத்திரிகைகளின் இடையூறுகள்.

(ஆதரிப்போர்கள் சிலரே; பத்திரிகை வாசிக்கவேண்டுமென்ற அவா ஜனங்களுள் இல்லாமை; ஆதரிப்பவர்களும் சந்தாத்தொகையை சரியான காலத்துக்கொடாமை முதலியவைகளாம்.)

---

## 27. கைத்தொழிற் பொருட்காட்சிசாலை.

---

1. காதாற்கேட்பதினும், கண்ணாற்காண்பதே எப்பொருளும் மேன்மையைத் தரத்தக்கது.

2. நன்ருய் சீர்படுத்தப்பட்ட பொருட் காட்சிசாலை சிறந்தபொருட் பாடமாகவிருக்கிறது. ஏனெனில் ஒரு காட்சிசாலையில், ஜனங்களுக்கு எல்லா தேசத்தினது தொழிற் முயற்சியினறிவுமேற்படுகிறது.

3. இப்பொழுது 'காங்கிரஸ் மகாசபையார்' வருஷா வருஷம் பொருட்காட்சிசாலை ஏற்படுத்திவருகிருர்கள். அதின் நன்மைகள்.

4. காட்சிசாலை அமைப்பதில் கண்ணுறவேண்டிய விஷயங்கள்.

(முன்னமேயே ஏற்பாடு செய்தல்வேண்டும். பொருட்களைப்பார்ப்பவர் இலகுவாய்த் தெரிந்துகொள்ளும்படி அமைக்கவேண்டும். பொருள்கள் ஜனங்கள் மனத்தைக் கவரத் தக்கதாயிருக்கவேண்டும், பொருளுக்குச்சேதம் ஏற்படாமல் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். யாரும் போய் பார்க்கக்கூடிய சௌகரியங்கள் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.)

5. காட்சி சாலைகளுக்குப்பொருளை அனுப்புவோர் கவனிக்கவேண்டியவைகள்.

(தங்கள்பொருள் விலை நயமாயும், நல்லதாயுமிருக்கிறதென்பதை ஜனங்களுக்கு வற்புறுத்த இத்தகைத்தான சாலைகள் ஏற்பட்டுள்ளதென எண்ணல்வேண்டும். பொருளை உயர்ந்த விலைக்குவிற்கும் சந்தர்ப்பமிதுவென்று எண்ணக்கூடாது.)

---

## 28. பெண்கல்வி.

---

1. இதுவிஷயத்தில் ஜனங்கள் இப்பொழுதுகொள்ளும் அபிப்பிராயம். தன் மகள் படிப்பதைப் பெருமையுடன் சொல்லாத மனிதர்களில்லை.

(பெண்பாடசாலைகள் விருத்தியாகிக்கொண்டிருப்பது. ஒவ்வொரு பாடசாலைகளிலும் தகுந்த எண்ணிக்கையுள்ள பெண்குழந்தைகள் படிப்பதே சான்றாகும்).

2. பெண்களுக்கு கல்வி புகட்டுவதின் நோக்கம்.

(நல்ல பத்தினியாகவும், மாதாக்களாகவும் ஆகவேண்டுமென்பதே. பிள்ளைவளர்ப்பு முக்கியமாய் ஸ்திரீகளையேப் பொருத்திருக்கிறது. லௌகீகவியாபாரங்களில் தலையிட்டுக்கொண்டு புருஷனுக்கு எதிரிகளாய்ப் போரிடவேண்டுமென்பதில்லை. உயர்ந்த பரீட்சைகளிற் தேறின ஸ்திரீகள் இத்தேசத்துக்கு வேண்டுமா என்பது?).

3. அவர்களுக்கு வேண்டுமான பயிற்சியினளவு.

(சுதேச பாஷையை நன்றாய்ப்படிக்கவும், எழுதவும் தெரிந்துகொள்வது, கிரககிருத்திய விஷயங்களை அறிந்துகொள்வது, வீட்டுக்கணக்குகளைச்செம்மையாய் வைத்துக்கொள்வது, சுகாதார விதிகளையும், பதார்த்த குணங்களையும் நன்றாய் அறிந்துகொள்வது, சொற்ப வியாதிகளுக்கு ஔஷதம் தெரிந்துகொள்வது, ஆபத்துக்களில் சிகிச்சைசெய்ய தெரிந்துகொள்வது, அவகாசமிருக்கு நேரங்களை வம்பிலும் வீண்பேச்சிலுஞ் சிலவழியாது மகாபாரதம், இராமாயணம் மற்றுமுள்ள நல்லொழுக்க மார்க்கங்களைப்போதிக்கும் புஸ்தகங்களைப் படிப்பது.)

4. பெண்கள் படிப்பதாலுள்ள பிரயோஜனங்கள்.

(புருஷனை மேன்மைபெறச்செய்வதும், தாழ்த்துவதும் பத்தினியே, குழந்தைகளை ஆளாக்குவதும் பாழாக்குவதும் அவளே.)

## 29. இந்தியாவின் முற்காலதற்கால நிலைமை.

1. இந்தியாவின் முற்கால நிலைமை.

(அரசர்களுக்குள் ஒற்றுமையின்மை, இது மூலமாகச் சண்டை, கலகம், கொள்ளை, கொலை முதலியவைகள். நரபலி, உடன்கட்டையேறல், தீவட்டி கொள்ளைக் காரர்கள்.)

2. இப்பொழுதிருக்கும் நிலைமை.

(ஆங்கிலேய அரசாட்சிசெய்திருக்கும் நன்மைகளை ஆராய்ந்திடில் இப்பொழுதிருக்கு நிலைமை வெளியாகும். அந்நிய சத்துருக்களினின்றும் பாதுகாக்கப்படல்; முற்காலத்து இறைவாங்கு முறையும், தற்காலத்து இறைவாங்கு முறையும்; தபாற் தந்தி முதலியவைகள்; விவசாய வர்த்தகவிருத்தி, கைத்தொழில்விருத்தி, வித்தியாசாலைகள், தரும வைத்தியசாலைகள்; காப்புச்சேனை, போலீஸ், கடற்சேனை, நியாய ஸ்தலவேற்பாடு, சட்ட நிரூபணம், குடியேறல்.)

3. முடிவுரை.

---

## 30 "காப்பதுவிரதம்"

ஆத்திச்சூடி.

---

1. இதின்பொருள்.

(ஜீவஜெந்துக்களைத் துன்பப்படுத்தாமல் காப்பாற்றுவதே விரதமாகும். "நோன்பென்பது கொன்றுதின்னாமை.")

2. ஜீவவதை செய்யாதிருப்பவரே, மேலோர்; அவர்களே நல்லவர்கள்.

 3A58

"கொல்லா விரதமொன்றுகொண்டவரே நல்லோர்மற் றல்லாதவர் யாரோவறியேன் பராபரமே.

3. ஜீவவதை செய்யாதிருப்பதே எல்லாத் தர்மங்களிலும் சிறந்ததாகும். இதுவே முக்திக்குவித்தாகும். அதின் ஆவசிகம்.

("அஹிம்ஸாப்பரமோதர்ம:") "அருளிலார்க்கவ்வுலக மில்லை").

4. ஜீவவதை செய்யாதவனுக்கு யமனும் அஞ்சுவான்.

"கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாண்மேற் செல்லா துயிருண்ணுங்கூற்று."

5 கொல்லாமை எல்லாவிதக் கெடுதல்களையுமொழிக்கும். "கொல்லாமை யெத்தனை குணக்கேட்டை நீக்கும். மனத்தை அடக்குவதுடன் ஐம்புலன்களையுமடக்கிவிடும் பிறகு நாம் நல்லவைகளையே செய்யத் தூண்டப்படுவோம்.)

6. இது இந்திய நாட்டில் என்றும் வழங்கிவருவதெனச் சொல்லலாகும்

(சர்ப்பத்தையும் ஆதிசேஷனது வாகனமென்றும் பரம சிவனது ஆபரணமென்றுஞ்சொல்லி அடிக்கக்கூடாதென் கின்றனர். மூஞ்சோரைவிநாயகரது வாகனமெனச்சொல்லி ஹிம்சிக்கக்கூடாதென்கின்றனர். ஒவ்வொன்றையும் ஹிம்சிக்காதிருக்கவேண்டிய மார்க்கங்களைச் செய்திருக் கின்றனர்.)

7. புலாலுண்பவரின் வாதங்கள். உயிர்க்கொலையுளதேல் வேள்வியும் சிறந்ததன்று என்பது.

8. க்ஷமணர், புத்தர் சிவகாருண்யத்தாலே மேன்மைபெற்றார்களென்பது.

(க்ஷமணர் மயில் விசிறிகொண்டு பெருக்கி நடந்துபோவது, இரவில் உணவு ஏற்காதிருப்பது.

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்கதான்பிறி
தின்னுயிர் நீக்கும்வினை."

முற்றிற்று.

3458